மானவன் என்பதைப் போகப்போக நீங்களே புரிந்து கொள்வீர்கள்.''

''யாரிடம் சொல்கிறீர்கள் இதை?''

''உங்களிடம்தான் உண்மை எது, பொய் எது என்று அறியாமல் தவிக்கும் உங்களிடம்தான் சொல்கிறேன். வேங்கி நாடு இப்பொழுது பெரிய சதுரங்கப் பலகை. திரஞ்சனாதேவி, அதில் எதிரும் புதிருமாக நகரும் பிரதானக் காய்களில் பலியாக வேண்டியது யார்! உங்கள் சகோதரரா அல்லது ஜெயசிம்மனா என்பது தெளிவுபட வேண்டும். என் நிட்டம் வெற்றியடைந்தால், ஜெயசிம்மனுடைய சகாப்தம் வேங்கி நாட்டில் முடிவடைந்து விடும்.''

''உங்கள் நிட்டமென்ன?''

''வேங்கி நாட்டிலிருந்து சில காலம் உங்களையும் உங்கள் சகோதரரையும் சோழநாட்டுக்கு அழைத்துச் செல்வது!''

''என்னையும் என் தம்பியையும் வேங்கியிலிருந்து அகற்றுவதுதான் உங்கள் நிட்டமா?''

''ஆமாம்.''

''உடனே வேங்கியின் அரியாசனத்தில் விஷ்ணுவர்த்தன விஜயாதித்தன் அமரமாட்டானா?''

''அமருவான்.''

அரசகுமாரியின் உள்ளம் அளவுக்கு மீறி துடித்துத் தொழந்ததால், அவன் உடல் லேசாக ஆட்டம் கண்டது. உதடுகளும் மென்மையாகத் துடித்தன: ''என்னை என்னுடைய தாய் நாட்டிலிருந்து அகற்றி, ஜெயசிம்மன் மருமகனை அரியணையில் ஏற்ற எத்தனை பொற்காசுகளை ஜெயசிம்மனிடம் பெற்றிருக்கிறீர்கள்? இல்லை; இங்கே தளபதிப் பதவியை அடைய ஏதாவது வழியிருக்கிறதா?'' என்று ஆத்திரத்துடன் வினவினாள் திரஞ்சனாதேவி.

''உங்கள் நலத்தைக் கோரி, உங்கள் சகோதரர், இந்த நாட்டின் மன்னர் ராஜராஜ நரேந்திரன் நலத்தைக் கோரி, என் வேங்கி நாட்டின் நலத்தையே கோரி, உங்களை இங்கிருந்து கொண்டுபோய்ச் சோழர்கள் பாதுகாப்பில் சில காலம் வைக்கப் போகிறேன். இதனால், நீங்கள் என்னை வெறுக்கலாம். ஆனால் தங்களுக்கு எது நன்மை, எது நீமை, தங்கள் நண்பர் யார், விரோதி யார் என்று அறியாதவர்களுக்குச் சில சமயங்களில் நன்மையைக் கட்டாயமாகச் செய்யவேண்டி வரும். அந்த மாதிரிச் சமயமிது'' என்று கூறிய கரிகாலனை, மிகக் கம்பீரமாக நோக்கிய திரஞ்சனாதேவி, ''வீரரே! தங்கள் விருப்பப்படி நானும் என் தம்பியும் சோழ நாட்டுக்குப் போக மறுத்தால்?'' என்று வினவினாள்.

''இஷ்ட விரோதமாகக் கொண்டு போகப் படுவீர்கள்!''

''மக்கள் சும்மா இருப்பார்களா?''

''இருப்பார்கள். பெரிய வல்லரசுகளின் மோதலில் சின்னஞ்சிறு அரசர்கள் தும்புக்குச் சமானம். மக்களும் அப்படித்தான்.''

''நீங்கள் எந்த வல்லரசைச் சேர்ந்தவர்?''

''சோழப் பேரரசின் பிரதிநிதி.''

''தாதரான பிரும்ம மாராயரைவிட உயர்ந்தவரா?''

''இல்லை; அவருக்குள்ள அதிகாரம்தான் எனக்கு.''

''என்ன உளறுகிறீர்?''

''உளறவில்லை; இப்பொழுது வேங்கி நாட்டின் சோணாட்டுத் தூதன் நான்தான்.''

இதைக் கேட்ட திரஞ்சனாதேவி ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள். மறுகணம் வாய்விட்டு நகைத்தாள். அந்தச் சிரிப்பும் அடுத்த விநாடி உறைந்தது. மரத்துக்குப் பின் ஒளிந்திருந்தவனும் அவனுடன் சேர்ந்துகொண்டு சிரித்து விட்டான். சிரித்தபடி நிற்காமல், மறைவிடத்தைவிட்டு வெளியிலும் வந்தான். கரிகாலன் உணர்ச்சிகளும் உறைந்துதான் போயின. ஆனால் கை மட்டும் வாளை நோக்கிச் சென்றது.

43. வேண்டாம் இந்த அரசு

அரசகுமாரியின் நிர்ப்பாலியோடு இவனொரு நிர்ப்பொலியும் கலந்து காதில் விழுந்த விநாடியிலேயே சந்தேகமடைந்து வாட்டியுயர்ந்தவன் கை வைத்துக் கொண்ட கரிகாலன், திரும்பி அந்த நேரத்தில் திருடனைத் தடுத்து நின்று கூக்கல் போட்டவன் யாராயிருக்குமென்று அறிய, மரத்தடியில் விருந்து சிறிது விலகி நின்று மறைவில் நின்று வெளிவெளிச்சத்தில் தன் கண்களை ஓடவிட்டானானதும், அங்கிருந்த மையிருட்டில் விளைவதும் மரக்கிளைகளைப் பிளந்துகொண்டு உள்ளே வெள்ளிய சந்திரக் கிரணங்களும் அந்தப் பிரதேசத்தில் அதிகமாக விழாததாலும், வந்தவன் யாரென்பதைச் சட்டமாக அறிய முடியாமல், சற்றே சப்தமெழுப்பினானான். ஓட்டுக் கேட்டவன் அதிலிருந்து விழுந்திருந்த ஓர் கிரணத்தை தரதரவென்று நிலையைப் பொலிவுறச் செய்ததாலும், அவன் தலையிலும் ஒரு சம்பீரமிருந்ததன் காரணத்தாலும் அவனிருந்த மனிதன் யாராயிருந்தாலும் அவன் பதவியை லகுப்படுத்தவே இருக்க முடியுமென்றும், சாதாரண ஒற்றனாயிருக்க முடியாதென்றும் கரிகாலன் முடிவுக்கு வந்தான். இருந்த பொதிலும், சட்டமாக அவன் யாரென்று அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் ஏதோ பேச வாயெடுத்த கரிகாலனிடமிருந்து வார்த்தைகள் வெளிவருவதற்கு முன்பாக, வந்தவனே பேச ஆரம்பித்து, "அக்கா தமிழர்களிடம் உறவாடு முன்பு அவர்கள் பழமொழிகளை நீ கற்க வேண்டாமா?" என்று சொல்லி, மீண்டும் ஏளன நகையொன்றை இதழ்களிலிருந்து உதிர விட்டான்.

அங்கு நிலவிய நிசப்தம் தானும் கரிகாலனும் பேசியதைக் கேட்டவன் தன் தம்பி ராஜராஜ நரேந்திரனைத் தவிர வேறு யாருமில்லையென்பதை அறிந்ததும், உள்ளத்தே கொதித்துக்கொழுந்து கொண்டிருந்த பயங்கர அலைகள் அடங்கியதற்கு அறிகுறியாக நீண்டதொரு பெருமூச்சை விட்ட அரசகுமாரி, "எந்தப் பழமொழியைக் கற்க வேண்டும் தம்பி?" என்று மெல்ல வினவினான்.

"பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே' என்று தமிழ் நாட்டில் பழமொழி இருக்கிறதாமே என் தாயார் சொல்லுவார்கள்" என்றான் ராஜராஜ நரேந்திரன், மீண்டும் சாதாரண சம்பாஷணையில் சேர்ந்து பழைமைக்கு

[illegible] மரக் கூட்டத்தின் இருட்டில், தான் [illegible] தனிமையில் சந்தித்துப் பேசிய அந்த [illegible] ராஜராஜ நரேந்திரன் பதட்டமில்லாமல் [illegible] நிதானத்துடன் பேசியதைக் கண்டு [illegible] ஆச்சரியப்பட்டுப் போனான். 'மிகுந்த பலம் [illegible] போர் வித்தைகள் கற்றவனுமான ராஜராஜ நரேந்திரன் நிதானத்தைக் கையிடாதிருக்க யாரிடமிருந்து [illegible]?' என்று கரிகாலனும், பிரமிப்படைந்து நின்றான். 'முத்தனை நிதானத்தைப் படைத்திருக்கும் இந்த ராஜராஜ நரேந்திரனுக்கு மட்டும், சரியான போர்ப் பயிற்சி அளிக்கப்படுமானால், வேங்கி நாட்டு அரசு மாபெரும் ஆபரணத்தில் சுடர்விடும் மாபெரும் முக்கியமாக இவன் அமைய முடியும்' என்பதையும் நினைத்துப் பார்த்த கரிகாலன், 'இந்தப் பயிற்சியை இவனுக்கு அளிப்பது என் பொறுப்பு. அதற்காக நான் கையாள உத்தேசித்திருக்கும் முறைகளில் அரசகுமாரியின் வெறுப்பும் விரோதமும் கிட்டினாலும் சரி' என்ற முடிவுக்கு வந்து, அரசகுமாரிக்கும் அவன் தம்பிக்கும் மேற் கொண்டு நடந்த சம்பாஷணையைக் கவனிக்கலானான்.

தமிழ்ப் பழமொழியைப் பற்றிப் பிரஸ்தாபித்த தம்பியை நோக்கிய அரசகுமாரி, "தம்பி! தமிழ்ப் பழ

மொழி நமக்கெதற்கு? சோழ நாட்டு வீரர் வந்திருக்கிறாரே அவருக்குச் சொல்'' என்றான்.

''அவருக்கு எதற்காக சொல்ல வேண்டும் அக்கா?''

''அவர்தான் பெரிய ராஜ ரகசியத்தைப் பேச இந்த அழகான இடத்துக்கு அழைத்து வந்தார்.''

''ஓகோ, தாதரின் யோசனைதானா இது?''

''தாதரானது! இதை நம்புகிறாயா தம்பி?''

''ஏன் நம்பினால் என்ன? அவரே சொல்கிறாரே, தான் சோழ நாட்டுத் தூதரென்று!''

நிரஞ்சனாதேவி இகழ்ச்சியெல்லாம் அள்ளி தெளிக்கும் சிப்பொன்றை உதிர்த்து விட்டு, ராஜராஜ நரேந்திரன் இருந்த திசையில் கண்களை நாட்டியபடி சொன்னாள். ''தம்பி, அவர் சொல்வதால்தான் நம்பக் கூடாது'' என்று.

வேங்கி நாட்டு மன்னனும், பொறுமையைச் சிறிதும் அறியாதவனும், வேடிக்கையாகவே சமாளித்துக் கடந்து வந்தவனுமான ராஜராஜ நரேந்திரன் உடம்பில், இயற்கையாக இருந்த விஷயம் உள்ள ஸ்தாயியை அடையவே ''அப்படியானால் இவர் வார்த்தையில்...'' என்று நீட்டினான்.

''உண்மைக் கலப்பு இருக்காது'' என்று முடிவாகச் சொன்னாள் நிரஞ்சனாதேவி.

''இவரைத்தானே அன்றொரு நாள் வசந்த மண்டபத்தில் உனக்கு மிகவும் நம்பிக்கையானவர் என்று எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தாய்? இவருக்குத் தானே...'' என்று ஏதோ யோசித்துச் சற்று தடுமாறினான் ராஜராஜ நரேந்திரன்.

''உன் அரச உடையையும் அணியக் கொடுத்தேன்'' என்று பதில் சொன்ன அரசகுமாரி மேலும் தொடர்ந்து,

''அவரேதான் இவர் தம்பி! இவர் சொன்னதெல்லாம் பொய்; செய்ததெல்லாம் துரோகம்! நமது அரிஞ்சயனைக் கடத்திச் சென்று சோழநாட்டில் சிறை வைத்திருப்பதும் இவர்தான்'' என்றாள்.

ராஜராஜ நரேந்திரன் இதற்குச் சொன்ன பதில் அரசகுமாரியை மட்டுமல்லாமல் கரிகாலனையும் தூக்கிவாரிப் போட்டது. சிறிது நேரம் ஏதோ யோசித்த வேங்கி நாட்டு மன்னன், ''அக்கா அரிஞ்சயனை அகற்றியது இவர் எனபது உண்மையானால், இவர் துரோகியல்ல; நமக்கு நண்பர்தான்!'' என்றான்.

விமலாதித்தன் மகளுடைய முகத்தை மட்டும் அந்தக் கணத்தில் ராஜராஜ நரேந்திரன் காண முடிந்திருந்தால், அதில் எழுந்து தாண்டவமாடிய கோபாவேசத்தின் முழு வேகத்தையும் உணர்ந்திருப்பான். ஆனால் பாதி ஒளியே முகத்தில் தட்டியிருந்த காரணத்தால், அவள் கோபத்தாண்டவத்தை முழுவதும் காண முடியாவிட்டாலும் அவள் உதட்டிலிருந்து உதிர்ந்த ''நரேந்திரா!'' என்ற சொல்லில் தொனித்த அழுத்தமும் வேகமும் அவள் உள்ளத்தே எழுந்த அனல் வீச்சைத் தெளிவாக நிரூபித்தன. தான் சொன்ன சொற்கள் நிரஞ்சனாதேவிக்குச் சொல்லொண்ணாக் கோபத்தை அளித்துவிட்டன என்பதை அறிந்து கொண்ட ராஜராஜ நரேந்திரன், அதற்குமேல் அதிகம் பேசாதது மட்டுமல்லாமல் உள்ள நிலையை ஓரளவு சீர்படுத்தவும் நினைத்து, ''அக்கா! பேசுவதைச் சற்று வெளிச்சத்தில் போய்ப் பேசினால் என்ன?'' என்று கேட்டான்.

''எதற்காக வெளிச்சத்தில் பேசவேண்டும்?'' ஏதோ ஏட்டிக்குப் போட்டியாகக் கேட்டான் நிரஞ்சனாதேவி.

''உனக்குச் சிரமம் இருக்காது.''

''எனக்கு என்ன சிரமம்?''

"இல்லவே அழுத்தமாக 'நரேந்திரா' எனக் கூப்பிட்டுப் பயமுறுத்த வேண்டாம். உன் கண்களில் கோபத்தைக் கண்டாலே நான் அடங்கிவிடுவேனே!"

இதைக் கேட்ட நிரஞ்சனாதேவியின் கோடம் முனைத்த வேகத்தில் மறைந்துவிடவே, தன் தப்பிதமான பார்வையொன்றை வீசிவிட்டு, "நரேந்திரா! நீ இன்னும் விளையாட்டுப் பிள்ளையாக இருக்கிறாயே என்பதால்தான் எனக்குக் கோபம் வருகிறது. சரி, வா. பேச வேண்டியதை வசந்த மண்டபத்தில் பேசிக் கொள்ளலாம்" என்று கூறிவிட்டு தோட்டத்தின் அந்தப் பகுதியை விட்டுச் சந்திர வெளிச்சம் மண்டிக் கிடந்த புல்வெளியை நோக்கி நடந்தாள். ராஜராஜ நரேந்திரன் பேசாமல் அவளைப் பின் தொடர்ந்தான். ஏதேதோ எண்ணங்கள் மனத்தினை னைத்துக் கொண்டிருந்ததாலும், எப்படியாவது நிலைமையைச் சமாளித்து அரசகுமாரிக்கு நம்பிக்கை யூட்டித் தன் வாழ்க்கையின் முக்கியப் பணியை நிறைவேற்ற வேண்டுமே என்ற பொறுப்புணர்ச்சியாலும் அவ்விருவரையும் முன்னால் செல்லவிட்டுச் சற்றுப் பின்னடைந்தே அவர்களைப் பின்பற்றிச் சென்றான் கரிகாலன்.

தீர்க்காலோசனையிலிருந்த காரணத்தால், அரச குமாரி மெதுவாகவே நடந்து சென்றதால், சொப்பன உலகத்தில் நடமாடும் ஒரு வனதேவதையைக் காண்பது போல் அவளைப் பார்த்துப் பரவசப்பட்டான் கரிகாலன். ராஜராஜ நரேந்திரன் அவளுக்கு நேர் பின் பகுதியில், சொல்லாமல் சிறிது தள்ளியே நடந்ததாலும், மலைபோல் செழித்துக் கிடந்த அவன் வனப்பின், அழகுகள் கண்ணுக்கு நன்றாகத் தெரிந்ததாலும், அந்த அழகுகளை அள்ளித் தடாகத்திற்கு அருகில் நடந்து கொண்டிருந்த மயிலின் அழகுக்கு ஒப்பிட்டுப் பார்த்த கரிகாலன், 'மயிலே! உன் சாயலும் நடையும் இந்தப் பெண் மயிலின்

நடைக்கும் எழிலுக்கும் உறை போடக் காணுமா?' என்று மனத்திற்குள்ளேயே சொல்லிக்கொண்டான். 'நன்றாகப் பின்னப்பட்டு நீண்டு கிடந்த அந்த ஜடைக்குத்தான் என்ன குறைவு? அவள் நடக்கும்போது எதற்காக இப்புறமும் அப்புறமும் ஆடி ஆடி அழகைத் தொட்டுக் காட்ட வேண்டும்?' என்று எண்ணியது கரிகாலன் கவிஞன்.

இப்படி அவன் நடையழகை ரசித்துக்கொண்டே வசந்த மண்டபத்தை அடைந்த கரிகாலனைச் சிறிதும் திரும்பிப் பாராமலும், உள்ளே வாவென்று அழையாமலும் கதவைத் திறந்துகொண்டு சென்றாள் நிரஞ்சனாதேவி. அவள் அப்படிச் சென்றதை ரசித்ததாலோ, அல்லது கரிகாலனிடமிருந்து பூராத் தகவலையும் அறியவேண்டுமென்ற காரணத்தாலோ தெரியவில்லை ராஜராஜ நரேந்திரன் மட்டும் வேகமாகப் பின்புறம் திரும்பி தன்னைத் தொடருமாறு கரிகாலனுக்குச் சைகை செய்து, வசந்த மண்டபத்திற்குள் நுழைந்து, அரசகுமாரியின் பள்ளியறையை நாடிச் சென்றான்.

ஒரே உயரம்— கிட்டத்தட்ட ஒரே வயது, அநேகமாக ஒரேவிதமான அங்க அமைப்பு—இவற்றையுடைய கரிகாலனும் ராஜராஜ நரேந்திரனும் அரசகுமாரியின் அதே பள்ளியறையில் மீண்டும் பல நாட்களுக்குப் பிறகு அந்த இரவில் சந்தித்தார்கள். ஆனால் அன்றைக்கும் இன்றைக்கும் எத்தனை மாறுதல்! அன்றைக்கு அநாதையாக அரசகுமாரியின் அபயத்தை நாடி ஓடிவந்தான் கரிகாலன். இன்று பதவி உயர்ந்து, சோழ நாட்டுத் தூதன் என்ற முறையில் ஜெயசிம்மனும் அசைக்க முடியாத அதிகாரத்தைப் பெற்று வந்திருக்கிறான். ஆனால், அன்று வந்த கரிகாலன் அரசகுமாரியின் ஆதரவையும் நம்பிக்கையையும் பெற்றவன்; அவளுக்குக் கரும்பாயிருந்தவன். இன்று வந்த கரிகாலன், அவளுக்கு வேம்பு; விரோதி; தம்பியின் நலனை அழிக்க வந்த நமன்!

இத்தனை எண்ணங்களுடன் அரசகுமாரி கட்டிலில் அமர்ந்திருந்தாள். அன்று அவளுக்கு அருகில் நின்றவன் கரிகாலன்; வாயிற்படியில் நின்ற ராஜராஜ நரேந்திரன், அவளுக்கு வெகு அருகில் சென்று நின்று கொண்டு, "அக்கா!" என்று ஆசையோடு அழைத்தான். ஆசை வெள்ளம் அகத்தில் புரண்டு கொண்டிருந்த கரிகாலன் உள்ளே காலை எடுத்து வைக்கவும் கூசியவனாய் வாயிற்படியிலே நின்றான்.

அரசகுமாரி எதும் பேசாமலே கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். ராஜராஜ நரேந்திரனே பேச்சைத் துவக்கி, "அக்கா! அரிஞ்சயனை இவர் சோழ நாட்டுச் சிறையில் அடைத்தது உண்மையா?" என்று கேட்டான்.

"உண்மை; மாமாவே சொன்னார்!" என்றாள் திரிஞ்சனாதேவி.

"யார், ஜெயிம்மனா" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் நரேந்திரன்.

"ஆம்" என்றாள் அரசகுமாரி.

"அவருக்கு எப்படித் தெரியும்?"

"அவரிடம் வந்திருக்கும் சேர நாட்டு ஒற்றன் சொன்னான்."

"எதற்காகச் சொன்னான்?"

"இவரைப் பழி வாங்க."

"இவர் அவனுக்கு என்ன நிமை செய்தார்?"

"அது தெரியவில்லை."

"சரி, ஆனால் ஒரு விஷயம் தெரிகிறதல்லவா?"

"எது தம்பி?"

"சேரநாட்டு ஒற்றனுக்கும் இவருக்கும் விரோதம். அந்த ஒற்றனை வேலைக்கு அமர்த்தியிருக்கிறார் மாமா. இவருடைய விரோதியைத் தன் பக்கம் சேர்த்துக்

கொண்டு, இவரை ஒழிக்கத் திட்டமிட்டிருக்கிறார். இதிலிருந்து உனக்கு என்ன புரிகிறது?"

"அரசகுமாரியின் கண்களில் திடீரென ஓர் ஒளி பிறந்தது. சட்டென்று தலைதாழ்த்தி தம்பியை ஏறெடுத்து நோக்கி, "என்ன சொல்லுகிறாய் தம்பி?" என்று வினவினாள்.

"இவர் ஜெயிம்மன் விரோதியில்லாவிட்டால் இவர் விரோதியை ஜெயிம்மன் ஏன் வேலையில் வைத்துக் கொள்கிறார்? இவரைப் பிடித்துவர ஏன் அந்த ஒற்றன் தலைமையில் வீரர்களை அனுப்ப வேண்டும்?"

ராஜராஜ நரேந்திரனுடைய வாதத்தின் போக்கு மிகத் தெளிவாகப் புலப்பட்டது அரசகுமாரிக்கும். ஆகவே, அவள் பதிலேதும் சொல்லாமல் மௌனம் சாதித்தாள். ராஜராஜ நரேந்திரன் அவள் மௌனத்தை நீடிக்க விடாமல், "ஏன் அக்கா, அரிஞ்சயன் நமது நண்பனாயிருந்தால், நமது சதிக்கு உதவுகிறவனாயிருந்தால், அவன் ஒழிந்ததைப் பற்றி ஜெயிம்மன் ஏன் கவலைப்பட வேண்டும்? அதற்காக இவரை ஏன் சிறைபிடிக்க முயல வேண்டும்?" என்று கேள்வியும் கேட்டான்.

"என்னைத் திருப்தி செய்ய இவரைக் கைது செய்யும்படி கூறினார் ஜெயிம்ம சாளுக்கியன்" என்றாள் திரிஞ்சனாதேவி.

இதைக் கேட்ட ராஜராஜ நரேந்திரன், அந்த வசந்த மண்டபமே அதிரும்படியாக நகைத்தான். அவன் உடம்பில் அவ்வளவு பெரிதாகச் சிரிப்பதற்கும் வது இருக்கிறதென்பதை அப்பொழுதுதான் அரசகுமாரியும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அதிர்ச்சியடைந்த கண்களை அவளை நோக்கி எழுப்பினாள் அரசகுமாரி. "அக்கா! ஜெயிம்மனை நீ புரிந்து கொண்ட லட்சணம் இதுதானா? இத்தனை சிற்றறிவு படைத்த நீயா.

உயிருக்கே உலை வைக்கவல்ல மாபெரும் சதியினைத்தான் விருக்கிறாய்! உன்னைத் திருப்தி செய்யக்கூடிய ஒரு காரியத்தை தெரியாமல் சாளுக்கியன் செய்வானென்ற ஞானோதயம் உனக்கு என்று ஏற்பட்டது?" என்று சொல்லி மீண்டும் சிரித்தான் ராஜராஜ நரேந்திரன்.

அரசகுமாரியின் முகம் குங்குமமெனச் சிவந்தது. ராஜராஜ நரேந்திரனை அடித்து விடுபவளைப்போல் திடீரெனப் பஞ்சணையிலிருந்து எழுந்தாள். கோபத்தால் நிதானத்தை அறவே இழந்துவிட்ட விமலாதித்தன் மகளை, அப்படியே ஸ்தம்பித்து நின்று விடும்படியான பேரிடியொன்றையும் அடுத்தபடி வீசிய ராஜராஜ நரேந்திரன், "அக்கா! நீ இஷ்டப்பட்டாலும் சரி, இஷ்டப்படாவிட்டாலும் சரி, இவர் திட்டத்துக்கு நான் ஒப்புக்கொள்கிறேன். வேங்கி நாட்டு அரியணை எனக்கு வேண்டாம்" என்று கூறினான்.

44. அடங்காரோ!

ராஜராஜ நரேந்திரன் சொன்ன கடைசி வார்த்தைகளால் ஒரு கணம் அடியோடு செயலிழந்து ஸ்தம்பித்துப் போன அரசகுமாரி, அடுத்த கணம் உள்ளூர ஓடிய உணர்ச்சிகளால் தன் கால்களால் நிற்கவும் முடியாமல் பலவீனப்பட்டுப் போவதை அறிந்து, கட்டிற்காலின் முகப்பிலிருந்த சிங்கத்தின் தலையைத் தன் மெல்லிய விரல்களால் அமுக்கிப் பிடித்துத் தன்னைச் சற்றே திடப்படுத்திக் கொண்டாள். பள்ளியறையின் மூலையிலிருந்த வெங்கலப் பதுமை விளக்குக் கூட, 'அடி பேதையே! தம்பிக்காக உன் வாழ்நாளையெல்லாம் நியாகம் செய்து தலைக்கே தீம்பு தரக்கூடிய சதியினல்லவோ தேடித்த பலனைப் பார்த்தாயா?' என்று தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது அரசகுமாரிக்கு. இன்னொருவன் முன்பாகத் தன்னைச் சிற்றறிவு படைத்தவள் என்று தம்பி சொன்ன மாத்திரத்திலே துடித்தெழுந்த அரசகுமாரி உள்ளத்தில், ராஜராஜ நரேந்திரன் தனக்கு வேங்கி நாட்டு அரசு வேண்டாம் என்று சொன்ன சொற்கள் பல நெருப்புக் கணைகளாகப் பாய்ந்து, அவள் இதயத்தை அப்படியே சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தன. சிங்காரத்திலும் சிற்றின்பத்திலும் செலவிட வேண்டிய தன் இளமையை, எந்த ராஜராஜ நரேந்திரனுக்காகச் சதியிலும் சங்கடத்திலும் செலவிட்டுக்கொண்டிருந்தாளோ, அந்த ராஜராஜ நரேந்திரன் தான் வகுத்த திட்டத்துக்கெல்லாம் யமனாக வந்து முளைப்பான் என்று அவள் சற்றும் எதிர்பாராததால், தம்பிமீது நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய சுட்டியின் முனைகளைப்போல் வெந்து தொலித்த தனது இரு விழிகளையும் பதியவிட்ட அரசகுமாரி கண்களில் தெரிந்த உஷ்ணத்தைச் சொற்களிலும் தோயவிட்டு நெருப்பென வார்த்தைகளைக் கக்கினாள்.

தோரணையே திரும்பித்தது. சகோதரியின் கோபத்தைக் கண்டு பயந்து ஒரு விநாடி அசைந்த அவன் உடல், அடுத்த விநாடி கூடிய வரையில் நிடமாகவே காலைத் தரையில் ஊன்றி நின்றது. இயற்கையாகச் சற்றுச் சலனத்தைக் காட்டும் அவன் கண்களுடைப் பயத்தால் ஒருகணம் தரையில் தாழ்ந்தாலும், மறுகணம் மன்னன் மகளின் கூர் விழிகளுடன் இணைந்து நின்றன. கொஞ்சம் நடுங்கிய குரலிலிருந்து வெளிவந்த சொற்களிலும் தீர்க்காலோசனையும் நியாயமும் நிரம்பி நின்றன.

''அக்கா! சோழ நாட்டுத் தூதர்...'' என்று ஆரம்பித்த ராஜராஜ நரேந்திரனை, ''அவரைத் தூத ரென்று அழைக்காதே; சத்தப் பொய்'' என்று கோபத் துடன் வெடித்த அரசகுமாரியின் சொற்கள் ஆரம்பத்தி லேயே

''இல்லை இந்த நண்பர்...''

''இவர் நமது நண்பரல்ல.''

''சரி அக்கா! இந்த மனிதர்...''

''இவர் மனிதரல்ல; இவரிடம் மனிதத் தன்மை மருந்துக்குக்கூட இல்லை.''

பெண்களின் கோபம் உச்சநிலையை அடையும்போது, அவர்கள் நிதானத்தை எத்தனை தூரம் இழந்துவிடுகிறார் களென்பதை அறிந்த ராஜராஜ நரேந்திரன், மென்ன இளநகை பூத்துவிட்டுக் கேட்டான், ''அப்படியானால் இவரை என்னவென்று அழைக்கட்டும்?'' என்று.

அவன் இதழ்களிலே பூத்த இளநகையைக் கண்டான் நிரஞ்சனாதேவி. அவன் முகத்திலே பூத்த ஏளனத்தையும் கண்டாள். இரண்டையும் கண்டு வெருண்டான். ''விளையாடுகிறாயா நரேந்திரா?'' என்று கேட்டான்.

''விளையாடவில்லை, அக்கா! உன் போக்குத்தான் எனக்குப் பெரும் விளையாட்டாக இருக்கிறது. இங்கு

''நரேந்திரா! அனைவரும் பயமும் இன்னதென்றே யாத விமலாதித்தன் மகனா நீ? எத்த லேவி நாட்டு அரியணையைப் பாதுகாப்பதற்காகப் பலப்பல சாளுக்ய மன்னர்கள் போர்முனையில் தங்கள் உதிரத்தை சொட்டினார்களோ, அந்த வீரர்கள் பரம்பரையில் வந்த இளவலா நீ? எத்த அரச பீடத்தைக் கண்டு விமலாதித் தன் காலத்தில் மேலைச் சாளுக்யர்களும் பயந்தார் களோ, அந்த அரச பீடத்தை மாற்றான் கையில் ஒப்படைக்கச் சொல்லிடம் போம்படச முற்படும் நீயும் ஒரு வீரனா? எத்த வைரியத்தைக் கொண்டு இந்த வார்த்தைகளை என் செவிகளில் பதம்படப் பேச நே வந்தாய்? இதோ நிற்கும் இவர் சொற்கள் ஆயு பலத்துக்கிடையே உன்னைப் போன்ற அடைக்கலம் எற்பார் செய்வதாகச் சொல்லி தோட்டத்தில் சொன்னாரே, அந்தச் சொற்கள் அளித்த வைரியமா? அல்லது, 'இவன் பெரிய வீரன்; இவன் முன்பாக வைப் பேசினால் என்ன செய்து விடுவான்?' என்ற இளக்கார ஆணவத்தை இவர்களுக்கு இறுமாப்பு அளித்த வைரியமா?'' என்று, சொற்களை உதிர்களும் ஏகாவத்தில் கலக்கச் சொல்லாமல் சொல்லிவிட்டாள் மன்னன் மகள்.

அந்தச் சமயத்தில் அவள் கண்ட கம்பீரத்தையும், கோபத்தால் குன்றாத நுண்ணறிவையும் எழுந்த கோபாவேசத்தையுமெல்லாம் கண்டான் ராஜராஜ நரேந்திரனுக்குப் பதில் அவன் உளப் பிறந்திருந்தால் வேங்கி நாடு எத்தனை உயரிய ஸ்தானத்தைத் தென்னகத்தில் வகித்திருக்கும்!' என்று எண்ணியதோடு, இந்தச் சொற்களுக்கு ராஜராஜ நரேந்திரன் எத்தகைய பதிலைச் சொல்லப் போகிறான் என்று அவன்மீது தன் பார்வையைச் செலுத்தினாள்.

சாதாரணமாகக் கோழையென்று எல்லோராலும் மதிக்கப்பட்ட ராஜராஜ நரேந்திரன் உண்மையில் அத்தனை கோழையல்ல என்பதை அவன் தின்ற

''அப்படியானால் அந்த எண்ணைதான் இடைக்கும்?''

''தங்களுக்கு இந்தக் கிடைக்காததெல்லாம் அந்தக் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். நான்கு பக்கத்திலும் எதிரிகள் சூழ்ந்திருக்கும் வேங்கி நாட்டு மன்னருக்கு அதிவாலவியான போர்ப்படையிற்ற கிடைக்கும். தங்கள் சகோதரி இராஜாதிராஜருக்குத் தலையான தேசப் பாதுகாவல் கிடைக்கும். படைகளை அணிவகுத்து நடத்து வதற்கு ஏற்ற அரசருக்கு மிகவும அவசியமான அறிவு கிடைக்கும். தவிர மற்ற அரசர்களுடன் சமாதானமாக உறவாடுவதற்குத் தேவையான ராஜ தந்திரமும் கற்பிக்கப் படும். நீங்களும் உங்களுக்கானவர்களும் சோழ நாட்டில் கால இடைப்படுகிறேன்'' என்று தேவி சொன்ன காலம், வாசற்படி யைக் கடந்து வெளியேறுவதற்குள் வந்து, அரசகுமாரியை யும் பார்த்தாதேவி! சந்தர்ப்பங்கள் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் சாதகமாகி விட்டன. சந்தோசத் தில் அடையும் நிலையை உள்ளபடி அடைய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தச் சமயத்தில் நான் எதுவும் செய்யாமலிருப்பதும் நீங்கள் நம்புவது கஷ்டம். ஆனால் சந்தர்ப்பங்கள், நாம் நின்றிருக்கும் குழ்நிலையில் நீங்கள் ஏற்கனவே வகுத்த சித்திட்டம் பலன் தருமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஜெயசிம்மனைக் கொலை செய்ய உங்கள் நண்பர் பிரும்ம மாராயர் இட்ட திட்டம் நிறைவேறியிருந்தால், விமலாதித்தன் அரச பரம்பரைக்கு மட்டுமல்ல, அத்துடன் நிருமணத் தொடர்பு கொண்ட, என்றும் தொடர்பு கொண்ட உத்தேசித் திருக்கும் சோழ பரம்பரைக்கும் சரித்திரத்தில் ஏற்படக் கூடிய நிரந்தரமான ழிழிவைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்'' என்று நிதானமாக, ஆனால் மிக அழுத்தமாக வும் தெளிவாகவும் விஷயங்களை எடுத்துரைத்தான்.

ஆனால் குழம்பிப் போயிருந்த அரசகுமாரியின் சிந்தனையைத் தெளிவுபடுத்துவதற்குப் பதிலாகச்

நாம் பேச வந்தது இவர் யார் என்பதை விளாதிக்க அல்ல இவர் சொல்லும் யோசனை நமக்கு நன்மை பயக்கும் தீமை பயக்குமா என்பதை ஆராயத்தான். ஆனால், நாம் பேசத் தொடங்குவதில் வார்த்தைகளுக்கே தீ மூட்டுகி றாய், சொற்களில் என்ன இருக்கிறது அக்கா? விஷ யத்தைப் பற்றி விவாதிப்போம்'' என்று பெரியவள் ராஜா நடைந்தாள்.

''இவர் பேச்சில் எந்தப்பிரயோஜனமும் கம்பீர விஷம் இருக் கிறது'' என்று எச்சரித்தாள் தாசகுமாரி.

''விஷம் நந்தான் எடுத்து விளையாடலாம். அமுதமாயிரு தால் எப்படித்தான் எல்லாம் உனக்குப் பிடிக்கு இந்தக் கரிகாலன் அவனும், அதை ஏற்க மல்லவா?''

''எது அமுதம்? கரிகாலன் அமுதமா? கலவாசம் அமுதமா? இந்தச் சந்தர்ப்பத்தில் சம்பாஷணையில் புகுந்த கரிகாலன் தலை இருக்கிறது'' என்று கேட்டுக் கொண்டு

அதுவரை கரிகாலனையே கவனித்தும் பார்த்தும் நிற்சனாதேவி, அவன் கேள்வியும் வேறுப்பு தொக்கி நின்ற பார்வையிலிருந்து விலினான். அவள் பார்வையில் தொக்கி நின்ற கேள்வி ராஜராஜ நரேந்திர வாயிலாக வெளிவந்தது. ''என்ன தலை கரிகாலரே?'' என்று ராஜராஜன் கேட்டான்.

''வேங்கி நாட்டு இளவரசுக்குச் சோழ நாட்டுச் காத்திருப்பது சுகவாசமல்ல'' என்று பதில் சொன்னார் கரிகாலன்.

''வேறென்ன காத்திருக்கிறது கரிகாலரே? கொ வாசமா?'' என்று கேட்டான் நரேந்திரன்.

''நிறைவாசமும் சிலருக்குச் சொல்லக் போகலாம். ஆனால், அந்தச் சுகமும் இராஜேந்திர சோழ தேவ சகோதரி மகனான தங்களுக்குக் கிடைப்பது கஷ்டம்.''

கரிகாலனது சொற்கள் அவள் கோபத்தையே கிளறின. ''திருமணத் தொடர்பா! அதற்கும் ஏற்பாடாகியிருக்கிறதா? சோழ நாட்டுக்குப் போனால் தரோத்திரனுக்குச் சொர்க்க போகம்தான் போலிருக்கிறது!'' என்றாள் நிரஞ்சனாதேவி. கோபமும் எளனமும் கலந்த குரலில்.

''சொர்க்க போகம் பின்னால் இருக்கலாம்; தற்சமயம் இல்லை!'' என்றான் கரிகாலன்.

வெறுப்பையெல்லாம் அள்ளிக் கொட்டிய அம்மாவின் கண்கள் கரிகாலனை நோக்கி எழுந்தன. ''ஓகோ! அதற்குச் சிறிது காலம் பிடிக்கும் போலிருக்கிறது'' என்றாள் அவள்.

''அரசகுமாரி! இராஜேந்திர சோழதேவர் மகள் அம்மங்கா தேவியைத் தங்கள் தம்பிக்குத் தொடுப்பதென இலையதிலேயே நிச்சயம் செய்யப்பட்டுவிட்டதை நானறிவேன். ஆனால், என் அத்திருமணம் இன்னும் நடைபெறவில்லை!'' என்று கரிகாலனும் கொஞ்சம் கோபத்துடன் கேட்டான். நிரஞ்சனாதேவியின் இரண்டு புருவங்களும் சற்று மேலே உதயமாக்கும் எண்ணத்துடன்.

கரிகாலன் கேள்வி தன்னையும் தன் தம்பியையும் கலிங்க அடக்கும் சாட்டையை உயர்த்த நிரஞ்சனாதேவிக்கு என்ன பதில் சொல்வதென்பதே விளங்கவில்லை. அம்மங்காதேவியும் தரோத்திரனும் ஏறு வயதாயிருக்கும் போதே அவர்கள் திருமணத்தை நிச்சயித்த இராஜேந்திர சோழதேவன், இருவரும் மணப்பருவத்தை யடைந்தும் மாளாவிருக்கிறான் என்றால், அதற்குக் காரணம் தன் தம்பியின் தற்கால நிலையே எனபதை நிரஞ்சனாதேவி தன்னுள் உணர்ந்து கொண்டாள். சோழப் பேரரசன் தன் மகளுக்கு விரமற்ற ஒருவனை மணாளனாக்க ஒருகாலும் சம்மதிக்க மாட்டான் என்பதையே கரிகாலன் சுட்டிக் காட்டுகிறானென்பதைத் திட்டமாகத் தெரிந்துகொண்ட நிரஞ்சனாதேவி, விஷயம் கரிகாலன் வாயினாலேயே

வாட்டுமென்று, ''ஏன்?'' என்று ஒற்றைச் சொல் கேள்வியை வினவினாள்.

ஏதோ பதில் சொல்ல வாயெடுத்த கரிகாலனைத் தனது வலது கையைத் தூக்கி அடக்கிய நிரஞ்சனாதேவி நோக்கி, ''அக்கா! சதியில் நினைத்த உனக்குக் கூடவா இது புரியவில்லை? எத்தச் சங்கடத்திலும் சபலபடாத எனக்கே இது புரிகிறதே. நான் பிரளவில்; பேருக்குத்தான் நான் மன்னன் தவிர...'' என்று மேலும் பேசப்போன அவளை இடைமறித்த நிரஞ்சனாதேவி, ''இராஜேந்திர சோழ தேவனின் சகோதரி மகன் நீ'' என்றாள்.

''இருக்கலாம், அக்கா! அதற்காக ஒரு பேரரசன் பெண்ணைக் கொடுப்பானா? அப்படியே கொடுப்பதானாலும் விரபத்தினனை ஒரு தமிழ்ப் பெண் மணக்க இணைவானா?'' என்று கேட்டான் ராஜராஜ நரேந்திரன்.

''தம்பி!'' பதட்டத்துடன் எழுந்தது நிரஞ்சனா தேவியின் குரல்.

''இதில் பதட்டம் உதவாது அக்கா! உண்மையை அலகவதில் தானம் வேண்டுமென்று நீயே சொல்லுவாயே. இந்தத் திருமணத்தில் ஏதோ உன் தம்பியும் இன்னொரு பெண்ணும் மட்டும் சம்பந்தப்பட்டு இருப்பதாக நினைக்காதே. இரண்டு அரசுகள் சம்பந்தப்பட்டுக் கின்றன. பெருவாரியான மக்கள் சம்பந்தப்பட்டுக் கிறார்கள். வெங்கி நாட்டு அரச இடப்படக் கரிகாலர் சொன்ன யோசனையை ஏற்பது அவசியம்.''

''அது ஒழுங்கான யோசனை அல்ல.''

''ஏன்?''

''உன்னைச் சோழநாட்டு அடிமையாக்க ஒருகாலும் நான் உடன்பட மாட்டேன்.''

"இங்கு ஜெயசிம்மன் அடிமையாக நான் வாழ்வதில் உனக்கிஷ்டமா?"

"அந்த அடிமைத்தனமை உடைத்து விட்டாய்."

"உடைக்கப் பலம் தேவை அக்கா! அந்தப் பலத்தைச் சம்பாதிக்க, நான் இந்த அரசைச் சிலகாலம் துறக்க வேண்டும்; வேங்கி நாட்டில் கிடைக்காத போர்ப் பயிற்சியை வேறு நாட்டில் பெறவேண்டும்."

"இங்கு அதை ஏன் பெற முடியாது?"

"பெறவிடமாட்டான் ஜெயசிம்மன். சைன்னியம் அவன் சொன்னபடி கேட்கிறது. மக்கள் அவனை நம்புகிறார்கள். நான் வானைக் கேட்டால், என் கையில் மதச்சின்னத்தை வேலைக்காரர்கள் தரத் தித்தமாக இருக்கிறார்கள். படைகளைப் பார்க்க வேண்டுமென்றால், பருவப் பெண்களின் படைகளைத்தான் என்னைச் சுழ விடுகிறான் ஜெயசிம்மன். இந்த வலையிலிருந்து முதலில் விடுபட வேண்டும். எனது கையும் காலும் சுதந்திரமடைந்த பிறகு, ஜெயசிம்மன் சூழ்ச்சி வலையை அறுக்க நான் சுத்தியுடன் இங்கு வரவேண்டும்" என்றான் ராஜராஜ நரேந்திரன்.

"முதலில் வலையிலிருந்து விடுபடவேண்டும்" என்றாள் அரசகுமாரி.

அவள் சித்தனையிலும் மெல்ல மெல்ல உண்மை உதயமாயிற்று. ஆனால், அடுத்த கணம் கலிகாலன் மீதிருந்த வெறுப்பு அவள் மதிக்கு மீண்டும் திரை போட்டது.

அவள் கேள்விக்கு, "விடுபட வைக்கவே நான் வந்திருக்கிறேன்" என்று பதில் சொன்னான் கலிகாலன்.

அரசகுமாரி அவனுடன் பேசவும் இஷ்டமில்லாமல் வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

ஆனால் ராஜராஜ நரேந்திரன், "கலிகாலரே! எந்த எண்ணத்தினால் நீர் என்னை இந்த வேங்கி நாட்டிலிருந்து அகற்ற இஷ்டப்படுகிறீர் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அதற்குக் காரணம் எனக்குப் போர்ப் பயிற்சி அளிப்பது என்றால், அதில் எனக்குப் பூரண சம்மதம். நீர் ஜெயசிம்மனுடன் செய்துகொள்ளும் எந்த ஒப்பந்தத்திற்கும் நான் உடன்படுவேன்" என்று சொல்லிவிட்டு நிரஞ்சனாதேவியைப் பார்த்து, "கலைப்படாதே அக்கா! எல்லாம் நன்மைக்குத்தான் நடக்கிறது" என்று அவளிடம் விடை பெற்றுக்கொண்டு, வெளியே நடந்து விட்டான்.

தனியே விடப்பட்ட கலிகாலனும் மன்னன் மகளும் நீண்ட நேரம் மௌனமாக நின்றனர். பிறகு மன்னன் மகனே பேசத் தொடங்கி, "சோழநாட்டுத் தூதரின் அடுத்த திட்டம் என்ன?" என்று இகழ்ச்சி பூரணமாகத் ததும்பிய குரலில் கேட்டான்.

"அரசகுமாரி! நீங்கள் எத்தனை இகழ்ச்சியாக என்னை அழைத்தாலும், நான் சோழநாட்டுத் தூதன் தான். உங்கள் இருவரையும் சோழ நாட்டுக்கு அழைத்துச் செல்வது என் திட்டம்" என்றான் கலிகாலன்.

"அதற்கு என்ன காரணத்தைச் சொல்லுவீர் ஜெயசிம்மனிடம்?"

"காரணத்தைத்தான் நீங்களே முன்பு கட்டிக் காட்டி விட்டீர்களே. அவன் மருமகன் விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனை வேங்கி நாட்டு அரியணையில் அமர்த்தவே நான் முயல்வதாகக் கூறுவேன்."

"அதாவது உண்மையைக் கூறுவீர்!"

"உண்மையோ பொய்யோ, காலம் சொல்லும் அரசகுமாரிக்கு."

அரசகுமாரி ஏதோ யோசித்தாள். பிறகு சாளரத்தை நோக்கி வெளியே பார்த்தாள். அவள் அருகில் செல்வதற்கு கரிகாலனும் இரண்டடி எடுத்து வைத்தான்.

அவன் காலடிச் சத்தம் அவள் காதுகளிலும் விழுந்தது. அவள் திரும்பிப் பாராமலே சொன்னாள்: ''இங்கே வர வேண்டாம். போய் வாருங்கள். உங்கள் திட்டம் நிறைவேறிய பிறகு, உங்களுடன் கைதிகளாக நானும் என் தம்பியும் சோழ நாடு வரும்போது, மீண்டும் சந்திப்போம்'' என்று.

அவள் குரலில் எக்களும் துக்கமும் கலந்து தொனித்தன. பின்னால் நின்ற கரிகாலனால் முன்னாலிருந்த அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை. முடிந்திருந்தால், அவள் அழகிய கண்களிலிருந்து முத்துபோல் நீர்த்துளிகள் உருண்டு நிலத்தைச் சுட்டதை அறிந்திருப்பான்.

முகத்தைப் பார்க்காவிட்டாலும், அவள் சொற்களில் சொட்டிய வெறுப்பின் காரணமாக அவன் அவளை அணுக முற்படவில்லை. உள்ளத்தே எழுந்த துயர அலைகளின் காரணமாகப் பெருமூச்சொன்றை விட்டு வெளியே சென்றான். அவன் தூரத்தே செல்ல செல்ல அவன் காலடி ஓசை மெல்ல அவள் செவிகளில் விழுந்தது. மெல்லத் திரும்பி அவன் நின்றிருந்த இடத்தைப் பார்த்த அவள் வாயிலிருந்து, ''அடத் துரோகி! உன்னிடம் என் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தேனே!'' என்ற வார்த்தைகள் உதிர்ந்தன. அவள் உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில் மட்டும், 'அவன் நல்லவன், அவனை நம்பு!' என்று ஏதோ ஒன்று ரகசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தது. அவள் நம்பவும் முயன்றாள். அப்படி ஏதாவது நம்பிக்கை உதயமாகியிருக்கும் பட்சத்தில், அடுத்த நாள் மாலினி கொண்டு வந்த செய்தியொன்று, அந்த நம்பிக்கையை அடியோடு உடைத்துவிட்டது.

45. சதுரங்கக் காய்கள்

ஒரே இரவு ஒரே பகல்! அறுபதே நாழிகைகள்! அந்தக் குறுகிய கால அளவில், பெரிய பெரிய ராஜதந்திரிகளும் சாதிக்க முடியாத அந்த மகத்தான காரியத்தைக் கரிகாலன் எப்படிச் சாதித்தான் என்பதை நினைக்க நினைக்கப் பிரமிப்பாகவேயிருந்தது நிருத்தாதேவிக்கு. தன்னையும் தன் தம்பியையும் சோழ நாட்டுக்கு அழைத்துச் செல்வதாக முந்திய நாளிரவு வசந்த மண்டபத்தில் உறுதி கூறிய கரிகாலன், எந்த உபாயத்தைக் கையாண்டு, மறுநாள் பகலுக்குள் அந்தக் காரியத்துக்கு இளவரசியின் சம்மதத்தைப் பெற்றான் என்பதைப் பற்றி, எண்ணற்ற முறைகள் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தும் காரணத்தை அறிய முடியாமல் திணறிய அரசகுமாரிக்கு, மாலினி கொண்டுவந்த தகவல் உண்மையாக இருக்க முடியுமா என்ற சந்தேகமும் ஏற்படவே, எதிரே நின்ற தன் தோழியிடம் தன் அழகிய விழிகளைச் சற்றே பதியவிட்டாள்.

அரசகுமாரியின் பார்வையில் படர்ந்து கிடந்த சந்தேகச் சாயலைக் கண்ணுற்ற மாலினி, ''ஏன் அரசகுமாரி! நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?'' என்று மெல்லக் கேட்டாள்.

அரசகுமாரியின் சித்தம் எங்கெங்கோ சுழன்று கொண்டு கிடந்ததால், அவள் உடனே பதில் ஏதும் சொல்லாமல், சாளுக்கியர் அரச மாளிகையில் அந்தப் பெரும் அறையின் பிரும்மாண்டமான சாளரங்களிலொன்றை நோக்கிச் சென்று வெளியே தன் பார்வையைச் செலுத்தினாள். வெளியே சற்று தூரத்தில் நகரத்து விளக்குகளின் ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்த கிருஷ்ணா நதி மிக அமைதியாகப் பிரவகித்துக் கொண்டிருந்தது. விளக்கொளி விழாத இடத்தில் இருண்டும்,

ஒளிமுத்த ஒல்லோரிடத்தில் பிரகாசித்துக் கொண்டும், இருளும் ஒளியும் கலந்து மானிட வாழ்க்கைக்கு விளக்கம் தருவதுபோல் பிரவகித்துக் கொண்டிருந்த இருள்ளை நதியை நீண்ட நேரம் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருந்த அரசகுமாரி, "இன்னும் சில நாட்களுக்குள் உன்னைவிட்டுப் போய் வேறு நாட்டு எல்லையில் வாசம் செய்ய வேண்டுமே தாயே!" என்று சற்று இரைந்தே சொல்லி, வரப்போகும் பிரிவின் நினைப்பால் ஏக்கம் கலந்த பெருமூச்சொன்றையும் விட்டாள்.

அரசகுமாரியின் மனோநிலை மாலினிக்குப் பூரணமாகப் புரிந்திருந்ததால், அவள் ஏதும் பேசாமல் சிறிது நேரம் மௌனமாகவே நின்றாலும், இருவரையும் சங்கடத்திலாழ்த்திக் கொண்டிருந்த அந்த மௌன நிலையை உடைக்க எண்ணி மெள்ள அரசகுமாரியை அணுகி, "அரசகுமாரி! நான் கேட்டது உங்கள் காதில் விழவில்லை போலிருக்கிறது?" என்று மெதுவாக வார்த்தைகளை உதிர்த்தான்.

அந்தக் கேள்வி அரசகுமாரியையும் ஓரளவு நிதானத்துக்குக் கொண்டுவரவே, அவள் மீண்டும் சாளரத்தை விட்டு உட்பக்கம் திரும்பி, மாலினியை நோக்கி, "என்ன கேட்டாய் மாலினி?" என்று வினவினாள்.

"நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா என்று கேட்டேனே!" என்று முதலில் கேட்ட கேள்வியை மீண்டும் விளக்கிச் சொன்னாள் பணிப்பெண் மாலினி.

அரசகுமாரியின் புருவங்கள் ஏதோ யோசனையின் அறிகுறியாக ஒருமுறை எழுந்து தாழ்ந்ததல்லாமல், இதழ்களிலும் ஒரு லேசான புன்முறுவல் தவழ்ந்தது. அந்த லேசில் குரலிலும் தொனிக்கச் சொன்னாள் அரசகுமாரி, "நம்பக் கஷ்டமாகத்தானிருக்கிறது மாலினி. செய்தி எப்பேர்ப்பட்டது. நினைத்துப்பார்!" என்று.

"நம்பவும் முடியாத விஷயங்கள் உலகத்தில் நடப்பதில்லையா அரசகுமாரி?" என்று கேட்டாள் மாலினி.

"நடக்கின்றன, மாலினி. ஆனால் இத்தனை சிக்கிரத்தில் ஒரு நாட்டின் அல்லிவாரத்தையே ஆட்டவல்ல ஓர் ஏற்பாடு நடப்பது சாத்தியமா?" என்று அரசகுமாரியும் பதிலுக்குக் கேட்டாள்.

"ஏன் சாத்தியமல்ல அரசகுமாரி? சாளுக்கிய வீரர்களுக்கு அஞ்சி நம்மிடம் நடைக்கலம் புகுந்த ஒரு நாடோடி சில நாட்களுக்குள் சோழ தூதராவது சாத்தியமாயிருந்தால், தாங்களும் மன்னரும் சோழ நாட்டுக்குச் செல்வது ஏன் சாத்தியமாகக் கூடாது?" என்று மாலினி தர்க்க ரீதியில் கேள்வியைத் தொடுத்தாள்.

"அப்படியானால், கரிகாலர் உண்மையில் சோழ நாட்டுத் தூதர்தான் என்கிறாயா?"

"சந்தேகமில்லை அரசகுமாரி! நமது பிரதான மந்திரியே சொன்னார்."

"இருக்க முடியாது மாலினி; இதிலும் ஏதோ விஷமமிருக்கிறது."

"விஷமம் ஏதுமில்லை அரசகுமாரி. கரிகாலரைத் தூதராக நியமித்த ஓலையில், வல்லவரையர் வந்தியத் தேவரே கையெழுத்திட்டிருக்கிறார். சோழர்கள் முத்திரையும் ஓலையில் பொறிக்கப்பட்டிருக்கிறது."

"இதையும் பிரதான மந்திரிதான் சொன்னாரோ?"

"ஆமாம் அரசகுமாரி!"

"நன்றாக விசாரித்தாயா?"

"நிட்டமாக விசாரித்தேன். சந்தேகத்திற்கு இடமேயில்லை."

அரசகுமாரி மீண்டும் சிந்தனையிலாழ்ந்து அறைக்குள்ளே சிறிது நேரம் உலாவினாள். கடைசியாக

மாலினியை நோக்கி அரசகுமாரி சற்று இரைந்தே கத்தினாள்.

"என்ன கத்துகிறீர்கள் அரசகுமாரி?"

"சித்தித்துப் பார்த்தேன்; எல்லாம் வித்தையாயிருக்கிறது மாலினி."

"எது வித்தையாயிருக்கிறது அரசகுமாரி?"

"சோழதூதர் வந்தது, அவர் யோசனைக்கு ஜெயசிம்மன் ஒப்புக் கொண்டது எல்லாம் வித்தையாயிருக்கிறது மாலினி. இதில் யாருக்குப் பைத்தியம் பிடிக்கிறதென்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஊர்பேர் தெரியாத ஒரு புத்த மடாலயச் சிடரை, நாடோடியை, ஒரு வல்லரசின் தூதராக நியமிக்க ஒப்புக்கொண்ட வல்லரையருக்குப் பைத்தியமா? இந்தப் புதுத் தூதர் வந்ததும் வராததுமாக முன்பின் ஆராயாமல் அவர் யோசனைக்கு ஒப்புக்கொண்ட ஜெயசிம்மனுக்குப் பைத்தியமா? அல்லது 'சோழநாட்டுக்கு உங்களைக் கொண்டு செல்கிறேன்' என்று சொன்னதும், சரியென்று துள்ளிக் குதித்தானே நரேந்திரன், அவனுக்குப் பைத்தியமா? வேங்கி நாட்டு அரசபீடம் மாற்றான் கைக்குப் போகிறது என்பதை அறிந்தும், ஏதும் செய்ய வழியில்லாமல் விழிக்கிறேனே எனக்குப் பைத்தியமா? இது என்ன, நாடுகளைப்பற்றிய ராஜ தந்திரமா அல்லது ஒரு தனிமனிதன் இஷ்டப்படி நடத்தக் கூடிய நாடகமா?" என்று விடுவிடு என்று பேசிக் கொண்டு போன அரசகுமாரி, உணர்ச்சிகளின் வேகத்தில் சிறிது தன்னாடி கட்டிலுக்காக நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

மன்னன் மகள் உள்ளத்திலே கொதித்தெழுந்த உணர்ச்சிப் பிரவாகம் எத்தன்மையது என்பதை மாலினி நன்றாக உணர்ந்து கொண்டாள். கரிகாலன் வந்ததும் வராததுமாக மன்னன் மகளையும், மன்னன் ராஜராஜ நரேந்திரனையும் சோழநாட்டுக்குக் கூட்டிச்செல்ல

ஏற்பாடு செய்துவிடுவானென்பது மனத்தால் நினைக்கக் கூட முடியாத மகத்தான சாதனை என்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டிருந்த மாலினிக்கு, அந்தச் சாதனையின் விளைவாக அரசகுமாரிக்கு ஏற்படக் கூடிய துக்கமும் ஏமாற்றமும் எத்தன்மையதென்பது நன்றாகத் தெரிந்தேயிருந்தது. ஆகவே, மேற்கொண்டு எதுவும் பேசாமல், அரசகுமாரிக்கு முன்பாக மௌனமாகவே நின்றாள்.

அரசகுமாரியின் உள்ளத்தை எண்ணற்ற உணர்ச்சி அலைகள் தாக்கிக் கொண்டிருந்ததால், ஏதோ சொப்பன உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அவள் அகக் கண் முன்பு ஏதெதோ காட்சிகள் தோன்றித் தோன்றி மறைந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக, கரிகாலன் உருவமே அவள் உள்ளத்தில் நிரும்பத்திரும்ப எழுந்து நின்றது. உள்ளே ஓடும் உணர்ச்சிகளைச் சிறிதும் பிரதிபலிக்காத அந்தக் குழந்தை முகம், சதா விஷமம் நவழும் கூரிய அந்தக் கண்கள், புன்முறுவல் பூத்து நிற்கும் உறுதியான அந்த உதடுகள்— இவையனைத்தையும் திரும்பத்திரும்பக் கருத்தின் திரையிலே நிட்டித்நிட்டிப் பார்த்த அரசகுமாரிக்கு, கரிகாலனை வெறுப்பதா விரும்புவதா என்றே புரியவில்லை. விருப்பும் வெறுப்பும் கலந்து தாண்டவமாடிய உணர்ச்சிகளுக்கும் மேலாக எழுந்து நின்றது ஒரு கேள்வி. "அவர் எப்படி இதைச் சாதித்தார்?" என்ற அந்தக் கேள்வியை ஒரு முறை வாய்விட்டும் சொன்னாள்.

"அது அமைச்சருக்கும் தெரியவில்லை அரசகுமாரி" என்றாள் மாலினி.

"என்ன அமைச்சருக்கும் புரியவில்லையா?" என்றாள் அரசகுமாரி, நிந்தனை கழலிருந்து தன்னைச் சற்று விடுவித்துக்கொண்டு.

"இல்லை."

"ஏன்?"

"சோழ தூதர் ஜெயசிம்மனுடன் தனிமையிலே பேசினார். அமைச்சரைக்கூட ஜெயசிம்மன் அனுமதிக்காமல் அகன்றுவிடும்படி உத்தரவிட்டானாம்."

"அப்படியா?"

"ஆம், கரிகாலர்..." மாலினி வாக்கியத்தை முடிக்கு முன்பே அரசகுமாரி கட்டிலிலிருந்து துள்ளியெழுந்து "தனிமையில் பேச விரும்பினார்... இப்பொழுது புரிகிறது!" என்று நிதானத்தை இழந்து கூவினாள். மாலினி ஏதோ பேச வாயெடுத்தான். ஆனால் அதற்கு சந்தர்ப்பமளிக்காமல் அரசகுமாரியே பேசிக்கொண்டு போனாள்: "புரிகிறது மாலினி, நன்றாகப் புரிகிறது. அந்தப் படுபாவி நேற்றுச் சொன்னதைச் சாதித்து விட்டான். இனி நமது நாட்டை ஜெயசிம்மனுக்கு விற்று விட்டான். விஷ்ணுவர்த்தன் வேங்கி நாட்டு அரியணையில் நிர்ப்பயமாக உட்காரலாம். சோழர்கள்கூட இதற்கு ஒப்புக் கொள்வார்கள். வேங்கி நாட்டு அரியணையில் யார் அமர்ந்தால் சோழர்களுக்கென்ன? அவர்களுக்கு வேண்டியது சாம்ராஜ்ய விஸ்தரிப்பு. இதற்கு இடமளிக்கக் கூடிய எதையும் சோழர்கள் ஒப்புக்கொள்வார்கள். இனி விமலாதித்த வம்சம் அழிந்தது; அதன் பெருமை அழிந்தது! இத்தனைக்கும் மூலகாரணம் ஓர் அயோக்கியன்; தர்க்க சாஸ்திரம் படித்த ஒரு போக்கிரி. வெகு சுலபத்தில் முடித்து விட்டான் காரியத்தை" என்று விடுவிடு என்று பேசினாள். அவள் நினைத்ததுபோல் காரியம் அத்தனை சுலபத்தில் முடியவில்லை. அன்று காலையில் ஜெயசிம்மனைச் சந்தித்த கரிகாலன், தனக்குத் தெரிந்த தந்திரங்கள் அனைத்தையும் பிரயோகித்தே காரியத்தை முடித்தான். எடுத்த காரியத்தை முடிக்கக் கரிகாலன் எத்தனைப் பொய்களைப் புனைந்தான், எத்தனை முறை உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான், எத்தனை முறை எதிரியைச்

சொற்போர் நடத்தினான் என்பதையெல்லாம், அந்தப் பேதை எப்படி அறிவாள்?

வேங்கி நாட்டுக்கு முதலில் வந்தபோது எந்த அறையில் ஜெயசிம்ம சாளுக்கியன் கரிகாலனைச் சந்தித்தானோ அதே அறையில்தான் அன்று காலையிலும் அவனுக்குப் பேட்டியளித்தான். வல்லூறின் கண்களை விடக் கூர்மையான அதே கண்கள், எள்ளளவும் வெளியில் காட்டாத நிர்ச்சலனமான அதே முகம் அவனை ஏறெடுத்துப் பார்த்தது. உறுதியும் கொடுமையும் நிறைந்த புன்முறுவல் பயங்கரமான மீசைக்குக் கீழே இதழ்களில் தவழ்ந்து நின்றது. ஜெயசிம்மன் முதலில் பேசவில்லை. கரிகாலன் பேசுவதைக் கேட்கத் தன் செவிகள் சித்தமாயிருக்கின்றன என்பதைப் பார்வையின் மூலமே உணர்த்தினான். இவன் மௌனத்திலும் ஒரு கட்டளை தொனித்தது.

மேலைச் சாளுக்கிய மன்னனைத் தலை தாழ்த்தி வணங்கிய கரிகாலன், "தங்கள் அடிமை வந்திருக்கிறேன்" என்று சொல்லி, மடியிலிருந்த ஓலை ஒன்றை எடுத்து ஜெயசிம்மனிடம் நீட்டினான். இடமான தன் கரங்களில் ஒன்றை நீட்டி ஓலை வாங்கிய ஜெயசிம்மன், ஒரு விநாடி அதைப் பார்த்தான். பிறகு ஓலையைத் திருப்பிக் கரிகாலனிடம் கொடுத்துவிட்டு, லேசாகச் சிரித்துக் கொண்டே கேட்டான்: "இங்கு எந்த முறையில் வந்திருக்கிறாய் கரிகாலா? சோழ நாட்டுத் தூதர் என்ற முறையிலா, அல்லது என் வீரர்களால் சிறைப்படுத்தப்பட்டவன் என்ற முறையிலா?" என்று.

கரிகாலனும் மென்னகைத்துவிட்டு, "இரண்டுக்கும் அதிக வித்தியாசமில்லையே மன்னவா!" என்றான்.

"வித்தியாசமில்லையா?" உணர்ச்சி ஏதுமில்லாமலே தொனித்தது மன்னன் குரல்.

"தங்கள் மேற்பார்வையில் இருப்பவன், பிற நாட்டுத் தூதனாயிருந்தாலும், தங்கள் கைதிபோல்தானே கருதப்பட முடியும்?" என்றான் கரிகாலன்.

ஜெயசிம்மன் புருவங்கள் ஏதோ கேள்வி கேட்கும் முறையில் சற்றே உயர்ந்தன. அந்தக் கேள்வி அவன் உதடுகளிலிருந்து உதிரும் முன்பாகக் கரிகாலனே பேசத் தொடங்கி, "தான் இப்படித் திடீரெனச் சோழ நாட்டுத் தூதனாக வந்திருப்பது தங்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது; அது மட்டுமல்ல; எனக்கு அளவற்ற பிரமிப்பையும் அளித்திருக்கிறது!" என்றான்.

ஜெயசிம்மன் மேலும் மௌனம் சாதித்தான். கரிகாலன் பேச்சைத் தொடர்ந்து, "தான் அரிஞ்சயனை இங்கிருந்து கடத்திச் சென்றதே தங்களுக்கு எனக்கு சந்தேகத்தைக் கிளப்பியிருக்குமாயின்..." என்று மிகப் பணிவுடன் வார்த்தைகளை உதிர்த்தான்.

"அரிஞ்சயனைக் கடத்திச் சென்றது மட்டுமல்ல; விஜயாதித்தனை எமாற்றி, தங்களைச் செல்வியையும் அழைத்துச் சென்று, அவர்களை ராஜராஜனிடம் ஒப்படைத்திருக்கிறாய்" என்று விளக்கிய ஜெயசிம்மன் கரிகாலன் செய்துள்ள குற்றங்களின் கடுமையானதை என்பதைச் சுட்டிக் காட்டினான். அந்தச் சமயத்தில் கூட, ஜெயசிம்மன் முகத்தில் தோன்றிய சோகத்தை மண்டிக் கிடந்ததெனினும், கோபத்தின் சுவடு சற்றேனும் புலப் படாததைக் கண்ட கரிகாலன், மேலைச் சாளுக்கிய மன்னனிடம் மிக எச்சரிக்கையுடன் பேச வேண்டிய அவசியத்தை உணர்ந்தான். ஆகவே, பணிவு நிரம்பிக் கிடந்த குரலிலேயே மீண்டும் பேச்சைத் துவக்கி, "எல்லாம் தங்கள் கட்டளையை முன்னிட்டுத்தான் மன்னவா!" என்று கூறினான்.

"எது என் கட்டளை கரிகாலா? அரிஞ்சயனைக் கடத்திச் சென்றதா? அல்லது செல்வியை விடுவித்தா?" என்று கேட்டான் ஜெயசிம்மன்.

"இரண்டுமில்லை மன்னவா; தாங்கள் முதலில் எனக்கு இட்ட கட்டளை."

"என்ன அது?"

"தாங்கள் அடிமையாக அதுவல் புரியச் சொன்னீர்கள். அதற்காகப் பொறும்பதவி அளிப்பதாகவும் உறுதி கூறினீர்கள்."

"ஆமாம், உறுதி கூறினேன்."

"தாமும், தங்கள் பக்கம் அதுவல் புரிய ஒப்புக் கொண்டேன். அதன் விளைவுதான் இது!"

"எது?"

"நான் செய்திருக்கும் காரியம்."

"என்ன காரியத்தைச் சாதித்துவிட்டாய்?"

"விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனை வேங்கி நாட்டு அரியணையில் அமர்த்தும் சூழ்நிலையைச் சிருஷ்டித்து விட்டேன்." கரிகாலன் இந்தப் பதிலை மிக மெதுவாகத் தான் சொன்னான். ஆனால் எதற்கும் அசையாத ஜெயசிம்மனையே அது அசைய வைத்தது.

ஜெயசிம்ம சாளுக்கியனின் கரிய பெரும் புருவங்கள் சட்டென ஒரு விநாடி உயர்ந்தன. உதடுகள் துடிப்பதற்கு அறிகுறியாக, மீசையும் ஒரு முறை அதிர்ந்து அடங்கியது. "என்ன! விஷ்ணுவர்த்தன விஜயாதித்தன் வேங்கி நாட்டு அரியணையில் அமரலாமா?" என்று வினவினான் ஜெயசிம்ம சாளுக்கியன்.

"ஆம்; இன்னும் பதினைந்து நாட்களில்." திட்டமாகப் பதில் சொன்னான் கரிகாலன்.

"அப்படியானால் நரேந்திரன்...?"

"ராஜராஜ நரேந்திர மன்னரையும் அரசகுமாரி நிருத்தனாதேவியையும் சில நாட்கள் தமது விருந்தாளிகளாக வைத்திருக்கச் சோழமன்னர் இஷ்டப்படுகிறார்."

ஜெயசிம்மன் சிம்மாசனத்தில் ஒருமுறை அசைந்து உட்கார்ந்து, நம்பிக்கையைச் சிறிதும் பிரதிபலிக்காத

விழிகளைக் கரிகாலன்மீது நாட்டி, "என்ன சொல்லி மன்னன் இருந்தது நரேந்திரனையும் அவன் சகோதரியையும் தம் நாட்டுக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறாரா?" என்று ஆச்சரியம் தொனிக்கும் குரலில் கேட்டாள்.

"ஆம் மகாராணி! சோழ நாட்டுத் தூதுவன் என்ற முறையில், நான் தங்களிடம் அவர்களை அழைத்துச் செல்ல அனுமதி கேட்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லித் தலையைத் தாழ்த்தி ஜெயசிம்மனை வணங்கினான் கரிகாலன்.

நாட்சன்போல் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்த ஜெயசிம்மன் எதையோ யோசித்துப் பார்த்தான். "இவன் சொல்வது உண்மையாக எப்படி இருக்க முடியும்?" என்று எண்ணி எண்ணிப் பார்த்து, விடை காணாமல் தவித்தான்.

மெல்ல கரிகாலனே சிக்கலை அவிழ்க்கத் தொடங்கி, நிலைமையை விளக்கினான்.

"மன்னவா! தங்களிடம் சோழ செல்வ ஒப்புக் கொண்ட நான் முதலே அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டேன். அரிஞ்சயனைக் கடத்திச் சென்று சோழர்களிடம் ஒப்படைத்தேன். அரையன் ராஜராஜன் மகளைத் தங்கள் மருமகளிடமிருந்து விடுவித்தேன். இரண்டிலும் சோழப் படைத்தலைவரின் நம்பிக்கையைப் பெற்றேன். தஞ்சைத் தரவியார் கொடுத்த ஓலை அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. பிறகு நானும் படைத்தலைவன் பதவியைப் பெற்றேன். படைத்தலைவர் மந்திரி சோசனையில் கலந்துகொண்டேன். ஆனால் எந்த நிலையிலும் தங்கள் நலனை மட்டும் மறக்கவில்லை. சந்தர்ப்பம் வந்தபோது காரியத்தைச் சாதித்தேன். சோழப் படைகள் வட நாட்டு யாத்திரைக்குச் சித்தமாயிருந்தன. ஆனால், இடையே நிற்கின்றது வேங்கிநாடு; இதைக் கடந்து வடநாடு செல்லத் தங்கள் உதவிவேண்டும் என்று மந்திரி சோசனையில் கூறினேன்" என்று பேசிய கரிகாலன், சிறிது பேச்சை நிறுத்தி ஜெயசிம்மனைக் கவனித்தான்.

"ஹும்—" என்ற ஒரு சப்தமே எழுந்தது ஜெயசிம்மனிடமிருந்து.

கரிகாலன் மெல்ல ஜெயசிம்மனை அணுகி, "முதலில் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை, மன்னவா! வந்தியத் தேவர் கூடச் சற்று யோசித்தார். ஆனால் அவர்கள் சாம்ராஜ்யப் போராசையைத் தூண்டிவிட்டேன். தங்கள் படைபலத்தையும், வேங்கியின் சக்தியையும் பற்றி அளவுக்குச் சற்று அதிகமாகவே சொன்னேன். கடைசியில் தங்கள் நட்பையும் பெறுவதும், வேங்கி நாட்டைத் தங்களிடம் ஒப்படைக்கவும் திர்மானித்தார்கள்" என்று கூறினான்.

"என்னிடமிருந்து சோழர்கள் எந்த உதவியை எதிர் பார்க்கிறார்கள்?" என்று கேட்டான் ஜெயசிம்மன்.

"தற்போது ஒரு நாட்டு மன்னன் செய்யக்கூடிய உதவியைத்தான் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் படைகள் இந்நாட்டு வழியாக வடக்கே செல்லத் தங்கள் அனுமதி வேண்டும்."

"அவ்வளவுதானா?"

"அவ்வளவேதான் மன்னவா! தங்கள் அனுமதி கொடுத்தால், இன்னும் ஒரே வாரத்திற்குள் ராஜராஜ நரேந்திரனையும் திருச்சனாதேவியையும் அழைத்துக் கொண்டு, நான் அரையன் ராஜராஜன் பாசறைக்குப் பயணமாவேன்."

"இதற்கு நரேந்திரன் ஒப்புக்கொள்ள வேண்டுமே?"

"ஒப்புக்கொண்டு விட்டார்."

இந்தப் பதில் ஜெயசிம்மனை அப்படியே தூக்கிவாரிப் போடவே, திடீரென ஆசனத்திலிருந்து எழுந்து, பலமான சுங்களிலொன்றைக் கரிகாலன் தோள்மீது வைத்து

அவனை மீண்டும் கூர்ந்து நோக்கினான். அப்படிக் கூர்ந்து நோக்கிய அந்த விழிகளில் சந்தேகம் பலமாய்ப் படர்ந்தது. "நீ எப்பொழுது நரேந்திரனைச் சந்தித்தாய்?" என்று கேட்டான் ஜெயசிம்மன். அந்தச் சந்தேகம் ஓரளவு தொனிக்க.

"நேற்றிரவு சந்தித்தேன் மன்னவா. தங்களுடைய நிட்டங்களுக்கு வழியைச் சீர்படுத்த வேண்டியது உங்கள் அடிமையின் பொறுப்பல்லவா? அதற்காக, அவரிடம் ஏதேதோ பொய் சொன்னேன்."

"என்னிடம் சொல்வது மட்டும் நிஜமென்று எப்படித் தெரியும் எனக்கு?"

"சிலசமயம் பலனிலேயே இருக்கிறது அந்தரட்டி தங்கள் நிட்டம் ராஜாஜ நரேந்திரனை விலக்கி, தங்கள் மருமகனை மன்னனாக்குவதுதானே! அதற்கு நான் வழிசொல்லவில்லையா?" என்று கேட்டான்.

எதற்கும் குழம்பாத ஜெயசிம்மன் மூளைகூடக் குழம்பிக் கிடந்தது. எதிரே நிற்கும் அயோக்கியன் யார் பக்கம் பணி புரிகிறான் என்பதைத் தீர்மானிக்க ஜெயசிம்மனால் கூட முடியவில்லை. அதுமட்டுமா? அடுத்த சில நிமிஷங்களில் ஏற்படப் போகிற தர்மசங்கடங்களைத் தடுக்கவும் ஜெயசிம்மன் சக்தியற்று போனான். நிறைமதியான பூரணச் சந்திரன் சதுரங்கப் பலகையில் காய்களை நகர்த்துவதுபோல, வேங்கி நாட்டு ராஜகுடும்பத்தினரைத் தன் இஷ்டப்படி நிறுத்திக் கொண்டிருந்தான், பெண்மடந்தின் மானஸனான கரிகாலன். அவன் இஷ்டப்படி வேங்கி நாடு மட்டுமல்ல, சோழ நாடும் ஆடியது. ஜெயசிம்மனைக் கரிகாலன் சந்தித்த நாளிலிருந்து, சரியாக ஆறாவது நாள், பிரமிக்க தக்க நிகழ்ச்சிகள் வேங்கி நாட்டின் தலைநகரிலே நடந்தேறின.

47. உணர்ச்சியின் அதிர்ச்சி

ரகசியத்தை அறிவதில் மனிதனுக்குள்ள ஆசை ஒரு தீப்பொறி. நரகம் என்ற காற்றினால் அது வீசப்படும் போது, வதந்தி என்ற பெரும் தீ சமூகத்தில் படுவேகத்தில் பரவி விடுகிறது. அப்படிப் பரவும்போது, அது யார் யார் நன்மைகளைச் சுடும், யார் யாரை விட்டுவைக்கும் என்பதை நிர்ணயிக்க முடியாது. எப்போப்பட்ட நிறமை சாலையும் நிரை லைக்கும் நிலையை வதந்தி நிருஷ்டித்து விடுகிறது. வேங்கியின் தலைநகருக்குள் கரிகாலன் சோழநாட்டுத் தூதனாக நுழைந்த இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் பலப்பல வதந்திகள் மனிதர்களில் பரவியிருப்பதை ஒற்றர்கள் மூலம் கேட்டறிந்த ஜெயசிம்மன், என்ன செய்வது, நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பதை அறியாமல் குழம்பிப் போனான்.

"சோழர்கள் ஜெயசிம்ம சாளுக்கியனுக்கு அடி பணிந்து விட்டார்கள். இராஜேந்திர சோழதேவர் தமது மருமகனான ராஜராஜ நரேந்திரனைச் சோழ நாட்டுக்கு அழைத்துச் சென்றுவிடப் போகிறார்" என்று சிலர் பேசினார்கள். "அப்படியில்லை; ஜெயசிம்ம சாளுக்கியன் சோழர்களுக்குப் பயந்து வேங்கி நாட்டை அவர்களிடம் ஒப்படைக்கத் தீர்மானித்து விட்டான்" என்று மற்றும் சிலர் பேசினார்கள். "அதெல்லாம் காரணமல்ல; விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனை அரியணையில் அமர்த்த, ஜெயசிம்ம சாளுக்கியனும் புதிதாக வந்திருக்கும் சோழ தூதருமாகச் சேர்ந்து ஏதோ சதிசெய்திருக்கிறார்கள். ஆனால் இதெல்லாம் அதிக நாள் நீடிக்காது. கூடிய சீக்கிரம் சோழர்களின் பெரும் படை வந்து வேங்கியைச் சுட்டெரித்து விடும்" என்று வேறு சிலர் பேசினார்கள்.

இப்படி, மக்களிடையே வதந்தி பலவிதமாகப் பரவிக் கிடப்பதையறிந்த ஜெயசிம்மன், பெரிதும் குழப்பமடைந்

திருந்தான். இந்தக் குறும்பன் அலையை மட்டுமல்ல, கரிகாலனைச் சேர்ந்தவர்களையும் பயமாகப் பிடித்திருந்தது. கண்ட வதந்திகள் நகரத்தில் உலவுவதால், தாதர் காரியாலயத்துக்கு ஏதாவது கெடுதல் நேரிட்டால் என்ன செய்வது என்ற பீதி முத்துத்தேவனை மேலும் பயமாகப் படுத்தியது. அவன் கரிகாலனை நேரடியாகவே கேட்டான். "அபாயத்தை அனுமதிக்கலாமா? நகரத்தில் படர்ந்து வருகின்ற வதந்திகளை உடனுக்குடன்" என்று.

பல நாட்களுக்கு முன்பு எங்கோ வாளினையில் பிறந்த மாரப்பனின் விந்தானிலிருந்து [illegible] கரிகாலனை இருந்தானோ, அந்த மாரப்பனின் [illegible] அறிவொன்றை தீவிர யோசனையுடன் கரிகாலனிடம் [illegible] முத்துத் தேவனின் வார்த்தைகளைக் கேட்டதும், சற்று நின்று அவனை உற்று நோக்கினான். "[illegible] என்று பதில் சொன்னான்.

"இந்த வதந்திகளைப் [illegible] பலரை உளவுத்துறை?" என்று முத்துத்தேவன் மீண்டும் வினவினான், எள்ளலற்ற [illegible] தலை.

"பலரை உளவாளியாக [illegible] வரிசையில் இருந்து வார்களா?"

"சோழ தூதர் [illegible] என்பதை எனக்கு விளங்கவில்லை."

"விளங்காததற்கு என்ன [illegible] இதில்? வதந்தி களைக் கிளப்பிவிட்டது [illegible] தான். ஆகையால், பலரைக் கருதாமல் [illegible] யோசித்துப்பார் முத்து."

முத்துத்தேவனுக்கு என்ன பேசுவதென்றே புரியாத தால் மௌனம் விழுங்கினான்; மறுகணம் பதறினான். அடுத்தபடி அவன் பேசிய பேச்சில் பயமும் தூண்டு தொனித்தது. "வதந்திகளை நீங்கள் கிளப்பிவிட்டீர்களா?

இதை ஜெயசிம்மன் அறிந்தால், விளைவு என்ன ஆகும் தெரியுமா?" என்று கேட்டான் முத்துத்தேவன்.

"மனித சரித்திரத்தில் வதந்திகளின் மூலத்தைக் கண்டு பிடித்தவன் எவனுமே இலட்சமாது, முத்து. நமது ஒற்றர் கள் நகரத்தில் பல இடங்களிலும் சஞ்சரித்து வருகிறார் கள். ஏதோ அரைகுறையாக அரசாங்க விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். மீதியை மக்களின் மனத்துக்கு விட்டுவிடுகிறார்கள். விஷயம் எந்த இடத்திலிருந்து முளைத்தது, எப்படி இலை விட்டது, இலையும் பூவும் காயுமாக எப்படிப் பரவியது என்பதை நிர்ணயிக்க யாராலும் முடியாது. சிறிதும் பயப்படாத ஜெயசிம்மனை விடச் சற்று [illegible] கத்தியாலும் இந்த வதந்திகளின் வித்தை [illegible] யார் என்பதை அறிய இயலாது" என்றான் கரிகாலன்.

முத்துத்தேவன் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "இந்த வீண் வதந்திகளைக் கிளப்பிவிட்டுப் பயன் என்ன?" என்று வினவினான்.

"வடக்கே ராஜேந்திரத்துக்கு அவசியமான கருவிகளில் ஒன்று அதுவும் ஜெயசிம்மனைப் போன்ற பெரிய ராஜ தந்திரியுடன் உறவாடும்போது அந்தக் கருவி மிக மிக அவசியமாகிறது முத்து. ஜெயசிம்மனைச் சற்று நிம்மதி யாகப் படுக்கவிட்டால், அவன் சித்தனை வேலை செய்யும்; சித்தனை வேலை செய்தால் தெளிவு ஏற்படும்; தெளிவு ஏற்பட்டால் நீயும் நானும்..."

"சொல்லுங்கள் தாதரே!"

"நேராகச் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டி வரும். கோதண்டத்தில் மாட்டி இருவர் தோளையும் உரித்துவிடு வான் ஜெயசிம்மன்" என்று சொல்லி, வேகமாக நகைத்தான் கரிகாலன்.

ஆனால், முத்துத்தேவன் கரிகாலனின் நகைச்சுவையில் பங்கு கொள்ளக்கூடிய நிலையில் இல்லை.

பிரும்ம மாராயன் செய்து வைத்துள்ள வேல்வி நாட்டுக் கோதண்டத்தை அந்த நகரத்துக்கு வந்த மறு நாளே பார்த்து, அது இயங்கும் முறையையும் அறிந்து கொண்டிருந்த முத்துத்தேவன் உடலில், அதைப்பற்றிய பிரன்தாபம் ஏற்பட்ட மாத்திரத்திலேயே ஒரு பயங்கர உணர்ச்சி ஊடுருவிச் சென்றதால், அவன் கரிகாலனுடைய நிர்ப்பை ரசிக்க முடியாமல், கலவை தோய்ந்த குரலிலே கேட்டான் "இத்தனை ஆபத்தில் நாம் தலையைக் கொடுப்பது அவசியமா?" என்று.

"சிங்கத்தின் குகைக்குள் நுழைந்துவிட்டோம் முத்து. இனி என்ன செய்வது என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமேயொழிய, உறுமி வரும் சிங்கத்தைக் கண்டு பயந்து என்ன பயன்?" என்று வினவிய கரிகாலன், முத்துத் தேவன் அருகில் சென்று, "முத்து! எல்லாம் திட்டப்படியே நடக்கிறது; கலைப்படாதே இன்னும் சில நிமிஷங்களில் வேங்கி நாட்டின் தலை எழுத்தையே அழித்து எழுதி விடுவோம்" என்று உறுதி கூறினான்.

கரிகாலனுடன் பழகிய சில தினங்களுக்குள்ளாகவே அவனிடம் உயிரை வைத்திருந்த முத்துத்தேவன் கலவையை அந்த உறுதிமொழி சிறிதும் உடைக்கவில்லை.

அந்தக் கலவை முத்துத்தேவனை மட்டுமல்ல, அந்த மாளிகையிலிருந்த சோழ நாட்டு ஒற்றர்கள், வீரர்கள் எல்லோரையுமே கவர்ந்து கொண்டிருந்ததால் மாளிகை வாசிகளின் முகங்களில் மலர்ச்சி சிறிதும் இல்லை. எந்த விநாடியிலும் ஜெயசிம்மன் உண்மையை அறிந்து தூதர் மாளிகையையும், அதிலிருக்கும் தங்களையும் அழித்துவிடலாம் என்ற பயத்தில் அனைவரும் ஆழ்ந்து கிடந்தனர்.

இத்தனை அபாய நிலைமையிலும் சிறிதும் கலவை யில்லாமல் முகத்தில் புன்சிரிப்புடன் உலாவிக் கொண் டிருந்தவன் கரிகாலன் ஒருவன்தான்.

ஆற்றுக்குப் பாலம் அமைக்கும் நெடி எப்படி அதன் வெள்ளத்தைக் கண்டு அச்சப்படுவதில்லையோ, அப்படியே எதற்கும் அஞ்சாமல் தன் திட்டத்தை உருவாக்குவதில் முனைந்திருந்தான் கரிகாலன். வேங்கி நாட்டின் அரசியல் வாழ்வை அடியோடு மாற்றியமைக்கத் திட்டமிட்டுள்ள அந்த பெனத்த மடாலயச் சிஷ்யன், அரசியல் அரங்கத்தில் ஏதும் ஏற்படாததுபோலவே நடந்துகொண்டு அரண்மனை வட்டாரங்களில் கற்றிக் கொண்டிருந்தான். ஜெயசிம்ம சாளுக்கியனைக் கூடிய வரையில் பிரியாமல் அவனை அடிக்கடி சந்தித்துக் கொண்டும், அவனுடன் பேசிக்கொண்டும் உலாவிக் கொண்டும் இருந்த கரிகாலனின் மதிப்பு, அரண்மனை வட்டாரங்களில் நாளுக்குநாள் ஏறிக்கொண்டிருந்தது. உள்ளூர எவ்வளவோ கரிகாலனை வெறுத்தாலும், ஊரில் தன்னைப்பற்றி உலாவிக் கொண்டிருந்த வதந்திகள் வலுத்திதமாகாதபடி தடுக்க வேண்டுமென்ற காரணத் தால், சோழ நாட்டுக்கும் தனக்கும் எந்தவிதப் பகையு மில்லாதது போல் காட்டப் பிரியப்பட்ட ஜெயசிம்ம சாளுக்கியன் சோழ தூதனான கரிகாலனுக்கு, வேறு யாருக்கும் கிடைக்க முடியாத அத்தனை சலுகைகளையும் அளித்திருந்தான். அரண்மனையில் எந்த இடத்திலும் நுழைந்து புறப்படச் சோழ தூதருக்கும் அனுமதி கிடைத்தது.

இந்த அனுமதி காரணமாகக் கிடைத்த வசதியைக் கொண்டு, ராஜராஜ நரேந்திரனுடன் நெருங்கிப் பழகிய கரிகாலன், சம்பாஷணையில் தனக்கிருந்த சாதுரியத்தி னால், சோழ நாட்டுக்குப் பிரியமுடன் போவதற்கு வேண்டிய மனோநிலையையும் அவனுக்கு ஏற்படுத்தி னான்.

பழக்க வழக்கங்களினாலும், ஜெயசிம்மன் அளித்த சகலவித தொந்தரவுகளினாலும் உறுதியையும் நம்பிக்கையை யும் வாழ்க்கையில் இழந்து நின்ற ராஜராஜ நரேந்திர

னை எடுத்துச் சொன்னான் கரிகாலன். ராஜராஜ நரேந்திரனைப் போன்ற சிறுவயதிலேயே, அபிமன்யு எப்படிச் சோழர்களின் பதும விழுகத்தையே உடைத்தான் என்பதை விளரித்து, "அபிமன்யு பிறந்த இந்தப் பாரத நாட்டில் தோன்றிய நீங்கள் மட்டும் எப்படி வீரத்தை இழந்திருக்க முடியும்? சந்தர்ப்பம் உங்களையும் அத்தனைப் பெரிய வீரனாக்கும்; சந்தேகம் வேண்டாம்" என்ற உற்சாக வார்த்தைகளைச் சொல்லி, அவன் மனத்தி விருந்த அவநம்பிக்கையையும் உறுதியின்மையையும் மென்ன அழித்துக் கொண்டிருந்தான் கரிகாலன்.

இருட்டில் நடந்து செல்பவனுக்குத் திடீரென நீப்பந்தம் கிடைத்த கதையாக ராஜராஜ நரேந்திரனின் இருண்ட மதியிலே ஒளியைப் பிறப்பித்து, வாழ்க்கையின் உண்மைப் பாதையையும் கரிகாலன் வார்த்தைகள் காட்டவே, அவனிடம் மிதமிஞ்சிய அன்பும் மதிப்பும் ராஜராஜ நரேந்திரனுக்கு நாளடைவில் ஏற்பட்டன. கரிகாலனுடைய ராஜதந்திரம் முற்றிப் பலன் தரும் சமயத்தில், ராஜராஜ நரேந்திரன் மட்டும் பூரண உறுதியைக் காட்டியிராவிட்டால் கரிகாலன் திட்டத்தை உடைத்துக்கூட இருப்பான் திரஞ்சனா. அத்தனை ஆக்ரோஷத்துடன் ஜெயசிம்மனுடனும் கரிகாலனுடனும் போராடினான் அவன்.

அன்று சந்திரன் தன் கலைகளைப் பூரணமாக இழந்து விட்ட அமாவாசை தினம். வேங்கி நாட்டை இயற்கை இருள் மட்டுமல்ல, செயற்கை இருளும் சூழ்ந்து கொண்டதாகவே கருதினான் திரஞ்சனாதேவி. அவளும் ராஜராஜ நரேந்திரனும் வேங்கி நாட்டைவிட்டுச் சோழ நாட்டுக்குச் சென்ற வேண்டும் என்ற ஏற்பாட்டின் பூர்த்தியை ஜெயசிம்மன் மென்ன அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்தான். வேங்கி நாட்டு மன்னர்களின் அந்தரங்க அறையிலேயே அந்த நாடகம் தொடங்கியது. மன்னன் மகளின் சித்தத்

துக்கும், ஜெயசிம்ம சாளுக்கியனின் ராஜதந்திரப் போக்குக்கும் இடையே, பதிலேதும் சொல்லத் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த மந்திரிப்பிரதானிகள் மௌனமாகவே நின்று கொண்டிருந்தார்கள்.

அரசகுமாரி அந்த அலையைக் கம்பீரம் சொட்டிய தன் கருவிழிகளால் ஒருமுறை அளவெடுத்தாள். ஒருமுறை எதிரே அமர்ந்திருந்த தன் தம்பியை வெறுப்புடன் நோக்கினாள். தம்பிக்குப் பக்கத்தில், சந்திரனுக்குப் பக்கத்தில் ராகுவைப்போல் வேங்கி நாட்டை விழுங்கச் சித்தமாக உட்கார்ந்திருந்த மேலைச் சாளுக்கிய மன்னன் மீது ஆத்திரம் தோய்ந்த விழிகளை நாட்டினாள். மீண்டும் அவை முழுவதையும் தன் வேற் கண்களால் தாக்கிவிட்டுக் கேட்டாள் அரசகுமாரி: "இந்த நாட்டை விட்டு எனனை வெளியேற்ற உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?" என்று. இந்தக் கேள்வியை அவன் பொதுவாகவே கேட்டாலும், அவள் விழிகள் கடைசியில் வேங்கி நாட்டுப் பேரமைச்சர் மீதே நிலைத்தன.

அந்தப் பார்வையைத் தாங்கமாட்டாத பேரமைச்சர், மிகுந்த சங்கடப்பட்டு ஆசனத்தில் அசைந்து ஜெயசிம்ம சாளுக்கியனை நோக்கினார். மேலைச் சாளுக்கிய மன்னனையும் அந்த நிலை பெரும் சங்கடத்துக்குள்ளாக்கியிருந்தாலும், அவன் ஓரளவு சமாளித்துக் கொண்டு, "குழந்தாய் உன்னை நாட்டைவிட்டு வெளியேற்றுவதாக யார் சொன்னது?" என்று வினவினான்.

அரசகுமாரியின் கண்கள் கனலைக் கக்கின. "இல்லை! நாட்டைவிட்டு வெளியேற்றவில்லை. சோழ நாட்டைச் சுற்றிப் பார்த்துவர உல்லாசப் பயணம் அனுப்புகிறீர்கள்!" என்று இகழ்ச்சியும் கோபமும் ததும்பும் குரலில் சிறினான் திரஞ்சனாதேவி.

"தவறாக நினைக்கிறாய் குழந்தாய்! உன்னைச் சோழ நாட்டுக்கு அனுப்ப எங்களுக்கு இஷ்டமில்லை

தான்'' என்று ஏதோ பதில் சொல்லத் தொடங்கிய தேவ சிம்மனை, இடையிலே வெட்டின அரசகுமாரியின் இகழ்ச்சி நிரம்பிய சொற்கள்: ''உங்களுக்கு இஷ்ட மில்லை. சோழப் பேரரசர் விரும்புகிறார், அதனால் அனுப்புகிறீர்கள்'' என்று நிருத்தனாதேவி கடிச்சுட வார்த்தைகளை உதிர்த்தாள்.

''அதில் சந்தேகமென்ன அரசகுமாரி?'' என்றார் பேரமைச்சர், மெள்ள எதிரியத்தை வரவழைத்துக் கொண்டு.

நிருத்னாதேவியின் கண்களில் ஆத்திரம் தாண்டவ மாடியது. ''பேரமைச்சரே! நீர் என் தகப்பனார் காலத்தி லிருந்து இங்கு பதவி வகிக்கிறீர் அல்லவா?''

''ஆம் தேவி.''

''உமக்கு அரசியல் விவகாரமும் ராஜ தந்திரமும் சிறிது தெரியும்.''

''அப்படித்தான் தங்கள் தந்தையார் அபிப்பிராயப் பட்டார்.''

''அப்படியானால் சொல்லுங்கள்: மேலைச் சாளுக்கிய மன்னருக்கும் சோழர்களுக்கும் இத்தனை வருஷ காலமாக ஒப்பு ஏற்பட்டதுண்டா?''

''நட்பாவது? நிரந்தர போர்தான்!''

''அப்படியானால் திடீரென்று சோழர்களுக்கு அவரிடம் இப்பொழுது நட்பு ஏற்படவேண்டிய காரணம் என்ன?''

பேரமைச்சர் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தார். அரசகுமாரி, விடாமல் அவரை வற்புறுத்தி ''பேரமைச்சரே! உமது நாவு அசையவில்லையா? மேலைச் சாளுக்கிய மன்னர் உம்மை உண்டு, அவன் குலத்தை நாசம் செய்ய முயலும் சமயத்தில் உடந்தையாயிருக்கிறோமே என்ற லேசும் உமது நாவையும் அடைத்துவிட்டதா?'' என்று வினவினாள்.

பேரமைச்சர் பேசவில்லை. அவர் உதவிக்கு தனாலேயே விளைத்தான்: ''அரசகுமாரி! கலங்கிய உங்கள் சுத்தில் நடக்காத சகல, இல்லாத சூழ்ச்சிகள், நாங்கள் ந்தனையால் நினைக்கவும் முடியாத கேடுகள் சகலமும் லம் வருகின்றன. நங்களை யாரும் இந்த நாட்டை விட்டு வெளியேறச் சொல்லவில்லை. சோழ மன்னர் விருப்பத்தை ஜெயசிம்மனிடம் தெரிவித்தேன்; அவர் லேயிருந்து மன்னரைக் கலந்தார்; மன்னர் இசைந்தார். அதனால் ஏற்பட்ட முடிவு இது. மன்னர் என்னுடன் வுலதாக முடிவு செய்துவிட்டார்கள். தங்களுக்கு இஷ்டமில்லையெல், தாங்கள் இங்கேயே தங்களாம்'' என்று ராஜாதி ராஜேந்திரன் மீது தன் கண்களைச் சிறிதே ஓட்டினான்.

அரசகுமாரியின் கயல் விழிகளும் தம்பியின் மீது நிலைத்தன. ''வேங்கி நாட்டு மன்னர் தமது பொறுப்பை விட்டு நாட்டைத் துறந்து ஓடச் சம்மதித்துவிட்டாரா?'' என்று வினவினாள், குரலில் இகழ்ச்சி தொனிக்க.

கலைப்பட்ட கண்களை லேசாக உயர்த்தித் தன் சகோதரியை ஒரு விநாடி நோக்கினான், ராஜாதி ராஜேந்திரன். அவள் கண்களைக் கவர்ந்து நிற்கச் சக்தி யற்ற தன் கண்களை மறுபடியும் தரையில் தாழ்த்திக் கொண்டு, ''விமலாதித்தன் மகன் பொறுப்பைப் புறக் கணிக்கும் கோழையல்ல அக்கா! நாட்டின் நன்மையை முன்னிட்டு நான் செய்த முடிவு இது. என் பூரண சம்மதத்துடனேயே இந்த ஏற்பாடு நடந்திருக்கிறது. இதற்காகக் கலிகாலர் மீதோ மேலைச் சாளுக்கிய மன்னர் மீதோ நீ குற்றம் சாட்டிப் பயனில்லை. நான் சோழ நாடு போகிறேன். நீ இஷ்டப்பட்டால் வா; இல்லா

விட்டால் இக்கேயே இரு!'' என்று சொல்லிவிட்டு, அலை அத்துடன் முடிவடைந்து விட்டது என்பதற்கறிகுறியாக அரிவணையை விட்டு எழுந்தான் ராஜராஜ நரேந்திரன்.

தம்பியின் சொற்களைக் கேட்டு ஸ்தம்பித்துப் போன நிரஞ்சனாதேவி, தலை குனிந்தவாறே அலையிலிருந்து வெளியேறினாள். அவள் உள்ளத்திலே தம்பி தன்னைத் தாக்கியெறிந்து பேசிவிட்டானே என்ற துக்கமும் அவனுக்கு இத்தனை அதிகாரம் எங்கிருந்து உதயமாயிற்று என்ற ஆச்சரியமும் கலந்து தாண்டவமாடியதால், அடுத்த சில நிமிஷங்களில் உணர்ச்சியற்ற பதுமைபோல் நடமாடிக் கொண்டிருந்தாள் மன்னன் மகள். கரிகாலனும் சுமார் நூறு சோழ நாட்டு வீரர்களும் காவல் புரிய, ஆறு வெள் புரவிகளால் இழுக்கப்பட்ட ரதத்தில் தம்பியுடன் அவள் சோழ நாட்டுக்குப் புறப்பட்ட போதுகூட உணர்ச்சியிழந்தே இடந்தான்.

உணர்ச்சிக்கு ஏற்பட்ட பெரும் அதிர்ச்சியானது, மக்கள் அவர்களை வழியனுப்பச் செய்த வாழ்த்துக் கோஷங்களைக் கூட அவள் செவிகளில் விழ விடவில்லை. அவளைத் தாங்கிச் சென்ற ரதத்தின் சக்கரங்களின் ஓசையைக்கூடக் கேட்கும் சக்தியை இழந்திருந்தாள் அவள். வேங்கி நாட்டில் தனக்கேற்பட்ட அரசியல் தோல்வியால் உண்டான அதிர்ச்சியைப் பெரிதாக மதித்து, அடியோடு மதியைக் கலைக்கும் குழப்பத்துக்கும் பதி கொடுத்திருந்தான் மன்னன் மகள். ஆனால், அதைவிடப் பேரதிர்ச்சி காத்திருந்தது அவளுக்கு, அரையன் ராஜராஜன் பாசறையிலே.

47. பஞ்சனையை நோக்கி நகர்ந்த உருவம்

வேங்கி நாட்டு அரச குடும்பத்தைப் பத்திரமாக அரையன் ராஜராஜன் பாசறைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றிருந்தாலும், கிருஷ்ணா நதியின் கரையோரமாகச் சென்று கூடல் சங்கமத்தை அடைவதால் ஆபத்துக்கள் பல அரசகுமாரிக்கும் அவள் தம்பிக்கும் ஏற்படலாம் என்ற அச்சத்தாலும், கரிகாலன் கிருஷ்ணா நதியின் கரையைவிட்டுச் சற்று விலகி குறுக்கேயுள்ள தட்சிண பீடபூமியின் மேடான பிரதேசங்கள் வழியே அவர்களை அழைத்துச் சென்றான். துங்கபத்திரையும் கிருஷ்ணாவும் இணையும் கூடல் சங்கமத்திற்குச் செல்வதால் அநுகூலங்கள் பல இருக்கத் தான் செய்தன. வேங்கி நாடும் மேலைச் சாளுக்கிய நாடும் ஒரு காலத்தில் ஒரே சாளுக்கியப் பேரரசாக இருந்ததால், கிருஷ்ணா நதியின் கரையோரமாகப் பட்டணங்கள் பல ஏற்பட்டிருந்தன. வேங்கியிலிருந்த சாளுக்கியக் கோட்டையிலிருந்து கூடல் சங்கமத்தின் வேட்டுவர் மாளிகை வரையில் வழிநெடுக அரச குடும்பத்தினர் தங்குவதற்கான மாளிகைகளும் வேறு பல வசதிகளும் இருந்தன. ஆனால் அந்த வழியாகச் சென்று கூடல் சங்கமத்தை அடைவதற்குள், தான் வேங்கி நாட்டு அரச குடும்பத்தை அழைத்துச் செல்லும் காரணத்தை ஜெயசிம்மன் ஊகிக்க ஏற்பட்டால், வெகுசீக்கிரத்தில் தன்னை வளைத்துக் கொள்வதற்கு மேற்குச் சாளுக்கிய மன்னனுக்கு வழி உண்டு என்பதை அறிந்திருந்ததாலும், அப்படி வளைத்துக்கொள்ள நேரிட்டால் வேங்கி நாட்டு அரச குடும்பத்தின் கடைசிக் கட்டம் அதுவாகவே இருக்குமென்பதையும் உணர்ந்திருந்ததாலும், வழக்கமான வழியைவிட்டுத் தெற்குத் திசையில் திரும்பி, கஷ்டமான மார்க்கத்திலேயே நிரஞ்சனாதேவியையும் ராஜராஜ நரேந்திரனையும் கரிகாலன் அழைத்துச் சென்றான்.

இத்தப் பயணத்திற்கும் திருச்சினாப்பள்ளி நகரத்திற்கும் மாகப் பயணம் செய்வதற்கும் ஒருவார காலத்திற்குமேல் வித்தியாசமிருக்கத்தான் செய்தது. தனிப்பட்ட வழியிலிருந்த சிறு கிராமங்களிலும் சரி, ஒதுக்குப்புறமாக இருந்த சில பட்டணங்களிலிருந்த சத்திரங்களிலும் சரி, அரச குடும்பத்தினர் தங்குவதற்கு வேண்டிய பூரா வசதியும் இல்லை. இருப்பினும் கரிகாலன் நிரஞ்சனாதேவிக்கும் 'ராஜராஜ நரேந்திரனுக்கும் எத்தனை சௌகரியங்களைச் செய்து கொடுக்க முடியுமோ, அத்தனை சௌகரியங்களைச் செய்து கொடுத்தான். எவ்வளவு ராஜபோகத்தில் அவர்களை வைக்க முடியுமோ அவ்வளவு ராஜபோகத்தில் வைக்கச் சகலவித முயற்சிகளையும் எடுத்துக் கொண்டான். ஆனால் மன்னன் மகளுக்கிருந்த மனோநிலையில் அவள் வழியிலே இருந்த கஷ்டங்களைச் சிறிதும் கவனிக்காமலும் வழி நெடுக ஏதும் பேசாமலும் மௌனமாகவே பிரயாணம் செய்தாள். இறங்கும் இடங்கள் வந்த சமயங்களில் முத்துத்தேவன் அவளை அணுகி, "அரசகுமாரி, இறங்கலாம்" என்று பணிவுடன் கூறியபோதெல்லாம், அவன் பதிலுக்கு ஒரு வார்த்தைகூடப் பேசாமலும், அவனைத் திரும்பியும் பார்க்காமலும் வேறும் பதுமை போல் இறங்கிச் சென்றாள்.

அவள் சித்தத்தில் சதா வேங்கி நாடும் ஜெயசிம்மனும், கரிகாலனும் மாறி மாறிச் சுழன்று கொண்டிருந்ததால், வேறு இடங்களோ மனிதர்களோ உலகில் இருப்பதாகவே தோன்றவில்லை அவளுக்கு. தான் பிறந்த மண்ணை விட்டுத் தன்னை வெளியேற்ற, ஒருவன் பாரதத்தின் மண்ணில் பிறப்பான் என்பதைச் சொப்பனத்தில்கூட நினைக்காத நிரஞ்சனாதேவிக்கு, அப்பேர்ப்பட்டவன் பிறந்து வந்து அந்தக் காரியத்தைச் சாதித்துவிட்டானே என்ற நினைப்பால் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. வார் ஒருவனை ஒழிக்க வேண்டும் என்பதற்காகப் பிரும்ம மாராயனுடன் சதியில் இறங்கினாளோ, அந்த ஜெய

சிம்மன் கடைசியில் தன்னை வென்றுவிட்டானே என்ற எண்ணம் அவள் உள்ளத்தை உடைத்தெறிந்து கொண்டிருந்தது. சாளுக்கிய வீரர்களிடமிருந்து யாரைக் காத்து, யாரிடம் - தன் நலனையும் உள்ளத்தையும் ஒப்படைத்தாளோ, அவனே தன்னுடன் இச்சகம் பேசி, தன்னை ஏமாற்றித் தனக்கும் தான் பிறந்த மண்ணுக்கும், பெரும் துரோகமாய் வாய்த்தானே என்ற ஏமாற்றம் அந்த ஏந்திழையின் இதயத்தைப் பாகாய் உருக்கிக் கொண்டிருந்தது. இப்படியாக உள்ளம் முறிந்து உணர்ச்சிகள் சிதறிப் பிரயாணம் செய்து கொண்டிருந்த அரசகுமாரியின் மனத்தில், கரிகாலனைப் பற்றிய வெறுப்பு மிதமிஞ்சி வளர்ந்திருந்ததால் மாற்றானிடம் அகப்பட்ட ஒரு கைதி போலவே அவள் பயணம் செய்தாள்.

ஆனால் ராஜராஜ நரேந்திரன் உணர்ச்சிகள் நேர் மாறாக இருந்தன. கூண்டிலிருந்து விடுபட்ட பட்சி சிறகடித்துக் குதூகலிப்பதுபோல், வேங்கி நாட்டு அரியணையிலிருந்து கிடைத்த விடுதலையால் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தான் வேங்கி நாட்டு மன்னன். வாலிபப் பருவமடைந்த நாளாய் ஜெயசிம்மன் ஏற்பாட்டினால் மதுவுடனும் மங்கையுடனும் காலம் கழித்த வேங்கி நாட்டு இளவலுக்கு, வீரர்கள் சேர்க்கையும் அவர்கள் தங்கியிருந்த மண் தரையும்கூடத் தேவேந்திர போகமாயிருந்தது. அதிகமாகச் சத்திரங்களில் இடவசதி அகப்படாத போதெல்லாம் கரிகாலன், அரசகுமாரிக்கும் ராஜராஜ நரேந்திரனுக்கும் மட்டும் சத்திர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டுத் தன் வீரர்களுடன் எதிரிலிருந்த தோப்புகளிலோ, அதுவுமில்லாவிடில் வானக் கூரையின் கீழோ தங்கி வந்தான். இரவில் தோப்புக்களில் குதிரைகளைக் கட்டிவிட்டு, வெளிச்சத்துக்காகச் சுள்ளைகளைக் குவித்து எரியவிட்டு, மரங்களில் குதிரைகளைக் கட்டி மண் தரையில் உட்கார்ந்து பேசியே இராப்பொழுதைப் போக்கும் வீரர்களுடனும் ராஜராஜ நரேந்திரனும் வந்து கலந்து கொள்வான். அவர்களுடனிருந்த கரிகாலன்

சொல்லும் வீரர்களின் கதைகளைக் கேட்பான். அந்த மாதிரித் தானும் ஒரு வீரனாகிப் பாரதத்தின் வரலாற்றில் தனியிடம் பெறும் நாள் வருமா என்று ஏங்கிப் பெருமூச்சும் விடுவான். பொதுவில், வேங்கியிலிருந்து அரையன் ராஜராஜனுடைய பாசறைக்கு அவன் பயணம் செய்த சுமார் பதினைந்து நாட்களுக்குள்ளாகவே, தன் உணர்ச்சிகளில் பெரும் மாறுதல் ஏற்படுவதைக் கவனித்த வேங்கி நாட்டு மன்னனுக்கு, மெள்ளக் கரிகாலனிடம் ஓரளவு குரு பக்தியும் ஏற்படவே செய்தது. கரிகாலனுடைய ஆழ்ந்த சாஸ்திர ஞானத்தைக் கண்ட ராஜராஜ நரேந்திரன், இல்லாவது படிப்பும் நுண்ணறிவும் ராஜ தந்திரமும் இத்தனை இளவயதில் கரிகாலனுக்கு எப்படி ஏற்பட்டன என்பதை நினைத்து நினைத்து வியப்படைத் தான். மந்திரத்தைவிட மகாசக்தியுள்ள கரிகாலன் போதனைகள் ராஜராஜ நரேந்திரனை ஒரு புது மனிதனாக அடித்துக் கொண்டிருந்தன. வேங்கி நாட்டு மன்னன் மனத்திலிருந்து மது அகன்றது. மடத்தனம் அகன்றனர். அறிவும் புகுந்தது. ஆணவமும் தலை நீட்டியது. வாளைப் பிடிக்க நடுங்கிய கை வாளை ஏந்தத் துடித்தது. அவனுடைய மூதாதையரின் ரத்தத்தைத் தேக்கி வைத்திருந்த ஜெயசிம்மன் என்ற பெரிய கரை அகன்றதும், வீர உணர்ச்சி அவன் உடலில் பிரவகிக்கத் தொடங்கியது. அதன் விளைவு அவன் பார்வையிலும் தெரிந்தது.

ராஜராஜ நரேந்திரனிடம் மெள்ள மெள்ள ஏற்பட்டு வந்த இந்த மாறுதலைக் கரிகாலன் மட்டுமல்ல, அரசகுமாரி நிரஞ்சனாதேவியும் கவனிக்கத்தான் செய்தாள். தம்பியின் வாழ்க்கையில் ஒரு புது சகாப்தம் ஏற்பட்டு வருவதை அவள் நடையிலும் பார்வையிலும் அவள் கண்டறிந்தாள். ஆனால், பிறந்த மண்ணை அவன் மாற்றானுக்குத் தத்தம் செய்துவிட்டானே என்ற உள்ளத் துடிப்பு அவள் உணர்ந்த உண்மையை மறக்கச் செய்யவே, அவள் அவனிடமும் ஓரளவு வெறுப்புக்கொண்டாள்.

இந்த இருவர் நிலை இப்படியென்றால் பயணம் செய்த சில நாட்களில் கரிகாலன் மனோநிலை எப்படி மிருந்ததென்பதை யாராலும் உரை முடியவில்லை. வேங்கி நாட்டில் சாளுக்கியர் கோட்டையின் கிட்டி வாசலைத் திறந்துகொண்டு அவன் ஒடிவந்த அன்று முதன் முதலாக அவனைச் சந்தித்த அந்தத் தினத்தில், அவன் முகபாவம் எப்படியிருந்ததோ அப்படித் தானிருந்தது. பல நாட்கள் கழித்தும் மனத்தாலும் நினைக்க முடியாத பல சம்பவங்களுக்குப் பிறகு பயணம் செய்த அந்த நாட்களிலும் அவனிடம் எந்த மாற்றமோ துடிப்போ ஏற்படவில்லை. உதட்டில் இயற்கையாகத் தெரியும் அந்த விஷமப் புன்முறுவல் அந்த நாட்களிலும் இருந்துகொண்டுதானிருந்தது. வீரர்களுக்கு அவன் இடும் கட்டளைகள் எப்பொழுதும் போலவே உறுதியாக வும் தெளிவாகவும் இருந்தன. அவன் சித்தத்தில் சிந்தனைகள் ஏதாவது ஓடிக்கொண்டிருந்தாலும், அந்தச் சிந்தனையின் முத்திரை ஏதும் முகத்தில் தெரியவில்லை. பயணம் செய்த நாட்களில் அவனைப் பார்க்காததுபோல் பல முறை பார்த்து அவன் மனத்திலோடிய எண்ணங் களை அறிய முயன்ற அரசகுமாரிகூடத் தோற்றே போனாள்.

எந்த நிகழ்ச்சிகளும் உடைக்க முடியாத அந்த உறுதி, உள்ளத்தில் என்ன உணர்ச்சிகள் ஓடுகின்றன என்பதைக் கண்டு பிடிக்க முடியாது முகத்தைக் கல்லாக வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு சாமர்த்தியம்— இவைதான் கரிகாலன் வெற்றிக்குக் காரணம் என்று பிற்காலத்தில் அரையன் ராஜராஜன், இராஜேந்திர சோழ தேவரிடம் சொன்னான் என்றால் அதற்கான அத்தாட்சியை முன்னா கவே அந்தப் பயணத்தில் கண்டான், அரசகுமாரி. அரசாங்க விஷயங்களில் அதிக அநுபவமில்லாதவளா

னாலும் எந்த ராஜ தந்திரியின் அறிவுக்கும் கிடைப்படாத ஓர் அறிஞனிடம், தான் எந்த வழியும் போக முடியாமல் திகைத் கொண்டிருப்பதை அறிந்தான் திரஞ்சனாதேவி. இத்தகைய அறிவு அவனுக்கு எங்ஙனமேனும் சாத்தியமாக அளித்திருக்க வேண்டும். ஏதோ பெரிய அறிவாளியின் காதலைப் பெற்ற அவள் பெருமைப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவள் மனம் சாந்தியிழந்து நின்றது. கரிகாலன் ஒரு துரோகி என்ற உண்மை மனப்பான்மையே அவளிடம் ஓங்கி நின்றது. அந்த மனப்பான்மையை அவள் காட்டத் தயங்கவில்லை. அவனுடைய போக்கைக் கண்டு அரசன் ராஜராஜனும் பாலத்தில் அவனை எதிர் கொண்டழைத்துச் சென்ற தேவருங்கூட அயர்ந்து போனார்கள்.

பத்து நாள் பயணத்திற்குப் பின்பு அரசன் ராஜராஜன் பாசறையில் அவள் வந்தியத் தேவனைச் சந்தித்தான். அதுவும் கரிகாலன் முன்பே தூதர்களை அனுப்பிவே தன் வினைவாக அவள் வருவதைக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த மாபெரும் வரவேற்பு மண்டபத்தில்தான் அவளைச் சந்தித்தான். அங்கு அவள் தெரிவித்த விருப்பத்தை வெறும் சொற்களால் கரிகாலனை மட்டுமல்ல, வந்தியத் தேவனையும், அரசன் ராஜராஜனையுங்கூடச் சுட்டான்.

இராஜேந்திர சோழ தேவனின் பிரதான படைத்தலை வனும் போரில் இணையற்ற ஜெயசிம்மனையே முறியடித்த மாவீரனுமான அரசன் ராஜராஜன், விமலாதித்தன் மகளையும் மகளையும் படைத்தளத்தின் எல்லை யிலேயே ஆயிரம் குதிரைகளுடனும், யானைகளுடனும் எதிர் கொண்டு, துந்துபிகளும் சங்கங்களும் வானைப் பிளக்க அவர்களை வரவேற்றான். அவனைக்கூட லட்சியம் செய்யவில்லை அரசகுமாரி. ஆறு வெண் புரவி வண்டியிலிருந்து வரவேற்பு மண்டபத்திலிறங்கிய மன்னன் மகள், தலையைச் சற்றே திருப்பி, கடல் போல் கண் சென்றவிடமெல்லாம் பரந்து கிடந்த சோழப் படை களைக் கவனித்தான். பிறகு தலையைச் சட்டென்று

தண்டப வாயிலுக்காகத் திருப்பி உள்ளே சென்றாள். அவளுக்கும் ராஜராஜ நரேந்திரனுக்கும் கற்றுப் பெண்கள் கொணர்ந்திருந்த ஆரத்திகளையும் ஏற்காது புறக்கணித்து மண்டபத்துக்குள் புகுந்தான் அவன். மண்டபத்தின் மேற்கு வாயிலில் ஆயிரம் வீரர்கள் எழுந்திருந்து மன்னன் மகளுக்கும் வேங்கி நாட்டு இளவரசருக்கும் தலை தாழ்த்தினர். ஆயிரம் வாட்களும் ஒரு காலத்தில் உருவப் பட்டு, 'இந்த வாட்கள் உங்கள் சேவைக்காக' என்று தொனிப்பதுபோல் அவள் காலடியில் தாழ்த்தப்பட்டன. மண்டபத்தின் அந்த வரவேற்பு வாட்கள் எழுந்து தாழ்ந்த அந்த விநாடி நேரம், வீரனான விமலாதித்தன் மகளும் உடலில் விரல் நீளமும் குன்றாதவளுமான நிரஞ்சனா தேவியின் இதயத்தைச் சென்று தொடத்தான் செய்தது. எனினும் அவள் பிடிவாதத்தைக்கூட அந்தக் கட்சி நிலைகுலைத்திவிடவே, தனது மணிக்கரங்களை எடுத்துத் தலைத்துச் சபையை வணங்கினாள் நிரஞ்சனா தேவி. பிறகு நடுவிலிருந்த வழிக்குள் நுழைந்து தாழ்ந்த பல வாட்கள் தன் கமலப் பாதங்களைத் தொடத் தம்பி பின் தொடர, நடந்து சென்று தனக்காகப் பிரத்தியேக மாகப் போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து பக்கத்தில் உட்காரும்படி ராஜராஜ நரேந்திரனுக்கு விழிகளால் சைகை காட்டினாள்.

அவள் முன்பாகப் பயபக்தியுடன் நின்ற வல்லவரையர் வந்தியத் தேவர் மற்றப் படைத்தலைவர்களையும் வீரர் களையும் உட்காரச் சொல்லிவிட்டு, "விமலாதித்தன் திருமகளும் வேங்கி நாட்டு மன்னரும் விஜயம் செய்திருப்ப தால் சோழப் படைகளின் இந்தப் பாசறை புனிதமடைந் திருக்கிறது. நீங்கள் இணங்கி வந்ததற்கு சோழப் பேரரசர் சார்பாக எங்கள் நன்றி" என்று முகமன் கூறினார்.

நிரஞ்சனாதேவியின் நீண்விழிகள் ஒருமுறை அந்த அவையைத் துழாவி விட்டுக் கடைசியில் வந்தியத் தேவர்

மீது நிலைத்தன. செம்பருத்தியின் இதழ்களைப் போன்ற அவள் இதழ்கள் மெல்லத் திறந்தன. செம்பருத்தியிலிருந்து தேன், சிறுது என்று வல்லவரையர் எதிர்பார்த்தார். ஆனால் விஷம் தோய்ந்த நெருப்புப் பொறிகள் உதிர்ந்தன.

''வந்தியத் தேவரே! எங்கள் வருகை குறித்து நீர் நன்றி கூற வேண்டியது எங்களுக்கல்ல. எங்களைச் சிறைப் பிடித்து இங்கு கொண்டு வந்துள்ள உங்கள் தூதருக்குச் சேர்ந்தது. அவருக்குக் கூறுங்கள் நன்றியை'' என்றாள் அரசகுமாரி.

சபையில் ஒரு விநாடி சலசலப்பு ஏற்பட்டது. அந்தச் சலசலப்பை ஒரே பார்வையால் அடக்கிய வந்தியத்தேவர், நிதானம் சிறிதும் தவறாத பார்வையொன்றை அரசகுமாரி மீது நிலைக்கச் செய்து ''அரசகுமாரி! தூதர் வேற்று நாட்டு நன்மையையும் உத்தேசித்துத்தான் தங்களை இங்கு அழைத்து வந்திருக்கிறார். அவர்மீது தாங்கள் சினப்படுவது முறையல்ல. தவிர, தூதர்கள் எல்லை செய்வார்கள்? அரசனிடும் ஆணைப்படி நடப்பது தூதர்கள் பொறுப்பு. இது தங்களுக்கும் தெரிந்ததுதானே?'' என்றார்.

''எங்களைச் சிறைப்பிடித்து வரச்சொல்லிச் சோழப் பேரரசர் உத்தரவிட்டாரா?'' என்று வினவினாள் நிரஞ்சனாதேவி.

''மருமகளைச் சில நாட்கள் தம்முடன் தங்க அழைத்து வருவதைச் சிறைப்பிடிப்பதென்று சொல்வதில்லையே அரசகுமாரி'' என்றார் வந்தியத் தேவர்.

அரசகுமாரி ஆசனத்தில் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, ''தங்கக் கம்பிகளைப் போட்டாலும் சிறை சிறைதான் தேவரே! எங்கள் இஷ்ட விரோதமாக எங்களை இங்குக் கொண்டு வந்ததைச் சிறைப்பிடிப்பது

என்று சொல்லாமல் வேறெதற்குப் பெயரிட்டு அழைக்க முடியும்?'' என்று கேட்டாள்.

வந்தியத் தேவர் பக்கத்திலிருந்த கரிகாலனை நோக்கினார். கரிகாலன், ''தேவரே! அரசகுமாரி சொல்வது தவறு. யார் இஷ்ட விரோதமாகவும் எதுவும் செய்யப்படவில்லை'' என்றான் பணிவான குரலில்.

''அப்படியா?'' என்றார் வந்தியத் தேவர்.

''ஆமாம்! வேண்டுமானால் வேங்கி நாட்டு மன்னரையே கேட்டுப் பாருங்கள்'' என்று கரிகாலன் சொன்னான்.

யாரும் கேட்கும் வரையில் காத்திராத ராஜராஜ நரேந்திரன், வந்தியத் தேவரை நோக்கி, ''தேவரே! என் சகோதரி பிறந்த மண்ணை இதுவரை பிரியாதவள். அதைப் பிரிந்த துக்கத்தில் சொன்ன வார்த்தைகளை நீங்கள் தவறாக நினைக்கவேண்டாம். என் பூரண சம்மதத்துடனேயே நான் இங்கு வந்திருக்கிறேன். வேண்டுமானால், வேங்கியிலேயே தங்கும்படி சகோதரிக்கு வேங்கி நாட்டு அவையிலேயே சொன்னேன். அவள்தான், என்னைவிட்டுத் தனித்திருக்க இஷ்டமில்லாமல் வந்திருக்கிறாள். உண்மையில் நாங்கள் கரிகாலருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்றான்.

தம்பியின் வார்த்தைகளுக்குப் பிறகு பேசுவதற்கு எதுமில்லாததால், அடுத்து நடந்த வரவேற்பு நிகழ்ச்சிகளில் சிறிதும் கலந்து கொள்ளாமலே உட்கார்ந்து கொண்டிருந்தாள் நிரஞ்சனாதேவி. வரவேற்பு முடிந்த பிறகும், அவள் மனத்தை விவரிக்க இயலாத எண்ணங்கள் எழுந்து தாண்டவமாடியதால் உணர்ச்சிகளை எங்கோ பறக்கவிட்டு மரப்பாவைபோல் அன்று முழுவதும் நடமாடிக் கொண்டிருந்தாள். எல்லோருக்கும் நிம்மதியளிக்கும் இரவு கூட அவளுக்கு நிம்மதியளிக்காததால் தன் அறைப் பஞ்சணையில் மெள்ளப் புரண்டு கொண்டிருந்தாள்.

கரிகாலனை நினைத்து வெகுண்டான். உணர்ச்சிகள் அப்படி நிறைந்து நின்றதால் வார்த்தைகள் அவன் உதடுகளிலிருந்து இரைந்தே உதிர்ந்தன. "அட பாவி! உன்னை ஏன் சந்தித்தேன் நான்" என்ற சொற்கள் அறைக்குள்ளே எதிரொலி செய்தன. அந்த ஒலியை வெட்டியது கலகலவென்ற சிரிப்பொலி. அந்த ஒலி வந்த திசையை நோக்கிய ராஜகுமாரி பஞ்சணையில் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான். வாயிற்படியில் சிரித்துக் கொண்டிருந்த உருவத்தை நோக்கிய நிரஞ்சனாதேவியின் விழிகளில் வியப்பும் கோபமும் கலந்து தாண்டவமாடின. "யார் நீ?" என்று அதட்டிக் கேட்டான் அரசகுமாரி.

அந்த அதட்டலை அந்த உருவம் சிறிதும் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. சிரித்துக் கொண்டே அவன் பஞ்சணையை நோக்கி நகரவும் தொடங்கியது அந்த உருவம்.

48. அவர் உன் காதலர்

யோசனையில் மிதந்து கொண்டிருந்த ஏழாம் பிறைச் சந்திரன் தனது கிரணங்களைச் சாளரத்தின் வழியாக உள்ளே அனுப்பி, அரசகுமாரியின் அறைக் கோடியில் இருந்த பொன் அகல் விளக்கின் கடமையோடு உதவிட்டிருந்ததால், அந்த அறையில் தேவைக்குச் சற்று அதிகமான வெளிச்சமே இருந்தது. அதன் விளைவாக, தன் பஞ்சணையை நோக்கி நகர்ந்த உருவத்தை நன்றாக ஏறெடுத்துப் பார்த்து அனுமானிக்க முடிந்தது அரசகுமாரிக்கு. தன் அறை வாயிற்படியில் நின்று, தன்னையும் பார்த்து நகைத்தது ஒரு பெண் என்று அறிந்துகொண்ட மாத்திரத்திலேயே வியப்பெய்திய நிரஞ்சனாதேவி, அந்த பெண்ணின் அச்சமில்லாக் கண்களையும் திடமான நடையையும் அலட்சிய முகபாவத்தையும் கண்டதும் வியப்புடன் கோபமும் எழப்பெற்று, "யார் நீ?" என்ற கேள்வியையும் அதிகாரம் நன்றாகத் தொனித்த குரலில் வினவினான்.

அறைக்குள் நுழைந்த பெண்ணும், அந்த அதிகாரத் தொனியைச் சிறிதும் லட்சியம் செய்யாதவளாய், மெதுவாக நடந்து பஞ்சணைக்கருகில் வந்து அதன் கால்களொன்றின் உச்சியைப் பிடித்துக்கொண்டு, நிரஞ்சனாதேவியின் அழகிய உடலின்மீது அச்சத்தைச் சிறிதும் தோற்றுவிக்காத தன் அஞ்சன விழிகளை நீண்ட நேரம் ஓடவிட்டாள். இப்படித் தன் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல், இரவில் வந்து தன் தனிமையைக் கலைத்தது மன்றித் தன்னை அலசிப் பார்க்கும் அந்தப் பெண்ணைப் பதிலுக்குத் தானும் நன்றாகக் கவனித்துப் பார்க்கத் தொடங்கிய அரசகுமாரிக்கு, அவளுடைய அவயவங்களில் துள்ளி விளையாடிக்கொண்டிருந்த எழிலும் பலமும் முகத்

நிறுத்த ஒரு கம்பீரமும் இணையற்ற அழகியத்தை வினவினாலே, 'இப்போய்ப்பட்ட ஒரு பெண் இந்தப் படைத்தளத்துக்கு எதற்காக வந்து சேர்ந்தாள்?' என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான்.

ஆனால், வந்த பெண்ணோ, அரையன் ராஜாஜின் படை பலத்தைப்பற்றியோ, அந்தப் படைகளின் நடுவில் தனித்திருப்பதைப்பற்றியோ, சிறிதும் அக்கறை கொண்டவளாகத் தெரியவில்லை. அவளுடைய கவனம் எல்லாம் மீண்டும் மீண்டும் அரசுமாரினை நோக்கியே இருந்தது. கடைசியில் அவளிடமிருந்து பெருமூச்சொன்றும் கிளம்பியது. "புரிந்தது: காரணம் புரிந்தது" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள் அவள்.

வார்த்தைகளை மிக மெதுவாகத்தான் உச்சரித்தாள் அவள். ஆனால், அந்த அமைதியான நிசப்தத்தில், அந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட அக்கறையில், அந்தப் பெண்ணின் சொற்கள் மிகத் தெளிவாக விழுந்தது அரசுமாரியின் செவிகளில். 'இவள் யார்? எதற்காக இந்த வந்தாள்? என்ன சித்தாள்? என்ன புரிந்தது இவளுக்கு? ஒரு வேளை பைத்தியமோ?' என்றெல்லாம் சிந்தித்தான் நிற்சனாதேவி. அவள் உள்ளத்தில் எண்ணங்களை அந்தப் பெண்ணும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே சொன்னாள் அவள், "எனக்கு பிடித்திருப்பது ஒருவகைப் பைத்தியம்தான் அரசுமாரி. ஆனால், அது உங்களுக்குத்தான் பிடித்திருக்கிறது" என்று.

வந்தப் பெண்ணுக்குப் பைத்தியமா அல்லவா என்ற சந்தேகம் அதுவரை அரசுமாரிக்கும் இருந்திருக்குமானால் அந்தச் சந்தேகத்தை அப்பெண்ணின் வார்த்தைகள் அடியோடு போக்கடித்துவிட்டதால், 'இது நிச்சயமாகப் பைத்தியந்தான்' என்று நிர்மானித்த நிற்சனாதேவி பஞ்சணையை விட்டுச் சட்டென்று எழுந்திருக்க முயன்றாள். வந்தவள், அவ்வளவு கலபமாக அரசுமாரியைத் தப்புவிக்க விடுவதாக இல்லை. பலமான தன் வலது

காத்தால் அரசுமாரியின் தோளைப் பிடித்து அழுத்தி மீண்டும் பஞ்சணையில் உட்காரவைத்து, "தெலியலர்கள் என்னைப் பைத்தியம் என்று நிர்மானம் செய்துவிட்டார் போலத் தோன்றுகிறது. நீங்கள் நினைப்பதுபோல் நான் அறிவிழந்தவள் அல்ல. முழு அறிவுடன் இருக்கிறேன். நல்ல அறிவுதும் சித்தம் சலிப்பது பெண்களுக்கு இயற்கை தானே அரசுமாரி! அந்தச் சித்தப் பிரமையைத்தான் சொல்லினேன். நான் சொல்லும் இந்தப் பிரமை அறிவைக் குழப்புவதில்லை. கிடைக்கும் பலனுக்குத் தக்கபடி ஆனந்தத்தையோ துக்கத்தையோ அளிக்கிறது. பருவ காலத்தில் பெண்களுக்குப் பிடிக்கும் பைத்தியம் இத்தனையது" என்றாள்.

அரசுமாரி என்ன செய்வது என்று விளங்காததால், சற்று நேரம் மௌனமாகவே கட்டிலில் உட்கார்ந்தான். தன் தோளைத் தொட்டுப் பலவந்தமாக உட்கார வைக்கும் அந்தப் பெண்ணின் துணிவை வியந்ததுமன்றி, அந்தப் பெண்ணின் வார்த்தைகளில் உள்ளர்த்தமும் ஏராளமாகப் புதைந்து கிடப்பதைக் கண்ட அரசுமாரியின் பல இதழ்கள் கடைசியாகத் திறந்தன. திறந்ததன்றி, "யார் நீ! அதை முதலில் சொல்" என்ற கட்டளையும் பிறப்பித்தன.

"தெலியலர்களின் பணிப்பெண். அரையன் ராஜ ராஜன் புதல்வி, என்னைச் செங்கமலச் செல்வி என்று அழைப்பார்கள்" என்றாள் அந்தப் பெண்.

அடுத்த விநாடி நான்கு செங்கமலங்கள் சந்தித்தன. அரசுமாரியின் பங்கஜ விழிகள் செல்வியின் கமலக் கண்களுடன் உறவாடின. அந்த இரண்டு பெண்களும் ஒருவர் மனத்தை இன்னொருவர் ஆராயும் நோக்கத்துடன் நீண்ட நேரம் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தனர். ஒருவர் அழகை ஒருவர் வியந்தனர். அந்த வியப்பில் பொறாமையும் கலந்துதானிருந்தது. அந்தப் பொறாமை இருவரிடமிருந்தும் ஏககாலத்தில் பெருமூச்சாக வெளி

லத்தது. அந்தப் பெருமூச்சை மொட்டி 'உலகுக்கு நான் குறைவில்லை' என்று பழிப்பவனைபோல் இருவர் மார்பகங்களும் ஒருமுறை எழுந்துதாழ்ந்தன.

அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து, ''உனக்கு ஏதோ வைத்தியம் என்று சொன்னாயே, அது என்ன சொல்லு?'' என்று கேட்டான் அரசகுமாரி.

''எனக்கு மட்டும் வைத்தியம் என்று சொல்லவில்லையே. இருவருக்குந்தான் வைத்தியம் என்று சொன்னேன்'' என்று திருத்தினாள் அரையன் ராஜராஜன் மகள்.

''இருவருக்குமா? அதென்ன விசித்திரப் வைத்தியம்?''

''விசித்திரம்தான் அது. காதல் வைத்தியம் விசித்திரமில்லையா?''

இந்த முறை சட்டென்று பஞ்சணையிலிருந்து எழுந்துவிட்டான் அரசகுமாரி. அவள் அழகிய கண்களில் ஆத்திரம் சொட்டியது. அதைக் கண்டு கலகலவென மீண்டும் நகைத்தாள் அரையன் ராஜராஜன் மகள்.

''எதைக் கண்டு நகைக்கிறாய்?''— அரசகுமாரியிடமிருந்து எழுந்தன இந்தச் சுடுசொற்கள்.

''உங்கள் ஆத்திரத்தைக் கண்டு!''— அலட்சியமாக வெளிவந்தது அரையன் ராஜராஜன் மகளின் பதில்.

''நான் காதலால் தவிக்கிறேனென்று யார் சொன்னது உனக்கு?''

''உங்கள் கண்கள்.''

''கண்களிலிருந்தே கண்டுபிடிப்பாயா உள்ளத்தை? அத்தனை வல்லவனா நீ?''

''இதற்கு வல்லமை தேவையில்லை. பார்வைதான் தேவை.''

''அரையன் ராஜராஜன் மகளுக்கு நல்ல ஆராய்ச்சிப் பார்வைதான்.''

''தோற்றுப் பயனில்லை அரசகுமாரி. உங்கள் கருத்தில் காதல் நிரம்பிக் கிடக்கிறது. அதை உங்கள் கண்கள் பறை சாற்றுகின்றன. ஓர் ஆண் பிள்ளைக்கு அது தெரியாதிருக்கலாம். ஆனால் பெண்ணுக்குத் தெரியாதிருக்குமா? உங்கள் துடிப்பு ஆண்மக்களை ஏமாற்றலாம். ஆனால், அதே உள்ளத் துடிப்பு உள்ள ஒரு பெண்ணை ஏமாற்ற முடியாது. உங்களை இன்று வரவேற்பு மண்டபத்தில் கண்ட போதே, நீங்கள் பேசிய கோபச் சொற்களைக் கேட்ட போதே, உங்கள் பார்வை அல்லற்பொழுது சென்ற திக்கை நோக்கும்போதே உண்மையைப் புரிந்து கொண்டேன் அரசகுமாரி.''

அரசகுமாரியின் கண்கள் தரையை நோக்கித் தாழ்ந்தன. சாற்பெருவிரல் தரையைச் சற்று நேரம் நீறியது. சிறிது சிந்தனைக்குப் பிறகு பேசிய அரசகுமாரியின் குரலில் கோபமில்லை. குழைவு இருந்தது; ஆத்திரம் சொட்டவில்லை. அன்பு கனிந்து நின்றது. ''எத்தகு திக்கில் என் பார்வை பாய்ந்தது சொல்லி?'' என்று கேட்டான் விமலாதித்தன் மகன்.

நிரஞ்சனாதேவியின் மாறிய தோரணை, குழைந்த நூல், கனிந்த சொற்கள், செங்கமலச் செல்வியின் இதழ்களில் ஓர் இளநகையைத் தோன்றச் செய்தன. ''கரிகாலர் இருந்த திக்கில்தான்'' என்றாள் செல்வி.

செல்வியின் பொறாமை தோய்ந்த குரல்கூட மிக இனிமையாய் ஒலித்தது நிரஞ்சனாதேவியின் செவிகளுக்கு. 'அடி பேதையே! சற்றுமுன் அவன்மீது ஆத்திரப்பட்டாயே, இப்பொழுது எங்கு போயிற்று அந்த ஆத்திரம்?' என்று வானவீதியிலோடிய மதியும் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டுக் குறுக்கே பாய்ந்த மின்னலிற்று வெண்மேகத் திரைக்குள் மின் விநாடிகள் பதுங்கிப் பிறகு எட்டிப் பார்த்தான். அரசகுமாரி பூலோகத்தையே மறந்தான். அவள் எதிரே கரிகாலன்

உருவம் மெல்ல மெல்ல எழுந்தது. அந்த முழுவதும் அவளே வியாபித்துவிட்டது தோன்றியது மன்னன் மகளுக்கு. அந்தக் குழந்தை அந்த விஷமப் புன்முறுவல் இரண்டையும் பார்த்து பார்த்து உள்ளமெங்கும் இன்ப வேதனைகள் அலைபாய நின்றாள் அரசகுமாரி.

அந்தப் பெண்ணுள்ளத்தை இன்ப வெள்ளம் நன்றாகப் புரிந்து கொண்டதால், அது முகத்திலும் வேதனை பாய்ந்தது. இப்படி விரகவேதனையும் இணைந்து விளையாடி இன்ப வேகத்தால் அலைப்பட்ட அந்த இருவர் கரங்களும் பரஸ்பர ஆதரவைத் தேட முற்பட்டன. செங்கமலச் செல்வியின் கரங்களைத் தன் கரங்களுக்கிடையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்ட நிரஞ்சனாதேவி, அவளைத் தனக்கு இழுத்துப் பஞ்சணையில் தானும் உட்கார்ந்து தன் பக்கத்தில் அவளையும் உட்கார வைத்தாள்.

"அரசகுமாரி! இது முறையல்ல நான் தங்கள் பணிப் பெண்" என்றாள் செல்வி.

"போடி பைத்தியமே! காதலில் கட்டுண்ட நமக்கு ஏது பேதம்? அவர் காதல் உனக்குக் கிடைக்கலாம் எனக்குக் கிடையாது. உன் வெற்றியும் எனக்கு மகிழ்ச்சி தான்" என்றாள் மன்னன் மகள்.

மீண்டுமொருமுறை பெருமூச்செறிந்த செங்கமல செல்வி, "தேவி! எனக்கு வெற்றி கிடையாது. வெற்றி தங்களுக்குத்தான்" என்றாள்.

"தவறு செல்வி! அவர் எனக்குத் தீங்கைத் தவிர வேறெதுவும் செய்ததில்லை. என்னை என் அரசைவிட்டு வெளியேற்றினார். என் எதிரிக்கு உளவாளியானார்." என்று மேலும் பேசப்போன அரசகுமாரியை இடைமறித்து

செல்வி "தேவி! கரிகாலர் உங்களுக்கு ஒருநாளும் தீங்கு விளைவிக்க மாட்டார். உங்களுக்கெதிராக அவர் ஏதாவது செய்தாலும் அதை உங்கள் நன்மைக்காகவே செய்வார்" என்றாள்.

"அவரை அவ்வளவு நன்றாக அறிவாயோ?" என்று கேட்ட அரசகுமாரி குரலிலுங்கூடச் சற்றுப் பொறாமை தொனித்தது.

"அறிவேன் அரசகுமாரி."

"எப்படி அறிவாய்?"

"சந்தர்ப்பங்கள் அறியச் செய்தன."

"எந்தச் சந்தர்ப்பங்கள்?"

"நானும் அவரும் தனித்திருந்த சந்தர்ப்பங்கள்."

"தனித்திருந்தீர்களா?"

"பல முறைகள்."

"ஓகோ!"

"ஆமாம் அரசகுமாரி! அவருக்கு வில்வித்தை நான் தான் கற்றுக் கொடுத்தேன். அந்தச் சமயங்களில் தனித்திருந்தோம்."

"தனித்திருந்தீர்களா? வில்வித்தை கற்றுக் கொடுத்தாயா! இன்னும் என்ன கற்றுக் கொடுத்தாய்?"—அரசகுமாரியின் குரலில் கோபம் பரிபூரணமாகத் தாண்டவமாடியதுமன்றி, உள்ளக் கொதிப்புக்கு அடையாளமாக அவள் உதடுகளும் துடித்தன.

பஞ்சணையில் வேங்கி நாட்டு அந்தகத்துக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த செங்கமலச் செல்வி திரும்பி மன்னன் மகளை ஏற இறங்க நோக்கிவிட்டு "தேவி! சந்தேகம்

உங்கள் அறிவைக் கலக்குகிறது. இதையாவது பேசத் தகாத வார்த்தைகளைப் பேசுகிறீர்கள். நீர் அரசகுமாரி இப்படிப் பேசலாமா?'' என்று வினவினாள்.

''அரசகுமாரியாயிருந்தாலும் நான் பெண் தானே; மற்றப் பெண்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? அவர்களுக்குள்ள உணர்ச்சிகள் எனக்கிருக்காதா? உன்னைத் தழுவுதான் இருக்காதா?'' என்று அரசகுமாரி பதில் கேள்வி கேட்டாள்.

''உணர்ச்சிகள் இருக்கும் அம்மா. அதில் பலத்தைக் கொண்டு அவற்றை அடக்கவேண்டும். உன்னைத் தழுவ நீ நினைத்த நிலையை உற்றெண்ணிப் பாரம்மா. நானும் பெண்தான். எனக்கும் உணர்ச்சிகள் இருக்கின்றன அரசகுமாரி. ஆனால் அவற்றை அடக்கி விடுகிறேன்.''

''நீ பேசுகாய் செல்வி. ஆனால்...''

''செயல் என் கருத்துக்குட்பட்டு அவரை நான் இழந்து விட்டேன் என்பதை அறிந்ததும் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி விட்டேன். நான் பிறந்து முதல் தோல்வியடைந்தது இதில் தான். அதை இழந்தேன். இந்த வயதில் காதலை அறிந்தேன். அவர் உயிர் நீங்க அவனைப் பற்றிக்கொண்டேன். இவரை உயிருடன் உன்னிடம் பறிகொடுத்து விட்டேன். அதற்குக் கூட என் மனம் கலங்கவில்லை. ஆனால், உனக்காக எத்தனையோ ஆபத்துக்களை ஏற்று அவரைச் சந்தேகிக்கிறாயே, அதைக் கண்டுதான் என் மனம் பதறுகிறது. அந்தச் சந்தேகத்தைப் போக்கவே இங்கு வந்தேன். அவர் உன் காதலர்தான்; வேறு யாருக்கும் அவர் சொந்தமல்ல. நம்பு அவரை; பூரணமாக நம்பு. உன் தம்பி அரசைப் பெறுவான். நீ ஒரு மகா வீரனை, தமிழ்நாட்டின் சிறந்த

தமிழனைப் பெறுவாய்'' என்று உணர்ச்சிப் பெருக்கால் சற்று இளைத்த பேதை செங்கையைச் சட்டென்றெழுந்து அறையில் உலாவினாள். உணர்ச்சிப் பெருக்கால் வார்த்தைகளின் பரியாதையைக் கவனிக்காமல் அரசகுமாரியை ஏகவசனத்தில் பேசியதைக்கூட தன்னால் உணர முடியவில்லை.

தொடர்ந்தாற்போல் சந்தோஷத்தாலும் பொறாமையாலும் தன்னை அடியோடு இழந்து விட்ட அரசகுமாரியின் சித்தத்தை, செங்கையைச் சென்று கூறிய உண்மை மொழிகள் தம் பயனைத்தந்தன. அந்த உண்மையைக் கூறிவிட்டுச் செங்கையைச் சென்று சமாதானப்படுத்தி விட்டுப் போய்விட்ட வெகு நேரத்திற்குப் பிறகும் அவளைப் பற்றிச் சிந்தித்தவாறே படுக்கையில் படுத்திருந்தாள் நீரஜாக்ஷி. என்னைக் கவர்ந்து சென்ற புதையில் அவளோடு இன்னும் ஏதாவது ஒரு காதல் தன் காதலிக்காகச் சதி செய்யவோ? அவள் நாட்டை விட்டுத் தப்பி வெளியேறுவானா?' அடுத்த சில தினங்களும் அதைப்பற்றிய சந்தேகம் மட்டும் அவள் மனத்தை விட்டு அகலவில்லை. அந்த எண்ணத்தை உறுதி செய்யும் நிகழ்ச்சியொன்றும் அடுத்த ஒரு மாத காலத்தில் நடைபெறவில்லை. அந்த நிகழ்ச்சியை வேங்கி நாட்டுத் தூதுவன் மல்லனையிடம் கூறுகையில் சளையில் நீரஜாக்ஷியும் வீற்றிருந்தாள்.

அரசியலாகத் தேங்கி நிற்கும் குளத்தில் பெரும் பாறையைத் தூக்கியெறிந்ததுபோல் வார்த்தைகளைக் கொட்டினான் தூதுவன். ''தேவர் பெருமானே! வேங்கி நாட்டுத் தலைநகரில் இன்று விஷ்ணுவர்த்தன விஜயாதித்தன் முடிசூடி விட்டான்!''

சபையில் பெரு மௌனம் நிலவியது. ஏககாலத்தில் பல கண்கள் கரிகாலன்மீது பாய்ந்தன. மௌனத்தை

உடைத்த வந்தியத் தேவர் கேட்டார்: ''கரிகாலா, கேட்டாயா செய்தியை!''

சபையே ஒரு கலங்கு கலங்கும்படியாகப் பிர சொன்னான் கரிகாலன்: ''இது எதிர்பார்த்ததுதானே!''

அரையன் ராஜராஜன் முகத்திலும் இதே எழுத்தது. ''இதற்குத்தானா உன்னை வேங்கி நாட்டிற் அனுப்பினேன்?'' என்றார் சோழர் படைத்தலைவன்.

''எல்லாம் நிட்டப்படிதான் நடக்கிறது தந்தையே'' என்றான் கரிகாலன்.

அரசகுமாரியின் விழிகள் அவனைச் சுட்டெரித்து விடுவனபோல் பார்த்தன.

49. நீ ஒரு தெய்வப் பிறவி

வேங்கி நாட்டு அரியணையில் விஜயாதித்த அமர்த்து விட்டான் என்ற செய்தியைக் கேட்ட மாத்திரத்தில், எந்தச் சந்தர்ப்பத்திலும் நிதானத்தை இழக்காத அரையன் ராஜராஜனே நிதானத்தை இழந்து விட்டதைக் கண்ட வல்லவரையருக்குக்கூடக் கரிகாலன் செய்த காரியம் சரிதானா என்பதில் சந்தேகம் உண்டா யிற்று. அத்துடன் விமலாதித்தன் மகளின் விழிகள் தீப்பொறிகளாக மாறியதையும் அவர் கண்டதும், 'இந்தக் கரிகாலனை வேங்கி நாட்டுக்கு ஏன் அனுப்பினோம்?' என்ற எண்ணங்கூட அவர் மனதில் எழுந்தது. போதாக் குறைக்கு அந்த மகா சபையில் கூடியிருந்த படைத் தலைவர்களெல்லோருமே கரிகாலனைக் கண்டித்து கூச்சலும் போடத் தொடங்கவே, வல்லவரையர் சிறிது நேரம் அந்தக் குழப்பத்தை அடக்கக்கூடத் துணிவில்லாத வராய், தமது ஆசனத்தில் அசைவற்று உட்கார்ந்து விட்டார். ஆனால், உள்ளூரக் கோபம் எரிமலையாக எழுந்து வெடித்துக் கொண்டிருந்தாலும், ஓரளவு அதை அடக்கிக்கொண்ட அரையன் ராஜராஜன், அவையைச் சுற்றி ஒருமுறை தன் கூரிய கண்களைச் சுழலவிட்டு அந்தப் பார்வையின் சக்தியாலேயே படைத்தலைவர் களிடையே எழுந்த கூச்சலையும் குழப்பத்தையும் அடக்கி விட்டு அவை நடுவே குற்றவாளி போல் நின்று கொண் டிருந்த கரிகாலன் மீது கடைசியாகத் தன் பார்வையை நிலை நிறுத்தி, ''உன் குற்றம் மன்னிக்க முடியாதது என்பதைப் புரிந்து கொண்டாயா கரிகாலா?'' என்று வினவினான்.

கரிகாலனும் அவையைச் சுற்றித் தன் பார்வையை ஒரு முறை ஓடவிட்டுப் பிறகு தன் வளர்ப்புத் தந்தையை நோக்கினான். அந்தப் பார்வையில் எந்தக் கலவரமும்

இல்லாதிருத்தேதான். எல்லையில்லாத துணிவும் ஏற்படும் அலட்சியமும் நிரம்பிக் கிடந்ததைக் கண்ட அரையன் ராஜ ராஜன் மனத்தில், 'இத்தனைய பார்வையை உடையவன் குற்றவாளியாக இருக்க முடியாது' என்ற எண்ணம் ஏற்பட்டாலும், சத்தர்ப்ப சாட்சியங்கள் கரிகாலனுக்கு முற்றும் விரோதமாக இருக்கவே முதலில் கேட்ட கேள்வியை மறுபடியும் உக்கிரத்துடன் திரும்பினான். சோழர்களின் பிரதான பட்டத்தரசன், ''கரிகாலா, உன் குற்றம் மன்னிக்க முடியாதது என்பதைப் புரிந்து கொண்டாயா, இல்லையா?'' என்று வினவினான்.

கரிகாலன் இதழ்களில் லேசாக ஓர் நகை அரும்பிற்று. ''தந்தையே! குற்றம் என்ன என்பதைப் புரிந்து கொண்டால்தானே, அது மன்னிக்கத் தகுந்ததா அல்லவா என்பதைப் புரிந்து கொள்ள முடியும்?'' என்று பதில் கூறினான் கரிகாலன்.

அவன் பேச்சில் கண்ட துணிவு அனைவரையும் முழுவதையும் ஆச்சரியத்தில் அமிழ்த்தினாலும் பிரும்ம மாராயரை மட்டும் ஆத்திரத்தில் அமிழ்த்தவே அவர் அரையன் ராஜ ராஜனை நோக்கி, ''படைத்தலைவரே! இவனைப் பேச மட்டும் விடாதீர்கள். பேச விட்டால் எதையாவது சொல்லி இந்த அனைவரையும் ஏமாற்றிவிடுவான். இவன் பெரிய போக்கிரி'' என்றார்.

பிரும்ம மாராயனின் ஆத்திரமும் பேச்சும் வல்லவரையரின் உதடுகளில்கூட ஒரு புன்முறுவலைத் தோற்றுவித்தது. ''பிரும்ம மாராயரே! இந்தச் சிறுவன் பேச்சினால் இந்தப் பேரவை ஏமாந்துவிடுமானால், இது அறிவிற் சிறந்த சபையாகுமா? இத்தனைய ஒரு சபையை நம்பிக் கங்கைக்கரையை நோக்கிப் படையெடுக்கத்தான் முடியுமா? பொறுத்திருங்கள்'' என்று அவரை அடக்கி விட்டுக் கரிகாலனை நோக்கி, ''கரிகாலா! நீ இளைஞன். இங்குள்ள படைத்தலைவர்கள் பல போர்களை கண்டவர்கள்; ராஜ தந்திரத்தில் இணையற்றவர்கள். இவர்கள் உன் செய்கையை ஒப்புக் கொள்ளவில்லை. உன் தந்தையே உன்னைக் குற்றவாளியென நினைக்கிறார். இத்தனையும் சிருஷ்டித்தது ஏது? வேங்கி நாட்டிலிருந்து ராஜராஜ நரேந்திரன் வெளியேற்றம்; விஜயாதித்தன் மரணம்; ஷேகம். இவை எல்லாம் நடந்தது உன்னாலல்லவா?''

கரிகாலன் அவருக்கு ஒருமுறை தலைதாழ்த்தி வணங்கி விட்டுச் சொன்னான்: ''தேவர் பெருமானே! நீங்கள் கூறுவது எதையும் நான் மறுக்கவில்லை. வேங்கி நாட்டு மன்னரையும் அரசகுமாரியையும் வேங்கி நாட்டைவிட்டு வெளியேற்றியவன் நான்தான். விஜயாதித்தன் மரணத்திடம் அளித்தவனும் நான்தான். இவையெல்லாம் குற்றமென்றால், நான் குற்றம் புரிந்தவன்தான்.''

''இவையெல்லாம் குற்றமல்லவென்று கூறுகிறாயா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான் அரையன் ராஜராஜன். வல்லவரையருக்கும் கரிகாலனுக்கும் இடையே புகுந்து.

கரிகாலன் பதில் தெளிவாக இருந்தது. குரலும் திடமாக ஒலித்தது.

''ஆம் தந்தையே! இவை எதிலும் குற்றமில்லை. இந்த நிகழ்ச்சிகள் ஏற்படுமென்பது முன்பே நமக்குத் தெரிந்ததுதான். இதை அரசகுமாரியும் முன்னமே உணர்ந்திருந்தார்கள். வேங்கி அரண்மனை வசந்த மண்டபத்தில் அவர்களைச் சந்தித்தபோது, அவர்களே இப்படியெல்லாம் குற்றம் சாட்டினார்கள்'' என்றான் கரிகாலன்.

''அப்படியிருந்துமா பிடிவாதமாக அவர்களை அரசிழக்கச் செய்தாய்?'' என்று பிரும்ம மாராயர் பெரும் குரலில் கேட்டார்.

''ஆம். அந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் லட்சியம் செய்யாமலே காரியத்தை முடித்தேன்'' என்றான் கரிகாலன்.

"அவனே குற்றத்தை ஒப்புக்கொள்கிறான். கைது செய்யுங்கள் அவனை" என்று கூவினார் பிரும்ம மாராயர்.

கரிகாலன் அவரை ஏறெடுத்துப் பார்த்தான். "பிரும்ம மாராயரே! உமக்கு ராஜதந்திரம் என்பதைப்பற்றி ஏதாவது தெரியுமா?" என்று நிதானமாக ஒரு கேள்வியை யும் கேட்டு நிரம்பி நின்ற குரலில் வினவினான்.

அவன் கேள்வி, குரலில் தொனித்த கேலி— இரண்டும் பிரும்ம மாராயருடைய நிதானத்தை அடியோடு போக்கடித்துவிடவே, அவர் ஆசனத்திலிருந்து எழுந்து தமது ராட்சச சரீரத்தைத் தாக்கிக்கொண்டு, "என்ன சொன்னாய்? எனக்கு ராஜதந்திரம் தெரியுமா என்றா கேட்கிறாய்?" என்று கூவிக்கொண்டே, கரிகாலனை அடித்துவிடுபவர்போல அவனை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தார்.

"பிரும்ம மாராயரே! இந்த அவைக்குத் தலைவன் நான் என்பது நினைவிலிருக்கட்டும்" என்று வல்லவரையரின் கண்டிப்பான வார்த்தைகள், பிரும்ம மாராயரை மீண்டும் ஆசனத்தில் இழுத்து உட்கார வைத்தன. மேற்கொண்டு கேள்விகளை வல்லவரையரே கேட்டார்.

"கரிகாலா! சோழப் பேரரசு கங்கைவரையில் நீடிக்கக் கூடிய பெரிய சகாப்தத்தில் நாம் வீழ்ந்திருக்கிறோம்" என்று வந்தியத் தேவர் தமது பேச்சைத் துவக்கினார்.

"ஆம்! தேவர் பெருமானே!" என்றான் கரிகாலன்.

"அந்த நிலையில் நாம் செய்யும் எந்தக் காரியமும் அந்தப் பேரரசின் விஸ்தரிப்புக்கு அநுகூலமாக இருக்க வேண்டும்."

"ஆம்."

"இடைச்சுவரான எந்தச் செய்கையும் குற்றமான செய்கைதான்."

"சந்தேகமில்லை, தேவரே."

"வேங்கி நாட்டில் விஜயாதித்தன் விட்டான்."

"ஆம்."

"ஜெயசிம்மன் பலம் அங்கு வேரூன்றியது போலத் தான்."

"ஆமாம் தேவரே!"

"நமது வட இந்தியப் போருக்குக் குறுக்கே, நமது பலமான எதிரியொருவன் நிற்கிறான்."

"இருந்தான் சிறிது தூரத்தில் இருக்கிறது தேவரே!"

"என்ன! தூரத்!" தேவர் ஆச்சரியம் நிரம்பிய கண்களை கரிகாலன் மீது நாட்டினார்.

கரிகாலன் உள்ள நிலையைத் தெளிவாக்க முற்பட்டுத் தன் தந்தையையும் தேவரையும் ஒருமுறை பார்த்துவிட்டு அவையோரையும் நோக்கினான். பிறகு மிக மெதுவான குரலில் பேசினான்: "தேவர் பெருமானே! தந்தையே! அவையோரே! நான் சொல்வதைச் சற்றுச் செவி சாய்த்துக் கேளுங்கள். இப்பொழுது ஜெயசிம்ம சாளுக்கியன் சோழ நாட்டுக்கு விரோதியல்ல, நண்பன்" என்றான்.

"நண்பனா! நண்பனா! ஜெயசிம்மன் நண்பனா!" என்ற குரல்கள், அவையின் பல பக்கங்களிலிருந்தும் எழுந்தன. அரசகுமாரியின் இகழ்ச்சி ததும்பிய பார்வை யொன்றும் கரிகாலன் மீது நிலைத்தது.

"நண்பனா! என்ன கரிகாலா இது?" என்று வினவினார் வல்லவரையர் வந்தியத் தேவர்.

கரிகாலன் மடியிலிருந்த ஓலையொன்றை எடுத்து வந்தியத் தேவரிடம் கொடுத்தான். அதைப் படிக்கப் படிக்க வந்தியத் தேவரின் கண்கள் ஆச்சரியத்தால்

மகாத்தன. படித்து முடித்ததும், ஓலையை அரசர் ராஜராஜனிடம் அவரே நீட்டினார். சோழர்களின் பிரதான படைத்தலைவனும் ஓலையைப் படித்தான். அடியோடு பிரமித்துப் போனான். அவர்களிருவரும் அப்படி ஓலையைப் படித்துவிட்டு அச்சரியத்திலாழ்ந்து விட்டதைக் கண்ட அலைத் தலைவர்கள், ஓலையிலிருந்த விஷயம் என்னவென்று அறியாதவர்களாய், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஓலையின் மர்மத்தைக் கரிகாலன் சொல்லாமலே தீர்க்க "தேவர் பெருமானுக்கும் தந்தைக்கும் என் மேலுள்ள சந்தேகம் இன்னும் விலகவில்லையா?" என்று கேட்டான் கரிகாலன்.

"சரித்திரத்தில் இதுவரை யாரும் சாதிக்காத மாபெரும் சாதனையை நீ சாதித்து விட்டாய் கரிகாலா! இந்த மாதிரி ராஜதந்திரத்தை நான் என் ஆயுளில் கண்டதில்லை!" என்று வந்தியத் தேவர் வியப்பினால் மெய்மறந்து பேசினார்.

அதுவரை பொறுமையாயிருந்த பிரும்ம மாராயர் கரிகாலனுக்கு வந்த பெருமையைச் சகிக்க முடியாமல், "அப்படியென்ன பெரிய ராஜதந்திரத்தை இவன் சாதித்து விட்டான்? ஓலையில் என்ன கண்டுபிடித்தீர்?" என்று வினவினார்

"இந்த ஓலை ஜெயசிம்ம சாளுக்கியனால் எழுதப்பட்டு அவன் ஒப்பந்தத்துடனும் முத்திரையுடனும் இருக்கிறது. சோழப்படைகள் வெங்கி நாட்டுக்குள் புகுந்து வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்றும், இந்த ஓலையைக் காணும் எந்தச் சாளுக்கியப் படைத்தலைவனும் சோழப் படைகளுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியதென்றும், இந்த ஓலையில் கையெழுத்திருக்கிறது. இது ஜெயசிம்மன் ஆக்ஞாபத்திரம்!" என்று கூறினார் வந்தியத் தேவர்.

அலை அப்படியே ஸ்தம்பித்துவிட்டது. இது என்ன இந்திர ஜாலமா, மகேந்திர ஜாலமா என்று படைத் தலைவர்கள் பிரமிப்படைந்தனர். சோழர்களின் பரம விரோதியான ஜெயசிம்மன் இப்படியொரு பரம மாறியது பேராச்சரியமாயிருந்தது அவர்களுக்கு. ஆனால் திருச்சனாதேவி மட்டும் இதைப்பற்றி என்னவும் ஆச்சரியப்படவில்லை. தன் எண்ணத்தைத் தெளிவுட னேயே கூறத்தொடங்கிய அவள், "சோழநாட்டுப் படைத் தலைவர்களே! இது பெரும் சாதனையல்ல. சோழ நாட்டுக்குப் பெருமையளிப்பதுமாகாது. என் தம்பியின் அரசை ஜெயசிம்மனுக்குத் தத்தம் செய்திர்கள். ஜெயசிம்மன் அதற்குப் பதிலாக உங்கள் படைகளைத் தனது நாட்டின் மூலம் செல்ல அனுமதிக்கிறான். இது வீரர்கள் செய்யக் கூடிய செய்கையா? ஜெயசிம்மனை வெல்ல முடியாத சோழப் பேரரசர், மருமகன் அரசை மாற்றானுக்குத் தத்தம் செய்து, படைகள் செல்ல அனுமதி வேண்டினார் என்று உலகம் தூற்றாதா பேரரசை?" என்று சடசடவென்று வார்த்தைகளை உதிர்த்தாள்.

கரிகாலன் அவளுக்குப் பதில் சொன்னான். "பெரிய சாதனைகளை முன்னிட்டுச் சிறு நாடுகளை விட்டுக் கொடுப்பது சரித்திரத்திற்குப் புதிதல்ல. அர்த்த சாஸ்திரம் எழுதிய கௌடில்யனே முதலில் சந்திரகுப்தனைச் சொந்த நாட்டை விட்டுக் கிளப்பிக் கொண்டுபோய், பிறகு அந்த நாட்டிற்கே அவனை அதிபதியாக்கினான். நந்தர்கள் மந்திரி ராட்சஸனைக் கௌடில்யன் ராஜதந்திரம்தான் வென்றது. ஜெயசிம்மனுக்கு எதிராக நாம் கையாளுவது அத்தகைய ஒரு ராஜதந்திரம்தான். இது இந்தப் பேரவையில் பேசக்கூடிய விஷயமல்ல. வந்தியத் தேவரும் என் தந்தையும் மட்டும் தங்களுடனிருக்கும் பட்சத்தில் விஷயத்தை விளக்க என்னால் முடியும்."

அன்றிரவில் அரையன் ராஜராஜன் பாசறையில் கரிகாலன் உள்ள நிலையை விளித்தபோது, அரையன்

ராஜராஜன் மட்டுமல்ல, தேவர் பெருமானும் அரசுரிமையும் கூட ஆச்சரியத்தால் பிரமித்துப் போனார்கள். கரிகாலன் பேச்சைக் கேட்கக் கேட்க வந்தியத் தேவரின் யோசனை விழிகளின் எதிரே சோழப் பேரரசின் பெரும் விஸ்தரிப்பு ஆச்சரியமாக எழுந்துகொண்டிருந்தது. அந்தக் கனவில் அவர் லாந்தைகளையும் உதிர்த்தார்.

"அப்பா! ஆச்சரியம்! ஆச்சரியம்! சக்கரக் கோட்டம் தாரத்தில் மூன்றிலொரு பாகம் தீர்ந்துவிட்டதே" என்று முணுமுணுத்தார். அதனால் ஏற்பட்ட ஆனந்தம் தாங்காமல், ஆசனத்திலிருந்து எழுந்து கரிகாலனைத் தம் இரு கைகளாலும் தழுவிக் கொண்டார். "கரிகாலா, நீ ஒரு தெய்வீகப் பிறவி! உனக்கு வேண்டியதைக் கேள் தருகிறேன்" என்றார்.

"கொடுப்பதாகச் சத்தியம் செய்கிறீர்களா?" என்று வினவினான் கரிகாலன்.

"கண்டிப்பாய்ச் சத்தியம் செய்வேன். உன் கை எங்கே" என்று அவன் கையை எடுத்து, அதில் தம் கரத்தால் அடித்துப் பிரமாணம் செய்யப்போனார்.

"நில்லுங்கள்!"— உக்கிரமாக இடை புகுந்தது அரையன் ராஜராஜன் குரல்.

50. சக்கரக் கோட்டம்

கரிகாலன் கைமீது சத்தியம் அடித்துக் கொடுக்க எழுந்த வந்தியத் தேவரின் கை, அரையன் ராஜராஜன் திடீரெனக் குறுக்கிட்டதால் பாதியிலேயே நின்றுவிட்டாலும், அவர் விழிகளில் மட்டும் பேராச்சரியம் படர்ந்தது. சோழ சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்கு எல்லையற்ற சேவை செய்திருக்கும் கரிகாலன் கோரிக்கையை நிராகரிப்பது எத்தனை நன்றிகெட்ட செய்கை என்று அவர் பண்பட்ட இதயத்திலே உறுத்தியதால், அவர் அரையன் ராஜராஜனை நோக்கி, "படைத்தலைவரே! நாட்டுக்கு நலம் புரிந்தவர் கேட்பதைத் தருவது சோழ மரபில் நாம் கண்ட பண்பல்லவா?" என்று வினவினார்.

வந்தியத் தேவரைத் திரும்பி நோக்கிய அரையன் ராஜராஜன் விழிகளில் உறுதி பரிபூரணமாகத் தெரிந்தது. "உண்மைதான் தேவரே. ஒரு நன்மையை உத்தேசித்து நாம் செய்யும் கைம்மாறு நாட்டுக்குப் பெரும் தீங்கைக் கொண்டு வருவதானால், அந்தப் பிரதி உபகாரத்தைச் செய்யாதிருப்பதே ராஜ தர்மம்" என்றான் அரையன் ராஜராஜன்.

"சோழர்களுக்கு இத்தனை சேவை புரிந்திருக்கும் கரிகாலன் நாட்டுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய பிரதி உபகாரத்தை எதிர்பார்ப்பானென்று நினைக்கிறீரா?" என்று வினைய வந்தியத் தேவரின் குரலில் சிறிது கண்டனமும் கலந்திருந்தது.

அரையன் ராஜராஜன் வந்தியத் தேவருக்குப் பதில் ஏதும் கூறாமல், கரிகாலனை நோக்கி, "கரிகாலா! நாட்டுக்கு பெரும் நன்மை புரிந்திருக்கிறாய். ஜேயிம்ம சாளுக்கியனிடம் நீ செய்துகொண்ட ஒப்பந்தத்தால் நமது பெரும் படை எந்தத் தடையுமில்லாமல் சக்கரக் கோட்டம்

வரை போக முடியும். நீ விளக்கியபடி இந்த ஒப்பந்தத்தை வேங்கியை அனைத்து நிற்கும் கலிங்க நாடோ அதற்கு அப்பாலிருக்கும் சோட்ட தேசமோ ஒப்புக்கொள்ளாது. இப்படிக் கலிங்கன் சோட்டரன் ஒரு பக்கமும், ஜெயசிம்மன் இன்னொரு பக்கமும் சாய்வதால், அம்மன்னர்களின் நற்றுமை உடைக்கப்பட்டு விட்டது. இவர்களைத் தனித் தனியே வெல்வது பரம கலபம். பெரும் சேனைகள் சாதிக்க முடியாத மகத்தான காரியத்தை ராஜகந்நிரத் தால் சாதித்து விட்டாய்...'' என்ற அரையன் ராஜராஜன் பேச்சை இடைபுகுந்து வெட்டிய வந்தியத் தேவர், ''இதனால் நாம் கங்கைப் படையெடுப்பில் மூன்றினொரு பங்கைப் போரில்லாமலே கடக்கிறோம்'' என்றார்.

இதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த அரையன் ராஜராஜன், ''இத்தனைய மகத்தான பணியை உன் கோரிக்கையால் நாசம் செய்யாதே கரிகாலா?'' என்றான் கடைசியாக.

''அப்படியானால் என் பிறப்பு என் ஆயுள் பூராவும் ரகசியமாகவே இருக்கவேண்டியதுதானா?'' என்று வினவிய கரிகாலன் குரலில், துயரம் பூரணமாகத் தொனித்தது.

''யார் கண்டார்கள் கரிகாலா! உனக்கு அந்த ரகசியத்தை நானே விளக்கும் சமயம் வரலாம். உன் பிறப்பு வரலாற்றுடன் அரசாங்க ரகசியங்கள் பிணைத்து நிற்கின்றன. அந்தச் சிக்கல்களை விதி தானாக அவிழ்க்க லாம். உன் நல்ல மனசுக்கு அவிழ்க்கவும் செய்யும். அது வரையில் பொறுத்திருக்க உன்னை வேண்டுகிறேன்'' என்று கெஞ்சினான் அரையன் ராஜராஜன்.

கரிகாலனிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. சோகப் பெருமூச்சு ஒன்றே வெளிப்பட்டது. மேற்கொண்டு ஏதும் பேசாமல், தலைகுனிந்தவண்ணம் பாசறையைவிட்டு வெளியேறினான் கரிகாலன். அவன் போவதை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த வந்தியத் தேவர் மனம் பாகாய் உருகிக் கொண்டிருந்தது. சற்று முன்பாக அரையன் ராஜராஜனைக் கூட லட்சியம் செய்யாமல், இடமாகப் போர் நிலவரத்தை எடுத்துக்கூறிய அந்த வீரன் வெளியே சென்றபோது, அவன் எடுத்து வைத்த ஒவ்வொர் அடியிலும் வருத்தம் தொனித்ததைக் கண்ட வந்தியத் தேவர், அரையன் ராஜராஜனை நோக்கினார். அரையன் ராஜராஜன் அவரை அலட்சியமாகப் பார்த்துவிட்டு, ''தேவரே, உம்மிடம்கூட நான் கரிகாலனைப்பற்றிய மர்மத்தைச் சொல்ல முடியாது. மன்னிக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டுப் பாசறையை விட்டு வெளியே சென்றான்.

வந்தியத் தேவர், தம்முடன் தனித்திருந்த அரசகுமாரி யைப் பார்த்தார். ''நிரஞ்சனாதேவி, இது வேடிக்கையா யில்லையா?'' என்றும் வினவினார்.

அரசகுமாரியின் மனம் எங்கெங்கோ அலைந்துகொண் டிருந்ததால், அவள் உடனே பதில் சொல்லவில்லை. கரிகாலன் மீது எத்தனையோ கோபமிருந்தாலும், அவன் துயரம் அவள் இதயத்தைப் பல வேல்களைக் கொண்டு தாக்கிக் கொண்டிருந்ததால், அவள் நீண்ட நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு சொன்னாள்: ''தேவரே! நான் அவரைச் சந்தித்தது முதல் நடந்துள்ள வேடிக்கைகள் பல. சந்தித்த முறையே ஒரு வேடிக்கை. வேங்கி வீரர்கள் துரத்த, என்னிடம் அடைக்கலம் புகுந்தார். பிறகு என் தம்பிக்கு உதவுவதாகச் சொல்லி ஜெயசிம்மனுடன் சேர்ந்து கொண்டார். இப்பொழுது எங்கள் நாட்டையே ஜெயசிம்மனிடம் ஒப்படைத்து விட்டார். இதெல்லாம் வேடிக்கை தானே தேவரே?''

அவள் கரிகாலனை வெறுக்கிறாளா விரும்புகிறாளா என்பதைத் தேவரால் புரிந்துகொள்ள முடியாததால், ''அரசகுமாரி! கரிகாலன் உங்களுக்கு ஏதாவது தீங்கு

செய்யமாட்டான். எதோ பெரிய நல்ல முடிவை எடுத்
திருக்கிறான் என்பதை அவன் முகம் காட்டியது. ஆனால்
அவன் என்ன முடிவு எடுத்திருக்கிறான் என்பதை அவ
னால் ஊகிக்க முடியவில்லை. அவன் முகத்தில் எந்த உணர்
ச்சியும் தெரியவில்லை. அவன் மனம் தரும் விளக்கம் சரியானால், உங்களுக்காக
அவன் தன் உயிரையும் இழக்கச் சென்றான். மொத்
தத்தில் அரசகுமாரி காலம் உங்களுக்காக சந்தர்ப்
பமான முடிவைத் தரும்'' என்று சமாதானம் செய்து
வந்தியத் தேவர்.

அத்துடன் அவ்விருவரும் கூடப் பாசறையைவிட்டு
அகன்றார்கள். அங்கிருந்து அவன்ற அரசகுமாரி, தோ
ழரைத் தேடிச் செல்லாமல் வாளியங்கள் தங்கியிரு
ந்திடத்தை நோக்கிக் கால் தடையாகச் சென்றாள். அவ
ள் உள்ளத்தில் எண்ணற்ற எண்ண அலைகள் பெரு
டன் தாக்கிக் கொண்டிருந்ததால், அவள் எதி
னைச் நடப்பவள்போல் நடந்து சென்றாளாயினும்,
அடிக்கடி பாடதளத்தின் எங்கோ ஒரு புதியிலிருந்து
எழுந்த கூச்சல்களை அவள் காதுகள் கேட்கத் தவ
றவில்லை. தனமாடித்துத் தங்கிய காலத்திலும், அரச
ராஜராஜன் தன் படைகளை எத்தனை அருமையா
அணிவகுத்திருந்தான் என்பதைக் கண்ட அவள், தன்ன
ளவைகளையும், நூபரங்களையும் ஒருவழி படுத்து
'வெங்கியிலும் இந்த மாபெரும் அழிவுப்பு என்றாவது
நடைபெறுமா? என் தம்பி பல்லவனாக முடிசூடி வீரனா
வாழ்வானா' என்று தன்னைத் தானே கேட்டுக்
கொண்டாள்.

அரையன் ராஜராஜன் பாசறை மண்டபத்திலிருந்து
கலைந்தால், தான்கு அரைச்சுக்கரங்களாக அணிவகுத்து
சோழர் படைத்தலைவர் நிறுத்தியிருப்பது தெரிந்
தனத்தின் கொடி அரைச் சக்கரம் யானைப் படை, அதற்
அடுத்த அரைவட்டம் குதிரைப் படை. இந்த அர

சத்திர விழுகத்தை அரசகுமாரி பார்க்கப் பார்க்க, பெரிய
வீரர்கள் வம்சத்தில் பிறந்த அவள் உள்ளத்திலும், வீர
அக்கினி கொழுந்துவிட்டு நின்றது. 'இந்தப் படைகளை
அரையன் ராஜராஜன் எப்படி எப்படி நடத்திச் செல்
வான்? அதுவும் கங்கைக் கரை வரையில்?' என்ற பிரமித்
தான் அவள் உண்மையாகக் கங்கைப் பயணம் வந்த
போது, அவள் பிரமிப்புப் பன்மடங்கு அதிகமாயிற்று.

விக்கிரமச் சோழிய வரையனான அரையன் ராஜ
ராஜன் பெரும் பிரச்சினைகளை உடைய இராஜேந்திர
சோழ தேவரின் ஆக்ஞைப்படி, மேலைச் சாளுக்கிய
நாட்டின் எல்லையிலிருந்து, சுக்கிலைப்ட்ச சப்தமியன்று
கங்கைப் படையெடுப்பைத் துவக்கினான். சோழப்
பேரரசின் இணையற்ற படைபலத்துக்கும் ஆற்றலுக்கும்
அத்தாட்சியாக விளங்கிய அந்த மாபெரும் படை
பிரும்மாண்டமாக அணிவகுத்து நின்றது. படையின்
முன்னணியில் அரையன் ராஜராஜன் பூரண பொற்கலசம்
அணிந்து, அந்தப் பொற்கலசம் காலைச் சூரியனில்
பளபளக்கப் பிரகாசிக்கும் வெள்ளைப் புரவிமீது வீற்றிருந்தான்.
அவன் வலப்பக்கத்தில் ராட்சஸன் போலிருந்த பிரும்ம
மாராயன் பெரும் இரும்புக் கலசத்துடனும், இடது பக்கத்
தில் ராஜாவை உடையில் செங்கமலச் செல்வியும் குதிரை
களில் ஆரோகணித்துப் புறப்படத் தயாராயிருந்தனர்.
செங்கமலச் செல்விக்கு அருகே கரிகாலன் காணப்பட்டான்.
மற்ற பாண்டிய, சேர நாட்டுப் படைத்தலைவர்கள்
ராணமாகப் படைத்தலைவனை அடுத்துப் புறப்படச்
சித்தமாயிருந்தனர்.

துந்துபிகள் முழங்கப்பட்டன தாரைகள் சப்தித்தன.
சங்குகள் ஒலித்தன. திருச்சனாதேவி அரையன் ராஜ
ராஜன் நெற்றிக்குத் திலகமிட்டு, ''சோழர் படைத்
தலைவரே! சென்று வெற்றி வாகை சூடித் திரும்புங்கள்''
என்றாள். ''நன்றி அரசகுமாரி! ஆனால் இந்தப்

பயணத்தின் முன்பாகத் தங்களை ஒன்று கேட்கலாமா?" என்று வினவினான் சோழர் படைத்தலைவன்.

"கேளுங்கள்."

"செய்வீர்களா?"

"கண்டிப்பாகச் செய்வேன்."

"இந்தப் படையெடுப்பு சாத்தியமானதற்குக் காரணமான என் மகன் கரிகாலனுக்கும் உங்கள் கையால் இடவேண்டும்" என்று, குனிந்து மெள்ளச் சொன்னான் சோழர் படைத்தலைவன்.

திருச்சனாதேவி மௌனம் சாதித்தாள். அரையன் ராஜராஜன் மீண்டும் வேண்டினான். "அரசுமாதேவி போருக்குச் செல்பவர்களில் யார் திரும்புவோம், யார் திரும்பமாட்டோம் என்று சொல்ல முடியாது. ரணகளம் செல்லும் வீரனுக்குப் பெண்கள் அளிக்கக்கூடிய ஒரே உதவியை மறுக்காதீர்கள்" என்றான் அரையன் ராஜராஜன்.

திருச்சனாதேவி மெல்லக் கரிகாலனை நோக்கி நடந்து, அவன் புரவியை அணுகி, கையிலிருந்த தங்கக் கிண்ணத்திலிருந்து குங்குமத்தை எடுத்தாள். அவன் புரவியின் விரித்தபடியே குனிந்தாள். திலகமிட்ட அவன் விரல்கள் நடுங்கின. திலகத்தை அவன் நெற்றியில் தீட்டிவிட்டுத் தலைகுனிந்தபடியே வந்தியத் தேவரின் ரதமிருந்த இடத்துக்குச் சென்றாள். அரையன் ராஜராஜன் கையை உயர்த்தினான். படை பெரும் கடல் போல நகர்ந்தது. கரிகாலனை நோக்கிக் கொண்டிருந்த அரசகுமாரியின் விழிகளில் நீர் தேங்கி நின்று, ரதத்தின் தட்டிலும் விழுந்தது.

வந்தியத் தேவர் அவளை ஆசுவாசப்படுத்த முற்பட்டு, "தேவி! கலங்காதீர்கள்! கரிகாலன் பெரும் வெற்றி வாகையுடன் திரும்புவான். அவனிடம் உபதலைவனாய்

செல்லும் உங்கள் தம்பியும் மாபெரும் வீரனாகத் திரும்புவான். அதுவரையில் காஞ்சி மாநகரில் நீங்கள் ராஜேந்திர சோழ தேவரின் பராமரிப்பில் இருக்கலாம்" என்றான்.

அரசகுமாரி போகும் படைகளையே பார்த்துக் கொண்டு நின்றாள். எங்கும் தூள் கிளப்பப் படை நகர்ந்தது. தூரம் செல்லச் செல்ல வேகமாகவே நகர்ந்தது. அன்றிலிருந்து இருபதாவது நாள் இந்திராவதி நதிக்கரையில் ராஜபுரத்துக்கு ஒரு காத தூரத்திலிருந்த சக்கரக் கோட்டம் என்ற சித்திர கூடத்துக்கு எதிரில் தங்கியது.

சித்திர கூடத்தின் அரண்களையும் அமைப்பையும் பார்த்த அரையன் ராஜராஜன், இந்தக் கோட்டையை எப்படிப் பிடிக்கப் போகிறோம் என்று அஞ்சினான். அவன் அச்சம் சரியென்பதைக் காலம் நிரூபித்தது. இரண்டு மாத காலம் முற்றுகையிட்டும் சக்கரக் கோட்டம் சரணடையவில்லை. எதற்கும் குழம்பாத கரிகாலனே கூட, 'இந்தச் சக்கரக் கோட்டம் எப்படி உணவில்லாமல் இரண்டு மாத காலமாகச் சமாளிக்கிறது?' என்ற கேள்வியால் குழம்பியது.

கேள்விக்குப் பதில் மிகவும் எதிர்பாராத விதமாகக் கிடைத்தது கரிகாலனுக்கு.

51. காட்டுக்குள்ளே கோட்டைக் கதவம்

மாகணி தேசத்தின் முக்கியக் கோட்டையொன்றான சக்கரக் கோட்டத்தைத் தன் படைகளைக் கொண்டு சூழ்ந்த போது, அந்தக் கோட்டை நீண்ட நாள் தன்னை எதிர்த்து நிற்க முடியும் என்று அரையன் ராஜராஜன் கனவிலும் கருதவில்லையாதலால், மூன்றே இரண்டு மாத காலத்துக்கும் மேலாக நீடித்தது பெரும் மனக்கலக்கத்தை அளித்தது. அவனுக்கு நீண்ட தூரம் பயணம் செய்து நாலைந்து அரசகளுடன் போரிட வேண்டிய படைகளுக்கு ஓரளவு ஓய்வு ஆங்காங்கு அவசியமென்றாலும், அதிகப்படியான ஓய்வை அளித்தால் படைகளின் கறுகறுப்புக் குறைந்து போகுமென்பதை அறிவான். கண்டறிந்த அரையன் ராஜராஜனுக்கு, சக்கரக் கோட்டத்தின் முற்றுகை நீடிக்க நீடிக்க மன வேதனையும் அதிகமாகிக் கொண்டே வந்தது.

சக்கரக் கோட்டத்தைப் படைகள் அணுகிய நாளன்று, அதன் அமைப்பையும் கோட்டையின் வலுவையும் கண்ட சோழர் படைத்தலைவன் அதைப் பிடிப்பது அவ்வளவு எளிதல்ல என்பதை உணர்ந்தானானாலும், தன் படைபலத்தையும் கோட்டையிலிருக்கக்கூடிய பாதுகாப்பையும் எடை போட்டுப் பார்த்தபின், பலமான அத்தக் கோட்டையை உடைப்பதும் தன் படைகளுக்கு எளிதே என்று எண்ணினான். மாகணி நாகர்களின் அந்தக் கோட்டையின் மூன்று வாயில்களையும் தனது ஆயிரம் யானைகளையும் கொண்டு தகர்த்தொடியாக்கி விட முடியுமென்றும், பிறகு காலாட்படையும் குதிரைப் படையும் உள்ளே புகுந்தால் மளைக் கண் இமைக்கும் நேரத்தில் கைவசப்படுத்தி விடலாமென்றும் நினைத்தான் சோழப் படைத்தலைவன். இந்த யோசனையை தனது படைத்தலைவர்களிடம் முதல் நாள் வெளியிட்ட போது, கலிதாசன், அரையன் ராஜராஜனை எதிர்த்துப் படைகள் கோட்டையை வளைத்துத் தங்கிய முதல் நாளிரவு தன் படைத்தலைவர்களை மந்திராலோசனைக்கு அழைத்த அரையன் ராஜராஜன் தன் திட்டத்தை அவர்களுக்கு விளக்கிச் சொன்னான்.

சற்று எட்ட எரிந்துகொண்டிருந்த பந்தத்தின் நிலவில் கை நீட்டி எதிரேயிருந்த கோட்டையைச் சுட்டிக் காட்டிய சோழர்களின் பிரதான படைத்தலைவன், "பிரும்ம மாராயரே! அதோ அந்தக் கோட்டையின் அமைப்பு பயமளிப்பதுதான். ஆனால், அதில் சில பலவீனங்களும் இருக்கின்றன. அதோ பாருங்கள். கோட்டையின் முகப்பில் மூன்று பெரிய வாயில்கள் அர்த்த சந்திர வடிவத்தில் காணப்படுகின்றன. அந்த வாயிலின் கதவு களை நமது யானைப் படைகள் உடைக்க முடியுமானால், பிறகு நமது படைகள் மிகச் சுலபமாக உள்ளே நுழைய லாம். தவிர இந்திராவதி நதி இந்தக் கோட்டையை இணைத்து ஓடுவதும் நமக்கு அநுகூலம். கோட்டைக்குப் பின்னிருக்கும் நதி ஆழமானது. ஆகவே எதிரியின் படைகள் வெளியே வருவதானால் முன் வாயில் வழியாகத்தான் வரவேண்டும். வந்தால் நமது வாயில் நுழைந்துதானாக வேண்டும்" என்றான்.

பிரும்ம மாராயரும் இதர தளபதிகளும் கோட்டையை உற்றுக்கவனித்தார்கள். கடைசியில் அரையன் ராஜராஜனைப் பார்த்த பிரும்ம மாராயர், "இதைவிடச் சிறந்த மார்க்கம் இருக்க முடியாது. நீண்ட மரங்களை யானைகளின் துதிக்கைகளில் கொடுத்துக் கதவுகளை நொறுக்கி விடலாம். பிறகு தலைவர் அநுமதி கொடுத்தால் நான் என் படைப் பிரிவுகளுடன் நகருக்குள் நுழைந்து விடுவேன்" என்றார்.

இதரப் படைத் தலைவர்களும் அரையன் ராஜராஜன் யோசனையை அங்கீகரித்தார்கள். கோட்டைக்கெதிரே

விருந்த சமவெளியில் அமர்ந்திருந்த அந்தப் படைத் தலைவர்களிடமிருந்து சற்று விலகி நின்று கோட்டையை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கரிகாலனைப் பார்த்த செங்கமலத் தெலுங்கி, "அப்பா! அவர் ஏதும் சொல்லவில்லையே!" என்று வினவினாள். கரிகாலன் இருந்த நிலையில் கண்களை ஓட்டினான்.

இதைக் கேட்ட பிரும்ம மாராயர், வயிறு குலுங்கப் பெரிதாக நகைத்து, "கரிகாலனா! அவன் என்ன சொல்லி முடியும் செல்வி? அதேகப் போர்களில் வெற்றி கண்ட அரையன் ராஜராஜன் திட்டத்துக்குக் குறை சொல்லக் கூடிய திறன் உடையவன் சோழ மண்டலத்தில் எவனிருக்கிறான்?" என்று வினவினார் கேலியாக.

அவருடைய ராட்சசச் சிரிப்பினால், கோட்டையிலிருந்து கண்களை அகற்றிப் பக்கத்திலிருந்த பட்டத் தலைவர்களை நோக்கித் திரும்பிய கரிகாலன், "இந்த கோட்டைக் கதவுகளை உடைத்து உட்புகுவது நீங்கள் நினைப்பதுபோல் அவ்வளவு எளிதல்ல பிரும்ம மாராயரே" என்றான்.

பிரும்ம மாராயர் அடுத்த விநாடி எரிமலை போல் வெடித்தார். "ஏன் உபதளபதியாரே! ஏன் உட்புக முடியாது? கதவுகளை உடைக்க நமது யானைகளுக்கு வலுவில்லையா? அவற்றைத் தொடர்ந்து உட்புக நமது படைகளுக்குத்தான் பலமில்லையா?" என்று கோடரி போன்ற குரலில் கேள்விகளை மடமடவென்று வீசினார்.

அவர் சொற்களிலிருந்த கோபத்தைக் கரிகாலன் கவனித்ததாகவே தெரியவில்லை. நிதானமாக, அரையன் ராஜராஜனையும் மற்றப் படைத்தலைவர்களையும் பார்த்தே சொன்னான், "படைத்தலைவர்களே! கதவுகளை மாத்திரம் பார்க்காதீர்கள். கதவுகளுக்கு மேலே உள்ள கோட்டைச் சுவர்க் கட்டடங்களில் எத்தனை வரிசை துவாரங்கள் இருக்கின்றன, கவனியுங்கள்" என்று

படைத்தலைவர்கள் கண்கள் மீண்டும் கோட்டைகளை ஆராய்ந்தன. அரையன் ராஜராஜனும் அந்தப் பெரும் துவாரங்களை ஆராய்ந்தான். "துவாரங்கள் இருக்கின்றன கரிகாலா! அவற்றால் கோட்டைக்குப் பலவீனம் தானே?" என்று வினவினான் அரையன் ராஜராஜன் திகிலில்.

"ஆம் தந்தையே! பலவீனம்தான். ஆனால், அந்தப் பலவீனத்தை எதற்காக அந்தக் கோட்டைமீது அமைத்திருக்கிறான் தெரியுமா?" என்று வினவினான் கரிகாலன்.

"தூரத்திலிருந்து வரும் படைகளைக் கண்காணிப்பதற்காக இருக்கலாம்" என்று அரையன் ராஜராஜன் பதில் சொன்னான்.

"அதற்கும் இருக்கலாம்; அப்படிப் படைகள் வந்து கோட்டையைச் சூழ்ந்து கொள்ளுமானால், படைகளைக் கோட்டைகளை அணுகவிடாமல் அம்பு மாரி பொழியவும் அந்தப் பெரும் துவாரங்கள் உபயோகப்படலாம். தவிர இந்தக் கோட்டையும் சாளுக்கியர்கள் கோட்டைகளைப் போன்ற அமைப்பைக் கொண்டிருக்கிறது. கோட்டைச் சுவரின் அகலம் நான்கு அடிகளுக்கு குறைவில்லை. இந்த ஒவ்வொரு துவாரத்தையும் ஒட்டிக் கோட்டைச் சுவரின் மேல்பாகம் பூராவும் வில்லாளிகள் தங்கலாம்..."

கரிகாலன் இதற்குமேல் பேசாமல் மீண்டும் கோட்டைச் சுவரைக் கவனித்தான். அவன் மேலே பேசாவிட்டாலும் கரிகாலன் மனத்திலோடிய எண்ணங்களை நொடிப் பொழுதில் புரிந்துகொண்ட அரையன் ராஜராஜனுக்கு அந்தக் கோட்டையைத் தாக்குவதோ பிடிப்பதோ தான் எண்ணியது போல் அத்தனை சுலபமல்லவென்பது மட்டும் திட்டமாகத் தெரிந்தது. ஆகவே, கரிகாலன் கேட்ட ஆட்சேபணையை அவனே பூர்த்தி செய்து, தன் படைத்தலைவர்களுக்கு நிலைமையை விளக்கினான்.

"கரிகாலன் சொல்வது சரிதான் பிரும்ம மாராயரே!" என்று முணுமுணுத்தன அரையன் ராஜராஜன் உதடுகள்.

"என்ன சொல்கிறான் கரிகாலன்? எதைச் சரியென கிறீர்கள்?" என்று வினவினார் பிரும்ம மாராயர்.

"பிரும்ம மாராயரே! நீரும் போரில் தேர்ந்தவர் முன்னவர். நானும் எத்தனையோ போர்களைக் கண்டிருக்கிறேன். இருந்தும் அநுபவமற்ற இந்தச் சிறுவனின் கண்களில் பட்டது நம்மிருவர் கண்களிலும் படவில்லை, பார்த்திர்களா?" என்றான் அரையன் ராஜராஜன்.

"என்ன கண்டுவிட்டான் இவன்?" என்றார் பிரும்ம மாராயர். விஷயம் லவலேசமும் புரியாமல், ஆனால் கோபம் குரலில் கொழுந்துவிட்டெரிய.

"அதோ, அந்தக் கோட்டைக்குள் மேலுள்ள சுவரில் தெரியும் பெரிய துவாரங்கள்..."

"ஆம்; இருக்கின்றன."

"அவற்றுக்குப் பின்னால் வில்வீரர்கள் இருக்க முடியும்."

"இருக்கட்டும்."

"வேல் வீரர்களும் இருக்கலாம்."

"இருக்கட்டுமே!"

"யானைகள் கதவைத் தாக்கப் புறப்படுமானால், அத்தத் துவாரங்களிலிருந்து வாளிகள் யானைகளை நோக்கிப் பறக்கும். சுட்டிகளும் பறந்து வரும்!"

இதைக் கேட்ட பிரும்ம மாராயருக்கும் மெல்ல மெல்ல விஷயம் புரியலாயிற்று. அரையன் ராஜராஜனின் திட்டம் அத்தத் துவாரங்களினால் எப்படித் தவிடுபொடியாகி விட்டதென்பதை உணர்ந்தார். வேல்களும் அம்புகளும் சரியாகக் குறி பார்த்து யானைகளைப் பார்த்து எய்யப்படுமானால் யானைகள் மிரளலாம்

மிரண்டு அலக்கோலமாக ஓடினால் அவற்றுக்குச் சேதம் ஏற்படும்" என்று தமக்குள்ளேயே சொல்லிக் கொண்ட பிரும்ம மாராயர், அரையன் ராஜராஜனைப் பார்த்து விழித்தார்.

பதிலுக்கு அரையன் ராஜராஜன் புன்முறுவல் காட்டி, "பார்த்தீரா பிரும்ம மாராயரே! போரில் அநுபவமற்ற இந்தச் சிறுவனின் கண்களில் படுவது நமது கண்களில் படவில்லை" என்று மீண்டும் சுட்டிக் காட்டினான்.

அப்பொழுதும் விம்மை விடாத பிரும்ம மாராயர், "சிறு தும்பும் பல் குத்த உதவும்" என்று அலட்சிய மாகவே பேசினார் கரிகாலனைப்பற்றி. அந்த அலட்சியத் தைக் கரிகாலன் கவனித்தானானாலும், கவனிக்காதது போலவே உள்ள ஆபத்தை மேலும் விளக்க முற்பட்டு, "தந்தையே, எதிரிகள் கோட்டையிலிருந்து அம்புகள் எய்யும் விஷயத்தில் நாம் இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். இது நாகர்கள் நாடு. நாக பூஜை செய்பவர்கள். இவர்களிடம் நாகப் பாம்புகள் கட்டுப் பட்டிருப்பதாகச் சரித்திரம் கூறுகிறது. இவர்களது அம்பு களிலும், சுட்டிகளிலும் நாகப் பாம்புகளின் கடும் விஷம் தோய்க்கப்பட்டிருக்குமென்றும் கேள்வி. அந்த அம்புகள் யானைகளின் மீதோ அல்லது நமது பிரும்ம மாராயர் மீதோ பாய்ந்தால் நிலைமை என்னவென்பதைச் சொல்லத் தேவையில்லை. பிரும்ம மாராயர் என்ன செய்வாரென்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் யானைகள்மீது விஷம் தீட்டப்பட்ட வாளிகள் பாய்ந்தால் யானைகள் அலறித் திரும்பி, நமது படைகளை நோக்கி ஓடிவரும்..." என்று பேச்சை முடிக்காமலே விட்டு, பிரும்ம மாராயர் மீது ஏளனம் கலந்த இளநகையொன்றையும் வீசினான்.

ஆனால் இத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த செங்கமலச் செல்வி இளநகை காட்டவில்லை, பெரிதாகவே நகைத்தாள்.

''ஏனம்மா சிரிக்கிறாய்?'' என்று கேட்டார் பிரம்ம மாராயர்.

''யானைகள் மீண்டு திரும்பி நடந்து படைகள் மிதிபட்டுப் போகுமே. அதை நினைத்துப் பார்த்தேன். தவிர, உங்கள் மீதும் விஷவாளி பாய்ந்தால்...'' என்ற செல்வியின் பேச்சை, ''மாண்டு போவேன். வீரசொர்க்கம் அடைவேன்'' என்று முடித்தார் பிரம்ம மாராயர்.

''மாண்டு போக முடியாது பிரம்ம மாராயரே!'' என்று திருத்தினான் கரிகாலன்.

''மாண்டுபோக முடியாதா? விஷவாளி பாய்ந்தாலுயிர் நீடிக்குமோ?'' என்று சிரித்தார் பிரம்ம மாராயர்.

''ஆமாம், பிரம்ம மாராயரே! தாங்கள் போய்ச் சேர்ந்தில் ஏதோ பலனையல்லவா அடைகிறார்களாம். அதனால் அவர்கள் வாளால் தாக்கப்பட்டவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடுமாம்! யானைகளுக்கு மதம் பிடித்தாலும் சேனை'' என்றான் கரிகாலன்.

இதற்குப் பின் நினைவைவிட நினைப்பதே பயங்கரமாயிருந்தது பிரம்ம மாராயருக்கு. ''மதம் பிடித்த நமது யானைகள் நமது படைகளை நோக்கி ஓடிவந்தால்...'' என்று இழுத்தே பேசினார்.

''பெரும் குழப்பம்! நமது படைகள் நாசப்பட்டு விடும்'' என்று விளக்கினான் கரிகாலன்.

''வேறு இதற்கு வழிதான் என்ன கரிகாலா?'' என்று வினவினான் அரையன் ராஜராஜன்.

''முற்றுகைதான் வழி தந்தையே! ஆகாரமெதுவும் கோட்டைக்குள் போகவிடாமல் செய்வோம்! பிறகு எதிர்க் கோட்டைக் கதவுகளைத் திறந்துகொண்டு சண்டைக்கு வந்தாலும், நமது குதிரைப்படை கண்ணிமைக்கும் நேரத்

தில் எதிரிகளைத் தாக்க முடியும். அப்படிச் சண்டைக்கு வரவில்லையானால், எதிரி சரணடைய நேரிடும். பிறகு தொல்லையே இல்லை'' என்று கரிகாலன் யோசனை சொன்னான்.

அவன் யோசனைப்படி முற்றுகைக்கு உத்தரவிட்டார் அரையன் ராஜராஜன். தன் படைகளைக் கோட்டையைச் சுற்றிலும் நிறுத்தினான். கரிகாலன் யோசனைப்படி யானைப்படை பின்னுக்குக் கொண்டுபோகப்பட்டது. குதிரைப் படை முன்னணியில் நின்றது. கோட்டையை முற்றிலும் சோழர்களின் பிரும்மாண்டமான படை சூழ்ந்துகொண்டது. ஆனால் ஒரே ஒரு இடத்தை மட்டும் படைகள் சூழ முடியவில்லை. அதுதான் இந்திரா நதியை அடுத்துக் கோட்டையின் மேற்கு பக்கத்திலிருந்த வாயிற்கதவில் அமைந்திருந்த சாது. அந்த இடத்தில் முத்துத்தேவன் சமார் முப்பது வீரர்களுடன் காவலுக்கு நிறுத்தப்பட்டான். ''அந்தச் சாது இந்த நதியின்? எதிர்க்க அதனால் பயனில்லை'' என்று அரையன் ராஜராஜன் மட்டுமல்ல, கரிகாலன் கூட நினைத்தான்.

ஆனால், எதை மனத்தில் அலட்சியப்படுத்துகிறாமோ அதுவே பெரும் எமனாய் வந்து சேருகிறது. அவனுக்குப் பலசமயங்களில். அந்தச் சாது எதிர்க்க அத்தனை தூரம் உபயோகமாயிருக்கும் என்று கரிகாலன் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லை. கலிங்க முதன் முதலாக முனைக்கும் சிறு அரசச் செடியை எப்படி அலட்சியம் செய்கிறோமோ, அப்படியே கரிகாலன் அந்தச் சிறு காட்டையும் அலட்சியம் செய்தான். அதன் விளைவு?

மாதம் இரண்டாகியும் சக்கரக் கோட்டம் பணியாததைக் கண்ட கரிகாலன், ஒரு நாளிரவு சந்திர வெளிச்சத்தில் முத்துத்தேவனுடன் சம்பாஷித்துக்கொண்டே அந்தக் காட்டின் முகப்பில் இந்திராவதி நதிக்கரையோரமாக நடந்து கொண்டிருக்கையில், சட்டென்று குனித்

எதையோ கையிலெடுத்தான். அந்தப் பொருளைப் பார்க்கப் பார்க்க அவன் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. மீண்டும் தரையைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே சிறிது தூரம் நடந்த கரிகாலன் வழிநெடுக உணவுப் பொருள்கள் இறைந்திருக்கக் கண்டு, ''இதைப் பார்த்தாயா முத்து?'' என்று கையிலிருந்த பதக்கத்தை முத்துத்தேவனிடம் கொடுத்ததன்றி, சிந்திக் கிடந்த உணவுப் பொருள்களையும் சுட்டிக் காட்டினான்.

முத்துத்தேவன் எல்லையற்ற ஆச்சரியத்தால் அந்தப் பதக்கத்தையும் கரிகாலனையும் மாறி மாறி நோக்கி விட்டு, ''இதில் ஒட்டர நாட்டு ராஜமுத்திரை இருக்கிறதே!'' என்றான்.

''இப்பொழுது புரிந்துவிட்டது எனக்கு. இந்த முற்றுகை நீடிக்கும் காரணம்'' என்றான் கரிகாலன்.

''என்ன புரிந்து விட்டது?'' என்று வினவினான் முத்துத்தேவன்.

விஷயத்தை மெள்ள விளக்கினானே கரிகாலன். அவன் விளக்க விளக்க மிதமிஞ்சிய கலவரத்துக்கு உள்ளான முத்துத்தேவன், ''இதை உடனே படைத்தலைவரிடம் சொல்ல வேண்டாமா?'' என்றான்.

''வேண்டாம் முத்து.''

''பின் நாம் செய்ய வேண்டியது?''

செய்ய வேண்டியதை எடுத்துச் சொன்னான் கரிகாலன். அவன் யோசனையைக் கேட்ட முத்துத்தேவன், ''இது ராஜராஜனுக்குத் தெரிந்தால் இருவர் தலையையும் வாங்கி விடுவான்'' என்று கூவினான்.

முத்துத்தேவனின் எச்சரிக்கைக்குச் சிறிதும் செவி கொடுக்காத கரிகாலன், ''நீ போய் இருபது வீரர்களை அழைத்து வா, முத்து'' என்று உத்தரவிட்டுவிட்டு, மீண்டும் தரையை ஊன்றிக் கவனித்துக்கொண்டே கோட்டையை நோக்கி நடக்கலானான். அதற்கு மேல் எதும் பேச முடியாத முத்துத்தேவன், கரிகாலன் உத்தரவுப் படியே இருபது வீரர்களை அழைத்து வந்தான். அந்த இருபது வீரர்களையும் அந்தக் காட்டின் பக்கவாட்டுகளில் ஒளித்துகொள்ளச் செய்தான். கரிகாலனும் ஒரு மரத்தடியில் மறைந்து நின்று காட்டிலுட்புறத்தைக் கவனித்துக் கொண்டு நின்றான். இரவு ஏறியது; நடுநிசியும் தாண்டி விட்டது. காத்திருந்த வீரர்கள் பொறுமை இழக்கத் தொடங்கினார்கள். முத்துத்தேவன் கூட பொறுமை இழந்து, ''தலைவரே! இன்னும் எத்தனை நேரம் இப்படிக் காத்திருக்க வேண்டும்? யாருக்காகக் காத்திருக்கிறோம்?'' என்று கேட்டான்.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ மெள்ள மெள்ள காலடிகள் கேட்டன. காட்டுக்குள்ளேயிருந்து சிறு பறவை மொன்றும் மெல்ல நகர்ந்து வந்தது.

52. போலாது என் உயிர்

இரவின் மூன்றாவது ஜாமத்தின் ஆரம்பத்திலே பிறைச்சந்திரனும் மறைந்துவிட்டதால் ஏற்பட்ட பயங்கர இருளிலே, அந்தத் தீப்பந்தம் மட்டும் ஏதோ மந்திரத்தால் உந்தப்பட்ட பெரிய கொள்ளிவாய்ப் பிசாசைப் போல மெள்ள மெள்ள நகர்ந்து, காட்டின் முகப்பை நோக்கி வந்து கொண்டிருந்தது. அந்தப் பந்தத்துக்குப் பயந்து தானோ அல்லது சற்று முன்பாகக் கரிகாலன் கண் வீரர்களுக்கு இட்ட ஆணையைக் கேட்டு அஞ்சியோ தெரியாது, இரவில் சப்திக்கும் ஆந்தைகளும் மரப்பல்லிகளும் கூடத் தங்கள் குரல்களைக் காட்டாமல் ஒதுங்கிக் கிடந்ததால், எங்கும் நிலையைத் தரக்கூடிய போலாத நிலவிக் கிடந்தது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு மெல்ல மெல்ல இளம்பிய காலடிச் சப்தத்தை, காட்டை அணைத்து ஒடிய இந்திரலதிப் பிரவாகத்தின் சலசலப்புச் சத்தம் அழுத்திவிடவே, காட்டுக்குச் சற்றுத் தொலைவிலேயிருந்த படைகளுக்கு மரங்களுக்கிடையே பூரண அமைதி நிலவியிருந்ததாகத் தோன்றியது. ஆகவே, காலதாமதமாக இரவில் நடமாடிய போர் வீரர்களைக்கூட அந்தப் பிராந்தியத்தில் தலைகாட்டாமல் எட்டவே போய்க் கொண்டிருந்தார்கள்.

ஆராய்ச்சித் திறனை அளவற்றுப் பெற்றிருந்த கரிகாலன் இந்த நிலையை எல்லாம் நீர் தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு ஏற்கனவே வந்திருந்ததால், மற்ற வீரர்களின் தலையீடு இருக்குமென்ற பயம் சிறிதும் இல்லாமலே தன் திட்டத்தை வகுத்திருந்தான். உணவுப் பொருள்களைக் காட்டின் முகப்பில் பார்த்த விநாடியிலேயே, கோட்டையிலுள்ள படைகளுக்கு அவ்வப்பொழுது தானியம் அனுப்பப்படுகிறதென்பதையும் அதற்காகவே முற்றுகையைப் பற்றிக் கோட்டை

பிலுள்ளவர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள் என்பதையும் நிர்மானித்துக் கொண்ட கரிகாலன், சோழர்களுடைய பெரும் படைகளுக்கிடையே உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதென் சாமானிய மனிதனாக இருக்க மாட்டான் என்பதையும் நிச்சயம் செய்து கொண்டான். கோட்டையின் அமைப்பையும் காட்டின் இருப்பிடத்தையும் கண்டதும், அதன் மூலமாக உணவுப் பொருள்களைக் கொண்டு வருவது எத்தனை கலபம், முற்றுகையிட்டுள்ள படைகளின் கண்களில் மண்ணைத் தூவுவது எத்தனை எளிது என்பதையும் கண்டு கொண்டான் கரிகாலன். காட்டை அடுத்து ஓடும் இந்திரலதியின் பிரவாகச் சத்தம் காட்டில் ஏற்படும் மனிதர்களின் நடமாட்ட சத்தத்தையும் அடக்கிவிடும் என்பதையும், பந்தங்கள் ஏதாவது அங்கு உலாவினாலும் எட்ட இருக்கும் படைகளுக்கு ஏதோ காலல் வீரர்களின் நடமாட்டம் அங்கு ஏற்பட்டிருப்பதாகப் புலப்படுமே யொழிய வேறு சந்தேகம் ஏற்படக் காரணமில்லையென்பதையும் கரிகாலன் நன்றாகப் புரிந்து கொண்டான். படைகளின் இந்த அசரத்தைக்கு இடையே புகக்கூடிய எதிரி பெரும் சமர்த்தியமுள்ளவனாகத்தான் இருக்க முடியுமென்பதையும் பெனத்த மடையச் சின்ன திட்டமாகத் தெரிந்து கொண்டிருந்ததால், அத்தகைய பேர்வழியை ரகசியமாக வளைத்து மர்மத்தை அறிவதால் பெரும் பலனுண்டு என்ற முடிவுக்கு வந்து, அவனை ராஜராஜனுக்கோ, இதர படைத்தலைவர்களுக்கோ தெரியாமலேயே காரியத்தை முடிக்க முனைந்தான்.

அவன் வீரர்களுக்கு இட்ட உத்தரவு திட்டமாயிருந்தது. ''நடுவே தெரியும் ஏற்றையடிப் பாதைக்குப் பக்கத்திலுள்ள மரங்களின் கிளைகளில் மரத்தோடு மரமாகத் தட்டிப் படுத்திருங்கள். நான் குரல் கொடுத்தால் வருகிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை நோக்கி வேல்களை எறிய ஆயத்தமாக இருங்கள்'' என்று உத்தரவிட்டு

கரிகாலன். அவர்கள் பதுங்கிய பின்பு தானும் ஒரு மரத் தடிக்குப் பின்பாக மறைந்து நின்று கொண்டான். காட்டின் முகப்பை நோக்கி ஊர்ந்து வந்த பந்தத்தை அந்த நிலையிலிருந்து அவன் நன்றாகக் கவனிக்க முடிந்தது. மிகுந்த எச்சரிக்கையுடன் மெள்ள மெள்ள வந்து கொண்டிருந்தவர்களின் காலடிச் சத்தத்திலிருந்து, அவர்கள் மொத்தம் நாலைந்து பேருக்கு மேல் இருக்க முடியாதென்ற முடிவுக்கு வந்தான். கரிகாலன் அப்படி நாலைந்து பேரே வருவதானால் அவர்கள் முன்னால் வந்து நிலைமையை ஆராய்பவர்களாகத்தான் இருக்கவேண்டு மென்றும், அவர்களுக்குப் பின்னால் உணவுப் பொருள்களைச் சுமந்து வருபவர்கள் வேறு இருக்க வேண்டுமென்றும் கரிகாலன் தீர்மானித்தான். வருவது வேலுப் படையாக விருந்தால், அதைச் சிறிது சத்தம் செய்யவிட்டாலும் பின்னாலிருப்பவர்கள் எச்சரிக்கையடைந்து ஓடி விடுவார்களென்பதை உணர்ந்த கரிகாலன், அத்தகைய நிலைமைக்கு இடம் கொடுக்காமலிருக்கத் தனது வில்லில் அம்பைப் பொருத்தி நாணை நன்றாக இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

பந்தம் மெள்ள மெள்ள நகர்ந்து கரிகாலன் மறைந்திருந்த மரத்தடிக்கருகில் வந்ததும் சற்று நின்றது. பந்தத்தை ஏந்தி வந்தவன் முகத்தை நன்றாக மூடி முக்காடிட்டிருந்ததால் பந்தத்தின் பிரகாசத்திலும் அவன் முகத்தைப் பார்க்கக் கரிகாலனுக்கு வாய்ப்பில்லாமல் போனாலும், அவன் நின்ற தோரணையும், தலையை ஒரு முறை ஆட்டி எதிரேயிருந்த கோட்டையை நோக்கிய மாதிரியும், அவனை எங்கோ பார்த்திருக்கும் உணர்ச்சியை ஊட்டின. இருந்தாலும் அதைப்பற்றி அதிகமாக அக்கறை செலுத்தாத கரிகாலன், வந்திருந்தவனின் நடவடிக்கைகளை மட்டும் மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு தன் மறைவிடத்திலேயே நின்றான். பந்தத்தை ஏந்தி வந்தவனும், சிறிது நேரம் கோட்டையையும் தூரத்தே இருந்த

சோழர்கள் படையையும் ஒரு விநாடி நோக்கிவிட்டுப் பின்னால் இருந்தவர்களுக்கு, 'அபாயமில்லை வரலாம்' என்பதற்கறிகுறியாகக் கையால் சைகை செய்யச் சற்றுத் தூரத்தே காட்டுக்குள் நின்றிருந்த மற்ற நால்வரும் அணிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

"பொதிகளை இக்கரைக்கு கொண்டு வரலாமா?" என்று கேட்டான் ஒருவன்.

"சற்றுப் பொறு. அதோ வரும் காலல் வீரர்கள் இந்தப் பகுதியைக் கடந்து செல்லட்டும்" என்றான் பந்தத்தைக் கொண்டு வந்தவன்.

"ஏன்? அந்தக் காவற்படை போனால், இன்னொன்று வராதா?" என்று வினவினான் மூன்றாமவன்.

"மூட்டாள்! அதோ பார், சோழர் பெரும் படையை. அதைச் சுற்றிக் காலல் புரிவது அவ்வளவு எளிதா? இந்த நான்கு வீரர்கள் அதில் கால்பாகத்தைச் சுற்றுவதற்குக் குறைந்தபட்சம் கால் ஜாமமாவது ஆகும். இன்னொரு காலல் கோஷ்டி இப்பொழுது வராது. சோழர் படைக் காலல் முறைகளை நான் நன்றாக அறிவேன் கலங்காதே!" என்றான் பந்தத்தைப் பிடித்திருந்தவன்.

அவன் மெள்னத்தான் பேசினான்; ஆனால் குரல் மிகப் பரிச்சயமானதாயிருந்தது கரிகாலனுக்கு. பந்தத்தை ஏந்தி வந்தவன் குறிப்பிட்ட நான்கு காவல் வீரர்களும் தான்டும் வரையில்தான் கரிகாலனும் பொறுத்திருந்தான். அந்த வீரர்கள் தூரத்திலிருந்த மூலையைத் திரும்பியதும், காட்டுக்குள் திரும்ப முற்பட்டு பந்தமேந்தி திடீரென அசைவற்று நின்று, எதையோ உற்றுக் கேட்டான். பிறகு, "இங்கே யாரோ அசைந்தார்கள், யாரது?" என்று மிகு புடன் கேள்வியும் கேட்டான்.

அந்தக் கேள்வியைத் தொடர்ந்து மெள்ள ஒரு நகைப் பொலியும் கேட்கவே, பந்தத்தைப் பிடித்திருந்தவனின் பயம் பன்மடங்கு அதிகமாகப் பெருகி, "யாரது? யார்

மிப்பது?'' என்று சற்றே நடுக்கம் கொடுத்த ரோ விசாரித்தான்.

''நான்தான்!'' இருளைக் கிழித்துக்கொண்டு தீர மாக, ஆனால் மிகத் திட்டமாக எழுந்தது கரிகாலன் குர மரத்தடியில் யாரோ ஒளிந்திருக்கிறார்களென்பது நிட மாகத் தெரிந்ததும், அந்த ஐவர் கூட்டம் திகிலோடு பார்த்தது. ஆனால், கரிகாலனின் அடுத்த சொற்க அவர்களை ஸ்தம்பிக்கச் செய்தன. ''பத்தபேத்தியனே ஒரு அடி நகர்ந்தாலும் பிணமாகி விடுவாய். என வி ருக்கும் வாளி உன் இதயத்துக்காகக் குறி வைக்கப்ப டுகின்றது. சுற்றிலும் மரங்களில் என் வீரர்கள் நி றார்கள். உன் சகாக்கள் மீது அவர்கள் வேல்கள் கு பார்த்து நிற்கின்றன. உயிர்மீது ஆசையிருந்தா யாரும் நகரவேண்டாம். பத்தத்தைக் கீழே எறிந்த இருளில் ஒடி விடலாம் என்றும் மனப்பால் குடிக்காதே பத்தம் அனையுமுன்பே என் வாளியும் என் வீரர்களி வேல்களும் உங்கள் இதயங்களில் பாய்ந்து விடும்'' என்று சொல்லிக் கொண்டே, மறைவிடத்திலிருந்து தானே ட்டிய வாளியுடன் வெளியே வந்தான் கரிகாலன். அடுத்த விநாடி மரத்திலிருந்த இருபது வீரர்களும் அந்த கூட்டத்தை வேல்களுடன் சூழ்ந்து கொண்டார்கள்.

கரிகாலன் உத்தரவுப்படி அடுத்த விநாடியில் பத்த மேந்தியின் கரத்திலிருந்த பத்தம் அகற்றப்பட்டது. தன் வீரனொருவன் பத்தத்தை உயர்த்திப் பிடிக்க, பத்த மேந்தியின் முகத்தினையை விலக்கிய கரிகாலன் ஒருகணம் அப்படியே ஸ்தம்பித்துப் போனான். ''யார், நீயா?' என்று ஆச்சரியத்தால் இரண்டு சொற்களையும் உதிர்த் தான். அவன் எதிரே வைபத் துறையார் நின்று கொண் டிருந்தார். சேரநாட்டு ஒற்றனான ஜெயவர்மன், மீண்டும் பழைய வேடத்தையே புனைந்திருந்தான். முதன் முதலில் கும்பகோணம் காவிரிக் கரையருகிலே கண்ட அதே கோலம். முகத்தை அலங்கரித்த பொய்த் தாடி மீசை

தெற்றியிலே பெருமளவு நிருநீறு! கையிலே அதே காவிப்பை! உடலிலே காவி உடை. துறவியாரின் அந்தக் கோலம் ஒரு விநாடி பழைய நினைவுகளை, முக்கியமாக குடமுக்கில் கல்லிக் காவிரியாளின் கரையோரக் காட்சி களைக் கரிகாலன் கருத்திலே கிளப்பிவிட்டன. படித்துறை களில் குளித்துக் கொண்டிருந்த பெண்களின் இன்பக் காட்சி, காவிரிப் பிரவாகத்திலே மிதந்து வந்த மலர்களின் சுந்தரத் தோற்றம் எல்லாம் அவன் கண் முன்பே எழுந்தன.

அந்தக் கணமே ஒரு விநாடி நினைத்த கரிகாலன், சரே லென்று அந்த உணர்ச்சிகளை உதறிவிட்டு வைபத் துறையா ரை நோக்கி, ''ஸ்வாமி! மீண்டும் பழைய ஆசிரமத் துக்குப் போய்விட்டீர்கள் போலிருக்கிறது. சரி அடியேன் பாசறைக்கு விஜயம் செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு ''முத்து! இவர்களை என் பாசறைக்குக் கொண்டு வா'' என்றவன் ஏதோ யோசித்துவிட்டு ''வேண்டாம்! உன் இருப்பிடம் அருகில் தானே இருக்கிறது. அங்கேயே செல்வோம்'' என்று உத்தரவிட்டு முன்னால் நடந்தான்.

காட்டுக்குச் சற்று தூரத்திலிருந்த முத்துத்தேவன் கூடாரத்தில், வைபத் துறையாரும் கரிகாலனும் நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். துறையார் ஏதோ பேச வாயெடுத்து, ''அன்று வேங்கியில் உன்னிஷ்டப்படியே நடந்தேன்...'' என்று இழுத்தார்.

''என்னிஷ்டப்படி நடக்க வேண்டிய அவசியம் தங்களுக்கு அடிக்கடி ஏற்படுகிறது. அதற்கு நான் என்ன செய்யட்டும் ஸ்வாமி?'' என்று சொல்லிச் சிரித்த கரிகாலன், ''துறையாரே, இரவு ஏறிக் கொண்டிருக்கிறது. பேச நேரம் அதிகமில்லை. உணவுப் பொருளோ கோட்டைக்குள் போய்ச் சேர வேண்டும்'' என்று பேச்சைச் சற்று நிறுத்தினான்.

''உளவுப் பொருளா? என்ன உளவுப் பொருள்?'' என்றார் துறவியார் ஏதுமறியாதவர் போல்.

''ஸ்வாமி தாங்கள் காட்டுக்குள் ஓடிக்கொண்டு வந்து தலம் செல்வதற்காக அல்லவென்பதை நான் அறிவேன். ஆகவே, காமதம் செய்யாமல் சொல்லுங்கள். ஜீந்திரக் கோட்டைக்குள் எப்படிச் சேர்ப்பது?''

''எனக்கெப்படித் தெரியும்?''

''தெரியாமலா உளவுப் பொதிகளைக் கொண்டு வந்தீர்?''

''உளவுப் பொதிகளா? எங்கிருந்து?''

''ஓட்டோ காட்டிலிருந்து, இந்திரதத்தன் உதவியால்'' விளக்க இயலாத ஆச்சரிய ரேகை துறவியாரின் முகத்தில் படர்ந்தது. ''அதுவும் தெரியுமா உனக்கு?'' என்று வினவினார்.

''இதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? மாலை தேசத்தை ஆக்கிரமிப்பது ஓட்டோ நாடு. அதன் மன்னன் இந்திரதத்தன் சோழர் படைகளின் தாக்குதலிலிருந்து தப்ப எதையும் செய்வான். எல்லைக் கோட்டம் எத்தனை நாள் சோழர் படைகளை இந்திராவதி நதி தீரத்தில் தடுத்து நிறுத்துமோ, அத்தனை நாளும் அவனுக்கு வசதிதானே! அதெல்லாம் புரிந்து துறவியாரே! ஆனால் நீர் எதற்காக இந்த ஆபத்தான வேலையில் புகுந்து என்பதுதான் புரியவில்லை'' என்றான் கரிகாலன்.

''என் கடமையை முடித்துவிட்டு'' என்றார் துறவியார்.

''என்ன கடமை?''

''உன்னை எப்படியாவது முடிக்கும் கடமை.''

''என்மீது உமக்கேன் அத்தனை துவேஷம்?''

''செங்கதிர் மாலையை நீ என்னிடமிருந்து பறித்ததுதான் காரணம் கரிகாலா! அதை எப்படியாவது சொல்

லுதாக சோமனிடம் சபதம் செய்திருக்கிறேன். அதை நீ என்னிடம் ஒப்படைக்கும் வரை, நீ எங்கு சென்றாலும் உன்னைத் தொடருவேன். உன் படைகளை முறியடித்து நீ நாசர்கள் கையில் சிக்கும் பட்சத்தில், உன்னைச் சித்திரவதை செய்து மாலையை மீட்கத் திட்டமிட்டேன்'' என்றார் துறவியார்.

கரிகாலன் துறவியாரைச் சிறிது நேரம் உற்று நோக்கினான். பிறகு கேட்டான். ''ஜெயவர்மா! எப்படியும் அந்த மாலையை உன்னிடம் திருப்பித் தருவதாகச் சொன்னேனே, என்னிடம் நம்பிக்கையில்லையா உனக்கு?''

''உன்னை எப்படி நம்புவது? உன்னை நம்பிய வேங்கி நாட்டு மன்னன் மகளையே ஏமாற்றி, அவள் தம்பியின் நாட்டை வாங்கி எதிரியிடம் அளித்துவிட்டாயே!''

கரிகாலன் சற்று நேரம் ஏதோ சிந்தித்துவிட்டு ''சரி ஜெயவர்மா! அந்தப் பழங்கதை எதற்கு? இந்த உளவுப் பொருள்களை எப்படிக் கோட்டைக்குள் கொண்டு போகிறாய்? அதைச் சொல்'' என்றான்.

''சொல்லி விட்டால்'' என்று ஜெயவர்மன் வினவினான்.

''காட்டில் மரங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றுக்குப் பலமான கிளைகளும் உண்டு.''

''இருந்தாலென்ன?''

''நீங்கள் ஏறும் அதில் தொங்கவிடுவீர்கள்.''

''உயிரைத்தானே கொண்டு போவாய்? கொண்டு போ, முற்றுகையை எப்படி உடைப்பாய்?''

''உங்கள் ஐந்துபேர் சடலங்களைக் கோட்டை மதில் சுவருக்கு அருகே எறிய ஏற்பாடுகள் செய்வேன். கோட்டைப் பொத்துகளிலிருந்து கீழே பார்க்கும் வீரர்கள், உங்கள் சடலங்களை அடையாளம் கண்டு கொள்வார்கள். இனி உளவுப்பொருள்கள் வரத்தொடங்

னைத் கோட்டைத் தளபதி உணர்வான். அது உரத்தை உடைக்கும். சில நாட்களில் கோட்டைப் மக்களின் கறுவும் குலையும். அந்த நேரத்தில் கள் படை கோட்டையைத் தாக்கும்'' என்று திட்டத்தை விளரித்தான் கரிகாலன்.

''உனைவும் பொருள்கள் உள்ளே செல்லும் முன் நான் சொல்லிவிட்டால்?'' என்று மீண்டும் வினவினாள் தெய்வமன்.

''முதலில் உங்கள் தலைவர் உயிரும் கப்பும்; கோட்டை துள்ள மக்களும் தப்புவார்கள்'' என்று கூறினான் கரிகாலன்.

''எப்படி?''

கரிகாலன் தன் மாற்றுத் திட்டத்தையும் விளக்கினான். அதைக் கேட்ட தெய்வமன் சொல்லவொண்ணா ஆச்சரியத்தில் மூழ்கி, ''கரிகாலா! புத்தியற்றவனே! இப்படிக் கூடிய காரியமா? உனக்கு வாழ்க்கை அற்றதாகச் சந்து விட்டதா?'' என்று கூவினாள்.

''உயிர் நிலையற்றது தெய்வமே! ஆனால் புகழ் சாசுவதமானது. என்னை விரும்புபவள் இன்னொரு மீது அதிகம் பற்றுதல் வைக்கக்கூடாது'' என்றான் கரிகாலன்.

அவன் துணிவைக் கண்டு வியந்த தெய்வம் மென்மையான உணவுப் பொருள்கள் கோட்டைக்குள் செல்லும் முறையை விளக்கினாள். அடுத்த கால் நாழி நேரத்திற்குள் கரிகாலன் ஏற்பாடுகளை மிகத் துரிதமாகச் செய்தான். தெய்வமனையும் அவள் சகாக்களையும் காவல் வைத்தான். செங்கமலச் செல்வியிடம் சொல்லியனுப்பி அவளை வரவழைத்து ரகசியமாகச் செய்திகளை அனுப்பி சொன்னான்.

அவன் சொன்ன செய்திகளை—நிலத்தின் வாய்த்த தானாகத் தலையிட்டு தீர்மானித்த அவன் உறுதிகள்

கண்டு செல்வி நடுங்கினாள். தன் அழகிய கரங்களை தன் தோள் மீது வைத்து, ''இது ரொம்ப அபாய மானித்தே!'' என்று துக்கத்தால் தழுதழுத்த குரலில் கூறினாள்.

''செல்வி! அபாயம் எங்கில்லை? மனிதனைக் குலையத்தில் சூழ்ந்திருப்பது பூதமும் அபாயம்தானே? யப்படாதே. நாளைக்கு மறுநாள் இரவு இதே நேரத்தில் சக்கரக் கோட்டத்தின் கதவுகள் திறக்கும். என்னை நம்பு!'' என்று கூறிவிட்டு, அவள் அழகிய கன்னத்தையும் ஆதரவாக வருடிக்கொடுத்தான்.

அந்த ஸ்பரிசத்தினால் ஏற்பட்ட உணர்ச்சியால் அவள் சற்றே அசைவற்று நின்றாள். சிலையென அவள் நின்ற தன்மையையோ, உணர்ச்சியால் அவள் உள்ளத்தே ஏற்பட்ட கொந்தளிப்பையோ கவனிக்காமலே, அவன் வெளியே சென்றான்.

செல்வியும் அந்தக் கூடாரத்தின் வாயிலை வந்து நின்றாள். சிறு நேரத்திற்கெல்லாம் காட்டின் முகப்பி லிருந்து ஒரு பந்தம் இருமுறை ஆடியது! கோட்டையின் மேற்கு வாசலிலிருந்து மற்றொரு பந்தம் பதிலுக்கு இரு முறை ஆடியது. சில விநாடிகளில் காட்டு முகப்பிலிருந்த பந்தம் அணைந்தது. நிழல்கள் போல் இருபது முப்பது பேர் கோட்டையை நோக்கி மெல்லச் சென்று கொண் டிருந்தனர். கரிகாலன் தன் மரணத்தையே நாடிச் செல் கிறான் என்று நன்றாகப் புரிந்துவிட்டதால், எங்கும் கனத்த பெருமூச்சொன்று சென்பக மொட்டையும் பழிக்கும் செங்கமலச் செல்வியின் நாசியிலிருந்து வெளி வந்தது. அவள் கமலக் கண்களில் நீர்த் துளிகள் நிரண்டெழுந்து அவள் கன்னங்களில் உருண்டோடின.

''போலது அவரில்லை, என் உயிரே போகின்றது அங்கே!'' என்று அவள் தெம்பித் தெம்பி அழுதுகொண்டே வார்த்தைகளை உதிர்த்தாள். அவள் இதயம் சுக்குநூறாக வெடித்துக் கொண்டிருந்தது.

53. பிரும்ம மாரணயஜ்ஞ கேள்வி

விக்ரமச் சோழியனரையனை அரையன் ராஜேந்திர பட்டத்தானத்தின் மேற்குக் கோபுரவாசலில் தேவன் கூடாரத்தின் முகப்பிலே, சக்ரவர்த்தி கொண்டருத்த இதயத்துடன், கலர்க்கத்திலிருந்து உதிர்த்துவிட்ட அப்ஸரஸ் மங்கையைப் போல இளமை யற்ற எழிலுடன் பொழுது போவது தெரியாமலே நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தாள் செங்கமலச் செல்வி. தன் நெஞ்சிலே நிலையாக நின்று விட்ட கரிகாலன் வேண்டுமென்றே மரணத்தை நாடிச் செல்கிறானே என்ற எண்ணம் அவள் உணர்ச்சிகளை உருக்கி உருக்கி கண்ணீராக வடித்துக் கொண்டிருந்ததால் தாரகை ஆகாசத்து கூடார முகப்புகளில் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தங்களுடன், நீர்த் திவலைபோட்ட அவள் கண்களுக்கு மங்கலாகவே தெரிந்தன. சற்று நேரத்திற்கெல்லாம் சென்ற காலப்படை வீரர்களின் உருவங்கள்கூட அவள் கண்களில் நின்று நின்று கண்ணீர் காரணமாக அதாலசியமாக அகலப்பட்டும் நீண்டும் பல விசித்திரங்களைப் போலத் தோற்றமளித்தன. எற்றே பல கோபுரங்களுடன் எழுந்து நின்ற சக்கரக் கோட்டையும், அவள் விழிகளின் நீரிலே அலைந்து அலைந்து கலைந்தே உருக்குலைந்து தெரிந்தது; பிரபஞ்சமே மங்கி அலைந்து உருக்குலைந்து விட்டதாகவே தோன்றியது செங்கமலச் செல்விக்கு அந்தச் சந்தர்ப்பத்திலே.

கடைசியாக, அவன் தன்னிடம் விடை பெற்றுச் சென்ற தோரணையை நினைத்ததும், அவள் கண்ணீர் வடித்தாள். அவன் ஆணையிட்ட சமயத்தில் திடாரென்று கேட்ட குரல், அவள் சென்று வெகு நேரமாகியும் அவள் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டிருந்தது. தன் தோள் மீது அவன் கையை வைத்

போதும், கன்னத்தை ஆசையுடன் வருடிய போதும் தன் உடலில் அதிக லேசத்தில் பாய்ந்து சென்ற இன்ப அலை களை நினைத்து அப்பொழுதும் ஏங்கிக் கொண்டிருந்தாள் அவள். அந்த ஸ்பரிச வேதனையை நினைத்தால், அவள் உள்ளத்திலே சொல்லவொண்ணா வெட்கமும் எற்பட்டு, துக்கமும் இன்பமும் கலந்து அழகிய கனவை யொன்று முகத்திலே படர்த்தது. அந்த ஸ்பரிசம் அவனைப் பழைய நினைவுகள் பலவற்றுக்கும் இழுத்துச் செல்லவே ஏதேதோ உணர்ச்சிகளுக்கு இலக்காகிய செங்கமலச் செல்வி, பதுமை போல முத்துத்தேவன் கூடாரத்தின் முகப்பிலேயே நின்றாள். காட்டில் கரிகாலனுக்குப் பின் புறத்தில் இணைந்து நின்று, அவனுக்குத் தான் விஷத்தைக் கற்பித்தது, வெண்ணிலாவில் நீராடைக்குகை வேட்கத்தையெல்லாம் விட்டு, தான் அவனைத் தழுவி நின்றது ஆகியவற்றை நினைக்க நினைக்க அவள் உலகத்தின் ஸ்மரணையை அடியோடு மறந்தாள். தன்னையும் கரிகாலனையும் தவிர வேறு சிருஷ்டியே உலகத்தில் இடையாது என்ற பிரமையிலேயே இணைந்தாள். குறுக்கே எழுந்தது நிருஷ்ணாதேவியின் எழிலுருவம்.

அன்னத்தைப் பழிக்கும் நடையுடன் நிருஷ்ணாதேவி அவள் கலாலயத்தில் குறுக்கே நடந்து வந்தாள். சதா சாந்தத்தைப் பொழியும் அவள் அழகு விழிகள் செங்கமலச் செல்வியை நோக்கி நகைத்தன. கருத்தின் சொப்பனத்திலே எழுந்த அந்த கலை மங்கையை, 'அடபாவி! உனக்காகத்தானே அவர் உயிரைத் துறக்கக் கோட்டைக்குள் செல்கிறார்!' என்று செங்கமலச் செல்வி மனமாரச் சபிக்கவும் செய்தாள். 'இந்த ஸ்திரீயை மட்டும் அவர் சந்திக்காதிருந்தால் நிச்சயம் அவர் எனனைக் காதலிப்பார். அப்படிக் காதலித்திருந்தால், இத்தனை பெரிய நியோகத்தை அவர் செய்ய வேண்டியிருக்காது. அவர் உடலில் ஓர் மயிர் பாய்வதைக் கூட நான் அனுமதிக்க மாட்டேனே! என் உயிரையே கொடுப்பேனே!' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

நிரஞ்சனாதேவியைக் கரிகாலன் காதலிக்கிறானென்ற உண்மை செங்கமலச் செல்விக்கு. நிரஞ்சனாதேவியின் போக்கு மட்டும் புதிராயிருந்தது. எந்த மந்திராலோசனையிலும் கலந்து கொள்ளாமல் தனியே இளவரசி கரிகாலனின் யோசனைகளை எதிர்த்துப் பேசி வந்திருப்பதையும் சதா அவனிடம் வெறுப்பைக் காட்டி வந்திருப்பதையும் கண்ட செல்வி, 'இவள் அவனை ஏன் வெறுக்கிறாள்? உண்மையாகவே வெறுக்கிறாளா? வேண்டியவனிடம் போலி வெறுப்பைக் காட்டும் பெண்ணின் தந்திரம் அது?' என்று பல கேள்விகளைக் கேட்டு, அவை எதற்கும் விடை காணாது தவித்தாள். இருந்த போதிலும் ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிந்தது அரசன் ராஜராஜன் மகளுக்கு, கரிகாலன் நிரஞ்சனாதேவியைக் காதலிக்கிறானென்றும், அதுவே காதலே அவள் ஏதோ திட்டங்களை வகுத்துக்கொண்டு, பெரிய பெரிய ஆபத்துக்களில் தலையை நுழைத்துக் கொள்கிறானென்றும், செல்வி சந்தேகமற நம்பினாள். அன்று அவள் சக்கரக் கோட்டத்தின் கோட்டைக்குள் நுழைந்து நுழைவதும் கூட, மன்னன் மகளின் நன்மையைக் கருதிதான் என்று நினைத்தாள். சக்கரக் கோட்டத்துக்குள் கரிகாலன் நுழைவதற்கும் மன்னன் மகளின் அரசியல் அபிலாஷைகளுக்கும் சம்பந்தமிருந்ததோ இல்லையோ, அத்தனைய சம்பந்தத்தைத் தன் சித்தத்திலே திருப்தியுற்றுக் கொண்டாள் செங்கமலச் செல்வி, அன்று அந்தக் கூடாரத்தின் முகப்பிலே.

இப்படிப் பலப்பல எண்ணங்கள் உள்ளத்திலே சுழன்று நின்ற அந்தச் சித்தினிப் பெண், நீண்ட நேரத்துக்குப் பின் சற்றே சுய உணர்வைப் பெற்று அக்கம் பக்கத்தில் திரும்பிப் பார்த்தாள். அரையன் ராஜராஜன் மட்டும் நின்றிருந்ததால் உட்காரத் தெரியவில்லாத இரண்டு காவல் வீரர்கள் மட்டும் சற்று ஒதுங்கி, பயபக்தியுடன் நின்றிருந்தார்கள். தன் கண்களில் வடியும் நீரை அவள்

பார்த்துவிடக் கூடாதென்பதற்காக வேறுபுறம் திரும்பி, கன்னத்தைத் தலைப்பால் துடைத்துக் கொண்ட செங்கமலச் செல்வி, ''யாரங்கே! கூடாரத்தைக் காவல் புரியுங்கள். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு நடக்க முற்பட்டாள்.

''அம்மணி! தங்கள் புரவி தயாராக இருக்கிறதே'' என்று தன்னை அழைத்துக் கொண்டு அலறுகே கொண்டு நிறுத்தினான் காலாளரில் ஒருவன். அவள் புரவியில் ஏறவில்லை! சேணத்தை வாங்கிப் புரவியின் முதுகிலேயே எறிந்துவிட்டு மெள்ள நடந்து சென்றாள். அவளை அழுத்திக்கொண்டிருந்த துன்பச் சுமையை உணர்த்துவதுபோல அந்தப் புரவியும் அவளுக்குப் பின்னால் மெதுவாக நடந்தது. முத்துத்தேவன் கூடாரத்திலிருந்து அரையன் ராஜராஜன் பாசறை நீண்ட தூரமிருந்தாலும், புரவியில் ஏறாமலே சைனியங்கள் நடுவே கால் நடையாகவே சென்ற செங்கமலச் செல்வி மூன்றாம் ஜாமத்தின் முடிவில் தந்தையின் இருப்பிடத்தை அடைந்தாள்.

மூன்றாம் ஜாமம் அஸ்தமிக்கும் சமயமாயிருந்துங்கூட அரையன் ராஜராஜன் தூக்கம் சிறிதுமில்லாமல் தன் பாசறையின் வாயிலிலே சிங்தனை போட்டுக் கொண்டிருந்தான். புரவி பின்தொடர அலறை அணுகிய செங்கமலச் செல்வி துக்கம் நிரம்பிய தன் விழிகளை அலறை நோக்கி உயர்த்தி, ''இன்னும் தூங்கவில்லையா அப்பா?'' என்று வினவினாள்.

அரையன் ராஜராஜனின் சட்டி விழிகள் அலறை ஊடுருவி நோக்கின. பிறகு கேள்வியும் உள்ளமாக வெளி வந்தது. ''அலறை எங்கே?'' என்று கேட்டான் அரையன் ராஜராஜன்.

''யாரைக் கேட்கிறீர்கள்?'' என்று ஏதுமறியாதவள் போல் வினவினாள் செங்கமலச் செல்வி.

''கரிகாலனை.''

''இல்லியளை.''

''அது தெரிகிறது. கூடாரத்தில்தானே இருக்கிறான; கூப்பிட்டனுப்பு. அவனுடன் உடனே நான் பே வேண்டும்.''

செங்கமலச் செல்வியின் வருத்தம் தோய்ந்த விழிகள் மீண்டும் தந்தையின் முகத்தில் நிலைத்தன. ''நீங்கள அவரைப் பார்க்க முடியாது. அப்பா! பேசவும் முடியாது'' என்றாள் செல்வி.

''ஏன்? உபதளபதி எனக்குப் பேட்டி தரமாட்டானோ? உன்னை நள்ளிரவில் தன் கூடாரத்துக்குக் கூப்பிட்டனுப்ப அவனுக்கு என்ன துணிச்சல்?'' என்ற அரையன் ராஜராஜன் குரல், கோபத்தால் சற்று நடுங்கவும் செய்தது.

உணர்ச்சி வசப்பட்டிருந்த செங்கமலச் செல்வி இந்த களில் துக்கம் கலந்த புன்முறுவலொன்று உதயமாயிற்று. ''அவரைக் கோபித்துப் பயனில்லை, அப்பா! உங்களை காரியமாகத்தான் அவர் என்னைக் கூப்பிட்டனுப்பினார். அதுவும், அவர் கூடாரத்துக்கல்ல. முத்துத்தேவன் கூடாரத்திலிருந்தான் அவர் என்னைச் சந்திக்கச்'' என்று பேசிய செங்கமலச் செல்வி, வார்த்தைகளைச் சிரித்தே தேக்கினாள்.

மேற்கொண்டு தந்தையிடமிருந்து கேள்வி பிறக்கட்டும் என்றே அவள் தன் வார்த்தைகளுக்குத் தேக்கம் கொடுத்தாள். ஆனால், அரையன் ராஜராஜன் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. அவன் மேற்கொண்டு பேவதற்காகக் காத்துக்கொண்டு நின்றான். தந்தைக்குக் கோபம் வந்து விட்டதால், பேச்சு அடைப்பட்டு விடுமென்பதை அறிந்திருந்த செங்கமலச் செல்வி மீண்டும் பேசத் துவங்கி, ''அப்பா! நீங்கள் ஏதோ தவறாக நினைக்கிறீர்கள். அவர் அங்கு என்னை வரச் சொன்னது உங்கள் நன்மையை உத்தேசித்துத்தான்'' என்றாள்.

''என் நன்மையை உத்தேசித்து உன்னை வரச் சொன்னானா?'' இதைச் சொன்ன அரையன் ராஜராஜன் குரலில் ஏளனம் கலந்திருந்தது.

''ஆமாம் அப்பா! உங்களைக்கூட வரச்சொல்லியிருக்கலாம். ஆனால், காரியம் கெட்டிருக்கும். அவர் இட்ட ஏற்று நீங்கள் ஏதாவது வம்புக் கொண்டிருக்கமாட்டீர்கள்'' என்றாள் செல்வி.

''அந்தத் இட்டேன் என்னவென்று தான் பார்ப்போமே'' என்று செல்வியை அரையன் ராஜராஜன். பேசி யாரங்கே! கரிகாலனை நான் கூப்பிடுவதாகத் தெரிவி'' என்று சற்று எட்டி நின்று காவல் புரிந்திருந்த வரிடம் கூறினான். அவன் புறப்பட முயன்றவுடன், தலை. ''டேய் நில்'' என்று தந்தை செங்கமலச் செல்வி, தந்தையை நோக்கி, அனுப்புவதில் பயனில்லை'' என்று சற்று அழுத்தியே சொன்னாள்.

அரையன் ராஜராஜன் முகத்திலிருந்த கோபம் துறந்து, எந்தத்தரப்பு ஆசாமியும் நடந்துகொள்ளவே ''ஏன் பயனில்லை?'' என்று விசாரித்தான்.

''அவர்தான் ஆஸ்தானத்துக்கு'' என்று

''பின் எங்கிருக்கிறான்?''

''அதோ அந்தக் கோட்டைக்குள்ளே!'' என்று சக்கரக் கோட்டத்தின் கோட்டைக்காக் காட்டினாள் செங்கமலச் செல்வி.

செங்கமலச் செல்வி சித்து விளையாடி நிருந்தால்கூட, அத்தனை ஆச்சரியம் ஏற்படுத்தியிருக்க முடியாது அரையன் ராஜராஜனிடம். ஏதோ மாயமந்திரத்தால் கட்டுப்படுத்தப்பட்டவன் போல் அந்தப் புறமோ இந்தப் புறமோ அசையும் சக்தியற்று நின்றான் அரையன் ராஜராஜன். எத்தனையோ போர்களில் போக்கைப் பிரமிக்கத்தக்க வகையில் திசை திருப்பி

சோழப் பேரரசுக்கு வெற்றிகளை வாங்கித் தந்திருந்த அரையன் ராஜராஜன், எதிரியின் கோட்டைக்குள்ளே தன் உபதளபதி என்ன, தானேகூடப் பிரவேசிப்பது அசாத்தியமென்று கருதியிருந்தானாகையால், கரிகாலன் அதற்குள் சென்றிருக்கிறானென்பதைக் கேட்டும் அந்தச் செய்தியைச் சிறிதும் நம்பமுடியாதவனாய், "செல்வி! உனக்கென்ன பைத்தியமா? அந்தக் கோட்டைக் காவலர்கள் என்ன கரிகாலன் கையாட்களா, கோட்டைவாசல் திறந்து விடுவதற்கு?" என்று கேட்டான்.

"தந்தையே! இந்த நிலையில் நான் உங்களுக்கு விவரத்தைச் சொன்னால் புரிந்து கொள்வது கஷ்டம். உங்கள் படைத்தலைவர்களை வரவழையுங்கள்; கலந்து பேசுவோம்" என்றாள் செல்வி.

"நான்காம் ஜாமம் எட்டிப் பார்க்கப் போகிறதே! இப்பொழுதா படைத்தலைவர்களை அழைக்க வேண்டும்? எதற்குச் செல்வி?" என்றான் அரையன் ராஜராஜன் அப்போதும் நம்பிக்கை உதயமாகாத குரலில்.

"நாளை மறுநாளைக்கு ஏற்படவிருக்கும் போரைப் பற்றி விவாதிக்க."

"யாருடன் போர்?"

"நாகர்களுடன்!"

"ஏன், கோட்டைக் கதவுகளைத் திறந்துகொண்டு போருக்கு வரப் போகிறார்களா?"

"ஆமாம்."

"யார் சொன்னது?"

"அவர்தான்."

"கரிகாலனா?"

"ஆமாம்."

"அவனுக்கு எப்படித் தெரியும்?"

"கோட்டைக் கதவுகளைத் திறக்க அவர்தான் ஏற்பாடு செய்யப் போகிறார்."

கடைசியாக செங்கமலச் செல்வி எறிந்த இந்த வெடிகுண்டு ஏற்பட்ட அதிர்ச்சி பலமாயிருந்ததால், அரையன் ராஜராஜன் செல்வியின் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக்கொண்டு கூடாரத்துக்குள் சென்றான். அங்கு என்ன அவள் விஷயத்தை விளக்கவே, விளக்க இயலாத பிரமிப்பால் சயநிலையை அறவே இழந்த அரையன் ராஜராஜன்.

"என்ன செல்வி! இது ஏதோ புராணங்களில் படிக்கும் சம்பவங்களைப் போலல்லவா இருக்கிறது? இத்தனை நாளாக நமது காலையும் கடந்து கோட்டைக்கு உணவுப் பொருள்கள் செல்கின்றதா? அதைக் கரிகாலன் கண்டு பிடித்தானா? கண்டு பிடித்துவிட்டு அவர்களைச் சிறையும் வைத்துவிட்டு, அவர்கள் வேஷத்தில் தன் வீரர்களுடன் இவன் கோட்டைக்குள் போயிருக்கிறானா" என்ற ஆச்சரியத்தால் வார்த்தைகள் கூட ஒரிரு இடங்களில் தடுமாறப் பேசினான்.

"இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது அப்பா. அவரை உங்களுக்குத் தெரியாதா? அவர் பார்வையே தனிப்பார்வை. இந்திராவதியின் மேல்திசைக் காட்டுக் காவல் குறைவாயிருந்ததை ஆரம்பம் முதல் அவர் விரும்பவில்லை. தானியங்கள் சிந்திக் கிடந்தது சதா எதையும் துழாவும் அவர் கண்களுக்குப் பட்டிருக்கிறது. அவருடைய துணிவைப் பற்றி..." என்ற தன் மகளின் பேச்சை இடைமறித்த அரையன் ராஜராஜன், "அதில் எனக்கு என்னளவும் சந்தேகமில்லை மகனே! ஆனால் இந்தத் துணிகர வேலையைச் செய்யும் முன்பு, அவன் என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே" என்றான்.

செல்வி கூடாரத்துக்குள்விருந்த பஞ்சணையில் உட்கார்ந்துகொண்டு, ஆயாசம் கலந்த பெரு

மூச்சொன்றை விட்டான். "உங்களிடம் சொன்னால் நீங்கள் இந்த எற்பாட்டுக்கு ஒப்புக்கொள்ள மாட்டீர்கள் என்று அவருக்குத் தெரியும்" என்று சொன்னான்.

அரையன் ராஜராஜன் புத்தி நிதானமாக வேலை செய்து கொண்டிருந்ததால், அவன் மேற்கொண்டு ஏதும் பேசாமல் நீண்ட நேரம் கூடாரத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அந்த நாளைக்கு மறுநாள் இரவு ஏற்பாடு போதும் போதாப் பற்றித் நிதானமாக இந்தனையும் இறங்கியிருந்த படைத்தலைவன், கூடாரத்தின் குழ்நிலையை அறவே மறந்தான், சக்கரக் கோட்டத்தின் மூன்று பெரிய வாயில்களைச் சமாளிக்கப் படைகளை எப்படி நிறுத்த வேண்டும் என்று யோசித்துக்கொண்டே, "முதலில் நமது யானைப்படை..." என்று சற்று இளைத்த குரலில் பேசினான். அவன் இந்தனையும் செங்கமல செல்வியின் கொங்கை கலைத்தன. "யானைப்படை முதலில் கூடாது அப்பா!" என்றாள் செல்வி.

யோசனை அறுந்ததால், சட்டென்று அவளை நோக்கித் திரும்பிய அரையன் ராஜராஜன், "ஏன் கூடாது?" என்று வினவினான்.

"யானைப்படையைச் சக்கரத்தின் கட்டத்தில் நிறுத்தச் சொன்னார்" என்றாள் செல்வி.

"யார், கரிகாலனா?"

"ஆம். யானைப்படை முகப்பிலிருந்து கோட்டைக் கதவுகளைத் தகர்க்கலாம். கோட்டைக் கதவுகளைத் தாமே திறந்து விடுவதால், அவற்றை முகப்பில் நிறுத்தி வைக்கவில்லையாம். தெற்கு வாசலில் உங்கள் தலைமையும், மேற்கு வாசலில் பிரும்ம மாராயர் தலைமையிலும் சமமாக எதிரிகளைத் தாக்கவல்ல குதிரைப் படைகளை நிறுத்திக் கொண்டால் போதுமாம். மேற்கு வாசலில் காலாட் படைகளும், ரதங்களும் நிற்கட்டுமென்றார்."

"அனைவருமையும் அவனே கூறிவிட்டானா?"

அரையன் ராஜராஜனைத் தவிர வேறு ஒரு படைத் தலைவனால் இந்த ஏற்பாடுகளும் திட்டமும் தனைக் கடும் கோபத்திற்குள்ளாக்கியிருக்கும். ஆனால், அறிவாளியான அரையன் ராஜராஜன் சிந்தனையிலே சகோதரி புத்தி தெளிவையும் நிதானத்தையும் பற்றிய மிப்பே மேலோங்கி நின்றது. அத்துடன், கரிகாலன் மேற் தொண்டிருக்கும் மகத்தான நம்பிக்கையும் அவன் உள்ளத்தை தூக்கிக் கொண்டிருந்தது. அந்த எண்ணத்துடன், தீத்தனையும் செய்பவன் தன் வளர்ப்புப் பிள்ளை என்ப தால் சற்றே பெருமிதமும் கலந்து கொண்டதும், அந்தப் பெருமிதம் காரணமாகவும் கரிகாலனிடம் அவனுக்கு இயற்கையாயுள்ள வாஞ்சை காரணமாகவும், பொதுத் தன்மையான வாத்சல்யம் காரணமாகவும், அரையன் ராஜராஜனிட மிருந்து வெளிவந்தன. "மகனே! கரிகாலன் திட்டப்படியே ஜித்துப் போரை நடத்துவோம். அவன் உயிருடன் கோட்டையிலிருந்து நம்மிடம் வந்து சேர வேண்டும் அதை புரியட்டும்" என்றான் செல்வியை நோக்கி. தாய் ஓய்விடப்படி, படைத்தலைவர்களைச் சில விநாடிகளில் தன் கூடாரத்தில் கூட்டி, துரிதமாக மந்திராலோசனையிலும் இறங்கினான்.

கரிகாலன் செய்கையையும் திட்டத்தையும் கேட்ட படைத்தலைவர்கள், முதலில் ஆச்சரியமடைந்தார்கள். பிறகு பதறிப் போனார்கள். "இதென்ன பைத்தியக்காரத் தனம்" என்று பிரும்ம மாராயர், தமது பெருங்குரலில் கூறினார்.

"பைத்தியக்காரத்தனமல்ல பிரும்ம மாராயரே! பெரும் யுத்த தந்திரம்" என்று அரையன் ராஜராஜன், தன் வளர்ப்பு மகனுக்காகப் பரிந்து பேசினான்.

"அவன் அகப்பட்டுக்கொண்டு உயிரை விட்டால்?" என்று இடிபோல் கர்ஜித்தார் பிரும்ம மாராயர்.

"பெரும் நியாயம்!" என்றான் அரையன் ராஜராஜன் அழுத்தமான குரலில். அத்துடன் "கரிகாலனை உமக்குத் தெரியும் பிரும்ம மாராயரே! அவன் எத்தனையோ சங்கடங்களில் சிக்கிக்கொண்டு தப்பியிருக்கிறான்."

"அத்தனையும் பொய் சொல்லி."

"அந்தப் பொய்யை இங்கும் சொல்லலாம்."

"பலிக்காது. இவன் சிக்கிக் கொள்வது நிச்சயம். கோட்டைக் காலலருக்கு முந்தி வந்தவனை அடையாளம் தெரியாதா?"

"தெரியும்."

"தெரிந்தால் இவன் மீது சந்தேகப்படமாட்டார்களா?"

பிரும்ம மாராயரின் கேள்வி நியாயமாகவே பட்டது அரையன் ராஜராஜனுக்கு. அது நியாயமானதாகவே இருந்தது. கரிகாலன் பொதி மூட்டைகளுடன் கோட்டைக்குள் நுழைந்ததுமே, கோட்டையின் மேல்திசைக் காவலன் அவன்மீது சந்தேகம் கொண்டு, அவன் முக்காட்டைத் தன் சட்டியால் விலக்கினான். உள்ளிருந்த முகத்தைக் கண்டதும், கோபமும் வியப்பும் மேலிட்டவனாய், "யார் நீ? ஜெயவர்மன் எங்கே?" என்று கேட்டான். கரிகாலன் பதில் சொல்வதற்குள், துரிதமாக நிகழ்ச்சிகள் நடந்தேறின. "இதில் ஏதோ சூது இருக்கிறது" என்று கூறிக்கொண்டே காவலன், "டேய், இவனைச் சிறையிலிடுங்கள்; காலையில் கோட்டைத் தளபதியிடம் கொண்டு போவோம்" என்று தன் வீரர்களை நோக்கி உத்தரவும் இட்டான். அடுத்த விநாடி சுமார் இருபது வீரர்கள் கரிகாலனை வாளும் கையுமாகச் சூழ்ந்து கொண்டார்கள்.

54. பிரதாபருத்திரன்

தனது கழுத்தையும், மார்பையும் தடவி நின்ற நாகர்களின் வாட்களைச் சிறிதும் பதட்டமில்லாமல் மிக அமைதியுடன் நோக்கிய கரிகாலன், தன்னைச் சிறை செய்யும்படி ஆணையிட்ட தலைவன் முகத்துக்காகத் தன் கண்களைச் சற்றே உயர்த்தி, "படைத்தலைவரே! இந்த உத்தரவை உடனே நிறைவேற்ற வேண்டாம்; சற்றுத் தாமதியுங்கள்" என்று நாகர்கள் பேசிவந்த பிராகிருதம் கலந்த ஆந்திர பாஷையில் கூறினான்.

அவன் பார்த்த தோரணையும், அதைவிட அவன் பேசிய தங்கள் சுய பாஷையும் சக்கரக் கோட்டத்தின் மேற்குப்புறக் காவலனைத் திக்பிரமையடையச் செய்யவே, "நீ யார்? எங்கள் பாஷை உனக்கெப்படித் தெரியும்?" என்று வினவினான் அவன்.

கரிகாலன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. மொழிகளின் மகிமையை அவன் நன்றாக அறிந்திருந்தான். மனிதனுடைய ரத்தத்தில் கலந்திருக்கும் மகாசக்திகளுக்குள் மொழி ஒன்றென்பதையும், அந்தந்த நாட்டவரிடம் பிறனொருவன் அந்தந்த நாட்டு மொழிகளில் பேசும் பொழுது பேசுபவனிடம் அவர்களுக்கு இனையற்ற அன்பு உண்டாகிறதென்பதையும் கரிகாலன் அறிந்திருந்தானாகையால், நாகர்களின் மொழியிலேயே மேலும் பேச ஆரம்பித்தான். பாரதத்தின் பிரதான மொழிகளையெல்லாமே சூடாமணி விதாரத் தலைவரிடம் பயின்றிருந்த அவனுக்கு, நாகர்கள் மொழியில் பேசுவது அவ்வளவு பெரிய காரியமாகவும் படவில்லை. ஆகவே, மிகச் சரளமாகச் சம்பாஷணையைத் தொடர்ந்து, "வீரர்கள் தலைவரே! நீங்கள் கேட்பது மிகவும் வித்தையாயிருக்கிறது. ஒட்டர நாடும் மாகண தேசமும் அக்கம் பக்கத்திலிருக்கும்போது ஒருவர் பாஷை

இன்னொருவருக்குத் தெரிந்திருப்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது?'' என்றான்.

மேற்குப்புறத் தலைவன் மிருக சந்தேகத்துடன் கரிகாலனை நோக்கி, ''நீ ஒட்டர நாட்டவனா?'' என்று கேட்டான்.

''ஏன்? ஒருவேளை சோழநாட்டவனென்று நினைக்கிறீர்களா? உங்களுக்கிருக்கும் பயத்தில் சோழர்கள் என்றுகூட என்னை நினைப்பீர்கள் போலிருக்கிறது'' என்று சொல்லிச் சற்றுப் பெரிதாகவே நகைத்தான் கரிகாலன்.

அந்த நகைப்பு மற்றவர்களுக்கு எப்படியிருந்தாலும், சற்றுத் தூரத்திலிருந்த முத்துத்தேவனுக்குக் குலை நடுங்கச் செய்தது. சக்கரக் கோட்டத்து மேற்குப்புறத் தலைவனுக்கு அச்சமேதும் இல்லையென்றாலும் அது அவனைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியதால், அவன் என்ன பதில் சொல்லுவதென்று அறியாமல், சற்று நேரம் இப்படியும் அப்படியும் உலாவியதன்றி, பொறி மாற்றுடன் நின்று கொண்டிருந்த முத்துத்தேவன் முதலிய இதர வீரர்களையும் உற்றுப் பார்த்தான். எனினும் பார்த்தும் ஏதும் விளங்கவில்லை அந்த வீரனுக்கு. அவன் உள்ளத்திலே எழுந்த குழப்பம் முகத்திலும் கடர்விட்டுப் பிரகாசித்தது. கடைசியாக அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போலக் கரிகாலனுக்கு வெகு அருகில் வந்து, ''உன் பெயரென்ன?'' என்று வினவினான்.

''கங்கன்.'' சட்டென்று வந்தது கரிகாலன் பதில்.

''உன் தொழில்?'' இந்தக் கேள்வியும் மிகத் தீர்மானமாகவே எழுந்தது மேற்குப்புறத் தலைவனிடமிருந்து.

''போர்வீரன்; தற்சமயம் ஒட்டர நாட்டுப் படையின் ஒரு பிரிவுக்குத் தலைவன்.''

''நீ படைத்தலைவனா?''

''ஏன் என்னைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையா? இதோ இதைப் பாருங்கள்!'' என்று கூறிய வண்ணம் தனது வாள் கட்டப்பட்டிருந்த கச்சையிலிருந்த பட்டயத்தை எடுத்து நீட்டினான்.

விளக்குகளின் வெளிச்சத்தில் அதை நன்றாகப் பார்த்த மேற்குப்புறத் தலைவன், ''ஒட்டர நாட்டு ராஜ முத்திரை தான்; சந்தேகமில்லை'' என்று அந்தப் பதக்கத்தில் பொறிக்கப்பட்டிருந்த பிம்பத்தையும் வார்த்தைகளையும் பார்த்துத் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். தனால் அவன் உள்ளத்தே ஒலித்த அந்தச் சொற்களை முகபாவத்திலிருந்தே மதித்துக் கொண்ட கரிகாலன், ''வீரர்கள் தலைவனே! சந்தேகத்திற்கு இடமில்லை. அது என்ன அரசர் படைத்தலைவர்களுக்கு அளிக்கும் அந்தாட்டுப் பதக்கம்தான். முதல் பக்கத்தில் பொறிக்கப் பட்டிருப்பது இந்திரதத்த மன்னனின் நற் உருவம். பின் பக்கமிருக்கும் சிம்ம பிம்பத்திற்கு அடியிலிருப்பது சமஸ்கிருத விபி. மன்னர் விருதுகளின் ஆரம்பச் சொல் பொறிக்கப் பட்டிருக்கிறது. முக்கிய அலுவலாக வெளி நாட்டுக்குச் செல்லும் தூதுவர்களுக்கு மட்டுமே இதை அளிப்பது எங்கள் நாட்டு வழக்கம்'' என்று விளக்கினான்.

பெரும் குழப்பத்திலிருந்த மேற்குப்புறத் தலைவன் தலையை அசைத்துவிட்டு, ''அந்தாட்சிகள் உனக்குச் சாதகமாக இருக்கின்றன கங்கா. ஆனால், உன்னைய நம்ப எனவோ என் மனம் மறுக்கிறது'' என்றான்.

''வீரர்கள் தலைவனே! மனம் ஏற்குங்கு. அதை அடக்கி ஆள்வது மனிதனை அடையும் என்று விவேகிகள் கூறுகிறார்கள்.''

''இருக்கலாம். ஆனால் எதிரிகள் கோட்டையைச் சுற்றியிருக்கும் இந்தச் சமயத்தில், விவேகத்துடன் எச்சரிக்கையையும் இணைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.''

"எச்சரிக்கை கண்டிப்பாய்த் தேவைதான். நான் வந்துள்ள காரியத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது தங்கள் உத்தரவு."

"என் உத்தரவா?"

"ஆமாம்; என்னைச் சிறை செய்ய உத்தரவிட்டீர்களே அது."

மேற்குப்புறக் காவலனின் திகிலில் இருந்து அரும்பியது. "தங்களைச் சிறை செய்யக் கட்டளை விடுத்து எவர்கட்டுமா?" என்று கேட்டான் கரிகாலன்.

"தாங்கள் விடுத்து எவரும் வேண்டியதில்லை தலைவரே. தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் விடுத்து எவர்கள்தான் நானும் என் சகாக்களும் எங்கள் உயிரைப் போராடத்துக்குள்ளாக்கிப் பொறுக்கிகளைக் கூட்டி கொண்டு வந்திருக்கிறோம். பொறுக்கிகளைக் கூட்டி வந்திருக்கும் இன்னும் இரு கூட்டங்கள் காட்டுக்குள் திரிகின்றன. அவர்கள்மீது சொழுப்படை வீரர்கள் பாய முன்பாகத் தயவு செய்து அவர்களை இங்கு வரவழைக்கக் கோட்டை மீதிருந்து பந்தத்தை இரு முறை ஆட்டி உதவுங்கள். அதன் பிறகு, என்னைச் சிறை செய்து கொட்டடியில் அடைத்து நாங்களுக்கு இயற்கையாக வுள்ள நன்றியுணர்வைத் தெரிவிக்கலாம்" என்று கரிகாலன் வாயிலிருந்து வார்த்தைகள் படபடவென உதிர்ந்தன. அவன் முகத்திலே விளங்க இயலாத கோபம் தாண்டவ மாடியதையும், சொற்களில் தென்பட்ட உஷ்ணம் கலந்திருந்ததையும் கண்ட மேற்குப்புறக் காவலன் இதயத்தில் கூடச் சிறிது அச்சம் உதயமாயிற்று.

அந்த அச்சத்தை நன்றாக மேலும் விசிறத் தொடங்கிய கரிகாலன், "தலைவரே! நான் சொல்லியதை மட்டும் நீர் செய்ய தவறினால், நாளைக்கு இந்தக் கோட்டைக்குள் நீர் தூக்கிலாடுவது நிச்சயம். கோட்டைத் தலைவரான பிரதாபருத்திரன் உங்களை வேசில் விட்டான். உயிரைத் திருணமாக மதித்து, சொழர்கள்

படையிராத்தியத்திலே நுழைந்து உங்களுக்கு உணவுப் பொருள் கொண்டு வரும் எல்லை நீங்கள் சிறை செய்ததே முதல் குற்றம். பொறி மாடுகளை உக்கிராணத்துக்கு ஓட்டாமல், இங்கு நிறுத்தி வைத்துக் கொண்டு வீண் தர்க்கத்தில் ஈடுபடுவது இரண்டாவது குற்றம். மீறிப் போரிடுகளையும் என் வீரர்களையும் இங்கு வரவழைக் காவல் காலதாமதம் செய்வது மூன்றாவது குற்றம். மூன்று குற்றங்களுக்கும் நீங்கள் தானை கொட்டைக் காவலனிடம் என சமாதானம் கூறப் போகிறீர்கள்? 'ஜயவர்மன் வர வில்லை, வேறொருவன் வந்தான். ஆகையால் சதுரங்கப் பட்டேன்' என்று கூறுவீரா? அத்தகைய பதக்க மிடுப்பனை உன்னை விடுப்பதாலே உமக்கு உத்தரவு? தன்படி ஏன் நடக்கவில்லையென்றால் பதில் என்ன சொல்லப் போகிறீர்?" என்றான்.

மேற்குப்புறக் காவலன் தந்திரப் பேச்சைக் கட்டுப் பறி அச்சமும் பாதி கோபமும் கொண்டு, என்ன செய்வ தென்று அறியாமல் இளைத்தான். கரிகாலன் பேச்சில் நியாயம் நிரம்ப இருந்ததை அவன் கண்டான். தூரத்தில் திடம் இருந்ததையும் அவன் கவனித்தான். இருந்த போதிலும் அவனிடம் நம்பிக்கையைப் பிரயோ வில்லை நாகர்கள் தலைவனுக்கு. எதிர்த்தாற்போல் தெரிந்த பார்த்த அந்தத் தலைவனுக்குக் கரிகாலன் பேசுவதைப் படி நடப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் போகவே, கோட்டை மீதிருந்து பந்தத்தை மீண்டும் இருமுறை அசைக்கும்படி தன் வீரர்களுக்கு உத்தரவிட்டான். மேற்குப்புறக் காவலனின் அருமையான்மீது கோட்டைச் சுவரின் மீதிருந்து மற்றப் பொறுக்கிக் கூட்டங்களின் வரவைக் கவனித்துக்கொண்டிருந்த கரிகாலன், கண்களை நாலா பக்கங்களிலும் ஓட்டி, கோட்டையின் அமைப்பையும் நன்றாகப் பார்த்துக் கொண்டான்.

சித்ரகூட மலையை அணைத்து இந்திரனதியின் கரையில் கட்டப்பட்டிருந்த அந்தக் கோட்டைக்கு மூன்று

வாயில்களிருப்பதையும், வடக்குப்புறத்தில் அரசனின் நீராடுவதற்கான திட்டி வாசல் மண்டபமொன்றை தவிர வேறு பெரிய வாயிலொன்றும் இல்லையென்பதையும் கண்ட கரிகாலன், 'பின்புறத்தில் இத்தனை பெரிய வெள்ளப்பெருக்கையும் சித்திரகூட மலைகளையே பாதுகாப்புக்கு இவர்கள் நம்பியிருக்கிறார்கள்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். எனினும் அப்படி நம்பியதிலும் தவறில்லையென்றே பட்டது கரிகாலனுக்கு. சக்கரக் கோட்டக் கோட்டைக்குப் பின் புறமிருந்த மலைச்சரிவில் மரங்கள் இல்லை. வெறும் பாறையும் கூழாங்கற்களுமே இருந்தன. அந்தச் சரிவில் குதிரைப் படையோ யானைப் படையோ, ஏன் காலாட் படையாயிருந்தாலுங்கூட இறங்குவது அசாத்தியம். இறங்குவது மட்டுமல்ல, அந்தப் பகுதியில் படைகள் ஏறிச் சென்று தப்புவதும் கஷ்டம்.

இந்த நிலையை நன்றாகப் பார்த்து அறிந்துகொண்ட கரிகாலன், 'நாகர் படை சக்கரக் கோட்டத்தைவிட்டு வெளிக் கிளம்ப வேண்டுமானால் பின்புறமாகத் தப்பி ஓட முடியாது. முன்புறத்திலுள்ள மூன்று வாயில்கள் வழி யாகத்தான் வெளியேற வேண்டும். அப்படி வெளியேறுவதானால் சோழப் படைகளின் வாயில் நுழைந்துதானாக வேண்டும். வேறு வழியில்லை, நான் இட்ட திட்டம் சரிதான்' என்று தீர்மானித்துக்கொண்டான். அவன் கண்கள் மற்ற மூன்று வாயில்களின் அமைப்பையும் நகரத்தின் பொதுத்தோற்றத்தையும்கூட ஆராய்ந்தன. கோட்டைத் தலைவன் மாளிகை நகரத்தின் நடுமத்தியில் பிரும்மாண்டமாக எழுந்து நின்றது. அந்த மாளிகையைச் சுற்றிச் சக்கரம் சக்கரமாக அமைந்திருந்த வீடுகள். அந்தக் கோட்டைக்குச் சக்கரக் கோட்டம் எனப் பெயர் அமைந்தது எத்தனை பொருத்தம் என்பதை நிரூபித்தன. வடக்கு, தெற்கு, இழக்கு வாசல்களையொட்டி வரிசையாக இருந்த வீடுகளின் அமைப்பையும், அவற்றின்

வாயில்களின் அடையாளத்துக்காகச் செருகப்பட்டிருந்த தூதுக்கணையும் கவனித்த கரிகாலன் அலை படை வீடுகளென்பதையும், அந்தப் படை வீடுகளிலேயே ஆயுதக் கிடங்குகளும் கலந்திருக்கின்றனவென்றும் கணித்துக் கொண்டிருந்தான். அப்படிக் கோட்டையின் மேலே நின்று அவன் வரைக் கவனித்து எடை போட்டு முடிப்பதற்கும், பொதி மாடுகளும் அவற்றை ஓட்டி வந்தவர்களும் உள்ளே நுழைவதற்கும் பொழுது சரியாயிருந்தது. சிக்கிரம் பொழுது விடியும் என்பதற்கு அறிகுறியாக வானத்திலே வெள்ளியும் முளைத்தது.

வெள்ளி முளைத்துவிட்டதைக் கண்ட கரிகாலன் மேற்குப்புறக் காவலனை நோக்கி, ''தலைவரே! அதோ சக்கரோதயம் ஆகிவிட்டது. சிக்கிரம் கோட்டைக் கதவைத் தாளிடச் சொல்லுங்கள்'' என்றான்.

கோட்டைக்குள் வந்த ஆரம்பத்தில் தலைவன் மனத்தில் துளிர்த்த சந்தேகம் நேரம் ஏறஏறக் குறைந்து கொண்டே வந்தது. சிறை செய்ய உத்தரவிட்டபோதும் அதற்குப் பிறகும் கரிகாலன் சிறிதும் கலவரப்படாமல் நடந்துகொண்டதாலும் பொதிகளும் ஏராளமாக உள்ளே வந்ததாலும் திருப்தியடைந்த காவலன், 'சிக்கிரம் கோட்டைக் கதவை மூடச் சொல்லுங்கள்' என்று கரிகாலன் எச்சரித்ததைக் கேட்டதும், அவனிடம் ஓரளவு நம்பிக்கையும் கொண்டான். ஆகவே, பொதி மாடுகளின் கூட்டம் கோட்டைக்குள் நுழைந்து கதவு மூடப்பட்டதும், அவன் கரிகாலனை நோக்கிப் பேசிய பேச்சில் பழைய தோரணை மறைந்துவிட்டதல்லாமல் சிறிது மரியாதையும் கலந்து நின்றது. ''ஒட்டர நாட்டுப் படைத் தலைவரே, தாங்கள் சக்கரக் கோட்டப் படைகளுக்குச் செய்துள்ள மகத்தான உதவிக்கு எங்கள் தலைவர் சார்பில் நன்றி செலுத்துகிறேன். இருப்பினும் நான் என் கடமையைச் செய்தாக வேண்டியிருக்கிறது. ஜெயவர்மன் தலைமையில் வரும் பொதிகளை மட்டுமே அனுமதிக்க

எனக்கு கத்தரவிருக்கிறது. உங்களை எனக்குத் தெரியாது. ஆகவே, கோட்டைத் தலைவராக பிருதாப ருத்ர பூபதியை நாளைக்குச் சந்திக்கும் வரை தாங்கள் சகாக்களும் காவலில் இருந்துதானாக வேண்டும்" என்றான் மேற்குப்புறக் காவலன்.

"அதற்கென்ன ஆகட்டும்! தங்கள் கடமையைச் செய்யுங்கள்" என்ற கரிகாலன் பதில், மேற்குப்புறக் காவலனுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகத்தையும் நீக்கிவிட்டது. அவன் கரிகாலனையும் அவன் சகாக்களையும் சற்றுச் சௌகரியமான இடத்திலேயே காவலில் வைத்தான்.

உறக்கம் இடத்தைப் பொறுத்ததாக மட்டும் இருந்தால் கரிகாலனுடைய சகாக்கள் இரவு முழுவதும் தூங்கி விழித்ததற்குக் காலையில் நீண்ட நேரம் நன்றாக உறங்கியிருப்பார்கள். உறக்கம் மன நிம்மதியைப் பொறுத்தல்லவா? நிம்மதியிழந்து கிடந்த முத்துத்தேவனுக்கும் அவனுடன் வந்திருந்த சுமார் தொண்ணூறு வீரர்களுக்கும் உறக்கம் சற்றும் பிடிக்காததால், சிறைக்கூடத்தில் அவர்கள் உட்கார்ந்து கொண்டே இருந்தார்கள். அந்த நிலையிலும் கரிகாலன் படுத்து நிம்மதியாக உறங்கத் தொடங்கியதுதான், முத்துத்தேவனுக்குப் பெரும் வியப்பாகவும் மற்றவருக்குப் பெரும் எரிச்சலாகவும் இருந்தது.

காவற்கூடத்தை அணுகிய உடனேயே, அனைவரும் நிறுத்தி கத்திலைக்கழற்றி ஒரு மூலையில் சாத்திவிட்டுத் தரையில் படுத்துத் தூங்குவதற்காகக் காலை நீட்டிக் கையை உயர்த்திச் சோம்பல் முறித்த கரிகாலனை நோக்கிக் கேட்டான் முத்துத்தேவன், "ஏன் தூங்கப் போகிறீர்களா?" என்று.

"ஆம் முத்து. இரவு முழுவதும் உறக்கமே இல்லையே."

"உறக்கம் வருமா உங்களுக்கு?"

"ஏன் வராது?"

"நாம் இருக்கும் இடம் பகைவர் கோட்டை."

"இருப்பினும் நாம் மனிதர்கள் தானே? இயற்கையை நாம் மாறுபட முடியுமா? உறக்கம் இயற்கை தனக்கும் அமைதி. அதை ஏன் விட்டுவைக்க வேண்டும்?"

"வினையாட்டுக்கு இது சமயமல்ல, தளபதியே."

"ஆம். அதனால்தான் தூங்கப் போகிறேன்."

"இப்படிச் சொல்லிய கரிகாலன் நன்றாகப் புரண்டு படுத்து அடுத்த விநாடி அயர்ந்து தூங்கி விட்டான். தூக்கத்திலும் அவன் முகம் மகாராணியை அழகாயிருந்த தையும், கடை இதழில் வழக்கமான அந்த ஏளனப் புன்னகை அரும்பி நின்றதையும் கவனித்த முத்துத்தேவன், 'இவர் கூப்பிட்ட மாத்திரத்தில், நள்ளிரவில், அரசன் ராஜராஜன் மகள் ஏன் வருகிறாளென்றால் அதில் ஆச்சரியம் ஏதுமில்லை' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

பொழுது புலர்ந்து வெகு நேரம் வரையில் அமைதியாகத் தூங்கிய கரிகாலனை தேற்றுப்புறக் காவலன் எழுப்பினான். கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்திருந்த கரிகாலன் காவலனை நோக்கி, "ஓகோ! பொழுது புலர்ந்து முக்கால் நாழிகை ஆகிவிட்டதா?" என்று கொஞ்சம் வியப்புடன் கேட்டுவிட்டு, "நான் மாத்திரம் எழுப்பாமல் தூங்கி விட்டேனே! மற்றவர்கள் எழுந்து விட்டார்களா?" என்று கேட்டான்.

மேற்குப்புறக் காவலனும் முத்துத்தேவனைப் போலவே ஆச்சரியத்தால் முழுக்க, "என்ன! இத்தனை நேரம் தூங்கினீர்களா?" என்று கரிகாலனைக் கேட்டான்.

"ஆமாம்! இரவு முழுவதும் தூங்கவில்லை. தனிர இரண்டு நாள் பயணம் வேறு" என்று சொல்லிக் கொண்டே கரிகாலன் எழுந்திருந்து ஆடைகளைச் சரிப் படுத்திக் கொண்டான். கரிகாலனிடம் அதுவரை சந்தேகம் ஏதாவது மேற்குப்புறக் காவலனுக்கு இருந்திருந்தால், அது அன்று காலை அடியோடு போய் விட்டது. இவ்வளவு நிம்மதியாக உறங்கக் கூடியவன்

ஒருநாளும் ஏற்றனாகியிருக்க மாட்டான் என்ற முடிவுக்கு வந்த தலைவன், ''ஒட்டர நாட்டுப் படைத்தலைவரே! உங்களுக்கும் உங்கள் சகாக்களுக்கும் ஸ்தானத்தில் வேலை டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். ஸ்தானத்தை முடித்து, காலை உணவு அருந்தி ஓய்வெடுங்கள். நடுப்பகலுக்குச் சற்று முன்பாகக் கோட்டைத் தலைவர் உம்மைக் காண்பார்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் கூறியபடி சரியாக நடுப்பகலுக்கு நாலைந்து நாழிகைக்கு முன்பாகவே, பிரதாபருத்திரனை அவை மாளிகையின் பெரு மண்டபத்தில் கரிகாலன் சந்தித்தான். நாலாபக்கங்களிலும் நாகர்கள் சின்னங்கள் பொறிக்கப் பட்டிருந்த மாபெரும் கற்றூண்களால் தாங்கப்பட்ட அந்த மண்டபத்தின் நடுமத்தியில், நாகர்கள் இலவ லெண்ணை பிடிக்க தாச கோலத்தில் அமர்ந்திருந்தான் பிரதாபருத்திரன். அவன் தாச கோலத்தையும் நாகரை களின் தாச லட்சணத்தையும் சேர்த்தவாறு நாகர் எதையும் சொல்ல கரிகாலன், ''கோட்டைத் தலைவன் நாகர் களின் தாச லட்சணத்தைச் சேர்த்துவரச் சொல்லி' என்று நிர்பாணித்து, ''அதோ!'' என்று அலறத்தை தன் பேச்சைத் தொடர்ந்தான்.

சுமார் ஆறடி உயரத்துக்குக் குறைவில்லாமல், மிக ஒல்லியாய் நாழுகளை முகத்தில் சேர்த்து, நாகரைத்தில் உட்கார்ந்திருந்த பிரதாபருத்திரன் கண்கள் ஒரு விநாடி ஆச்சரியத்தால் மலர்ந்தன. மறு விநாடி விபரீத சந்தேகம் சூழ அவன் முகத்தில் படர்ந்தது. ''உன்னை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருக்கிறேன். எந்த இடத்தில்?'' என்று தனக்குள் யோசனை செய்து பிரதாப ருத்திரன், சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவன்போல் திடுக்கிட்டான். ஆசனத்தை விட்டுச் சற்று தூரம் வந்து கரிகாலனின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். ஏதோ உண்மை புலப்பட்டுவிட்டது போல் பிரகாசமொன்றும் அவன் முகத்தில் திடீரென்று தோன்றியது. அடுத்த விநாடி இடி போன்ற சொற்கள் அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்து மண்டபத்தின் கூரைகளில் தாக்கி மிகப் பயங்கர மாக எதிரொலி செய்தன.

55. மேகத்திரைக்குள் ஒரு மின்னல்

உலகம் மிகப்பெரிது என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் அது உண்மையில் மிகச் சிறியது. ஏனென்றால் நம்மையும் அறியாமலே நாம் எண்ணாத இடங்களுக்குப் போகிறோம். மனத்தாலும் எண்ணாத மனிதர்களைச் சந்திக்கிறோம். தொப்பளத்திலும் எழாத நிகழ்ச்சிகளில் சிக்கிக் கொள்கிறோம். ஆகவே, ஆண்டவன் படைப்பில் இந்தப் பரந்த உலகம் மிகச் சிறிய இரகம்தான். அதன் நீதியால் வாழ்க்கையின் அலைகளில் எடுத்து வீசப்படும் நாம் இந்த இரகத்தில் எந்தப் பாகத்தையும் அடைகிறோம். எதிர்பாராத பல விநோதச் சம்பவங் களில் அகப்பட்டுக் கொள்கிறோம். அப்படி அகப்பட்டுக் கொள்ளும்போது ஆயுளில் அறியாத முக்கிய உண்மை களையும் அறிகிறோம். அன்று சக்கரக் கோட்டத்தில் பிரதாபருத்திரன் மாளிகையில் அந்த உளச்சினையும் அதில் விழ புருத்து விளையாடிய வினையாட்டையும் பிற்காலத்தில் நினைத்துப் பார்த்த கரிகாலன், மனித எண்ணங்களுக்கு எத்தனை கலபத்தில் ஏமாற்றமும் ஜடக்கிறது என்பதை எண்ணி எண்ணிப் பல முறை வியந்திருக்கிறான்.

பிற்காலத்தில் அவன் சக்கரக் கோட்டச் சம்பவங் களை எண்ணி விடந்து உண்மையானாலும், அன்று அந்த மாளிகையில் பிரதாபருத்ரன் இளைந்து கூறியது மன்றித் தன்னை உற்றும் பார்க்கபோது தனையற்ற அச்சமே ஒங்கி நின்றது. உன்னை இதற்கு முன் எங்கோ பார்த்திருக்கிறேன் என்று பிரதாபருத்திரன் கூறியபோதே சற்றுக் கலங்கிய கரிகாலன், சக்கர கோட்டத்தின் தலைவன் நாகாசனத்திலிருந்து இறங்கி ஓடிவந்து தன் முகத்தைக் கூர்ந்து கவனித்ததும் எப்படியும் தப்பிக்க முடியாத பேராபத்தில் சிக்கியிருப்பதை உணர்ந்தான். தன்னை உற்று பார்த்த பிறகு, ''அவ

தான் சந்தேகமில்லை. அதே முகம், அதே கண்கள், அதே சாயல்'' என்று பிரதாபருத்திரன் இடையை இரண்டு வார்த்தைகளை உதிர்த்ததும், அவன் எவனை நோக்கி இறான், எதற்காகத் தன்னை வரவழைத்திருக்கிறான் என்பதை அறிய முடியாமல் திணறிய கரிகாலன், எதிரே குத்திரகாரமாக நின்ற பிரதாபருத்திரனின் கோப விழிகளை ஏறெடுத்துப் பார்த்தான். அந்தப் பார்வை பிரதாபருத்திரனை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும். அவன் மீண்டும், ''அதே முகம், அதே கண்கள், அதே சாயல், சந்தேகமில்லை. ஆனால்...'' என்று ஏதோ பேசிக் கொண்டே போய், இடையே வார்த்தைகளை அறுத்து, ''ஆனால் இவன் வயது...ஏ...ஏ, என்னை கவனை செய்து விட்டேன்'' என்று தன்னைத்தானே தொந்தி கொண்டு, மறுபடியும் விடுவிடுவென்று நடந்து சென்று நாகாசனத்தில் அமர்ந்தான். நீண்ட நேரம் அந்த மண்டபத்தில் யாளையே தான்டவமாடியது. பிரதாபருத்திரனின் படைத்தலைவர்களும் இதர வீரர்களுங்கூட சிறிது நேரத்திற்கு முன்பாகத் தங்கள் தலைவன் நடந்து கொண்ட விதத்தை முறையை நினைத்துக் கவலைப்பட்டபடியாக கோட்டையில் அங்கொரு இங்கொருமாக நின்று வந்த குசுகுசுப்பும் ஆச்சரியம் கலந்த கண் பார்வையும் பிரதாபருத்திரன்மீது நிலைநாட்டினாலும், விரைவில் இந்த நிகழ்ச்சியின் காரணங்களையோ சக்கரக் கோட்டத்தைத் தலைவன் சிந்தனையில் எழுந்த எண்ணங்களையோ, சிறிதும் அறிய மாட்டாதவர்களாய், 'தலைவனுக்கு இப்பொழுது என்ன நேர்ந்து விட்டது? ஏன் இப்படித் தவறுகிறார்?' என்ற கேள்விகள் பார்வையில் தொனிக்க, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

நாகாசனத்தில் அமர்ந்த பின்பு, வெகுநேரம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே ஏதோ யோசனையில் ஆழ்ந்த பிரதாபருத்திரன் மனத்தில்,

ஏற்ற உண்மை உதயமாகவே அவன் தனக்குத் தானே நேராகச் சிரித்துக் கொண்டு, ''ஆம்; அப்படியும் இருக்கலாம்'' என்று முணுமுணுத்துவிட்டுக் கரிகாலனை நோக்கித் தலை உயர்த்தி, ''உன் பெயர் என்ன?'' என்று சாதாரணமாகவே கேட்டான்.

பிரதாபருத்திரன் தன்னை நோக்கிக் கூச்சலிட்டபோது குழப்பத்தில் சிக்கிக் கொண்ட கரிகாலனும் சக்கரக் கோட்டத்துத் தலைவன் நாகாசனத்தில் அமர்ந்து சிந்தனையில் இறங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் கவனத்தை அடைத்து விட்டானாகையால், உறுதியான குரலிலேயே பதிலிறுத்தான் ''கங்கன்'' என்று.

மீண்டும் பெருங்குழப்பத்தையும் அச்சத்தையும் விளைக்கும்படியான முறையில் எழுந்தது பிரதாபருத்திரனின் அடுத்த பேச்சு. கடை திறந்தில் துகழ்ச்சிப் புன்னகை அரும்பச் சொன்னான் சக்கரக் கோட்டத் தலைவன், ''அதில்லை உன்னைப் பெயர்'' என்று.

மனதர்களை யிகத் நினைவுடன் ஊடுருவிப் பார்க்கவல்ல ஏற்ற பெரிய அறிவாளியிடம் தான் அகப்பட்டுக் கொண்டிருப்பதை அறிந்த கரிகாலன் அந்தச் சமயத்தில் ஏற்றத் தளர்த்தால் உள்ளம் கலவரப்படும் பொருமன்ற சந்தேகமற உணர்ந்து தெளிவானதையால், நிதும் சலனமின்றியே சமாதானத்தைத் தொடர்ந்து, ''ஆசே! தான் சொன்னது உன்னைப் பெயரல்ல என்பது தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டான், உறுதி சிறிதும் தளராத குரலில்.

அடுத்தபடி பேசிய பிரதாபருத்திரன் சொற்களில் சற்று நடுக்கம் கலந்திருந்தது. அவன் கரிகாலன் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், ''நீ ஒட்டர நாட்டைச் சேர்ந்தவன் என்று எனது கோட்டையின் மேற்குப்புற காவலன் சொன்னானே, அதுவும் உண்மைதானா?'' என்று வினவினான்.

பிரதாபருத்திரன் கன்னையப்பற்றிய உண்மையை எப்படியோ தெரிந்துக்கொண்டுவிட்டானென்பதை அவன் கேள்வியிலிருந்தும் அவன் பேசிய தோரணையிலிருந்தும் தெரிந்துகொண்ட கரிகாலன் மனதிற்குள் மீசையை முறுக்கிக்கொண்டான். தந்தையின் தான் ஒட்டிய தாடியை காட்டாமலே, தந்தையின் தான் பேசும் பாஷையும் அதுதான் என்பதையும் காட்டாமலே, தன்னை சோதித்தவன்தான். தான் பேசும் பாஷையும் அதுதான் வேண்டுமானால் சோதித்துப் பாருங்கள்'' என்றான்.

பிரதாபருத்திரனின் கூரிய கண்கள் கரிகாலனை மீண்டும் ஆராய்ந்தன. அவன் உதடுகளில் ஏற்கனவே இருந்த புன்னகை இன்னும் அதிகமாக விகசித்தது. லேசாகச் சிரித்துவிட்டுச் சொன்னான் பிரதாபருத்திரன். ''இருக்கலாம்; தந்தையின் தாடியைச் சோதனை அமர்த்திருக்கலாம். அந்தப் பாஷையை அறிந்திருக்கலாம். அதை அந்த நாட்டவரைப் போலவே பேசினாலும் பேசலாம். ஆனால் நீ சோழ நாட்டைச் சேர்ந்தவன். உன் முகத்தில் அது எழுதி ஒட்டியிருக்கிறது'' என்று.

பிரதாபருத்திரன் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் உதிர்ந்ததும், அந்த அரையிலேயே மிகுந்த பரபரப்பு உண்டாயிற்று. ''சோழ நாட்டவன்! சோழ நாட்டவன்!'' என்ற சொற்கள் பற்பலரின் வாயிலிருந்தும் உதிர்ந்து, மண்டபத்தின் பெரும் சுவர்களிலும், ''சோழ நாட்டவன்! சோழ நாட்டவன்!'' என்று பலவிதமாக எதிரொலி செய்தன.

படைத்தலைவர்களின் ஆச்சரியம் கலந்த கலவரச் சொற்களையும் கவர்களின் அந்தச் சொற்கள் தாங்கி எதிரொலி செய்ததையும் கேட்ட கரிகாலனுக்கு, அந்த மண்டபமே தன் மீது மோதிச் சாடுவது போன்ற பிரமை ஏற்பட்டது. அந்தப்படி எல்லை நெறியும் என்ற சித்தேகமும் மனத்தில் எழுந்து நிற்கவே பிரதாபருத்திரன் எத்தனைய கட்டளையை இடப்போகிறான் என்பதை ஆவலுடன் எதிர்நோக்கி நின்றான். சற்று யோசனைக்குப் பிறகு, பிரதாபருத்திரன் இட்ட கட்டளை மட்டுமன்றி, அந்த மண்டபத்திலிருந்த மற்ற படைத்தலைவர்களனைவரும் தொல்லியோன்னாதகர்களின் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

''இவனை அழைத்துச் சென்று உன் மாளிகையில் நன்கு கவனி. ஓர் அரசனுக்குரிய மரியாதையுடன் இவனை நடத்து. இன்று மாலை என்னுடைய பள்ளியறையில் இவனைத் தனியாகச் சந்திக்கும் பாக்கியத்தை உதவிவிட்டு பிரதாபருத்திரன் பதனபதிக்கு. சோழர்களை தோற்கச் சிரித்துக்கொண்டே, ''கங்கா, கரிகாலனை மாலை சந்திப்போம்'' என்று கூறிவிட்டு, நாகாசனத்தை நிறுத்தி, எழுந்து கம்பீரமாக நடந்து மண்டபத்தின் பின்பறம் தன்னறைக்குள் சென்றான்.

சக்கரக் கோட்டத்துக் காவலன் மாளிகையின் உள் கட்டுக்குச் சென்று மறைந்து, மண்டபத்துக்கும் அந்த கட்டுக்குமிருந்த மண்டபங்களில் கூடியிருந்த கோட்டையின் உபதலைவர்களைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்றான். காவலன் உத்தரவுப்படியே அன்று முழுவதும் அந்த மாளிகைக்குள் அடைத்துவைக்கப்பட்ட கரிகாலனுக்கும் மாளிகையைச் சேர்ந்த பணிப்பெண்கள் வந்து சேர்ந்தார்கள். மாளிகைக் காவல் வீரர்கள் நியமிக்கப்பட்டார்கள். கரிகாலன் விருப்பப்படி முத்துத்தேவனும் அவன் அறைக்குக் கொண்டு வரப்பட்டான். இத்தனை உபசாரங்களை நடத்தும், தான் ஒரு கைதியே என்பதை உணர்ந்து கொள்ள அதிக நேரமாகவில்லை கரிகாலனுக்கு. பகல் முழுவதும் பணிப்பெண்கள் இருவரும் அந்த அறையை விட்டு நகரவேயில்லை. முத்துத்தேவனுடன் ஏதேதோ பேசத் திட்டம் போட்டிருந்தான் கரிகாலன். ஆனால் உபதலைவர்

மின் ஏற்பாடுகளால் அந்தத் திட்டம் படுதோல்வியடைந்து விட்டதை, முத்துத்தேவனிடம் எந்த விஷயத்தையும் சொல்லாமலேயே மாலையில் பிரதாபருத்திரனைச் சந்திக்கச் சென்றான்.

பிரதாபருத்திரனின் அந்தரங்க அறை மாலை நேரத்தில் ஏற்றப்பட்ட மணி விளக்குகளால் ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த அறையே ஒரு பெரும் மண்டபம் போலிருந்ததையும் அந்த அறையிலிருந்த மாபெரும் தூண்களில் மாகாளி தேசத்துப் படைவீரச் செயல்கள் வண்ணச் சித்திரங்களாகத் தீட்டப்பட்டிருந்ததையும் கரிகாலன் கண்டான். அந்தச் சித்திரங்களைச் சுற்றிச் சுற்றிப் பெரும் தாகங்களை வரையப்பட்டிருந்தமையால், தான் பக்கங்களிலும் பெரும் சர்ப்பங்கள் சீறி எழுவதைப் போன்ற பிரமையை அந்த மண்டபம் ஏற்படுத்துவதையும் கண்ட கரிகாலன் 'இந்தச் சூழ்நிலையில் சிக்கிக் கொள்ளும் எவரும் பயத்தாலேயே உண்மையை உளறி விடுவான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் அந்த மண்டபத்தைச் சுற்றிக் கண்களை ஓட்டிப் பிரமித்து நிற்பதைக் கண்ட பிரதாபருத்திரன், அவன் உட்காரத் தனக்கெதிரே இருந்த ஓர் ஆசனத்தைச் சுட்டிக்காட்டி, 'உட்கார் கங்கா! நாகங்களைக் கண்டு பயப்படாதே" என்று எதிரியும் சொன்னான். அந்தத் தருணத்தில் பிரதாபருத்திரன் தோற்றமே மாறியிருந்தது. பகலில் மண்டபத்தில் அணிந்திருந்த படாடோபத்தையுடை அப்பொழுதில்லை. மாலை வேளை சந்தி செய்த பிறகு மன்னர்கள் அணியும் சாதாரண உடையையே அணிந்திருந்தான் பிரதாபருத்திரன். அவன் முகத்திலும் மண்டபத்தில் தெரிந்த கோபம், குழப்பம், இகழ்ச்சி எதுமில்லை; சாந்தம் நிலவிக் கிடந்தது. அன்பு ததும்பும் விழிகளைக் கரிகாலன் மீது நாட்டி, தேன் போன்ற மொழிகளை உதிர்க்கத் தொடங்கிய பிரதாபருத்திரன்,

"கங்கா! ஆம், நீயாக உண்மைப் பெயரைச் சொல்லும் வரையில் உன்னைக் கங்கனென்றே அழைக்கிறேன். நன்றாக இளைப்பாறினாயா? பிரயாண அலுப்பு தீர்ந்ததா உனக்கு?" என்று கேட்டான்.

"அலுப்புத் தீர்ந்தது அரசே!" என்றான் கரிகாலன்.

"மகிழ்ச்சி கங்கா! உனக்கு நாகர்கள் சார்பாக நன்றி செலுத்துகிறேன்."

"எதற்கு மன்னவா?"

"ஒட்ட நாட்டிலிருந்து உணவுப் பொருள்கள் கொண்டுவந்ததற்காக."

"இதில் நன்றி செலுத்த என்ன இருக்கிறது மன்னவா? இது என் கடமையல்லவா? ஒட்ட நாட்டு மன்னனிடம் சேவை புரிகிறேன்; கட்டளையை நிறைவேற்றுகிறேன்; அவ்வளவுதானே?"

"கட்டளைகளிலும் வித்தியாசமுண்டல்லவா? இது உன் உயிரையே குடிக்கக்கூடிய கட்டளை."

"வீரர்கள் வாழ்வே அப்படிப்பட்டதுதானே?"

கரிகாலனின் இந்தச் சொற்களைக் கேட்டதும் சரேலென்று அடிக்கப்பட்டவன் போல் ஆசனத்தில் சட்டென்று எழுந்து உட்கார்ந்த பிரதாபருத்திரன் மீண்டும் பெருமூச்சுவிட்டு மஞ்சத்தில் சாய்ந்துகொண்டு, "ஆம் ஆம், உண்மைதான்" என்றான். பிறகு சில விநாடிகள் பேசாமலே இருந்தான் பிரதாபருத்திரன். அவன் உள்ளத்திலே என்ன அலைகள் எழுந்து எழுந்து மோதிக் கொண்டிருந்ததை அவன் முகமே பிரதிபலித்தது. இப்படி இருவருக்கும் இடையே திடீரென எழுந்த மௌனத்தைக் கலைக்க எண்ணிய கரிகாலன், "அரசே! வீரர்கள் வாழ்வு அப்படித்தான் என்று நான் சொன்னதும், ஏன் அப்படித் தாக்கிவாரிப் போட்டது தங்களுக்கு?" என்று வினவினான்.

"காரணமிருக்கிறது. அதே சொற்களை வேறொரு வன் சொன்னான் பல வருஷங்களுக்கு முன்பு. அதுவும்

மிகவும் இக்கட்டான நிலையில் சொன்னான்'' என்றான் பிரதாபருத்திரன்.

''யாரது அரசே?''

''சொல்ல முடியாது கங்கா.''

''ஏன்?''

''ஒரு பிரமாணம் என்னைக் கட்டுப்படுத்துகிறது.''

''யாருக்குப் பிரமாணம் செய்து கொடுத்திர்கள்?''

''நீ கூறிய வார்த்தைகளைக் கூறினானே அலுப்க்குத் தான். சமுத்தில் நடந்த கதை அது. ஏன், சோழ நாட்டிலும்தான் நடந்தது. அந்தக் கதையை நீ நினைவு படுத்திவிட்டாய். கங்கா, நீயென்ன, உன் முகம், ரூல் அனைத்தும் நினைவுபடுத்திவிட்டன.'' பிரதாபருத்திரன் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''கங்கா!'' என்றான்.

''ஏன் அரசே?''

''உன்னிடம் அந்த மோதிரம் இருக்கிறதா?''

''எந்த மோதிரம்?''

''அதுதான், பச்சைக்கல் மோதிரம்; அதன் உட் புறத்தில் சோழர்கள் கிரீட முத்திரை இருக்கும்.''

உலகமே சுழல்வது போலிருந்தது கரிகாலனுக்கு. அவன் உடல் ஒருமுறை லேசாக ஆடியது. உடல் பூராவும் பலப்பல உணர்ச்சிகள் பாய்ந்து சென்றன. நாகர்கள் நாகங்களைக் கட்டுவதில் கைதேர்ந்த மந்திரவாதிகள் என்பதைப் படித்திருந்தான் தத்துவ சாஸ்திரியான கரிகாலன். ஆனால், மனித ரகசியங்களையும் ஊடுருவிப் பார்க்கவல்ல அத்தனை மந்திரவாதிகளாயிருக்க முடியும் என்பதைச் சொப்பனத்தில்கூட நினைக்காத கரிகாலன், பிரதாபருத்திரன் கேட்ட கேள்வியால் அடியோடு நிலை குலைந்து போய்த் தன் கச்சையிலிருந்த மோதிரத்தை எடுத்துச் சக்கரக்கோட்டத்துத் தலைவனிடம் நீட்டினான். அதை மிகவும் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்த

பிரதாபருத்திரனும், ''அதே மோதிரம்தான். சத்தேக மின்னை'' என்று சற்று இரைந்தே சொல்லி, மோதிரத்தை மீண்டும் கரிகாலனிடம் திருப்பிக் கொடுத்தான்.

மோதிரத்தை அவன் பரீட்சை செய்தாலும், தன் சாயலைக் கண்டே தன்னைச் சோழ நாட்டவனென்றும் மனத்தாலும், தன் பிறப்பு மர்மத்தை அவன் பூர்ணமாக அறிந்திருக்கிறானென்பதை உணர்ந்துகொண்ட கரிகால னுக்குப் பெரும் மேகத்திடையே சிறிய மின்னல் தோன்று வதுபோல், எதிரிக் கோட்டைக்குள்ளே, பேராபத்துக் கிடையே, ஒரு நன்மையும் பயக்குமென்ற உணர்வு ஏற் பட்டதும், மகிழ்ச்சி வெள்ளம் முகத்தில் தாண்டவமாடப் பிரதாபருத்திரனை நோக்கி, ''என் தந்தையை உங்களுக்குத் தெரியுமா?'' என்று திட்டமாகவே கேட்டான்.

''தெரியும்!'' அதனிடத் திட்டமாக வெளிவந்தது பிரதாபருத்திரன் குரல்.

''எப்படித் தெரியும்?''

''சோழ சக்கரவர்த்தி ராஜராஜ சோழன்மே லிருவரும் படைத்தொழில் புரிந்தோம். சமுத்துப் போரில் தோளுக்குத் தோள் நின்று போரிட்டோம்.''

''அவர் பெயர்?''

''சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். பிரமாணம் என்னைக் கட்டுப்படுத்துகிறது கங்கா! ஆனால், நான் எடுத்துக் கொண்ட பிரமாணத்தை உடைக்கவும் சித்தமாயிருக்கிறேன், ஒரு நிபந்தனையின் மேல்.''

''என்ன நிபந்தனை அரசே?''

''அரையன் ராஜராஜன் படைகளை எப்படி அணி வகுத்திருக்கிறான் என்று நீ சொன்னால்...'' என்று நிபந்தனையைக் குறிப்பிட்டுச் சிறிது தயங்கவும் தயங்கி னான் பிரதாபருத்திரன்.

கரிகாலன் வழக்கமாகத் தன் தந்திரத்தைத் தவிர்த்து "அது எனக்கெப்படித் தெரியும்?" என்று வினவினான்.

"நீ அவன் படையைச் சேர்ந்தவன்" என்று நிதானமாக வெளிவந்தன பிரதாபருத்திரன் சொற்கள்.

"நானா?"

"ஆம். நீயும் உன்னுடன் உணவுப்பொருள் கொண்டு வந்திருப்பவர்களும். கங்கா! உணவுப் பொருள் இப்படி ரகசியமாக வருவது உனக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. ஆகவே, ஜெயவர்மனை மடக்கிக் கோட்டைக்குள் வரும் முறையைத் தெரிந்து கொண்டு உள்ளே புகுந்து விட்டாய். ஆம், உள்ளே புகுந்துவிட்டாய். ஆனால் வெளியே செல்ல முடியாது. நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ ஒழுங்காகப் பதில் சொன்னால், உன் பிற்பாடு மரணத்தை விளக்குவேன். இல்லையேல் இந்தச் சக்கரக் கோட்டத்தின் மத்தியிலிருக்கும் தூக்கு மேடையில் உன்னையும் உன் சகாக்களையும் மாட்டித் தொங்க விடுவேன். நீ எனது நண்பனின் புதல்வனாதலால், இந்தக் கோட்டையைக் காத்து, சோழர்களை கங்கைப் படையெடுப்பைத் தடைசெய்ய உன்னையும் விலக்கு செய்வேன்" என்றான் பிரதாபருத்திரன்.

விதி இப்படித் திருப்புமென்பதைச் சற்றும் எதிர் பார்க்காத கரிகாலன் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தான். தூக்கு மேடையைப்பற்றி அவன் கவலைப் படவில்லை. அந்தப் பயங்கரம் மிகச் சகஜமாகிருந்த அவனுக்கு. ஆனால் பிரதாபருத்திரன் அடுத்துக் கேட்ட கேள்வி? மிகப் பயங்கரம்! தூக்கில் தொங்கலாடுவதைவிட எத்தனையோ மடங்கு பயங்கரம்! ஒவ்வொரு கேள்வியும் விஷம் தீட்டப்பட்ட பெரிய சாட்டையைப்போல் பாய்ந்த கரிகாலன் இதயத்தில்.

56. பொய்யும் மெய்யும்

நாகப்பட்டினத்துச் சூடாமணி விஹாரத்திலிருந்து சென்ற பிறகு, வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ திருப்பங்களை அடைந்து, எத்தனை எத்தனையோ துயரங்களில் சிக்கி, அத்தனையையும் தன் ஆராய்ச்சித் திறமையாலும் அறிவை பலத்தினாலும் அறுத்துக் கொண்டு வெற்றியுடன் தப்பிய கரிகாலன், அன்று அந்த நாகர்களின் மாளிகையில் மனத்தில் அச்சமே பெரிதும் மேலோங்க நின்றான். உயிரைப் பற்றி அவன் சிறிதுகூடக் கவலையோ அச்சமோ படவில்லை. தன் உள்ளக் கருத்துக்களை அக்கக்காக அலசிப் பார்க்கவல்ல பெரிய அறிவாளியும், எப்படியாவது சோழர் படையெடுப்பை முறியடித்து விடுவதில் தணக்குமுன்னவனுமான பிரதாபருத்திரன் வியக்கத் தாராளி வலையில் தான் அகப்பட்டு மடிந்து சகல விட்டால், சோழர் படையெடுப்பின் கதி அதோகதியாகி விடுமே என்ற நினைப்பே அவன் இதயத்தில் விளக்க மொன்னாத இனியக் கிளர்ச்சியூட்டியது. சக்கரக் கோட்டத்துத் தலைவனான பிரதாபருத்திரன் ராஜாஜ்ஞை தானத்திலேயே சோழர் படைகளில் சென்று செயதலைவ மையால் சோழர் போர் முறைகளை நன்றாக அறிந்திருப் பானென்பதையும், அவனிடம் அவன் ராஜாஜ்ஞை படை அணிவகுப்பு முறைகளைச் சொல்லி விட்டால் சோழர் படைகளைப் பூண்டோடு முறியடிக்காவிட்டா லும், சக்கரக் கோட்டத்தைத் தாண்டிச் செல்லாத நிலைமைக்குக் கொண்டு வந்துவிடுவானென்பதையும் ஊகித்துக்கொண்ட கரிகாலன், நாகர்கள் தனபதியின் கைகளில் எப்படி மன் நுழைவது என்பதைப் பற்றிச் சிந்திக்கவும் செய்தான். பிரதாபருத்திரன் கேள்விகளுக்கு உடனுக்குடனே பதில் சொல்லி ஏமாற்ற முயன்றால் நாகர்கள் தனபதி, தன்னை நம்பமாட்டானென்பதிலும், அப்படி நம்பாவிட்டால் அவன் ஏற்கனவே சொல்லியபடி

தன்னையும் தன் சகாக்களையும் தூக்கில் போடத் தயங்க மாட்டான் என்பதிலும் சிங்காரனுக்குச் சிறிதும் சந்தேகமில்லை. தன் உயிரைப்பற்றி அவன் சிறிதும் கவலைப்படவில்லையென்றாலும், தன் சகாக்களின் உயிரைப்பற்றிக் கவலை இருந்ததால், தன்னை நம்பித் தொடர்ந்து தூழைத்துக்கும் அவர்களைக் காப்பாற்றுவது தன் கடமை என்று கருதினான். தன் உயிரைக்கூட அந்தச் சந்தர்ப்பத்தில் விட அவனுக்கு இஷ்டமில்லைதான். 'என் பிரபுவை ஒழித்துக்கும் மர்மத்தை அறியாமல் நான் சாகமாட்டேன். அந்த மர்மம் இந்தப் பிரதாபருத்திரனுக்கு ஏனைய எந்தத் திருக்கும் போலத்தெரிந்தால்' என்று நினைத்துக்கொண்டான்.

பிரதாபருத்திரன் மனதில் அப்போது அந்தரமான வேளை செய்துகொண்டிருந்தது. தன் எதிரில் நிற்பவன் யாரென்பதை எந்தவகையிலும் பிரதாபருத்திரன், அந்த வகையில் எத்தனை தவறு செய்தான் என்பதை எண்ணி மனஸ்தாபப்பட்டான். அந்த மனஸ்தாபம் பெருமூச்சாக வெளிவந்தது. அந்த பயங்கரத்தையே அனுபவித்த பிரதாபருத்திரனால் பெருமூச்சு விடாமல் அந்த மண்டபத்தின் தூண்களைச் சுற்றிக்கொண்டிருந்த பாம்புகளைத் தலைகளை நீட்டிக் கொண்டிருந்த சிறுத்தைகளின் சிலைகளை என்று சந்தேகப்படும்படியாக அவை தான் செய்தது அவை அப்படியல்ல. பிரதாபருத்திரனால் அடையக் கூடிய வெற்றி, எப்போது வேண்டுமானாலும் நிற்கும் நிலையில் இருக்கிறதென்பதைத் தன்னுணர்ச்சியாகத் தெரிந்து கொண்டு பிரதாபருத்திரனை அன்புடன் கவனித்தான். அவன் பேச்சுத் தெளிவாகத்தான் உருவெடுத்தது. ஆனால் அந்தத் தெளிவில் ஏதோ பரிதாபமான கலந்திருப்பதைக் கண்ட சிங்காரன் மிகுந்த ஏமாற்றத்துடன் சமயோசனையில் இறங்கினான்.

ஆரம்பத்தில் சம்பிரதாயமாகவே எழுந்தன பிரதாபருத்திரன் கேள்வி. "சிங்கா! சோழர் படையில் என்ன பதவி வகிக்கிறாய்?" என்று கேட்டான் பிரதாபருத்திரன். அந்தக் கேள்வியை அடியோடு மறுப்பதில் பயனில்லை யென்பதையும், தன் உண்மைச் சொரூபத்தை பிரதாபருத்திரன் பெரிதும் மதித்துவிட்டானென்பதையும் தரிந்து கொண்ட சிங்காரன், தன் வழக்கப்படி உண்மை யையும் பொய்யையும் கலந்து கலந்து பதில் சொல்லத் தொடங்கி, சக்கரக் கோட்டத்துக் தலைவன் கேள்வியால் திடீரென அதிர்ச்சியடைந்தவன் போல் பாசாங்கு செய்து "என்ன கேட்டீர்கள் மன்னவா?" என்று பதிலுக்கு வினவினான்.

சிறிதும் குழப்பமில்லாத இடமான குரலில் மீண்டும் எழுந்தது பிரதாபருத்திரன் கேள்வி: "சோழர் படையில் என்ன பதவி வகிக்கிறாய்?"

"உபதளபதியாயிருக்கிறேன்" என்று தயக்கமில்லாமலே பதில் சொன்னான் சிங்காரன்.

சிங்காரன் முகத்திலிருந்த கலக்கங்களை அதற்குள்ளாகவே மேற்கொண்டு தேவர்களைத் தொடர்ந்தான் பிரதாபருத்திரன். "உன் கீழ் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்?"

"ஆயிரம் பேர்கள்."

"அவர்களை எந்தப் பக்கத்தில் நிறுத்தியிருக்கிறாய்?"

"மேற்குத் திசையிலுள்ள காட்டுக்குள்."

இந்தப் பதில் பிரதாபருத்திரனுக்குச் சிறிது மகிழ்ச்சியை அளித்ததால், தன் தந்தைகளின் புன்முறுவல் சோக அடிப்படையில் [illegible] ஆரம்பித்து விட்டதென்பதை அறிந்து [illegible] கதிகலங்கியவாக இருந்தவன் பிரதாபருத்திரன் முகம் [illegible] சோபையை அளித்தது. அந்தப் புன்னகையின் உட் பொருளைப் புரிந்துகொண்ட சிங்காரனும் தன் கைச்சரக்குப் பலிக்க ஆரம்பித்து விட்டதை நினைத்து உள்ளூர

மகிழ்ச்சியடைந்தானானாலும், அதை வெளியில் காட்டா மலே மிகப் பணிவுடன் பதில்களை சொல்லலானான்.

"மேற்குத் திசையிலுள்ள காட்டுக்கருகிலா?" என்ற அட்சியமான குரலில் பிரதாபருத்திரன் மீண்டுமொரு கேள்வியை வீசினான். அந்த அட்சியம் போலியென் பதையும், தன்னைச் சோதிப்பதற்கு அது ஒரு போர்வை யென்பதையும் அறிந்துகொண்ட கரிகாலனும், சற்று எச்சரிக்கையுடனேயே பதில் சொல்லத் தொடங்கி, "ஆமாம் மன்னவா! அதனால்தான் தங்களைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது" என்றான்.

அந்தப் பதிலில் தொக்கி நின்ற பொருளைக் கவனித்த பிரதாபருத்திரன் லேசாகச் சிரித்துவிட்டு, "ஆம் கங்கா! உண்மைதான். என்னைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது அதனால்தான். நான் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் உண்மையாகப் பதில் சொல்லிக்கொண்டு வா. அந்தப் பாக்கியம் பன்மடங்கு அதிகமாகும்படி செய்கிறேன். முதன் முதலாக வேங்கிநாட்டு நிகழ்ச்சிகளை எடுத்துக் கொள்வோம். இப்பொழுது ராஜராஜ நரேந்திரன் எங்கிருக்கிறான்?" என்று வினவினான்.

இந்தக் கேள்வி கரிகாலனை ஓரளவுக்குத் திடுக்கிட வைத்தாலும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமலே "தங்கள் வாயிலேயே தற்சமயம் இருக்கிறார்" என்றான்.

"அரையன் ராஜராஜன் படையிலா?"

"ஆமாம்."

"எதற்காக இத்தப் படையுடன் வந்திருக்கிறான்!"

"அவர் சகோதரியின் விருப்பம் அது."

"யார், நிரஞ்சனாதேவியா சோழர்கள் படையில் தம்பியைப் பணிசெய்யத் தூண்டினாள்?"

"ஆம் அரசே! ஒரு காலத்தில் அவர் பெரிய வீரராகி, மீண்டும் வேங்கி நாட்டை ஆளவேண்டுமென்பது அரசகுமாரியின் கனவு."

"அது எப்படிப் பலிக்கும்?"

"ஏன் பலிக்காது?"

தெளிவாக, மெள்ள, ஆனால் வெகு உறுதியாக வெளி வந்தது பிரதாபருத்திரன் பதில். ஒவ்வொரு வார்த்தை யையும் அழுத்தி உச்சரித்தான் சக்கரக் கோட்டத் தலைவன். "பலிக்காதபடிதான் செய்து விட்டாயே கரிகாலா!" என்ற பிரதாபருத்திரன், அடுத்த விநாடி இடி விழுவது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. மண்டபமே அதிரும்படியாகச் சிரித்தான்.

மண்டபத்தின் விமானத்திலிருந்து எழுந்த சிரிப்பொலி யின் எதிரொலி பலிச்பலிச் சென்று கரிகாலன் தலைமீது விழுவது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. ஒருவினாடி திகைத்து நின்றான் கரிகாலன். அவன் பிரமையை விலக்க விரித்தான் பிரதாபருத்திரன். "கரிகாலா! உன்னைக் கண்டதுமே உன்னை இன்னா ரென்று நிர்மானித்து விட்டேன். சுயநன்மையையும் சோழ நாட்டு நலனையும் உத்தேசித்து நீ நிரஞ்சனா தேவித்துத் துரோகம் செய்ததும்; வேங்கி நாட்டு அரியணையை ஜெயசிம்ம சாளுக்கியன் மருமகனான விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனுக்கு விற்றுவிட்டதும், தக்கம் பக்கத்து அரசுகளில் பிரதி தினம் பேசப்பட்டு வருகிறது. லாபம் மட்டும் இருக்கும் பட்சத்தில், நீ யாரை யும் காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டாய் என்று ராஜ தந்திரிகள் கூறுகிறார்கள். ஒற்றர்கள் மூலம் கிடைத் திருக்கும் செய்தியும் அதுதான். ஆகையினால்தான், உன்னுடன் இன்று தனிமையில் நானும் பேச வேண்டுமென்று எண்ணினேன்" என்றான்.

கரிகாலன் சித்தனையில் எண்ணங்கள் எழுந்து புரண் டன. வேங்கி நாட்டு விவகாரங்களால் எத்தனை அபகீர்த்தி தனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நினைத்து ஒரு விநாடி ஏங்கினானாயினும், அந்த அபகீர்த்தியும் அந்தச் சமயத்தில் தனக்கு உதவுவதை

நினைத்து வியந்தான். 'இப்படி ஓர் அபரிக்த இன்ப விடில், நானும் என் சகாக்களும் இத்தனை நேரம் காத்தே தொங்கலாடியிருப்போம். இவன் ஏதோ ஓரை காட்டி என்னிடமிருந்து அரையன் ராஜராஜன் அணிவகுப்பைப் பற்றித் தகவல் அறியப் பார்க்கிறான். சுயநலத்துக்காக நான் எதையும் செய்வேனென்பதிலும் இவனுக்குச் சந்தேகமில்லை' என்று தலைகுத்தானே இவனுக்குச் சொல்லிக் கொண்ட கரிகாலன் கடைசியாகப் பிரதாபருத்திரனை ஏறெடுத்து நோக்கி, "மன்னவா! நான் யாரென்பதையும், என் பெயர் என்ன என்பதையும் எப்படியோ ஊகித்து விட்டீர்கள்..." என்று ஆரம்பித்தான்.

அவன் பேச்சை இடையில் வெட்டிய பிரதாபருத்திரன் "இதில் அதிக ஊகத்திற்கு இடமில்லை கரிகாலா! வேங்கி நாட்டிலும் மேலைச் சாளுக்கிய எல்லையில் அரையன் ராஜராஜன் பாசறையிலும் நடந்த உன் வீர விளையாடல்களை உலகம் அறியும். வேங்கி நாட்டு மக்களே அதைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். போதாததற்குச் சேர நாட்டு ஒற்றன் ஜெயவர்மனும் உன்னைப்பற்றி அடிக்கடி கூறியிருக்கிறான்" என்றான்.

"என்ன கூறியிருக்கிறான் அரசே?" என்றான்.

"நீ பெரிய பொய்யன்; தந்திரசாலி; உன்னை நம்பக் கூடாது என்று."

"ஓகோ!"

"அது மட்டுமல்ல; உன் பெயரையும் அங்க அடையாளங்களையும் சொல்லியிருக்கிறான்."

"அப்படியா?"

"ஆமாம், காட்டுக்கு ஓரமாக உன் பாசறை இருப்பதும் அவனுக்குத் தெரியும். என்றாவது அவன் உன்னிடம் பிடிபடக்கூடும் என்று பயந்து கொண்டிருந்தான். அது நடந்துவிட்டது."

கரிகாலன் சிறிது நேரம் மௌனம் சாதித்தான். "ஏன் மௌனம் சாதிக்கிறாய் கரிகாலா?" என்று பிரதாபருத்திரன் வினவினான்.

"நான் பேச என்ன இருக்கிறது மன்னவா! என்னை பரிசோதனையும் நீங்களே சொல்லிவிட்டீர்களே!"

"இதையெல்லாம் நான் முன்பே அறிவேன் கரிகாலா! ஆனால் நான் அறியாத விஷயங்களும் இருக்கின்றன. உதாரணமாக, அரையன் ராஜராஜன் படை அணிவகுப்பைப்பற்றி எனக்குத் தெரியாது. அரையன் ராஜராஜன் படைப்போர்த் திட்டமும் எனக்குத் தெரியாது. அவற்றை உன்னிடமிருந்து அறிய இஷ்டப்படுகிறேன். சொன்னால்..."

"சொன்னால்?"

"உனக்குச் சக்கரக் கோட்டத்தில் பெரும் பதவி கொடுக்கும்."

"என்ன பதவியளிப்பீர்கள்?"

"எனக்கு அடுத்தபடி உன்னை இக்கோட்டத்தின் காவலனாக நியமிப்பேன். நாகர்கள் உனக்குத் தலை வணங்குவார்கள். உன் பிற்காலம் பயனுள்ளதாக இருக்கும்."

"அத்தனை பெரிய பதவியா?"

"ஆமாம் கரிகாலா! அத்தனை பெரிய பதவி இப்பொழுது உன் காலடியில் கிடக்கிறது!"

இதைக் கேட்ட கரிகாலன், ஏதோ யோசிப்பது போல் பாசாங்கு செய்தான். பிரதாபருத்திரன் அளிக்கும் பதவியை உடனே ஒப்புக்கொள்வது சந்தேகத்தை அளிக்கும் என்று நினைத்து, இருப்பியடையாதவன்போல் பேச ஆரம்பித்து, "மன்னவா! நான் பதவிக்கு ஆசைப்பட்டு இதைச் செய்ய முன்வரவில்லை. அத்தனை

கலவனல்ல நான்'' என்று மலைமருக்கத்தை வேலாக காட்டினான்.

''வேறு எதற்கு இளைப்பறுகிறாய்? சொல், பொய் படைகளை விலக்கு வாங்கவல்ல நாகரத்தினங்கள் வேண்டுமா? பொற்காசுகள் கொடுக்கவல்ல வேண்டுமா?'' என்று ஆசை காட்டினான் பிரதாபருத்திரன்.

''அனைவும் வேண்டியதுதான். அத்துடன்...''

''என்ன?''

''என் பிறப்பு மர்மம்.''

பிரதாபருத்திரன் சற்று யோசித்தான்; பிறகு சொன்னான்: ''பிறப்பு மர்மத்தைச் சொல்ல எனக்கு நன்பருக்குக் கொடுத்த பிரமாணத்தை உடைக்க வேண்டும்...'' என்று.

''தர்மம் அதற்கு இடம் கொடுக்கிறது மன்னவா!''

''தர்மத்தைப் பற்றிச் சிந்திப்போ உனக்கு?''

''தர்க்க சாஸ்திரத்தை நன்றாகப் படித்திருக்கிறேன்.''

''அந்த சாஸ்திரம் என்ன சொல்லுகிறது?''

''பெரிய நன்மைகளைப் பெற, சிறிய பாவங்களைச் செய்யலாம் என்று கூறுகிறது. இந்தக் கோட்டையைப் பாதுகாப்பது நமக்கு தர்மம். அதற்காகப் பிரமாணத்தை உடைப்பது தவறாகாது.''

''அப்படியே பிரமாணத்தை மீறுவதானால், அரையன் ராஜராஜன் படைகளை உடைத்து வழி கொள்கிறாயா?''

''சொல்வதைத் தவிர வேறு வழியில்லை எனக்கு!''

கரிகாலனை ஒரு கணம் கூர்ந்து கவனித்தான் பிரதாபருத்திரன். பல சந்தேகங்களை உடைத்தெறியும் அந்தக் குழந்தை முகம், யாரையும் மயக்கும் அந்த விஷமப் புன்முறுவல், அவன் சந்தேகங்களையும் உடைத்தெறியவே அவன் சொன்னான்: ''கரிகாலா! அந்தப் பிரமாணம் எத்தன்மையதென்பதை நீ அறியமாட்டாய்.

நான் மீறுவதும் அவ்வளவு கடினமல்ல. மீறினால் என்ன நடந்துவிடும் அதற்கு பரிகாரங்கள் இருப்பினும் சொல்கிறேன். நாகர்களின் நன்மைகளை முன்னிட்டு என்னை மன்னிக்கலாம். என் வம்சத்தாரும் ஆகாய செல்கிறேன். இந்தப் போரில் அரையன் ராஜராஜன் படைகள் முறியடிக்கப் பட்டால், உனக்கு இந்நாட்டில் பெரும் பதவி கிடைக்கலாம். சோழ நாட்டையே ஒரு கலக்கு கலக்கலாம். ஆனால் பிறப்பு மர்மத்தைக் கூறுகிறேன். தீர்மானித்து சொல், அரையன் ராஜராஜனின் படைகளின் அணிவகுப்பு எப்படியிருக்கிறது?''

கரிகாலன் எதை யோசிப்பது என்றும், தகவலைக் கடினப்பட்டாலும் பரவாயில்லை என்றும் சிறு கோல் பரப்பு முன்னிட்டுத் தான் தெரிவதைச் சொல்லிவிடும் என்று வந்த அணிவகுப்பு யானை தேர்களைப் பற்றி மனத்தில் சொல்லத் தொடங்கினான். அந்தப் பெரும் பிரதாபருத்திரன் கம்பீரத்திற்காக வாளை உள்ளங்கையும் வைத்து கொண்டான். ''மன்னவா! அரையன் ராஜராஜன் படை மூன்று பிரிவாக பிரிந்து நிற்கிறது. உங்களுக்கு நேர் எதிரில் பிரும்ம மாராயன் சைன்யப் படைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இடுக்குக் கதவுக்கெதிரில் அரையன் ராஜராஜன் தன் படைப் பிரிவை நிறுத்தி இருக்கிறான். மற்றப் படைகள் தெற்கையச் செல்லியின் நிலையிலும், ராஜராஜ சோழன் தலைமையிலும் காடு முகப்பில். அதாவது மேற்குப் பகுதியில் நிற்கின்றன'' என்று விவரித்துச் சற்றுப் பேச்சை நிறுத்தினான்

பிரதாபருத்திரன் விவரணைகளில் விழிகளைக் கரிகாலன் மீது நாட்டி, ''ஓ! கரிகாலா! விளக்கமாயிருக்கிறதே! பிரதான படைத்தலைவன் பக்கவாட்டிலும், அவனுக்கு அடுத்தவன் நேர் எதிரிலுமா அணிவகுத்து நிற்பார்கள்! சோழநாட்டுப் போர் முறைக்கே இது முரணாயிற்றே!'' என்று கேட்டான்.

மன்னா? அதனால்தான், கடைசிக் கட்டத்தில் அவர்களை நிராயுதபாணிகளாக்கும்படி ஏற்பாடு செய்தேன்.''

பிரதாபருத்திரன் மனத்தில் ஏதாவது சந்தேகமிருந்தால், இந்தப் பதில் அந்தச் சந்தேகத்தை அறவே கடைத்து விட்டது. யானைப் படைகள் பின்னணிக்கு அழைத்துச் செல்லப்படுவதாகக் கோட்டையிலிருந்து பார்த்த அவன் வீரர்கள் அவனுக்குத் தகவல் கொடுத்திருந்தார்கள். ஆகவே, கரிகாலன் சொன்னது அனைத்தும் உண்மையே என்று பிரதாபருத்திரன் நம்பிப் பூரண மகிழ்ச்சியுடன் கேட்டான்: ''எந்தச் சமயத்தில் அவர்கள் கோட்டையைத் தாக்க உத்தேசம்?'' என்று.

''நாளை நள்ளிரவில் கோட்டைக் கதவுகளைத் திடீர்த்தனமாகத் திறந்துவிடுவதாகக் கூறியிருக்கிறேன்'' என்றான் கரிகாலன்.

''மகிழ்ச்சி கரிகாலா! அதே நள்ளிரவில் கோட்டைக் கதவுகளைத் திறக்கிறேன். ஆனால் அவர்கள் இஷ்டப்படி போர் செய்ய அல்ல; என் இஷ்டப்படி புரிய. இழக்கு வாயில் அரையன் ராஜராஜனை என் படைகள் எதிர்த்தும் தெற்கு வாயிலில், என் உபதளபதி பிரும்ம மாராயரைச் சந்திப்பார். மேற்குத்திசைக் கதவைத் திறக்கவே மாட்டோம். இந்த இரண்டு கதவுகளும் சற்று நேரம்தான் திறந்திருக்கும். அரையன் ராஜராஜனும் பிரும்ம மாராயரும் படை முகப்பில் நின்று போர் புரிவார்கள். அவர்கள் கோட்டைக்குள் நுழைந்ததும், கதவுகள் எதிர்பாராத விதமாகச் சாத்தப்படும். சில வீரர்களும் அரையன் ராஜராஜனும் பிரும்ம மாராயரும் கோட்டைக்குள்ளே சிக்கிக் கொள்வார்கள். பிறகு அவர்கள் கதி அதோகதியாகிவிடும்'' என்று தன் போர்த்திட்டத்தை விளக்கிய பிரதாபருத்திரன், தன் சாமர்த்தியத்தை எண்ணிப் பெரிதாக நகைத்தான்.

மறுநாள் அவன் ஏற்பாட்டின்படியே படைகள் கோட்டைக்குள் அனுப்பப்பட்டன. வீரர்கள் ஆயிரக்

கணத்தில் வாயில்களுக்கு அருகே காவலுக்கிருந்த
ஒற்றர் நின்றார்கள். பூர்ண கவசங்களுடன்
குதிரைமேல் தன் பெரும் புரவி மீது கம்பீரமாக அமர்ந்து
கோட்டை வாயிலை நெருங்கினான் அவன் வரவை
அறிவதற்காகவே அவனை நோக்கி ஓடி வந்த வீரன்,
"மன்னவா! சோழப் படைகள் நகர் ஆக்கிரமித்து விட்டன"
என்று எச்சரிக்கை செய்தான். அதைக் கேட்ட பிரதாப
ருத்ரன், வானை நோக்கி உயர்த்தி ஏதோ சமிக்ஞை
செய்தான். ஆயிரக்கணக்கான வாட்கள் ஆகாயத்தில்
எழுந்து ஒருமுறை ஆடித் தாழ்ந்தன! எங்கும் திகழ்ந்த
கோட்டைக்கு வெளியே சோழப்படைகள் மெல்ல மெல்ல
நகர்ந்து வந்தன. அந்தப் படைகளின் ஒவ்வொரு
கண் தவறில் மாறிமாறிப் பரிந்ததால் ஏற்பட்ட சப்தம்
மெல்ல மெல்லக் கேட்டது. பெரிய கடல் ஒன்று பிளவுபட்டு
பிரிந்து நகரக் கோட்டத்தின்மீது மோத வருவதாகத்
தோன்றியது. எதிரியத் தாக்குதலாதலால் பந்தங்கள்கூடக்
கொளுத்தப்படவில்லை. பிரகாரத்தின் சுவரிலே நின்று
நெருங்க வருவது போன்ற பிரமையை அளித்துக்
கொண்டே நகர்ந்தது. சோழர்களின் பெரும்படை.
அந்த கணத்தில் நிகழ்போகும் பெரும்போரில் உயிர்
களைப் பிடிப்பதற்காகக் காலதேவனே தன் பாச
கயிற்றை வீசுவது போல், நீண்ட கருமேகம் ஒன்று
ஆகாயத்தில் மறுக்கே எழுந்தது. இந்தப் போர்த்
தாண்டவத்தைப் பார்க்க அச்சப்பட்டனை போல்
மேற்றிசைக் காட்டிலிருந்த பறவைகளெல்லாம் 'கூ கூ' என்று
கூவின. வேகமாக அந்தப் பக்கத்தை நோக்கி நகர்ந்த
சோழர் ரதங்களின் சக்கரங்கள் அந்தக் 'கூ கூ' ஒலித்துடன்
தங்கள் 'கிரீச் கிரீச்'சென்ற அலறலையும் இணைத்துக்
கோரமான சூழ்நிலையைச் சிருஷ்டித்தன.

சோழர் படைகள் மெல்ல சூழ்ந்து வாயில்களையும்
நெருங்கின. அப்படைகளை எழுந்த முற்பட்ட வான்து
புருஷனின் பெரு வாய்களைப்போல் சக்கரக் கோட்டத்
தின் கிழக்கு, தெற்கு வாயிற்கதவுகள் மெல்லமெல்ல
திறக்கத் தொடங்கின

57. நாக விஷம்

சூர்யோதயம் பிரிவுகளாகப் பிரித்து, ஆங்காங்கே
போர்களைப்போல் இரண்டு எழுந்து, சக்கரக்
கோட்டத்தின்மீது மோதி, அதை சுழற்றியடித்துவிட
தெற்கில் சோழப் பெரும் படையை எதிர்க்க ஆயத்த
மாகக் கோட்டைக்குள்ளே நின்ற பிரதாபருத்திரனுக்கு,
திரண்டு பெரிய ஏமாற்றங்கள் காத்துக் கொண்டிருந்தன.
அரையன் ராஜராஜன் இழுக்கு வாசலிலும் பிரும்ம
மாராயர் மேற்கு வாசலிலும் தாக்குவார்கள் என்று
சரியாகவே சொன்ன பொய்யால் ஏற்பட்ட ஏமாற்றம்
ஒன்று; கோட்டை வாயில்களை நெருங்கியதும் அரையன்
ராஜராஜன் திடீரென்று போர்முறையை மாற்றிவிட்டது
மற்றொன்று. இந்த இரண்டாவது ஏமாற்றத்திற்கான
அறிகுறிகள் சோழப் படைகள் வாயிலை நெருங்கியதுமே
ஏற்பட்டதைக் கண்ட பிரதாபருத்திரன், சற்றுப்
பிரமித்தே போனான்.

சோழப் படைகள் இழுக்கு, தெற்கு வாசல்களில்
நேரடியாக உட்புகும், அவற்றில் ஒரு பகுதியை உள்ளே
விட்டு மீதியைக் கதவை மூடித் தெக்கிடலாம் என்ற
எண்ணத்தில் கதவுக்குப் பக்கவாட்டில் மட்டுமின்றி
நகரத்தின் மேலேயிருந்து சுமார் கட்டைகளைக் கொண்டு
கதவுகளை மூடவும் வீரர்களை நிறுத்தியிருந்தான்
பிரதாபருத்திரன். ஆனால் அரையன் ராஜராஜன் போர்த்
திட்டத்தில் ஏற்படுத்திய மாறுதலும், அவன் கையாண்ட
வேறு சில முறைகளும் பிரதாபருத்திரனின் திட்டங்களை
அடியோடு குலைத்தெறிந்து விட்டன.

களிகாலன் செங்கமலச் செல்வியிடம் சொல்லிவிட்டுப்
போனபடிதான், அரையன் ராஜராஜனும் படைகளை
அணிவகுத்துச் சக்கரக் கோட்டத்தின் பெரும் வாயில்
களை அணுகினான். ஆனால், அந்த வாயில்களைத் தான

அணுகுவதற்கும் அந்த வாய்ப்புகள் ஏதோ கண் படைகளை எதிர்பார்த்தலைபோல் நிறுத்தகத்தும் ஒரு சக்தியாக இருந்ததைப் பார்த்து ஒரு விநாடி கண் பார்வையை சட்டென்று நிறுத்தி, மற்றப் படைகளையும் உட்புறம் திருத்த தன் வாளை உயர்த்தி சமிக்ஞை செய்தான். எத்தனையோ போர்களைக் கண்டவனும், தோற்பிய சாணக்கியன் போன்ற பெரிய தந்திரசாலிகளையே முறியடித்திருப்பவனும், வெகு குட்டி புத்தியை உடையவனுமான அரையன் ராஜராஜனுக்கு அந்தக் கதவுகள் அத்தனை எற்பாட்டுடன் சரியான சமயத்தில் இரண்டு பெரும் சந்தேகத்தை அளித்தது. கரிகாலன் உள்ளேயிருந்து அந்தக் கதவுகளைத் திருட்டுத்தனமாகத் திறந்திருந்தால், கதவுகள் மிக அவசரமாகவும் வேகமாகவும் இறக்கப் பட்டிருந்தமென்பதையும், ஏதோ அரசர்கள் வரவேற்புக் காகத் திறக்கப்படும் கதவுகளைப்போல் அத்தனை நிதானமாக, ஒழுங்காகத் திறக்கப்பட வாட்டாமல் பதையும் உணர்ந்துகொண்ட அரையன் ராஜராஜன், இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறதென்ற முடிவுக்கு வந்தும், அவன் உத்தரவுகளும் மின்னல் வேகத்தில் பறந்தன.

தன் உபதளபதிகளில் மூவரை அழைத்து, சோழ படைத்தலைவன் கிழக்கு வாயிற்கதவை மூட ஆரம்பிக்கும் வரையில் தாக்க ஆரம்பிக்க வேண்டாமென்றும், மூடத் தொடங்கியதும் திடீரென உட்புறமாய்ப் பாய்ந்து சொல்லி பிரும்ம மராயரிடம் ஒரு உபதளபதியை அனுப்பினான். இன்னொரு உபதளபதியை அனுப்பி மேற்கு வாயில் படைகளுக்குத் தலைமை தாங்கி நின்ற செங்கமலச் செல்வியை உடனே அவ்வாயிலைத் தாக்கிக் கதவுகளைப் பற்றுப் பதினைந்து யானைகளைக்கொண்டு தொறுவில் உட்புறமாய் ஆர்ப்பரித்துவிட்டு மற்றொரு உபதளபதியை நோக்கி சமுன்று கோட்டைக் கதவுகளுக்கும் மேலே தெரிந்த கூரை சக்கரங்களைக் காட்டி அந்தச் சக்கரங்களை இயக்க வரும் வீரர்களை அம்பெறிந்து கொன்றுவிடுமாறும் உத்தரவிட்டான்.

அரையன் ராஜராஜன் உத்தரவுகள் கண நேரத்தில் நிறைவேற்றப்பட்டன. மூன்று பிரிவுகளாய்ப் பிரிந்த வீரர்கள் வாய்க்கால் மீதுள்ள கழற் சக்கரங்களுக்கு அருகிலும் மேலும் தொற்றி ஏறினர்கள். தன் தந்தையைப் போலவே தங்கக் கவசத்தை அணிந்து, அந்தப் போர் களத்திலும் தூய அழகு பொலிந்து விளங்க நின்ற செங்கமலச் செல்வி, தன்னருகில் நின்ற யானைப் பாகனிடமிருந்த யானையைப் பக்கவாட்டில் பாய்ந்து ஓடச் செய்து, மேற்கு வாயிற் கதவுகளைத் தாக்கும்படி தன் வீரர்களுக்கு உத்தரவிட்டாள். துரிதகதியில் நீண்ட மரங்களைக் கொண்டு யானைகள் மேற்கு வாயிற் கதவுகளைப் பேரிடியாக இடிப்பதை உணர்ந்து கொண்ட பிரதாபருத்திரன் பிரமித்துப் போனான். தாக்குதல், நிறுத்திருந்த மற்ற இரண்டு வாயில்களது பார்வையை மீறி வராமல், மேற்கு வாயிலிலிருந்து மட்டுமே வருவது பெரும் வியப்பை அளித்தது. பிரதாபருத்திரனுக்கு மிகத் தந்திரமான எதிரியால் தான் ஏமாற்றப்படுவதை அறிந்த பிரதாபருத்திரன், கோட்டைத் தளத்தின் மேற்குப் புறத்திலிருந்த வீரர்களை அப்படியே யானை களை விட்டுவிட்டு பாய்ந்துவரும்படி, மற்ற இரு வாயில் களையும் மூடுமாறும் உத்தரவிட்டான்.

அந்தப் போர் நிலையில் எந்தத் தளபதியும் இடக் கூடிய உத்தரவுகள் அவைதான். ஆனால் அந்த உத்தரவு களை நிறைவேற்றுவதில் நூற்றுக்கணக்கான தன் வீரர் கள் பலியாவார்கள் என்பதைத்தான், அந்தப் பலியும் வீண் பலியாகும் என்பதைத்தான் பிரதாபருத்திரன் எதிர்பார்க்க வில்லை. இந்த நிலைக்குக் காரணம் என்ன என்பதை அறியாமலிருந்தால் அதை எளிதில் கரிகாலனும் அருகில் இல்லை. அவனையும் அவன் சகாக்களையும் சிறையிலடைத்துவிட்டே பிரதாபருத்திரன் யுத்தத்துக்குக் கிளம்பியிருந்தான். இப்படிப் பல வகையிலும் குழம்பித் நின்ற பிரதாபருத்திரன், நிமிஷத்தில் தன்

படைகளின்மீது மோதிய மற்றொரு பேரதிர்ச்சியை சமாளிக்க வேண்டியதாயிற்று.

அவன் உத்தரவுப்படி யானைகள்மீது ஏறி முன்ற வீரர்கள், கோட்டைத் தளத்தை அடைந்து அதில் தொங்கிய கயிறுகளைப் பற்றிக்கொண்டு அந்தத் தளத்தில் ஏறினர். ஒன்று இரண்டு என்று கணக்கில் அடங்காத வீரர்கள் ஒரே நேரத்தில் அப்படி கோட்டை மீது தொங்கிய வீரர்கள், தொடர்ந்து அம்புகள் பாய்ந்து 'ஹர ஹர' வென்று பயங்கர கூச்சலிட்டுச் சாய்த்தார்கள். அந்த மரணக் கூச்சலை அடுத்து எழுந்த பெரும் போர்க் கூச்சலுக்கு ஈடாயிற்று.

மேற்குவாயிலில் யானைகள் உந்தப்பட்டு மோதுகளைத் தாக்கின; மத்தகங்களைக் கிழித்தன. அத்துடன் நகங்கள் முகப்பிலும் பெரும் யானைகளை இணைத்துப் புனிகளை வெடி வெடித்துச் சிதறுகளை தொடுக்க உத்தரவிட்டான். அதன்படி அந்த மோதல்களால் கதவு பலமாகச் சேதமடைந்து, தொடர்ந்து சரமாரியாக வெடிகள் வெடித்ததும், அந்த கதவுகள் பக்கவாட்டிலிருந்து திறக்கப்பட்டன. மூடத் தொடங்கிய 'கேர் கேர்' என்று பெரும் ஒலியுடன், அவை மூடத்தொடங்கியதும் அதற்குள் யானைகளை செலுத்த, பெரும் கோஷத்துடன் முன்னேறிய கடலைப்போல் உள்ளே புகுந்த தானும் படைகளின் பேரலையும், எல்லாரையும் தாக்கி பிளவு சத்தத்தால் ஏற்படும் பெரும் பயங்கரத்தை ஏற்படுத்தின.

மூடத்தொடங்கிய கதவுகள் எல்லாரும் மூடுவதற்குள்ளாகவே, வெள்ளம்போல் நுழைந்த படைகள் கட்டுப்படுத்திவிட்டதாலும், கதவுகளுக்கு பக்கத்திலிருந்த வீரர்களை எதிர்பாராத விதமாகத் தாக்கப்பட்டதாலும் கோட்டைக்குள்ளே திடீரெனக் கடும் போர் மூண்டது. புனிகள்

தோறும் 'வெட்டுங்கள்; குத்துங்கள்; அம்புகள் பறக்கட்டும்; வாட்கள் சுழலட்டும்' போர் அரக்கனின் கோபமும் பயங்கரச் சொரூபத்தை அடைந்தது. கோழை வீரர்கள் திடீரென மடியத்தொடங்கியதால், தாக்குதலின் முதற்பலனை அவர்களே அடைந்தார்கள். அவர்கள் வாளுக்கு இரையான மாகளிர் வீரர்களின் தலைகள் கீழே புரண்டு எரிகளின் கால்களில் மிதிபட்டு கண்களும் வாய்களும் சிதைந்து, ரத்தமும் சதையும் பிய்ந்து தொங்கும் பயங்கரமான காட்சியளித்தன. தலையிழந்த முண்டங்களோ இருதயம் நிற்பதற்குள் முடிவாகத் தள்ளாடித் தள்ளாடி நடந்து நடந்து கடைசியில் விழுந்தன. அவற்றின் மார்மீதும் வயிற்றின் மீதும் புனிகள் குளம்புகளை அழுத்தி ஏறி ஓடின.

மாற்றானால் எதிர்பார்க்கப்படாத விதமாகத் தாக்கப்பட்ட பிரதாபருத்திரனும் தன் பெரும் யானை கழுத்தைத் தொங்கு நிழுத்து வாயில் அலறிக் கொண்டு திரும்பி ஓடத் தொடங்கினான். அதைக் கண்ட தளபதிகளும் ரத்தம் தெறித்த வாளுடனும் ஈட்டியுடனும் தங்கள் யானைகளைத் தாக்கி காத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் முழுதும் திவிட்ட போரில் முத்திரைக்கு விட்டானைகளையும் கவனிக்க யாருக்கும் நேரமில்லை. அந்தச் சந்தர்ப்பத்தை முத்திரை கொடுத்தது. முன்னேறிய படைகளை மின்னலென்பதை உணர்ந்த முத்திரை தன் படைகளை நடத்தினான். விருந்தே பார்க்க முடியாதபடி ரத்தம் தாங்க முடியவில்லை.

போரிலே ஈடுபட்டிருந்த வீரர்களைக் காட்டிலும் வல்லவராகையால், மிகுந்த ஆற்றலுடனும் மனோதைரியத்துடனும் போரிட்டு வந்த பிரும்ம மாராயர், அன்று பெரும் பிரும்ம

ராட்சசனைப்போல் தோன்றினார். அந்தச் சூழ்நிலை பிறந்தவராயினும் போர் வெறியை அதிகமாக உடைய பிரும்ம மாராயர் தமது பெரும் குதிரையை நான்கு பக்கமும் திரும்பி கழுவிட்டு, எல்லா வாட்களையும்விட அகலமும் கனமும் நீளமுமுள்ள தமது வாளைச் சுழற்றிச் சுழற்றி அருகே நெருங்கியவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்திக் கொண்டு பிரதாபருத்திரனை நோக்கி வந்தார். வாளால் மட்டும் போரில் அவருக்குத் நிகரில்லை யென்பதும், வேலெறிவதில் மிகுந்த இலக்குடைய வரென்பதும் மிகப் பிரசித்தியென்பதைப் பிரதாபருத்திரனும் அறிந்திருந்தானாகையால், அவனும் மிகுந்த எச்சரிக்கையுடன் போரிட்டான். புரவியின் பக்கவாட்டிலிருந்த தோற்பட்டையிலிருந்து பிரும்ம மாராயர் சட்டென்று கனிலொன்றை எடுத்துப் பயங்கரமாக வீசியபோதும், தலைகுனிந்து தப்பிக்கொண்ட பிரதாபருத்திரன், தனது வாளையும் சுழற்றிச் சுழற்றி சேழ வீரர்களை வெட்டிக் குவித்துக் கொண்டு பிரும்ம மாராயரை நோக்கிச் சென்றான். அவன் கூச்சலைக் கேட்ட அவன் வீரர்களும், மிக உக்கிரமாகப் போரிட்டு அலை அலையாக பிரும்ம மாராயர் படைப் பிரிவை மீறி மோதினார்கள்.

போர் உக்கிரமாவதைக் கண்ட பிரும்ம மாராயர், ராட்சத சிரிப்பொன்றை வெளியிட்டார். அவர் முகத்திலே தெளித்துக் கூடந்த மாற்றார்கள் ரத்தமும், அவர் இருப்புக் கவசத்திலும் காலிலும் ஓட்டிக்கொண்டி ருந்த சிறு சதைப் பற்றுகளும், வாளை அல்லப்பொழுது துடைத்துத் திரட்டி அவர் வீசியெறிந்த சதையும் ரத்தமும் இணைந்து சிறுசிறு பந்துகளாக எல்லாமுமாகச் சேர்ந்து, வருகிறவன் மனிதனா அல்லது பிசாசா என்று சந்தேகமுறச் செய்தன.

இவர் போர் முறைக்கு முற்றிலும் மாறாக இருந்தது அரையன் ராஜராஜனின் போர்முறை. அவன் புரவி, வீரர்களின் கூட்டங்களுக்கிடையே அம்புபோல் பாய்ந்து

சென்றது. அவன் கரத்திலிருந்த நீண்ட மெல்லையான வாள், மின்னல் வேகத்தில் ஏதோ தெளித்து வரும் சர்ப்பம் போல் கனவேகத்தில் சுழன்றது. அது பட்ட இடங்களி லெல்லாம் வீரர்கள் பட்டென்று சாய்ந்தனர். வாளைச் சுழற்றுவதிலும் கலை இருக்கிறது. அதிலும் மெல்லமை வாளுக்கு நன்மை இருக்கிறது என்பதை அரையன் ராஜ ராஜன் நிரூபித்தான். அன்றையப் போரில், வாள் தடால் தடாலென்று பாய்வதைவிட எப்படி வாளைப்பழக்கில் செலுத்துவது போல, அதை மனித உடலில் செருகி ஆவியைக் குத்தச் செய்யலாம் என்பதைக் காட்டினான் அரையன் ராஜராஜன். அவன் நுழைந்த தெற்கு வாசலில் இருந்த மாகணி வீரர்களின் அணிவகுப்பு கண்ணிமைக்கும் நேரத்தில் வலைக்கப்பட்டது. உள்ளே நுழைந்த அவன் படைப் பிரிவு அவன் செய்த சைகையையொட்டித் திடீரென்று இரண்டாகப் பிரிந்து தெற்கு வாயிலின் மாகணிப் படையை வளைத்துக் கொள்ளவே எதிரிகளின் நிலைமை மிக அபாயமான கதிக்கு வந்துவிட்டது.

பிரும்ம மாராயரின் படையுடன் போர் செய்து கொண்டே சற்றுப் பின்னால் திரும்பி நோக்கிய பிரதாப ருத்திரன், தான் பிரதாபத்தில் சிக்கிவிட்டதை உணர்ந் தான். உள்ளே நுழைந்த சில விநாடிகளுக்குள்ளாகவே, அரையன் ராஜராஜன் படைப்பிரிவு நாகர்களில் பெரு வாரியான பேர்களை வெட்டி வீழ்த்திவிட்டதையும், தன்னை நோக்கிப் பின்புறத்தில் அரையன் ராஜராஜன் நெருங்குவதையும் கண்டான். பிரும்ம மாராயருக்கும் அரையன் ராஜராஜனுக்கும் இடையில் தான் சிக்கி விட்டால் தனக்கு நிச்சயமாட்சம் கிடையாதென்பதையும் புரிந்துகொண்ட பிரதாபருத்திரன் தன் படை களைச் சிறிது பின்னுக்கு நகரும்படி செய்து, ஒரே முகமாக எதிரிகளைச் சமாளிக்க எண்ணி, அதற்கேற்பத் தன் வாளை உயர்த்தி இருமுறை சைகை செய்தான். அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது.

அவன் சைகை செய்து படைகளைப் பின்னுக்கு வரச் சொன்னான். மேற்கு வாசல் கதவுகளை உடைத்துக் கொண்டு செங்கமலச் செல்வி தனது ரதத்துடனும் காலாட்படைகளுடனும் உள்ளே புகுந்தாள். சக்கரக் கோட்டத்தின் மேற்கு வாயில் வழியாக ரதங்கள் பாய்ந்து வந்தன. அவற்றுக்குப் பக்கவாட்டில் வந்த போர்வீரர்கள் பயங்கரமான கூச்சலிட்டுப் பலரை மிதித்தனர். பலரை புலிகளிலிருந்து தாக்கி ஆகாயத்தில் விட்டெறிந்தனர். இன்னும் சிலரைப் பக்கவாட்டுக் கவசங்களில் மோதி, தலையை உடைத்தனர். செங்கமலச் செல்வி விடமிருந்த வில்லவர்களும் ரதவீரர்களும் அரையன் ராஜராஜன் படைப் பிரிவோடு இணைந்தனர்.

இத்தனைக்கும் சளைக்காமலே பிரதாபருத்ரன் போரிட்டான். இந்த மாதிரிப் போர் முறைகள் பலவற்றை ஆய்ந்து முழுவதும் கற்றுவைத்திருந்தான் அரையன் ராஜராஜன். செங்கமலச் செல்வியின் படையைக் கோட்டைக்குள் நன்றாகப் புகவிட்டு எதிர் அணிவகுப்பை மீறும் உடைத்து விட்டான். பிரதாபருத்ரனின் படைகளை சிறுசிறு கூட்டங்களாகப் பிரித்து நின்று போரிட்டனர்.

போர் அரை ஜாம நேரம்தான் நடந்தது. ஆனால் எத்தனை உக்கிரமான போர்! தாக்கள்தான் எத்தனை வீரவேசத்துடன் போர் புரிந்தார்கள்! அந்தப் பிரும்ம மாராயரென்ன அந்தணரா! அரசனா! அதென்ன கோரச் சிரிப்பு! கோரக் கூச்சல்! அவர் கையிலிருந்த வாளா, அல்லது சும்பகர்ணன் தண்டாயுதமா!

சக்கரக் கோட்டத்தின் போர் பிரமிக்கும்படியான போர்! சோழர்களை போராத் தந்திரம், வீரம், இத்தனைக்கும் பெரும் சோதனையாக வந்த போர்! அந்தச் சோதனையில் சோழர்கள் அடைந்த வெற்றி, சரித்திரத்திலும் பொறிக்கப்பட்டிருப்பதில் வித்தை என்ன இருக்கிறது!

அரை ஜாமத்தில் ஒரு மாபெரும் கோட்டையின் வீழ்ச்சியென்றால், அது சாமான்ய சாதனையா? ஒட்டர நாட்டின் பேராளராக நின்ற நாகர்களின் வீழ்ச்சி என்றால் அது சாமான்ய வெற்றியா? அந்தப் பெரு வெற்றியை அன்று ஸ்தாபித்தான் விக்கிரமச் சோழிய வரையனான அரையன் ராஜராஜன். வீரர்களின் சேதம் அதிகமில்லாமலும் எதிரிகளையும் அவசியமான அளவுக்கு மேல் நாசம் செய்யாமலும் படைகளைத் திறமையுடன் அணிவகுத்து நடத்தியதால், அன்று கங்கைப்பயணத்தைத் தடுத்து நின்ற முக்கியமான பெரும் சுவரை இடித்துத் தள்ளிவிட்டான், சோழர்களின் மாபெரும் தலைவன்.

போர் முடிவதற்கும், இரவின் மூன்றாம் ஜாமம் தொடங்குவதற்கும் சரியாயிருந்தது. போரை நிறுத்திக் கடலியாகச் சத்தமிட்டு மறைக்குமாறு போட்ட சோழர் படைத்தலைவர், காயமடைந்த வீரர்களைப் பாசறைக்குத் கொண்டு போய்ச் சிகிச்சை செய்யவும், தோல்வியடைந்த எதிரி வீரர்களைக் காவலில் வைக்கவும் உத்தரவிட்டான். இந்த வெற்றிக்குக் காரணமாயிருந்தவர்களில் முக்கியஸ்தர்களான சிலரை அவன் சக்கரவர்த்தியிடம் விடுவித்து அழைத்து வருமாறும் கூறினான். எதிர்களுக்கும் கருணை காட்டும் பெரும் மனம் என்று பிரசித்தி பெற்ற விக்கிரமச் சோழியனையன் இந்த உத்தரவுகளை இட்டதோடு நிற்காமல் போரில் பெரும் காயமுற்று வீழ்ந்த பிரதாபருத்ரனை அவனது பாசறைக்குத் கொண்டுபோய்த் தனது சொந்த வைத்தியரைக் கொண்டே சிகிச்சையும் செய்யவைத்தான்.

அந்தப் பயங்கர இரவின் நான்காவது ஜாமத்தில் சோழ வீரர்களின் காயம் தோய்ந்தவைகளைத் தவிர வேறெவற்றையும் கூச்சலுமில்லாமல் மீண்டும் அமைதியைப் பெற்றது சக்கரக் கோட்டம். காலையில் வந்து சேர்ந்து கொள்ளும் கழுகுக் கூட்டங்களிலிருந்து கோட்டையைக் காப்பாற்ற, பிணங்கள் வாரியெடுக்கப்பட்டு வண்டி

களில் போட்டுக் கோட்டைக்கு வெளியே மேற்கிலுள்ள விருந்த காட்டு முகப்பில் குவிக்கப்பட்டன. முதல் இரண்டு நாட்களில் மூடிக்கிடந்த கோட்டையின் பெரும் கதவுகள் நான்காவது நாளத்தில் திறந்தே கிடந்தன. அந்த வாயில் களுக்குள்ளே நுழைந்த 'உள்' என்ற தென்றல், பெரும் தொந்தரவு ஒரு வழியாகத் தீர்ந்ததற்காக ஆசாகப் பெரு மூச்சு விடுவது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

அதே சமயத்தில், பிரதாபருத்திரன் தனது மாளிகை யிலே, மலர்ப் பஞ்சணையிலே, மார்பு எழுந்து எழுந்து தாழ, இதயத்தின் வெகு அருகே பாய்ந்திருந்த பிரிய மாரவரின் வேலில் காயம் குருதியை இடைவிடாது வெளிப்படுத்திக்கொண்டிருக்கப் படுத்துக்கொண்டிருந்தான். அவன் காயத்தைப் பரிசோதித்துக் கலுவத்தில் மருந்தை அரைத்துப் போட்ட வைத்தியர் 'இனிப் பயமில்லை' என்பதற்கு அறிகுறியாக உதட்டைப் பிதுக்கினார்.

அந்த பிரதாபருத்திரனுக்குப் பக்கத்தில் நின்றிருந்த அரையன் ராஜராஜன், கரிகாலன், பிருங்க மாரவர் ஆகியவர் மட்டுமல்ல, பிரதாபருத்திரனும் கவனித்தான். ஆனால், அந்த வீரன் முகத்தில் பயச்சாயை படுவதற்குப் பதிலாகப் புன்முறுவலே படர்ந்தது. பேசக் கஷ்டமா யிருந்ததால் கரிகாலனை அருகில் வரும்படி கையால் ஜாடை காட்டினான். அருகில் நெருங்கிய கரிகாலனைப் பஞ்சணையில் உட்கார வைத்துக்கொண்ட பிரதாப ருத்திரன் மெல்ல, உதடுகளைத் திறந்து, ''என்னை வஞ்சித்துவிட்டாயே கரிகாலா!'' என்றான்.

மரணப் படுக்கையிலிருந்த அந்த மாவீரனுடைய நிலையைக் கண்டதும், கரிகாலன் நெஞ்சம் கரைந்தது. ''என்ன செய்வது மன்னவா? எல்லாம் தங்களை வஞ்சிக்கத் தூண்டியது. சோழப் பேரரசின் பிற்காலம், பெருமை, விஸ்தரிப்பு, எல்லாமே அந்த வஞ்சனையின் அவசியத்தை வலியுறுத்தின'' என்றான்.

''இருந்தாலும், நான் உன்னை வஞ்சிக்கப் போயிருக்கவே கூடாது; தலையைச் சாய்'' என்று தீனக் குரலில் சொன்ன பிரதாபருத்திரன் உதடுகளுக்காகத் தலையைத் தாழ்த்தினான் கரிகாலன். அடுத்த கணம், பிரதாப ருத்திரன் வெற்றிப் பார்வையொன்று அரையன் ராஜ ராஜன்மீது நிலைத்தது. அதைத் தொடர்ந்து, நிலை வார்த்தைகள் கரிகாலன் காதில் ஒலிப்பட்டன.

அரையன் ராஜராஜன் உண்மையை உணர்ந்து இக் பிரமைபடைத்தான். தனக் படைத்தலைவன் தன் மரண நேரத்தில் சோழப்பேரரசைக் கலக்கலில்லை ஆலகால விஷத் தைக் கக்கிவிட்டானே என்ற நினைப்பு அரையன் ராஜ ராஜனை அலைபோட்டாமல் அடித்துவிட்டது. அப்படி நின்ற அரையன் ராஜராஜன்மீது பிரமிப்பும் குழப்பமும் கலந்து நின்ற கரிகாலன் பார்வையொன்று படிந்தது. 'மீ.முடி கெட்டுவிட்டது! பேரரசு சோழப் பேரரசின்மீது திரும்பி விட்டது!' என்று நினைத்துவிட்டான் அரையன் ராஜராஜன்.

58. என் அன்னை எங்கே?

இமக்கும் தறுவாயில் நாகர்கள் தலைவன், எத்தனையோ வருஷங்களாகப் புதைத்து இடந்த மாபெரும் மர்மத்தை உடைத்துவிட்டு, சக்கரக் கோட்டத்தின் வீழ்ச்சிக்குப் பழி வாங்குவதற்காகச் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கே அடிகோலி விட்டானே என்ற நினைப்பால், எந்தச் சந்தர்ப்பத்திலும் கலைவையைக் காட்டாத அரையன் ராஜராஜன் முகத்திலும் சொல்ல வொண்ணாக் கலவை படர்ந்து நின்றது. அத்துடன் அந்த மர்மத்தைப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகக் கரிகாலனிடமிருந்து இளம்பிய பார்வையும், அந்தக் கலவையை ஆயிரம் மடங்கு அதிகமாக்கிவிடவே, பெரும் குழப்பத்துக்கும் உள்ளானான், சோழர்களின் பிரதான படைத்தலைவன். பிரமிப்பும், குழப்பமும், பரிதாபமும் கலந்து இரும்பிய கரிகாலன் கண்களில் கேள்விகளும் ஏராளமாகத் தொக்கி நின்றதையும், அந்தக் கேள்விகளுக் கெல்லாம் அடுத்த சில விநாடிகளில் தான் பதில் சொல்ல நேரிடுமென்பதையும் உணர்ந்த அரையன் ராஜராஜனுக்கு உலகமே சுழல்வது போலிருந்தது அந்தத் தருணத்தில். 'எந்த ரகசியத்தைப் பாதுகாக்க ஆயுளெல்லாம் ரெம் பட்டேனோ, எந்த ஒரு ரகசியம் வெளியானால் சோழ நாட்டின் எதிரிகளுக்குப் பெரும் குதூகலம் உண்டாகுமோ, அந்த ரகசியம் சோழப் பேரரசுக்கு மாபெரும் கீர்த்தியை அளிக்க வல்ல இந்தப் படையெடுப்பின் போது, அதுவும் மாகணர்களின் மாபெரும் தோல்வியின் போதுதானா ஏற்பட வேண்டும்?' என்று உள்ளூர ஓடிய எண்ணங் களால் கலவை தோய்ந்த மூச்சும் விட்டான் அரையன் ராஜராஜன்.

பிரதாபருத்திரன் சயன அறையிலே நடந்த நாடக மனைத்தையும் பிரும்ம மாராயரும் கலவிக்கத்தான்

சென்றார். மரணப்பெருமூச்சுடன் ஏதோ சொல்லவார்த்தை களைப் பிரதாபருத்திரன் கரிகாலன் காதில் முணுமுணுத்த நிதி, அந்த முணுமுணுப்புக்குப் பின் வெற்றி முழங்கிய பார்வையை அவன் அரையன் ராஜராஜன்மீது திருப்பி விட்டுத் தலையைச் சாய்த்தது. அதற்குப் பிறகு ஏதோ பெரிய விஷயத்தைப் புரிந்துகொண்டவன் போலக் கரிகாலன் சோழர் படைத்தலைவனைப் பார்த்தது. அந்தப் பார்வையின் விளைவாக அரையன் ராஜராஜன் ஆழ்ந்த கலவையால் பீடிக்கப்பட்டது. அத்தனை விவரங்களும் பிரும்ம மாராயரின் கண்களில் ஒன்றுகூட விடாமல் பட்டாலும், பிரதாபருத்திரன் அப்பேர்ப்பட்ட என்ன மர்மத்தைச் சொல்லியிருப்பான் என்பதைப் புரிந்து கொள்ளச் சக்தியற்றவராய் அரையன் ராஜராஜனை நோக்கி, "படைத்தலைவர் ஏதோ கலவையில் ஆழ்ந் திருப்பதாகத் தோன்றுகிறது" என்று புதிதாக ஜோஸ்யம் சொல்பவர் போல் பேனார்.

சோழர்களின் பிரதான படைத்தலைவன், அவர் கேள்விக்கு எத்தவிதப் பதிலையும் சொல்லாமல், தனக்குச் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த உபதளபதியை அழைத்து, "சக்கரக் கோட்டத்துத் தலைவனுக்கு ஒரு சக்கரவர்த்திக் குரிய மரியாதைகளுடன் தகனம் நடக்கட்டும் நானும் கரிகாலனும் என் மகனும் தங்குவதற்குப் பக்கத்து மாளிகையைச் சுத்தம் செய் பிரும்ம மாராயரும் இதர உபதளதிகளும் கோட்டையின் தெற்கு வாசலை அணைத்து நிற்கும் பாசறைகளில் தங்குவார்கள்" என்று படபடவென உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு, "கரிகாலா! என்னுடன் வா!" என்று கூறி, அந்த அறையை விட்டு விடுவிடுவென்று வெளியே நடந்தான். அரையன் ராஜராஜன் ஆணையிட்டுச் சென்ற வேகத்தைக் கண்ட பிரும்ம மாராயர், அத்தனை படபடப்புக்குக் காரணம் பிரதாபருத்திரன் வார்த்தைகளே என்பதை உணர்ந்து கொண்டார். ஆகையால், சற்று நேரம் பிரமித்து நின்றா

தும் கடையொசை சமாளித்துக்கொண்டு அறையைவிட்டு வெளியேறினார்.

கரிகாலன் மட்டும் பிரதாபருத்திரன் மார்பைக்கும் பக்கத்தில் பிரமித்து நின்றுகொண்டிருந்தான். அவன் மனத்திலே பிறப்பு மர்மத்தை அறிந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியும், அதன் விளைவாக அரையன் ராஜராஜன் பேச்சிலே ஏற்பட்ட மாறுதலால் உண்டான வருத்தமும் கலந்து அலைமோதி நின்றன. பிறப்பு மர்மத்தை அறியும் எண்ணத்துடன் சூடாமணி விஹாரத்திலிருந்து புறப்பட்டு எதிரத்த இடத்திற்கோ சென்று, கடைசியாக இந்த யுத்தச் சூழ்நிலையில் எதிர்பாராத ஒருவன் மூலமாகத் தன் பிறப்பு மர்மத்தை உடைத்த விதியின் விந்தை வினையாட்டை எண்ணி வியந்தது அவன் உள்ளம். அந்த வியப்பு, அந்த உண்மையை அறிந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட பிரமிப்பு, இரண்டையும் பிரதிபலித்து நின்ற அவன் முகத்தைப் பார்த்தும் தானோ என்னவோ சலனமாகக் கிடந்த பிரதாபருத்திரன் கடைசிநிமிஷங்களில் ஒரு வெற்றிச் சிரிப்பு நிலைத்துக் கிடந்தது. கரிகாலன் உயிரற்ற எதிரியின் உடலத்தைக் கூர்ந்து கவனித்தான். பிரதாபருத்திரன் ஏதோ மர்ம அமைதியுடன் உறங்குவதாக அவனுக்குப் பட்டதே ஒழிய மரணக் கனை எதுவுமே அந்த முகத்தில் இல்லை. தோல்வியும் பெரும் காரியத்தைச் சாதித்து விட்டதற்கான வெற்றிக் களையே கம்பீரமாக அந்த முகத்தில் தெரிந்தது. கட்டுப்படுத்திய பிரமாண்டத்தை உடைத்து விட்டதில் பெரும் பெருமையே அடைந்தவனைத் தோன்றினான் அந்த மாவீரன், உயிரற்ற அந்த நிலையிலும்.

கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றி அந்தச் சமயத்தில் ஆயிரம் கதைகளைச் சொல்வதுபோல் தோன்றியது கரிகாலனுக்கு! பிரதாபருத்திரன் விளக்கிய மர்மத்தால் தன் வாழ்வு எந்த நிலைக்கு உயர்ந்துவிட்டதென்பதைச்

சரியாகவே சந்தேகமற உணர்ந்து கொண்டானானாலும், அந்த உயர்ந்த நிலைக்குத் தன்னை அழைத்துச் செல்லும் சாட்டியங்கள் தேவையென்பதையும் அறிந்து கொண்டானாகையால், தன் குழப்பமான நிலையிலிருந்து தன்னைச் சற்றே விடுவித்துக் கொண்டு, அறையைவிட்டு வெளியே சென்றான்.

பிரதாபருத்திரன் மாளிகையில் பல கட்டுகளைக் கடந்த வாயிலை அணுகிய கரிகாலன், தனக்காகக் காத்திருந்த சோழர்களின் படைத்தலைவன் கோட்டையைச் சுற்றிப் பார்க்கச் சென்றுவிட்டதாகக் கேள்விப்பட்டதும், அவன் சென்ற திக்கை விசாரித்துக் கொண்டு அந்த மார்க்கத்தில் வேகமாக நடந்து சென்றான். கோட்டை மதிற்சுவர்களின் மீது மேற்கு வாயிலை நோக்கி நிதானமாக நடந்து சென்று கொண்டிருந்த அரையன் ராஜராஜனைத் தூரத்திலிருந்து கவனித்த கரிகாலன், வெகு சிக்கிரத்தில் அவனை அணுகி ஏதும் பேசாமலே பின்னால் நடந்தான். சுமார் ஒரு நாழிகைநேரம் மேல் இருவரும் கோட்டைப் பகுதிகளைச் சுற்றினார்கள். இருக்கு, தெற்கு, மேற்கு வாயில்களில் எங்கெங்கு எத்தனைப் படைகள் தங்க வேண்டியது, படைகளின் எப்பிரிவுகள் கோட்டைக்கு வெளியேயிருந்த கடாரங்களில் தங்கவேண்டியது என்பதையெல்லாம் நிர்ணயித்து, ஆங்காங்கிருந்த உபதளபதிகளுக்கு உத்தரவுகள் போட்டுக் கொண்டே வந்தான் அரையன் ராஜராஜன்.

எத்தனையோ எண்ணங்கள் உள்ளத்தில் மலையாடிய அந்த நிலையிலும், அரையன் ராஜராஜனிடமிருந்து தான் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றனவென்பதைக் கரிகாலன் கண்டான். போர் முறையை எத்தனை சாமர்த்தியமாக மாற்றியமைத்துச் சோழர் படைத்தலைவன் சக்கரக் கோட்டத்தில் வெற்றி கண்டான் என்பதைத் தன்னை விடுதலை செய்ய வந்த உபதளபதிகளிடமிருந்து ஏற்கனவே அறிந்துகொண்டு,

அதனால் அரையன் ராஜராஜனிடம் பெரும் மதிப்புக் கொண்டிருந்த கரிகாலனுக்குப் போருக்குப்பின் அவன் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் ஆச்சரியத்தை விளைவித்தன. சக்கரக் கோட்டத்தின் கோட்டைகளைச் சுத்தம் செய்வதும், இன்னும் எதிரிகளைக் காவல் புரியவும், எதிர்ப் படையினர் தாங்கள் அயர்ந்திருக்கும்போது கலகம் செய்யாதிருக்கவும் அரையன் ராஜராஜன் செய்த ஏற்பாடுகளைக் கவனித்த கரிகாலன், போரின் வெற்றியை விட வெற்றியைக் காப்பாற்றுவதற்கு எத்தனை எத்தனை ஏற்பாடுகள் தேவை என்பதைத் தெரிந்து கொண்டான். அந்த அறிவு அவனுக்கு அரையன் ராஜராஜனிடம் மேலும் மேலும் பக்தியை உண்டாக்கவே, எத்தனையோ சாத்திரங்களைத் தான் கற்றிருந்தாலும், தான் கற்ற கைம்மண்ணளவே என்பதைப் புரிந்து கொண்ட கரிகாலன், அடுத்த ஜாமம் முழுவதும் அரையன் ராஜராஜனுடன் மௌனமாகவே சுற்றினான்.

நான்காவது ஜாமம் முடிந்தது. இரவின் கோர இருளைக் கிழித்துக்கொண்டு பொழுதும் புலர்ந்தது. தன் வம்சம் அடைந்த வெற்றியைக் கண்டு குதூகலிப்பவன் போல் சூரியனும் உதயமாகித் தன் செங்கிரணங்களைச் சக்கரக் கோட்டத்தின் உப்பரிகைகள் மீது வீசினான். ரும், இருள் கிழிந்தது. கரிகாலன் வாழ்க்கையைச் சூழ்ந்திருந்த மர்ம இருளும் கிழிந்தது! ஆனால் அந்த இருள் கிழிந்ததும், அரையன் ராஜராஜன் உள்ளத்தில் இருள் குழ்ந்து விட்டதே! வாழ்க்கையே பூமியின் ன்னைப்போன்றதானா? ஓர் இடத்திலிருந்து மண்ணை வெட்டினால் இன்னோர் இடத்தில்தானே அதைப் போட வேண்டும்? விநியோகத்தில் பொருள்கள் அழிவதில்லை. ஓர் இடத்திலிருந்து அகன்றால், இன்னோர் இடத்தில் அவை நியத்தான் செய்யும். அழிவு என்று நாம் கருதுவதற்கு அறிவினமே காரணம். ஆண்டவன் சிருஷ்டியில் ழுமே அழிவதில்லை. உணர்ச்சிகளுக்குக்கூட இந்த

விதான். ஒருவன் மகிழ்ச்சி இன்னொருவனுக்குத் துன்பம். ஒருவன் வெற்றி இன்னொருவனுக்குத் தோல்வி. இந்த நியதியிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பதை அரையன் ராஜராஜன் சந்தேகமற அன்று உணர்ந்தான்.

அந்த உணர்வால், அன்று முழுவதும் அவனுக்கு மனதுடன் சரியாகச் செல்லவில்லை. எந்தச் சோழ ராஜ்யத்திற்காகத் தன் வாழ்வின் அனைத்தையுமே அர்ப்பணித்துப் பல போர்களில் வெற்றி கண்டானோ, அந்தச் சாம்ராஜ்யமே படுகுழியில் விழும் நிலையிலிருப்பதை அறிந்த அரையன் ராஜராஜன், கரிகாலனை அன்று முழுவதும் காணவோ பேசவோ மறுத்தான். ஆனால் எத்தனை நேரம் அந்தச் சந்திப்பை ஒத்திப்போட முடியும்? அன்று மாலை நேரத்தில் கரிகாலன் எந்தவித அறிவிப்பு மின்றி அவர் மாளிகை அறையிலேயே நுழைந்தான். சிந்தனையில் ஆழ்ந்திருந்த சோழர் படைத்தலைவனின் கண்களும் கரிகாலனை நோக்கி எழுந்தன.

அரையன் ராஜராஜனை அப்பொழுது நோக்கிய கரிகாலன் கண்களில் எந்தவிதக் குழப்பமும் இல்லை. சிறிதும் சலனமில்லாத கூரிய கண்கள் தன்மீது நிலைப்பதைக் கண்ட அரையன் ராஜராஜன், 'கரிகாலன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திவிட்டான்' என்று உணர்ந்து கொண்டு, 'இத்தன்ய ஒரு சிறுவனுக்கு எதிரில் நான் உணர்ச்சிகளைச் சிதறவிடுவதா?' என்ற எண்ணத்தினால், கம்பீரத்துடனும் உறுதியுடனும் கரிகாலனை ஏறிட்டுப் பார்த்து, "என்ன கரிகாலா, என்ன விசேஷம்?" என்று ஏதுமறியாதவனைப்போல் விசாரித்தான்.

சரப்பளை அடியோடு இல்லாத வரட்டுச் சொற்கள் கரிகாலன் உதடுகளிலிருந்து உதிர்ந்தன. "விசேஷத்தை நீங்களே அறிவீர்கள் தந்தையே!" என்றான் கரிகாலன்.

இந்தப் பதில் அரையன் ராஜராஜனுடைய உறுதியை இன்னும் அதிகமாக இறுக்கவே, அவன் ஆசனத்திலிருந்து

எழுந்து, எதிரே இருந்த சாளரக்கை நோக்கி நெஞ்சே எனதுயோ எட்டிப் பார்த்துக்கொண்டே... "நீ கரிகாலா! அறிவேன்" என்று சொல்லலானான்.

"அறிந்தால், அதைப் பற்றி எனக்கு விளக்கம் வேண்டியது தங்கள் கடமையில்லையா?" என்று கேட்டான் கரிகாலன்.

அரசன் ராஜராஜன் எதிர்பாராவிதமாகத் தாக்கப்பட்டவன்போல் சட்டென்று நிமிர்ந்தான். "நிச்சயமாக அது என் கடமையில்லை" என்று திட்டவட்டமாகக் கூறினான்.

கரிகாலன் புருவங்கள் ஆச்சரியத்தால் சற்று உயர்ந்தன. "என்ன உங்கள் கடமையில்லையா? நீங்கள் என் வளர்ப்புத் தந்தைதானே?" என்று கரிகாலன் வினவினான்.

"ஆம்!" உடனே பதறி அரசன் ராஜராஜன் பதில் சொன்னான். "என் தாய் தந்தையர் உங்களிடம்தானே என்னை ஒப்படைத்தார்கள்?"

"ஆமாம்."

"என் வாழ்வின் பிற்காலம், என் அந்தஸ்து, நான் எல்லாவற்றையும் தங்களிடம்தானே ஒப்படைத்தார்கள்?"

"ஆமாம்."

"அப்படியானால், என் நலனைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க உங்களுக்கு உரிமையளித்தது யார்? என்னை என் குடிமக்கள் வாழ்க்கைக்கு அறுப்பு வைத்திருக்கும் உரிமையை என் ஒன்றிரண்டு? தனால் உங்களுக்கு எப்படி மாபெரும் உயர்ந்த குடியில் பிறந்தும் உங்களைத் தாய்தந்தை வயிற்றில் ஜனித்தும் நான் அநாதையாக, புல் பிதுங்கிடம் நாயிகளோடு நாயாக வாழும் நிலையை ஏற்படுத்தி வைத்திருக்கலாம், அது எந்த நியாயத்தில் சேர்ந்தது?" என்று படபடப்புடன் கேட்டான் மன்னன்.

"அரசியல் நியாயத்தில் சேர்ந்தது."

"எனக்கு விளங்கவில்லை தந்தையே."

"விளங்காதிருக்கும் வரையில் உனக்கும் நல்லது. உனக்கும் நல்லது மகனே! என் சொந்த நாட்டுக்காக நான் செய்த தியாகத்தை என் இதயத்திலே பூட்டிவைத்தே நான் இந்த நிலைத்தானோ அந்த ரகசியத்தை, இலுப்பூர்த்தாய வெளிப்படுத்திவிட்டான். அதை அறிந்து கொண்டதோடு திருப்தியடைந்துவிடு. மேற்கொண்டு எந்தக் கேள்வியையும் கேட்காதே" என்று நிஷேமாய்ப் பதில் கூறினான் அரசன் ராஜராஜன்.

ஆனால் கரிகாலன் ஏற்கும் தயாராயில் கேட்டான்: "ஏன் கேட்கக் கூடாது? நியாயம் என்றால் என்ன? என்ற

"பெரும் பிரமாணம் என்னைக் கட்டுப்படுத்துகிறது."

"பிரமாணம்! பிரமாணம்! எல்லோரிடமும் ஒரே பிரமாணம். அந்தப் பிரமாணத்தைத் தந்த காரணம் யார்?"

அரசன் ராஜராஜன் பதிலும் துளிக்கும் விடை கரிகாலனிடம் தோன்றவில்லை. "சொல்லப்போனால் தங்களால்?" என்ற வார்த்தைகள் மிக மெதுவாக வெளிவந்தன.

"சொல்லுங்கள்."

சொன்னான் அரசன் ராஜராஜன். அவன் வாய் விரித்து உதிர்த்தவை சொற்களல்ல; பெரும் இடிகள் தான். "உன் தந்தை, என்னையும் இலுப்பூரையும் பிரமாணத்தால் கட்டுப்படுத்தியது உன் தந்தைதான்!" என்று அரசன் ராஜராஜன் பதிலைக் கேட்டுத் திகிலடைந்த கரிகாலன் நீண்ட நேரம் கற்சிலைபோல் நின்றான். பிறகு தடுமாறிய குரலில் வெளிவந்தன

அவனிடமிருந்து சொற்கள் ''என் தந்தை! என் தந்தை அவரா என்னைப் படுகுழியில் தள்ளிப் பார்த்தார்? அவரா என்னை அனாதையாக வாழவைக்க இஷ்டப்பட்டார்? அவரா என்னைத் துரதிர்ஷ்டசாலியாக்கத் திட்டம் போட்டார்? ஏன்? ஏன்?'' என்ற வார்த்தைகள் பெரும் கடுமையுடன் உதிர்ந்தன.

அரையன் ராஜராஜனும் துக்கம் பெருமூச்செறிந்து விட்டுச் சொன்னான்: ''உன் தந்தை பெரிய நியாயவாதி கரிகாலா! அவர் பெயர் சரித்திரத்தில் இடம் பெறாதிருக்கலாம். ஆனால், அவரது நண்பர்களின் இதயத்திலே அழியா இடம் பெற்றிருக்கிறது கரிகாலா! விதியின் விசித்திர வலை உன் குடும்பத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு உட்பட்டவர் உன் தந்தைதான். அவருக்கு நாங்கள் கொடுத்த பிரமாணத்தை யாரும் உடைக்க முடியாது'' என்று.

''அப்படியானால் எனக்கு நிஷ்மோட்சமே இல்லையா?''

''இருக்கிறது.''

''யாரிடம்? எவர் மூலம்?''

''உன் தாய் மூலம்.''

''என்ன என் தாய் உயிரோடிருக்கிறாளா?'' என்ற வினவிய கரிகாலனுக்கு, மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. உணர்ச்சிகள் மின்னல் வேகத்தில் அவன் உடலில் சுழன்றன.

''இருக்கிறாள்'' என்றான் அரையன் ராஜராஜன்.

''எங்கேயவள்? எங்கேயவள்? எங்கே என் அன்னை?'' என்று துடிக்கும் உதடுகளுடன் கேட்டான் கரிகாலன்.

''காஞ்சிக்கருகில்.''

''காஞ்சிக்கருகிலா?''

''ஒரு கிராமத்தில்; தனி மாளிகையில்''

''நலமிருக்கிறாளா?''

''இல்லை; சுகத்திரத்துடன் இருக்கிறாள்.''

''அவளிடம் இதோ போகிறேன் தந்தையே'' என்று திரும்பிய கரிகாலனை, ''நில் கரிகாலா! அவசரப்படாதே. உன் தாயைப் பார்ப்பது அவ்வளவு எளிதல்ல'' என்றான் அரையன் ராஜராஜன்.

வியப்பினால் விகசித்த விழிகளை அரையன் ராஜராஜன் மீது திருப்பிய கரிகாலன் கேட்டான், ''என்ன தாயைப் பார்ப்பது மகனுக்கு எளிதல்லவா?'' என்று.

''ஆம் கரிகாலா! உனக்கு எளிதல்ல அது. இத்தனை வருஷங்களாக உன்னைப் பார்க்க இஷ்டப்படாத உன் தாய், இப்பொழுது பார்க்க இஷ்டப்படுகிறளா என்பதை அறிய வேண்டும்'' என்று அரையன் ராஜராஜன் சொற்கள் ஒவ்வொன்றும் கரிகாலன் இதயத்திலே பல வேல்களைப்போல் பாய்ந்தன. அந்தக் குழந்தை முகத்தின் கருவிழிகளில் துன்ப நீர் துளித்தது.

''என் தாய் என்னைப் பார்க்க இஷ்டப்படவில்லையா தந்தையே?'' என்றான் குரல் தழுதழுக்க.

''இல்லை மகனே, இஷ்டப்படவில்லை.''

''ஏன் தந்தையே?''

''உன் தந்தையைப்போல், அவளும் ஒரு நியாயவாதி மகனே. பெரும் நியாயங்களால் பெரிய அரசுகள் நிலைக்கின்றன. உன் பெற்றோர்கள் இதுவரை மாநிலம் காண்டிராத இணையற்ற நியாயங்கள். மேற்கொண்டு என்ன எதுவும் கேட்காதே. கங்கைப் போர் முடியட்டும். பிறகு உன் தாயிடம் உன்னை நானே அழைத்துச் செல்கிறேன். அதுவரை பொறுத்திரு'' என்று கூறிய அரையன் ராஜராஜன், அத்துடன் அந்தச் சம்பாஷணை முடிந்துவிட்டதென்பதற்கு அறிகுறியாக வேறு பக்கம் திரும்பினான்.

அங்கிருந்து ஏதோ சொப்பனத்தில் நடப்பவனைப்போல் தனது அறைக்கு நடந்து சென்ற கரிகாலன், படுக்கையில், கன்னமெல்லாம் கலைந்து வாட்ட உடலெல்லாம் உணர்ச்சிகள் பாயப் படுத்துக் கிடந்தான். காலைப் பற்றிய எண்ணங்களே அந்த இளைஞன் இதயத்தில் அலை பாய்ந்து தின்றன. ''தாயே! என்னை ஏன் பார்க்க மறுக்கிறாய்? குழந்தைப் பருவத்திலே என்னை அணைத்த உன் கரங்கள் என்னைத் தொடத் துடிக்கவில்லையா?'' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். நிசப்தம் எங்கெங்கோ சென்றது; அவன் நீண்ட நேரம் தன்னை மறந்தான்.

பின்னாலிருந்து அவன் உடலை வளைத்த இரு மகிழ்க் கரங்கள், இந்த உலகத்துக் கொண்டு வந்தன. சற்றே திரும்பினான். அடுத்த வினாடி சங்கமனைச் செல்வியின் முடிவான்ற தன்னைத் தனதாகவே புனைந்தது அவன் மனம். முகம் அவள் கன்னம் அவன் தலையிலே சாய்ந்து இடந்தது. சற்றே தவிழ்ந்திருந்த அவளது கரிய கூந்தல், அவன் முகம் பதிந்திருந்த பஞ்சணைக்குப் பக்கவாட்டில் நிரை போட்டது. அவன் கரங்கள் அவளை இறுக்க அணைத்தன. புயலில் அலைந்த மரக்கலம், ஏதோ கரையைக் கண்டுவிட்டதைப் போன்ற உணர்வில் பெருமூச்சு விட்டான் கரிகாலன். அவன் உடலை கதகதப்பும், எழிலும் சக்தியின் எல்லை, இரண்டற்ற இணைவுத்து அவனை இந்தத் துன்ப உலகத்திலிருந்து நீங்கத்தை அள்ளிக் கொட்டும் ஏதோ ஒரு மலையுலகத்துக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தன.

59. வெள்ளமும் தோணியும்

காதலுக்குத் தனிச் சூழ்நிலை தேவையில்லை. வேண்டிய சூழ்நிலையை அதுவே சிருஷ்டித்துக் கொள்ளும். ஆசையாகிற காற்றினால் மோகமாகிற அலைகள் எத்தப்படும்போது பருவ வேட்கையாகிற சமுத்திரம் பிரளயம்போல் பொங்கி எழுந்து, இதர சப்தங்கள், பிரதேசங்கள் எல்லாவற்றையுமே முழுக அடித்து, பிரத்தியேகமாகத் தனக்கென ஒரு சாம்ராஜ்யத்தை அமைத்துக்கொள்கிறது. ஆண் பெண் உணர்ச்சிகள் மட்டுமே உறவாடக்கூடிய அந்த இன்ப சாம்ராஜ்யத்தில், வேறு சக்திகளுக்கு இடம் இருப்பதில்லை. அத்தகைய ஒரு சாம்ராஜ்யத்திலே சிக்கிக்கிடந்தான் சங்கமனைச் செல்வி. அவளுடைய இளமையின் சக்திகள் விடிய விடிய கரிகாலனையும் கட்டியிழுத்து மேலும் மேலும், அந்தச் சாம்ராஜ்யத்துக்கே இழுத்துச் சென்று கொண்டிருந்தன.

மாலை முற்றி மையிருள் சூழ்ந்து இரவின் ஆதிக்கம் நன்றாக ஏறிவிட்டிருந்த சமயம் அது. அவன் அணைப்பிலே அவன் கிடந்த அந்த மாளிகைக்குப் புறம் பேயிருந்த சக்கரக் கோட்டைப் பிரதேசத்தில், துயரமும் வெற்றிச் செருக்கும் கலந்த நிலை பயங்கரத்தை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது. சென்றிருந்த புதல்வர் களை அன்றையப் போரிலே பறிகொடுத்த தாய்மார்களும், கணவன்மார்களை இழந்து நாலிருந்து குங்குமமிழந்த மனைவிகளும், தந்தை இறந்து அநாதைகளாகிவிட்ட குழந்தைகளும் விளைப்பிய அழு குரல்கள், பற்பல விதமாய் விருத்தும் எழும்பிக் கொண்டிருந்தன. அந்த அலறல்களை அடக்க ஆளையிடுவனபோல் கோட்டைக்குள்ளே இருந்த கோட்டைகளில் பிணைக்கப்பட்டிருந்த போர் யானைகள் பயங்கரமாய் பிளிறின. அத்துடன் வெற்றியடைந்த சோழ வீரர்கள் புரவிகளின் மீது வீதிகளில் உலாவி

அடைவினை நினைநிறுத்த இட்டுக் கொண்டிருந்த உத்தரவு களும், போர் முடிந்ததும் முன்னை முடுக்குகளில் ஒளிந்து கொண்டிட்ட மாகலவி விரர்களைப் பிடித்திழுத்து தண்டிக்கொண்டு செல்ல சோழ உபகலைவர்களை அனுப்பி விட்டதால் உண்டான பெரும்பணியும் கலந்து ஒலித்தன. கோட்டைத் தளம் முழுவதிலும் இன்பமோ அமைதியோ மருந்துக்கும் இல்லாத குழ்நிலையே எங்கும் கவிந்திருந்தது.

தன்ப ஒலிகளும் வெற்றிக் கொடிகளும் நிறைந்த அந்தச் சூழ்நிலை, கரிகாலன் படுத்துக் கிடந்த அந்த மாளிகை மீதும் பொருத்தமின்றியே இருந்தது. கோட்டை தனத்தில் எழுந்த அழுகுரல்கள் கரிகாலன் படுத்திருந்த அருகேயிருந்த சாளரத்தையும் துளைத்துக் கொண்டு புகுந்தன. அப்படி உள்ளே புகுந்த பொதிலும் செங்கமலச் செல்வியின் உணர்ச்சி அலைகள் திரும்பித்துவிட்ட இன்ப சாம்ராஜ்யத்தின் பெரும் கோட்டைக் கவர்களை அவற்றால் சிறிதும் உலைக்க முடியாததால், அந்த அரண்களுக்கு வெளியிலேயே அலை மோதி புரிய வேண்டிய தாயிற்று. அவள் எண்ணக் கருப்பு அவள் தலைமீது பதித்திருந்ததால், பக்கவாட்டில் நிறை போட்ட கவ கரிய கூந்தல் அவள் முதுகுக்கு மட்டுமல்ல, அவள் உலகத்துக்கே பெரும் திரையைப் போட்டு விட்டது.

செங்கமலச் செல்வி அவற்ற மயக்கம் ஏதும் அவ விட்டாலும், தனக்கு வாய்த்த எதிர்பாராத நடவி ஸ்தானம் செய்திருந்தானைகளாக, கொதுவிட்டு விழ் திருந்த அவள் கூந்தலிலிருந்து வெளியே வந்தும், தான நினைப்பால் துவண்டிருந்தும் நிற்கிறிக்கொண்டிருந்த கரிகாலன் உள்ளத்துக்குப் பெரும் அமைதியை அளித்தது. அவன் மார்பிலே தலைந்து கிடந்த பட்டுப்புடவை அவன் அழகிய தோளில் அவளை நிற்க நழுந்து விலகிய காரணமாக உட்பக்கத்தில் பரந்து கிடந்த தங்கச் சங்கிலியின் நலரத்தினம் ரத்தம் மட்டுமென்ற, அது உதவிக் கொண்டிருந்த அமைதி பொங்கிய எழில்

நிதேசங்களும் பக்கவாட்டில் நிரும்பிய அவன் கண் களுக்கும் புலனாகவே, அடியோடு கய நினை மறந்த சிகாலன் தன் இடது கையை அவள் இடையைச் சுற்றி அணைத்துக்கொண்டான்.

இனமறியாத இலக்கனுபவம் புற்றரவைச் சுற்றி அனைது போல் நிந்த அவன் உடலரத்தின் ஸ்பரிசத் தால் அடக்க முடியாத உணர்ச்சிகளின் வசப்பட்ட செங்கமலச் செல்வி தன்னைத் திடப்படுத்திக் கொள்வதற் காக அவனது இன்னொரு கையை விரல்களைத் தன் விரல்களோடு பின்னி இறுகக் கொண்டாலும், அவன் விரல்கள் அங்கும் மிங்கிக் குலாத விந்தைகளை வினவித்ததால், அவள் நிடம் சுக்கு நூறாக உடைந்து உணர்ச்சி வெள்ளத்தை அவள் அழுகிய உடலெங்கும் பரவ விடவே பஞ்சனையில் துவண்டாள் அந்தப் பைங்கிளி.

அவள முகம், அவன் தலையை விட்டுப் பக்கவாட்டில் சரிந்தது; கண்ணம் கன்னத்தோடு இழைந்தது.

கமலவனின் இதழ்களையும் பழிக்கும் அவள் செல்விய இதழ்கள் ஏதேதோ இன்ப வார்த்தைகளை முணு முணுத்தன.

அந்த அப்சரஸ் சிருஷ்டித்துவிட்ட கலாக்கத்தில் நினைவும் மெய்மையும் கலந்த அவள் உடல் அளித்த ஸ்பரிசத்திலே, தெளிவும் அவள் உதடுகள் வெட்டிவிட்ட இன்பப் போதையிலே சிக்கி, உணர்வுகளெல்லாம் இழந்த கரிகாலன் மனம், சக்கரக் கோட்டத்திலிருந்து எங்கோ பறந்து சென்றது. செங்கமலச் செல்வியின் அந்த ஸ்பரிசத் திலே வேறோர் அழகின் ஸ்பரிசத்தை அனுபவிக்கத் தொடங்கினான், பொன்ற மடைச் சேன். அவன் மனம் சக்கரக் கோட்டத்திலிருந்து வேறோர் இடத்துக்குப் பறந்து சென்றது. அவன் கண முன்னே சாளுக்கியர்களின் பெரும் கோட்டையும் வசந்த மண்டபமும் எழுந்தன. வசந்த மண்டபத்தின் தோட்டத்தின் பகுதிகள்

ஒவ்வொன்றும் அவன் மனக்கண் முன்னே காண்டே மாடத் தொடங்கின. நந்தவனத்தின் மறுகடைக்க அடர்த்தியான பகுதியும், அதன் இலைகளிடை பூத்த தாரகையே கண்ணழகி வெண்மதியின் ஒளியாலும் அன்றுதான் ஏற்படுவனபோல் தோற்றமளித்தன. நந்தவனத்தின் நடுவேயுள்ள பூம்பொழில். அதோ, மயிலென்ன அந்த இடத்தில்தான் படுத்துக் கிடக்கும் வசந்த மண்டபத்தின் முகப்பிலே பூத்து மலர்ந்த வாட்டிச் சிரிக்கும் அந்தச் சம்பங்கிப் பூங்கொத்து எனை ரசஞ்சீவியா? இத்தனை நான் கழித்தும் வாடவில்லையே அது! அதோ வசந்த மண்டபத்தின் உட்புற அறை அந்தப் பஞ்சணையில் மன்னன் மகளே படுத்துக் கிடக்கிறானே! இப்படிப் பலவாறாக எண்ணமிட்டு உள்ளூரப் பேசிய அவன் மனம், மன்னன் மகளின் வனப்புப் பிரதேசங்களைக் கண்டதும் வாயடைத்து நின்றது.

பழைய தந்தத்தைப் பழிக்கும் வழவழப்பான திரஞ்சனாதேவியின் உடல் பஞ்சணையிலே புரண்டது. அப்படிப் புரண்டதால் மறைந்தும் வெளிப்பட்டும் ஜாலம் காட்டிய அழகுசங்கள் அவனைப் பார்த்து நகைத்தன. பஞ்சணையில் புரண்ட அந்தப் பேரழகி எழுந்தாள். வாவண்யமெல்லாம் குலுங்க தெற்குப்புறச் சாளரத்தருகே சென்றாள், நின்றாள். அவனும் அவளை நெருங்கினான், அருகே சமீபத்தில் நின்றான். அது என்ன, அவள் தலையிலிருந்த செண்பக மலரின் வாசனையா? அல்லது அவள் உடலுக்கே அந்த மணம் இருக்கிறதா? திருஞானாதேவி விட்டுச் சென்ற இளம்பிய தென்றல் அவள் உடலைத் தழுவி வந்து அவன் மேலும் பட்டது. அந்தச் சுகத்தில் ஆடிய அவன் உடல் அவன் மீதும் பட்டது!

கரிகாலன் உள்ளத்திலிருந்து இன்பப் பெருமூச்சு எழும்பியது. "தேவி" என்ற சொல் அதைத் தொடர்ந்து வெளிவந்தது.

"இல்லை, செல்வி!" என்ற இரண்டே சொற்கள் கரிகாலன் கனவுத்திரையைச் சரேலென்று கத்தி கொண்டு கிழித்தனவா? அவன் உடல் ஒரு முறை குலுங்கியது. சட்டென்று பஞ்சணையில் எழுந்து உட்கார முயன்றான். அவன் எதிரிலே செல்வியின் இடையிலே இருந்த கை அந்த இடைக்கு அடியிலே சிறைப்பட்டுக் கிடந்ததால் முழுதும் உட்கார முடியவில்லை அவனால். அரையும் குறையுமாக எழுந்து உட்கார்ந்த நிலையிலேயே, பஞ்சணையில் இடந்த அந்தப் பைங்கிளியானைத் திரும்பிப் பார்த்தான்.

பஞ்சணையில் ஒயிலாகப் படுத்துக் கிடந்த செங்கமலச் செல்வியின் முகத்திலே காதல் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அவன் உடல் அவன் அணைப்பை எதிர்ப்பார்த்துத் துள்ளப்பட்டுக் கொண்டிருந்ததால், வேதனைக்குறியும் அவள் முகத்திலே தெரிந்தது. உணர்ச்சிகளின் வேகத்தை அடக்க முடியாமல் அவள் பெருமூச்சு விட்டதால், அவளை எதிர் கொண்டழைப்பனபோல், அவள் எழிலங்கங்கள் பெரிதாக மேல் நோக்கி எழுந்தன.

அவனைக் கலைகடந்த அநுதாபத்துடன் பார்த்தான் கரிகாலன். போர்க்கோலத்தில் கவசத்துக்குள்ளடங்கிய வீரனொருபத்துடன் விளங்கவில்லை அவன் அழகிய உடல் குழந்தையின் சரீரம்போல் துவண்டு தெளிவனைதையும், புலியின் பக்கலாட்டுகளில் பலமாக அணையும் அவன் கால்கள்கூடச் செயலற்றுக் கிடப்பதையும் கண்ட கரிகாலனும் துன்பப் பெருமூச்சு விட்டான். அவன் துன்பப் பெருமூச்சைக் கண்ட செங்கமலச் செல்வி மெல்ல நகைத்தாள்.

"ஏன் நகைக்கிறாய் செல்வி?" என்று கேட்டான் கரிகாலன் மெல்லிய குரலில்.

அவள் கமல விழிகள் நன்றாக அகன்று அவளை ஏறெடுத்துப் பார்த்தன. அவள் உதடுகளும் லேசாக அசைத்தாலும் பேச்சு எதுவும் வெளியில் வரவில்லை.

"என்ன சொல்லுகிறாய் செல்வி?" என்று மீண்டும் கேட்டான் கரிகாலன்.

"செல்வியல்ல, தேவி!" என்று சொல்லிவிட்டு, துன்பப் புன்னகை காட்டினாள் அரையன் ராஜராஜன் மகள்.

"தேவியா?"

"ஆம், தேவிதான்."

"புரியவில்லையே செல்வி."

"நிலைமை இருவருக்கும் புரிந்துதானிருக்கிறது. விடைதான் புரியவில்லை."

"என்ன நிலைமை? என்ன விடை?"

"சொல்லட்டுமா?"

"சொல்லேன். அதற்காகத்தான் கேட்கிறேன்."

"உங்கள் நினைப்புக்கும் பார்வைக்கும் வித்தியாசம் இருக்கிறது."

"நினைப்பு, பார்வை, வித்தியாசம்! புதிர் போடுகிறாயா செல்வி?"

"புதிர் ஒன்றுமில்லை. நீங்கள் நினைப்பது தேவி. ஆனால் பார்ப்பது செல்வி."

அவள் சொன்னதை நன்றாகப் புரிந்து கொண்டான் கரிகாலன். இருந்தாலும் புரியாதது போலவே கேட்டான். "தேவியாவது! என்ன சொல்கிறாய்?" என்று.

செங்கமலச் செல்வியின் வலக்கரம் எழுந்து அவன் வலக்கரத்தைப் பற்றிக் கொண்டது. "என்னை ஏமாற்ற வேண்டாம் பிரபு! ஏமாற்றவும் உங்களால் முடியாது.

உங்கள் வாயால் சொல்ல இஷ்டமில்லாததை நானே சொல்கிறேன். உங்கள் நினைப்பெல்லாம் நிரஞ்சனாதேவி மீதே இருக்கிறது. நான் உங்கள் அருகிலே இருக்கிறேன். அவள் வேறு தொலைவில் இருக்கிறாள். ஆனால், உங்கள் உள்ளம் தொலைவில் உள்ள அவளிடம்தான் ஒன்றிக் கிடக்கிறது. உடல் மட்டும்தான் என்னருகே இந்த பஞ்சணையிலிருக்கிறது. இதை நன்றாக நானறிவேன். இன்னமும் அறிவேன் ஆனால்..." என்று வார்த்தையை நீட்டி முகத்தை ஒரு பக்கமாகத் தலையணையில் திருப்பிக் கொண்டாள் செங்கமலச் செல்வி.

"ஆனால் என்ன செல்வி?" கரிகாலனும் கேட்டான் தன் இடது கையை அவள் இடுப்பினின்றும் விடுவித்துக் கொண்டு.

"எல்லனோ வெட்கத்தை விட்டுத்தான் உங்களிடம் சொல்கிறேன். இருப்பினும் வெளிவிட்டுச் சொல்வதற்கும் தயை திருக்கிறதல்லவா?" இதை அவள், முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டே முணுமுணுத்தாள். ஆனால் அவன் முகத்தை அழுத்திய அவள் மலர்க் கரம் மீறிக் கதையைச் சொல்லியது

"அடபைத்தியமே! இது புரியவில்லையா உனக்கு? என் அணைப்பிலே நீ நிரஞ்சனாதேவியின் அணைப்பைக் கண்டாய் என் உதடுகளில் அவள் அதரசுகத்தை அனுபவித்தாய் இளமை பூரித்த என் அவயவங்களெல்லாம் அவள் எழிலாகத் தோன்றுகிறது உனக்கு. அவளுக்கும் உனக்கும் இடையே உள்ள ஆற்றைக் கடக்க என் உடல் ஒரு தோணி உனக்கு என்பதை நான் அறியவில்லையா என்ன? கரையை அடைந்ததும் தோணி எதற்கு? தோணியிலேயே தூற்றையும் எறிந்துவிட்டு ஓடுகிறாய் தோணி ஆற்றோடு போனால் உனக்கென்ன? ஆற்றுச் சுழலில் ஆழ்ந்து அடித்தலையில் அழிந்தால்தான் உனக்கென்ன?' என்ற அவள், எண்ணங்களை விவரமாக எடுத்துச் சொல்லியது அவன் பூங்கரம்.

நிலைமை இருவருக்கும் புரிந்துவிட்டது. ஆனால் விடை? அதைத்தான் செங்கமலச் செல்வி மீண்டும் கேட்டாள்.

"பிரபு! உங்களுக்குத் தெரிந்துவிட்டதல்லவா?"

"உம்" காரணமில்லாமலே பதில் சொன்னான் கரிகாலன்.

"ஆனால் விடை?"

"புரியவில்லை செல்வி."

"அதைத்தான் முன்பே சொன்னேன்."

கரிகாலன் அநுதாபத்தால் பெருமூச்சு விட்டான். "செல்வி! விதி உன் வாழ்க்கையில் இப்படியா விளையாட வேண்டும்?" என்றும் மென்மையாகக் கேட்டான்.

"விளையாடுவது விதியின் இஷ்டம்; அதற்கு உட்பட்டுத்தானே ஆகவேண்டும் பிரபு."

"என்னை ஏன் பிரபு பிரபு என்றழைக்கிறாய்" எரிச்சலுடன் எழுந்தது அவன் கேள்வி.

"பின் எப்படி அழைக்கட்டும்? மன்னா என்றழைக்கட்டுமா?"

"நான் எப்படி மன்னனாவேன்?"

"மன்னன் மகளின் பிற்காலக் கணவன் மன்னனாவது சகஜம்தானே?" இதைச் சொல்லிய செல்வி, மீண்டும் துக்க நகை நகைத்தாள்.

கரிகாலன் அவள் மன வேதனையை நன்றாகப் புரிந்து கொண்டானாகையால், பதிலேதும் சொல்லாமல் எழுந்து சாளரத்தருகே சென்று நின்றுகொண்டான். செல்வியும் பஞ்சணையிலிருந்து எழுந்து சென்று அவனருகே நின்றாள். இரண்டு நெஞ்சினிகளுக்கிடையே நின்ற கரிகாலன் ஏதேதோ எண்ணங்கள் உள்ளத்தில் கலை மோத வெகுநேரம் யோசனையிலாழ்ந்திருந்தான்.

அவன் அவள் தோள்மீது தலையைச் சாய்த்துக் கொண்டாள். பிறகு கேட்டாள்: "என்ன யோசிக்கிறீர்கள்?" என்று.

"உன் வாழ்வைப் பற்றி."

"அதைப்பற்றி இப்பொழுது கவலைப்படாதீர்கள்."

"என்?"

"வாழ்வு நிலைக்கட்டும்."

"நிலைக்காமலென்ன?"

"பிரபு! நீங்கள் வந்தியத் தேவர் முன்பாகச் சுட்டிக் காட்டிய ஆறு சுவர்களில் ஒன்றுதானே தகர்ந்திருக்கிறது?"

"ஆறு சுவர்களா?"

"அதற்குள் மறந்துவிட்டீர்களா? வங்கத்தையும் சோழ நாட்டையும் தடுத்து நிற்கும் ஆறு அரசுகளைப் பற்றி நீங்கள் சொல்லவில்லையா?"

"ஆம், சொல்லினேன்."

"அத்தச் சுவர்களிலே ஒன்றுதானே இடிந்திருக்கிறது. சுந்தரச் கோட்டத்தின் வீழ்ச்சிக்குப்பிறகு நாம் சமாளிக்க வேண்டிய இந்திரதத்தன் முதலியோர் எங்கே போனார்கள்?"

"எங்கும் போகவில்லை."

"ஆம் பிரபு! எங்கும் போகவில்லை. மிதிலிருக்கின்றனர். பலமான போர்கள். அந்தப் போர்களில் முன்னணியில் நான் நிற்பேன். மரணத்தை எதிர் நோக்குவேன். வேல், அம்பு, வாள் இவற்றில் எது பாய்ந்து இறந்தாலும், உன் மடியில் இறப்பேன். அப்பொழுதாவது மனப்பூர்வமாக என்னை மடியில் வைத்துக் கொள்வீர்களல்லவா?"

கரிகாலன் பதில் சொல்லவில்லை. அவன் கரங்கள் அவளை மெல்ல அணைத்தன. அந்த அணைப்பில் கழன்று

கொண்டே, "ஆகட்டும் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள்" என்று கெஞ்சினாள் சிங்கமுகச் சென்னி. அந்த கெஞ்சல் அவன் மனத்தை அடியோடு உடைத்தெறிந்தது. அடுத்த விநாடி அவன் பலமான பிடியைப் விட்டுக் கொண்டான் அவன்.

'ஆண் மகன் உறுதி தவறானா?' என்று நினைத்த செல்வி மதுமதி தனகத்தான்; அவனும் தனகத்தான். ஆனால் அந்த சமயத்தில் அவர்கள் தனகப்பையில்லாமல் உடைத்து அவர்கள் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கக் கூடிய இரண்டு ஓலைகளில் ராஜ முத்திரை களை வைத்துக் கொண்டிருந்தான் விக்ரமச் சோழ னைவனான அரசன் ராஜராஜன்.

60 ஒரு குழல் இரு ஓலைகள்

காலைக் காற்றிலே மாத ஏடுகள் ஆறு பறந்து சென்றன. சோழ சாம்ராஜ்யத்தின் வடக்குத் திசையிலே அரசன் ராஜராஜனும் கரிகாலனும் கலந்து முழக்கிய வெற்றி முரசொலியின் எதிரொலி, தொலை தூரத்தி லிருந்த காஞ்சி மாநகரத்திலும் பலமாகக் கேட்டுக்கொண் டிருந்ததால், அந்த மாநகரம் அத்தனை வெற்றிகளையும் தானே சம்பாதித்து விட்டதாக எண்ணி, தன் உப்பரிகை களின் பெருங்கிரீடங்களையும், கோபுரங்களின் பெரிய நோபுரங்களையும் வானவெளியில் உயர்த்திக்கொண்டு பிரமாப்புடன் காட்சி அளித்தது. அந்த உப்பரிகைகளுக் கும் கோபுரங்களுக்கும் வெற்றி முடிசூட்ட இயற்கை அன்னை ஏவிவிட்ட வெண்ணிற மேகங்கள் அலுவலை மெள்ள மெள்ள வளைக்கத் தொடங்கின.

ஏழு எட்டாவது நூற்றாண்டுகளில் பல்லவர்கள் பார மரிப்பிலே சிற்ப ஆடைகளையும் வெற்றி ஆபரணங்களை யும் தரித்த அந்தக் காஞ்சிமாநகர், அதைவிடப் பெரிய போர்க்காக விரித்த சோழ சாம்ராஜ்ய சாகரத்தினிடையில் சில தலைகளுக்கும் இருப்பிடமாகக் கீர்த்தியையும் பொலிவையும் பெற்று விளங்கியதால், மக்கள் நாவிலே பல்லவ காஞ்சி என்ற பெயர் மறைந்து, சோழ காஞ்சி என்ற பெயர் உலாவலாயிற்று. இப்படிப் பாமரரும், புலவரும், புரவலரும் போற்றிப் புகழ்ந்த அந்தக் காஞ்சி மாநகர், எதத்திங்கள் உதயமான அந்தக் காலை நேரத்தில் இளமையற்ற எழிலுடன் விளங்கிக்கொண்டிருந்தது.

'இடம் இரண்டு, தெற்றிகள் மூன்று, அரண்கள் நான்கு, தருக்கள் ஐந்து, புட்கள் ஆறு, நிலைகள் ஏழு, பொதுக்கள் எட்டு, மொய்ம்பகங்கள் ஒன்பது, ஓலைகள் பத்து, மன்றங்கள் பதினொன்று' என்ற புராணங்கள் விளக்கம் கூறியபடி தோன்றிய இரு வலைகளின்

ஆடிக்கத்தில் அத்தனை செல்வங்களையும் இழந்தும் மடை அதிகமாகப் பெற்றுச் சில காஞ்சி என்றும், வைணவ காஞ்சி என்றும் வைணவ காஞ்சி என்றும் நான்கு காஞ்சிகளை உள்ளடக்கியதால், நான்கு பெரும் கலாசாரங்களையும் தன் கர்ப்பத்தில் பிரதிபலித்து அத்தக் காஞ்சி மாநகரத்திலே, அத்தக் காலை நேரத்திலே வேத கோஷங்களும் வைண புத்த மடாலயத் தூபங்களும் பெரிதாக எழுந்து ஆகாயத்தைப் பரிகசித்துக் கொண்டிருந்தன போல் எங்கும் பறந்து கொண்டிருந்தது. நகரை வளைத்து நின்ற பெரிய கோட்டைச் சுவரைச் சுற்றிலும், புறாக்களும், கறாக்களும் கீறி எழுந்ததால் பார்க்கும் பயம் விளைவிக்கும் பேரழகில் இளம்பிள சிற்றரசர் ராஜேந்திர சோழ தேவனைத் தாக்க முயலும் சிற்றரசர் களைப்போலக் கோட்டையின் பெரும் கவர்களைப் பயன்றித் தாக்கிக் கொண்டிருந்தன. அவை அப்படித் தாக்கிக்கொண்டிருந்ததால் எழும்பிய 'கணக் கணக்' என்ற சப்தத்தை அடக்குபவர்களைப் போல கோட்டைச் சுவர் களின் மீது நாலா பக்கத்திலும் வேலும் கையுமாக உலாவிக்கொண்டிருந்த ஏராளமான வீரர்கள் 'பாய்' கோஷங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

'சணிகண்ணன் போகின்றான், காமருபூங் கச்சி மண் வண்ணா நீ கிடக்க வேண்டாம், செந்தாப்புலவ யானும் போகிறேன், நீயும் எந்தை பைந்தாகப் பாய் கருட்டிக் கொள்' என்று திருமழிசைப்பிரான் கூறிய அவர் 'சொன்ன வண்ணம் செய்க பெருமானும்' மீண்டும் அவர் கோரிக்கைகிணங்கி, போக்கொழிந்த பல் கொண்ட திருவேங்கடமலை உயர்ந்த கோபுரத்திற்கு சற்றுத் தள்ளிப் பாய்ந்து கொண்டிருந்த வேகவதி நதியும் முன்பொரு காலத்தில் தன்னை நினைபோட்டுத் தடுத்த அதே பெருமானுக்காகப் பயந்தது போல் பெரும் பிரவாகித்துக் கொண்டிருந்தாலும், ராஜேந்திர சோழ தேவன் அடைந்திருந்த பெருவெற்றிகளின் காரணமாய்

சற்றுக் கலைத்துவிட்டதே கரைகளைத் தாக்கிக்கொண்டு வருத்தது. வேகவதியின் கரைகளிலே இருந்த பூந்தோட்டங் களில் அன்று காலை மலர்ந்திருந்த மல்லிகைகளும் முல்லை களும் சற்று நேரத்திற்கெல்லாம் தாங்கள் அலங்கரிக்க விருந்த மங்கையர்களின் சிங்காரக் கொண்டையை எண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தன.

கச்சி சுற்றிய இடங்களெல்லாம் கோபுரங்கள் பெரு வாரியாக எழுந்திருந்ததால், அவற்றையெல்லாம் ஒரேயு முடியாத சதிராலன், அன்று காலை நேரத்தில் வீசிய இளம் தென்றல் ஒவ்வொரு பக்கத்திலே கோபுரங்களில் பெரும் நிழல்களைப் பாய்ச்சியிருந்ததன் காரணமாக அந்தக் காஞ்சி மாநகர், அன்று அரண்மனையிலே தங்கியிருந்த ராஜேந்திர சோழ மன்னன் மனம் போலவே மிகக் குளிர்ந்து இடந்தது. அந்தக் குளிர்ச்சிக்கு உதவி புரிந்த தைத்திங்களின் காலைப் பனி, கோபுரங்களின் மீது மட்டு மன்றி உப்பரிகைகள் மீதும் முத்து முத்தாய்ப் பதிந்து, காலைச் சூரிய ரச்மிகளைப் பல கூறுகளாகப் பிரித்து, நானாவித வர்ண ஜாலங்களைக் கிளப்பிக் கொண் டிருந்தன.

ஆழ்வார்களின் பாடல்களும் நாயன்மார்களின் பதிகங் களும் கோவில்களில் வேத காலத்தில் ஒதப்பட்ட தாலும் வீதிகளில் சென்ற ஏதுவார் தெலுங்களுக்குப் பண்ணைசத்து வாத்தியங்களுடன் பாடிச் சென்றதாலும் எப்பட்ட ஒலிகளையெல்லாம் கலந்து பெரிய பிரளய சத்தம் போல் காஞ்சி மாநகரைச் சூழ்ந்து கொண்ட போதும், அரண்மனை ஸ்தாபிதியிலும் இதர உப்பரிகை மாடங்களி லும் இருந்த பட்டி ஸ்திரீகள் தங்களுக்கும் சரி என்று தனிச் சிறப்பை அளித்திருக்கிறான் என்பதைக் காட்ட நானாவித சப்தங்களைக் கிளப்பிக் கொண்டிருந்தன. காலை வேளையாதலால் தொழுக்களிலிருந்து மேய்ச்ச லுக்கு அழைத்து விடப்பட்ட மாடுகளின் 'அம்மா, அம்மா' எனும் இன்பச் சப்தங்களும், அரண்மனைக்குப்

பக்கத்திலிருந்த நிருமஞ்சனத்தார் வேளத்தை அடித்து
டைந்த சேனைக் கூட்டங்களிலிருந்து எழுந்த ஆரவா
களின் பிளிறல்களும், குதிரைகளின் கனைப்புகளும்,
மாடப் பறவைகள் இனப்பிய சப்தங்களுடன் போய்
போட்டியிட்டன.

இரவு முழுவதும் காவல் செய்த வீரர்களுக்கு ஓய்வு
கொடுப்பதற்காக, ராஜவீதிகளில் போய்க் கொண்டிருந்த
வீரர்களின் புரவிகளின் காலடிச் சத்தமும், வேகமாகச்
ராஜ வீதான கட்டத்துக்கு விரைந்து கொண்டிருந்த
அரண்மனை யிதிரிகளின் சிவிகை ஆட்கள் போட்ட
'ஹூம்'கார ஒலியும் எல்லாமாகச் சேர்ந்து, அந்த
மாநகரத்திற்கு இயற்கையாகவுள்ள கம்பீரத்தை அதிகப்
படுத்திக் கொண்டிருந்தன.

எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடிற்று.
எங்கும் வீரர்களின் வெற்றிக் கோஷங்கள் வானைப்
பிளந்தன. சோழர்களின் புலிக்கொடிகள் பல உப்பரிகை
களிலிருந்து ஆகாயத்திலே கம்பீரமாகப் பறந்துகொண்டு,
சோழர்களின் ஆதிக்கத்தைப் பறை சாற்றிக் கொண்டிருந்
தன. புலிக்கு அடங்கும் காலம் தனக்கு வந்துவிட்டது
என்ற வருத்தத்தினால் போலும், இலங்கையிலிருந்த
கைலாச நாதர் கோயிலிலும் இதர ஸ்தாபனங்களிலும்
காணப்பட்ட பல்லவ சிற்பச் சிங்கங்கள் பேச முடியாத்
மௌனமாகக் கிடந்தன. புத்த காஞ்சியில் பல்லவ
அரண்மனையின் உச்சி உப்பரிகையில் கைலாசநாதர்
கோபுரச் சிங்கங்களை நோக்கி நகையாடும் முறையில்,
மிகப்பெரிய புலிக்கொடியொன்று காற்றில் படபடத்துக்
காலைக் கதிரவன் ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்தது.

புலிக்கொடியின் ஆதிக்கம் தென்னாடெங்கும் பரவி
தன்றி, வடநாட்டையும் ஊடுருவிச் சென்றுகொண்டி
ருந்தது. ஏற்கெனவே கரிகாலன் கூறிய ஆறு சுவர்களில்
நான்கு சுவர்கள் சரிந்துதான் போயின. சக்ர
கோட்டம் சரிந்ததும், ஒட்டரனான இந்திரதத்தனும்

தண்ட புத்தியின் தர்மபாலனும், தெற்கு வாடத்தின்
ரணகுரனும், அரையன் ராஜராஜன் படை பலத்துக்கும்
கரிகாலன் போர்த் தந்திரத்துக்கும் எதிரே நிற்கமாட்டா
மல் சரித்தே போனார்கள். இன்னும் இரண்டே சுவர்கள்!
வங்காளத்தின் கோவிந்த சந்திரன், உத்திரலாடத்தின்
மஹிபாலன்! இந்த இரண்டு அரசுகளும் சரித்துவிட்டால்
புலிக்கொடி கங்கையின் கரையில் நாட்டப்படும்! அதை
அறிந்துதானிருந்தான் பரகேசரிவர்மனான இராஜேந்திர
சோழதேவனும். இருப்பினும், சாம்ராஜ்ய வெற்றியிலே
மகிழ வேண்டிய அந்த மாபெரும் மன்னன் மனத்திலே
மட்டும் அன்று மகிழ்ச்சி சிறிதும் இல்லை. ஏதோ பெரிய
சமை ஒன்று அந்த மாமன்னன் மனத்தை அழுத்திக்
கொண்டிருந்ததை, தைத்திங்கள் உதயமான அந்தப் புனித
காலை நேரத்தில் சோழப் பேரமைச்சர் கண்டார்.

கலை எழில் கரை புரண்டு ஓடும்படியாகப் பல்லவர்
கள் கட்டிய புத்த காஞ்சியின் அரண்மனையின் அந்தரங்க
முத்தாணி மண்டபத்தில், பெரும் அரியணையிலே அமர்ந்
திருந்த இராஜேந்திர சோழதேவன், தீவிர சிந்தனையில்
ஆழ்ந்திருந்தான். மிகவும் அழகான தோற்றமுடைய
வனாதலால், இராஜேந்திர சோழன் என்ற இயற்
பெயரோடு கந்தரச்சோழன் என்ற காரணப்பெயரைப்
பெற்ற அந்தச் சோழப்பேரரசனின் ஆறடி உயர சரீரம்,
பல்லவ சிம்மாசனத்திலே ஒருபுறமாகச் சாய்ந்து கிடந்தது.
வயது சற்று ஏறியிருந்தாலும் அழகு சற்றும் குறையாத
அவன் மதி வதனத்தில் துலிர்த்த கவலையை ஆற்ற
இடப்பட்டனை போல், அவன் முகத்தைச் சுற்றி தவழ்ந்து
கொண்டிருந்த சில சுருட்டை மயிர்கள் வேகவதியிலிருந்து
புறப்பட்ட காற்றில் மெல்ல ஆடி அந்தச் சுந்தர
வதனத்தை அடிக்கடி தடவிக் கொடுத்தன. நான்
தலறாமல் அரியணையில் உட்கார்ந்து மக்களுக்கு நீதி
செலுத்த வேண்டியிருந்ததால், நான் தலறாமல் பெரும்
சீட்டத்தை தரித்ததன் காரணமாக நெற்றியின் உச்சியில்

எதிர்பட்டிருந்தவில் போன்ற வடுக்கூட சக்கரவர்த்தியின் முகத்துக்கு அழகையே அளித்துக் கொண்டிருந்தது. சிம்மாசனத்தின் கைகளிலே துவண்டு கிடந்த மெல்லிய கைகளிலே ஒடிய நரம்புகள், அந்தக் கைகள் எத்தகைய விதாடியிலும் இரும்பாகும் தன்மையைப் பெற்றவை என்பதைச் சந்தேகமற நிரூபித்தன. சிம்மாசனத்தின் முன்புறத்திலே வைத்திருந்த கால்களில் தென்பட்ட தழும்புகள் சதா போர்க்களம் மூண்டு புரவியில் செல்லும் அவன் பழக்கத்துக்குச் சான்றாக நின்றன. உள்ளம் பெரும் கவலையால் பீடிக்கப்பட்ட அந்தச் சமயத்திலும், இருவேல்களைப் போல் கூர்மையாகத் தெரிந்த மாமன்னனின் கண்ணின் கருமணிகள், 'இவரை யாரும் ஏமாற்ற முடியாது' என்ற எச்சரிக்கையை விடுவித்துக் கொண்டிருந்தன. அவன் கடை இதழில் சதா தவழ்ந்து கொண்டிருந்த ஒரு புன்சிரிப்பு எத்தனை கவலையிருந்தாலும் அதை அசட்டை செய்யக்கூடிய மனோபாவத்தை வெளிப்படுத்தியது. அன்று காலையும் அந்தப் புன்சிரிப்பு தவழ்ந்து கொண்டிருந்தது. ஆனால் உள்ளேயுள்ள கவலையை அசட்டை செய்யும் மனோபாவத்தின் அடையாளம் அன்று மட்டும் புலப்படவில்லை, இராஜேந்திர சோழனின் எழில் முகத்திலே.

மன்னன் வாயிலிருந்து ஏதாவது வார்த்தை உதிருமா என்று நீண்ட நேரம் எதிர்பார்த்து ஏமாந்த பேரமைச்சர் அரசன் கவனத்தைத் திருப்பத் தாமே முதலில் பேசத் தொடங்கி, "மன்னவா" என்று மெல்ல அழைத்தார்.

ஒருக்களித்துச் சிம்மாசனத்தில் சாய்ந்து கிடந்த இராஜேந்திரன், சற்றுத் தலையைத் திருப்பி, பேரமைச்சர் மீது தன் கண்களை ஓடவிட்டான். வாய் எதுவும் சொல்லாவிட்டாலும் 'எதற்காக அழைக்கிறீர்கள்?' என்ற கேள்வி மன்னன் பார்வையில் தொக்கி நிற்பதைக் கண்ட பேரமைச்சர், விஷயத்தை விளக்க முற்பட்டு, "அரசன்

இராஜாதனிடமிருந்து இன்றும் ஒரு தூதுவன் வந்திருக்கிறான்" என்றார்.

மன்னன் அதில் மகிழ்ச்சி கொள்ளுவதற்குப் பதிலாகச் சினமே கொண்டான் என்பதை அவன் முகம் சொல்லாமலும், அவன் வாயிலிருந்து வார்த்தைகள் மிக நிதானமாகவே உதிர்ந்தன.

"தூதுவன் வந்திருக்கிறானா?" என்று கேட்டான் மன்னன்.

"ஆம் அரசே" என்று மென்ன நிமிராத தலையுடன் நிலத்தை நோக்கிக் கொண்டே பதில் சொன்னார் பேரமைச்சர்.

"ஒரே ஒரு வெள்ளிக் குழல்தானே வந்திருக்கிறது?"

"ஆமாம்."

"அதில் கண்டிப்பாய் இரண்டு ஓலைகள் இருக்கும்."

"ஆமாம்."

"குழலை உடைத்துப் பார்த்தீரா?"

"பார்த்தேன்."

"இரண்டு ஓலைகள்..."

"இருக்கின்றன."

"ஒன்று..."

"தங்களுக்கு."

"இன்னொன்று?" சினத்துடன் எழுந்தது சக்கரவர்த்தியின் கேள்வி. பதில் சொல்லத் தயங்கினார் பேரமைச்சர், இராஜேந்திரன் பதிலைச் சொன்னான். "இன்னொரு ஓலை தஞ்சை புத்த மடாலயத் துறவி பிரும்மானந்தருக்கு" என்று.

"ஆமாம் மன்னவா." பணிந்த குரலில் ஒப்புக்கொண்டார் பேரமைச்சரும்.

''அதில் பழைய சோழர் குல முத்திரை இருக்கிறதா?'' என்று மீண்டும் வினவினான் மன்னன்.

''இருக்கிறது'' என்பதற்கு அறிகுறியாகப் பேரமைச்சர் தலையை ஆட்டினார்.

''அதே இடம்'' என்று தொடர்ந்தான் மன்னன்.

''ஆமாம்.''

''என்ன ஆமாம்? எதைப் பார்த்தாலும் ஆமோதிக்கிறீரே பேரமைச்சரே!'' என்று சொல்லிக் கொண்டே ஆசனத்திலிருந்து கணேசத்தில் எழுந்திருந்த இராஜேந்திர சோழதேவன், அரியாசனத்துக்கு எதிரே சற்று நேரம் உலாவினான். பிறகு சட்டென்று நின்று பேரமைச்சருக்கு அருகில் வந்து ''நீர் இந்தப் பொறுப்பை எத்தனை தானாக அலைச்சரக்க முடிகிறீர்?'' என்று கடுமையான குரலில் கேட்டான்.

''தங்கள் தந்தை காலத்திலிருந்து.'' நிதானமாகவே பதில் சொன்னார், பேரமைச்சர்.

''சோழர் குல முத்திரையை, அதுவும் இரட்டைக் கரசூல மக்களுக்கு எழுதப்படாத ஓலைகளில் பொறிப்பதுண்டா?'' என்று இராஜேந்திரன் கேட்டான், கோபம் வெளிக்காட்டிய குரலில்.

''உண்டு'' என்றார் அமைச்சர், உறுதியுடன் அவரது இருந்த தலையசைவைக் கவனித்தபடி.

''எந்தச் சந்தர்ப்பங்களில் உண்டு?'' என்று கேட்டான் ராஜேந்திரன்.

''கரசூல மாலைகளைப்பற்றி எழுதப்படும் ஓலைகளில் பொறிப்பதுண்டு.''

சிறிது நேரம் சிந்தித்துவிட்டுக் கேட்டான் ராஜேந்திரன், ''அப்படியானால், அரையன் ராஜராஜன் இந்தத் தஞ்சைத் துறவிக்கு எழுதும் ஓலைகளில், கரசூல மர்மம் எனை ஒத்திருக்கிறது போலையிருக்கே?'' என்று.

''எனக்குத் தெரியாது மன்னவா?''

''தெரிந்து கொள்ள வேண்டியது நமது கடமை மன்னவா?''

''ஆமாம்.''

''அந்தக் கடமையை நிறைவேற்ற, என்ன செய்திருக்கிறீர்?''

''எதுவும் செய்யவில்லை. அரையன் ராஜராஜன் திரும்பி வரட்டும் என்று பொறுத்திருக்க உத்தேசித்திருக்கிறேன்.''

இதைக் கேட்ட ராஜேந்திரன் மீண்டும் அரியணையில் அமர்ந்துகொண்டு, அவரைச் சற்று நேரம் உற்று நோக்கினான். ''நீர் பொறுக்கலாம் அமைச்சரே, என்னால் பொறுக்க முடியாது. நாளும் ஆறு மாதங்கள் பொறுத்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் இரண்டு ஓலைகள் வருகின்றன. ஒன்று எனக்கு. மன்னனென்று தஞ்சைத் துறவியாருக்கு. இரண்டு ஓலைகளையும் படிக்க வேண்டும் என்று ஓலையில் வேண்டுகோள்! சாம்ராஜ்யாதிபதி பார்க்க முடியாத ஓலை துறவிக்கு! இது விசித்திரமாயில்லை உமக்கு?'' என்று படபடப்புடன் பேசினான் இராஜேந்திரன்.

''அவசரப்படாதீர்கள் மன்னவா. காரணமில்லாமல் அரையன் ராஜராஜன் எதையும் செய்யமாட்டான். அவனிடம் அவரம்பிள்ளை சொல்லியனுப்பிக்கை சொல்லியனுப்பிக் கனைத் தங்களுக்குச் சம்பாதித்துத் தந்திருக்கும் அவனுக்குத் தாங்கள் செய்யும் கைம்மாறு இதுவல்ல. அரையன் ராஜராஜன் கங்கைப் படையெடுப்பிலிருந்து திரும்பட்டும். அவனே தங்களுக்குச் சகலத்தையும் சொல்லுவான்'' என்று சமாதானப்படுத்த முயன்றார் பேரமைச்சர்.

இராஜேந்திர சோழதேவன் மனத்தில் சிறிதும் சாந்தி ஏற்படவே இல்லை. எதையோ சற்று யோசித்துவிட்டு

கேட்டான், "அது சரி! அரையன் ராஜராஜன் உச்சியை விட பன்மடங்கு அதிக கீர்த்தியைப் பெற்றுவிட்டானே, அந்த வாலிபன் யார்?"

"கரிகாலனைத்தானே குறிப்பிடுகிறீர்கள் மன்னவா?" என்று வினவினார் பேரமைச்சர்.

"ஆம் அமைச்சரே! சக்கரக் கோட்டத்தில் வெற்றிக்கு மட்டுமின்றி, மற்றும் பல வெற்றிகளுக்கும் அடிகோலிய தாகக் கூறப்படும் அந்தக் கரிகாலன் யார்?" என்று விசாரித்தான் மன்னன்.

"முன்பே சொன்னேனே மன்னவா. அவன்தான் அரையன் ராஜராஜன் வளர்ப்பு மகன்" என்றார் பேரமைச்சர்.

"அது தெரியும் பேரமைச்சரே! அவன் யார்? எங்கிருந்து வந்தான்! அவனைப் பெற்றெடுத்தவர் யார்?"

"அவனுக்குப் பெற்றோர் யாருமில்லை. அவன் அநாதை. சூடாமணி விஹாரத்திலிருந்து வந்தான்."

"அவனை அரையன் ராஜராஜனிடம் அனுப்பியது தஞ்சைத் துறவிதானே?"

"ஆமாம்."

"இராஜேந்திரனின் கண்களில் ஒரு புத்தொளி துளிர்த்தது. "அப்படியானால் இந்தத் தஞ்சைத் துறவிக்குக் கரிகாலனைப்பற்றி ஏதோ தெரிந்திருக்க வேண்டும். அதுவும் அரசகுல மர்மமாகத்தான் இருக்க வேண்டும். அதனால்தான் இந்த ஓலை சோழர்குலக் கிரீட முத்திரையுடன் பிரும்மாணந்தருக்கு அனுப்பப்படுகிறது. இப்பொழுது விளங்குகிறதா பேரமைச்சரே?" என்றான் இராஜேந்திரன்.

"இருக்கலாம்" என்றார் பேரமைச்சர்.

"அந்த மர்மம் என்ன என்பதை இன்று பார்த்து விடுகிறேன். அரையன் ராஜராஜனிடமிருந்து வந்த ஓலை என் எங்கே?"

"இதோ!" பேரமைச்சர், அரசன் நீட்டிய கையில் ஓலையைச் சமர்ப்பித்தார்.

இராஜேந்திரன் மீண்டும் ஆசனத்தைவிட்டு எழுந்து ஓர் ஓரமாய் ஆசனத்திலேயே அமர்ந்தான். இன்னொரு ஓலையின் விவரத்தைப் படித்து இதழ்களில் புன்முறுவல் தவழ அதன் முத்திரைகளை உடைக்கப் போனான். அடுத்த கணம் அந்தப் புன்முறுவல் மறைந்தது. "திலிராஜேந்திரா!" என்று எழுந்த அதட்டலான குரல் சோழ சாம்ராஜ்யத்தின் ஏக சக்ராதிபதியான இராஜேந்திரனைக்கூட அசர வைத்தது. குரல் வந்த திசைக்காகத் திரும்பினான் இராஜேந்திரன். அச்சம் என்பதைக் கனவிலும் அறியாத அவன் கண்களில்கூடப் பயம் துளிர்த்தது. அரச குலத்தையே அசட்டை செய்யும் பார்வையுடன் வாயிற்படியில் நின்றிருந்த தஞ்சை மடாலயத் துறவி பிரும்மாணந்தர் மன்னனை நோக்கி மிதந்த கம்பீரத்துடன் நடந்து வந்தார்.

"வாரும். உமக்காகத்தான் காத்திருக்கிறேன்" என்றான் மன்னவன். அவன் இதழ்களிலே என்றும் யாரும் காணாத குறுரப் புன்சிரிப்புக் காணப்பட்டது.

மிகுந்த அசட்டையுடனும் துணிவுடனும் உள்ளே நுழைந்த பிரும்மாணந்தர், அரசர் வாயிலிருந்து உதிர்ந்த சொற்களையும், அவன் கடையிதழில் தெரிந்த குரூரச் சிரிப்பையும் கவனித்ததும், அவன் உள்ளே ஓடிக்கொண்டிருந்த எண்ணங்களை நொடிப்பொழுதில் மனித்து விட்டாராதலால் தமது வாழ்க்கையின் மிக ஆபத்தான கட்டத்தைத் தாம் அணுகிவிட்டதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டிருந்தார்.

61. துறவிக்கு வேந்தன் அருப்பு

சோழப் பேரரசின் மாமன்னன் தம்மை வலேந்த தோரணை, அவன் முகத்திலே தளிர்த்த உணர்ச்சிகள், கையிலே அவன் ஏந்தி நின்ற ஓலை—இவையனைத்தையும் தொகுத்துப் பார்த்த தஞ்சை மடாலயத் துறவி பிருஹன்நாயகர் உள்ள நிலையை மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டிட்டாராதலால், தமது கவ்வகளை மடக்கிக் கிடந்த ஓலைமீதும், இராஜேந்திரனுக்குச் சற்று அப்பால் முகத்தில் பேயறைந்ததுபோல் நின்று கொண்டிருந்த பேரமைச்சர்மீதும் ஒரு விநாடி ஓடவிட்டார். அதுவரை பிரும்மானந்தருக்கு எதிலும் சந்தேகம் இருந்திருக்காதும், அதைப் பேரமைச்சரின் கிலி பிடித்த முகம் அறவே போக்கடித்துவிட்டதால், தமக்கு வரும் ஓலையின் மர்மத்தை அறியாமல் ஆறுமாத காலம் பொறுத்துக் கொண்டிருந்த இராஜேந்திரன் பொறுமையை அடியோடு இழந்துவிட்டானென்பதையும், அந்த ஓலை சம்பந்தமாக இருவருக்கும் பெரும் விவாதமும் நடந்திருக்கிறதென்பதை யும் ஊகித்துக் கொண்டார் தஞ்சைத் துறவியார்.

உள்ளே ஓடிய எண்ணங்களைச் சிறிதும் வெளியில் காட்டாமல், புன்னகை தாண்டவமாடிய முகத்துடன், தமது இரு கைகளையும் உயர்த்தி ஆசி, "எதற்கு இவ்வளவு உதயமான இந்த நன்னாளன்று, சோழப் பேரரசுக்குச் சில மங்களங்களும் உண்டாக்க புத்தர் பிரான் அருள் புரியட்டும். இராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி பாரெங்கும் பரவட்டும். இன்னும் இரண்டு மாதங்களில் புனித கங்கை யின் கரையில் நாட்டப்படும் புலிக்கொடி, பிறகு இமயத் தின் சிகரத்திலும் பறக்கட்டும்!" என்று ஆசி கூறினார்.

வேல் போன்ற தன் கண்களைத் தஞ்சைத் துறவியார் மீது சில விநாடிகள் நாட்டிய சோழவேந்தனின் கடை விதழ்களில் இருந்த புன்சிரிப்பு சிறிது நேரத்தில் நன்றாக

மலர்ந்தது. வெளியே பெரு மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்ட வேந்தன் வாயிலிருந்து உதிர்ந்த சொற்களின் சோகமும் விஷமும் கலந்து நின்றன. "சோழப் பேரரசின் விஸ்தாரத்துக்காகத் தங்கள் ஆசிகளை ஏற்றோன் துறவி யாம்! ஆனால், தங்கள் இஷ்டப்படி இமயத்தில் புலிக் கொடி பறக்க வேண்டுமானால் இந்த ஆசிகள் மட்டும் போதாது..." என்று பேசிய வேந்தன், பேச்சை முடிக்காமல் பாதியிலேயே நிறுத்தினான்.

அரசன் எண்ணங்கள் எந்தத் திசையில் ஓடுகின்றன என்பதைப் புரிந்துகொண்ட தஞ்சைத் துறவியார், ஏதும் அறியாதது போலவே கேட்டார், "ஆசிகள் போதாதா? வேறென்ன வேண்டும் மன்னவா?" என்று.

"நம்பிக்கை" என்று பதிலிறுத்தான் அரசன்.

"நம்பிக்கையா! யார் நம்பிக்கை?" என்று வினவினார் துறவியார்.

"கற்றிருப்பவர்கள் நம்பிக்கை" என்று பதில் கூறிய மன்னன் வார்த்தைகளைச் சற்று அழுத்தியே சொன்னான்.

"தொல்லை புரியவில்லை மன்னவா!"

"ஏன் புரியவில்லை? பெரிய சாம்ராஜ்யங்கள் நம்பிக்கையாலும் உதவியாலும் விதைக்கப்படுகின்றன, பிரும்மானந்தரே! பூரண நம்பிக்கையை மன்னரிடம் வைத்துள்ள படைத்தலைவர்கள், மந்திராலோசனை செய்பவர்கள், இவர்களைக்தான் சாம்ராஜ்யங்கள் நெஞ்சிக்கப்படுகின்றன."

"உண்மை மன்னவா! இந்த அம்சங்களில் நமது சாம் ராஜ்யத்தில் எது குறைவாயிருக்கிறது? மன்னனைத் தெய்வமென்று மதிக்கும் மந்திரிகள் இல்லையா? சக்ரவர்த்திக்காக உயிரையே போரில் தியாகம் செய்யத் துடிக்கும் சேனாபதிகள் இல்லையா?"

"இருக்கிறார்கள் துறவியாரே! படைத்தலைவர்களைப் பற்றியோ, அவர்கள் ஆற்றலைப் பற்றியோ நான் பேசவில்லை நம்பிக்கையைப் பற்றிப் பேசுகிறேன்."

"படைத்தலைவர்களின் ராஜபக்திக்கு நம்பிக்கை தானே அறிவாய்?" என்று கேட்டார் பிரும்மானந்தர்.

இராஜேந்திரன் அவரை நன்றாக உற்றுப் பார்த்து விட்டுச் சொன்னான், "அப்படித்தான் தாமும் நினைத்தேன் துறவியாரே! ஆனால் இரண்டும் வேறுபட்டவை என்பதைச் சமீப காலத்தில் தானே அறிந்தேன்" என்று.

பிரும்மானந்தர் அச்சம் சிறிதுமில்லாத கண்களை அரசன் மீது ஓட்டினார். பிறகு துக்கம் கலந்த பெருமூச்சை விட்டார். "இது நியாயமல்ல இராஜேந்திரா!" என்ற சொற்களும், அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து வெளிவந்தன.

அரசன் கண்களில் விஷமமும் கோபமும் கலந்து தாண்டவமாடின. "எது நியாயமல்ல துறவியாரே? ஒரு படைத்தலைவன் அரசனுக்கெதிராகச் சதி செய்கிறான் என்பது நியாயமல்ல என்கிறீரா? அல்லது அதை அரசன் ஆறுமாத காலம் பொறுத்தது நியாயமல்ல என்கிறீரா? அந்தச் சதியில் துறவியான நீரும் கலந்துகொண்டது நியாயமல்ல என்கிறீரா? எதை நியாயமல்ல என்று கூறுகிறீர்?" என்று உஷ்ணம் பரிபூர்ணமாகத் தொனித்த குரலில் கேட்டான் இராஜேந்திரன்.

அரசனுடைய சொல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலாக இதயத்தைத் தாக்கியதால் மனம் புண்பட்ட தோடு சினமும் கொண்ட துறவியார், சிற்றத்தால் ஓரளவு சிவந்துவிட்ட கண்களால் அரசனை ஏறெடுத்துப் பார்த்து, "மன்னவா! வார்த்தைகளை அளந்து பேசு. அதுவும் யாரைப் பற்றி பேசுகிறாய், யாரிடம் பேசுகிறோம் என்பதை நினைத்துப் பேசு" என்று அரசனுக்குச் சிறிதும் குறையாத உஷ்ணத்துடன் எச்சரித்தார்.

இராஜேந்திரனின் கண்கள் ஆச்சரியத்தால் சற்றே விரிந்தன. ஆச்சரியம் மட்டுமல்லாமல் சிற்றமும் தலை தூக்கிய குரலில், "துறவியாரே! நீர் இருக்கும் இடத்தை அறியாமல் பேசுகிறீர். இது சோழ சாம்ராஜ்யம். நினைப்பு இருக்கட்டும்" என்றான் மன்னன்.

"இருக்கும் இடத்தை அறிந்துதான் பேசுகிறேன் மன்னவா! ஆனால் நான் உன் பிரஜை அல்ல" என்றார் துறவியார்.

"என் பிரஜை அல்லவா?"

"அல்ல. நான் சோழ சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவன் அல்ல."

"பின் எந்த சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்?"

"எந்தப் பேரரசு அழிந்தாலும், பிரளயமே வந்தாலும் அழியாத புத்தர் பிரானின் அன்பு சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவன். உனக்குத் தேவையாயிருக்கும் ஆயுதங்களும் படைகளும் எங்களுக்குத் தேவையில்லை இராஜேந்திரா! எங்களுக்கு அன்புதான் அஸ்திரம். அதுவேதான் சாம்ராஜ்யம்" என்று படபடப்புடன் கூறினார் துறவியும்.

துறவியின் சொற்களால் அரசன் கோபம்தான் தணிந்ததோ அல்லது உள்ளே அதை மறைத்தானோ சொல்ல முடியாது. துறவியின் பேச்சைக் கேட்டதும் அரசன் முகத்தில் சினம் மறைந்து, மீண்டும் புன்னகை தவழ்ந்தது.

"அப்படியானால் துறவியாரே! இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு என் வந்தீர்" என்று கேட்டான் மன்னவன்.

"இந்தச் சாம்ராஜ்யத்தில் அந்தச் சாம்ராஜ்யத்தைப் பரப்ப" என்று கோபம் சற்றே தணிந்த குரலில் பதில் சொன்னார் துறவியார்.

"அந்த சாம்ராஜ்யத்தை என் சாம்ராஜ்யத்தில் பரப்பத்தான் அரையன் ராஜராஜனுடன் முகியக்

கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுகிறீர்களா என்று விசாரித்தான் மன்னவன்.

அரசனின் சாந்தம் கலந்த சொற்களில் ஆச்சரியம் அம்சம் தொனிப்பதைக் கண்ட தந்தைத் துறவியார், "ஆம் மன்னவா! அதற்காகத்தான்" என்றார்.

"என், அரையன் ராஜராஜன் புத்த மதத்தைத் தழுவி விட்டானா?"

"புத்த மதம் என்பது தனி நபரல்ல மன்னா! அது ஒரு கொள்கை. மக்கள் இருக்கவேண்டிய சூழ்நிலையை அது நிருவுகிறது. எங்கெல்லாம் அறிவின்மையும், சாந்தமும் சத்துஷ்டியும் நிலவுகின்றனவோ அங்கெல்லாம் புத்த மதம் உலவுகிறது" என்றார் துறவியார். கலகலவென அந்த முத்தாணி மண்டபத்தின் மேல்புறத்துக்காக உயர்ந்து அங்கிருந்த சித்தார்த்தன் சித்திரங்களைப் பார்த்துக் கொண்டே.

"அந்தச் சாந்தமும் சத்துஷ்டியும் இப்பொழுது அரையன் ராஜராஜனுக்கு எப்பட்டுவிட்டது போலிருக்கிறது?" என்று அரசன் ஏளனமாகக் கேட்டான்.

துறவி பொருமூச்செறிந்து கொண்டே சொன்னார், "இல்லை மன்னவா! அவன் மனத்தில் சாந்தியுமில்லை, சத்துஷ்டியும் இல்லை. மற்றவர்களுக்குச் சாந்தியும் சத்துஷ்டியும் விளைவிக்கவே அவன் ஜீவிக்கிறான். உன் சாம்ராஜ்யத்தில் அன்பையும் சௌமனஸ்யத்தையும் நிலை நிறுத்தவே அவன் வாழ்வின் லட்சியம். அவனிடம் அவ நம்பிக்கை கொள்ளாதே. உன் நன்மைக்கே அவன் உயிர் வாழ்கிறான்" என்று.

"அதற்காகத்தான் இந்த முகவரி ஓலையை உமக்கு அனுப்புகிறானோ" என்று வேற்றன் வினவினான்.

"ஆமாம்."

"அப்படியானால் இந்த ஓலையில் என்னதான் எழுதி இருக்கிறது?"

"சொல்ல முடியாத நிலையிலிருக்கிறான் ராஜேந்திரன்!"

"அப்படியானால் இதை உடைத்தே பார்க்கிறேன்" என்று ராஜேந்திரன் கையிலிருந்த ஓலையின் முத்திரை யை உடைக்க ஆரம்பித்தான்.

அந்த விநாடி துறவியின் குரல் மிகக் கடுமையாக ஒலித்தது அந்த முத்தாணி மண்டபத்தில். "முத்திரை யை உடைக்காதே ராஜேந்திரா. உன்மீது ஆணை! உன் குலத்தின் மீது ஆணை! எந்தப் புனிதமான உன் வெற்றிகளெல்லாம் அடையாளமாக விளங்குகிறதோ அதன்மீது ஆணை. உனக்கு இந்தப் பேரரசைக் கொடுத்த உன் தந்தையின்மீது ஆணை" என்று கூறினார் துறவியார்.

அரசன் முத்திரையின் ஒரு பகுதியை உடைத்தான். துறவியார் அவன் கையை வெடுக்கென்று பிடித்துக்கொண்டார். "கடைசி முறையாகச் சொல்கிறேன். எந்த மன்னரையெல்லாம் உன்னுயிர் போல் பாவிக் கிறாயோ அந்த உன் மக்கள்மீது ஆணை, உடைக்காதே ஓலையை" என்று உத்தரவிட்டார் துறவியார்.

பல ஆணைகளுக்கும் அசையாத ராஜேந்திரன், கடைசி ஆணையில் அசந்துபோனான். "மக்கள்மீது ஆணை" என்று உதடுகள் துடிதுடித்துச் சொற்களை உதிர்த்தன. துறவியை ஒருகணம் முறைத்துப் பார்த்த ராஜேந்திரன் முகத்தில் என்னும் கொள்ளும் வெடித்தன. ஏதோ பேச வாயெடுத்த அவன் வாய் அடைத்து விடவே, துறவியிடம் ஓலையைக் கொடுத்துவிட்டுப் பேசாமல் உள்ளறையை நோக்கி நடந்தான்.

என்றும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் ராஜேந்திரன் நடை இன்று மிகவும் தளர்ந்து காணப்பட்டது. அதைக்

கண்ட தஞ்சை மடாலயத் துறவியின் கண்களிலும் நீர் கசிந்தது. ''உனக்கு இணையான மன்னன் உலகில் இடையாது இராஜேந்திரா! உன் சாம்ராஜ்யம் வெற்றி தானே இத்தனை பாடுபடுகிறோம். இன்னும் இரண்டு மாதங்கள் பொறுத்திரு மன்னவா! உன்னையும் பக்கமும் பாதிக்க இருக்கும் சிக்கல்கள் அறுந்து போகும். யில் எது நேர்ந்தாலும் மன்னித்துவிடு என்னை'' என்று லம்விட்டே பேசினார். அதுவரை மௌனமாய் நின்றிருந்த பேரமைச்சர் துறவியை அருகில் வரும்படி கொண்டே சொன்னார். ''துறவிக்கு வேந்தன் திரு என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறேன் சுவாமி! ஆனால் இன்றுதான் அதன் அர்த்தத்தை நேரில் கண்டேன்'' என்று

பேரமைச்சரை நோக்கித் திரும்பிய துறவி, ''தவறு பேரமைச்சரே! பழமொழி தவறு. துறவிக்கு வேந்தன் தரும்பல்ல. அதுவும் இராஜேந்திர மன்னனின் கண்டு பாகத் தரும்பல்ல அவன் குணக்குன்று. குணத்தினால் இமயத்தைவிட உயர்ந்து நிற்பவன். இல்லாவிடில் இந்த அற்பனை ஒரு விநாடியில் சிரிப்போட்டு நிலையைப் படித்திருக்கலாமே இலனைப் பெற்ற இராஜாதன் சிறப்புற்றான். இலனைப் பெற்ற இந்த நாடும் சிறப்பு பெற்றது. அவனில்லை தருப்பு. அவனிடம் உண்மையைச் சொல்லமுடியாமல் தவிக்கிறேனே நான்தான் தருப்பு'' என்று நாத் தழுதழுக்கப் பேசினார்.

அவர் எண்ணங்கள் எங்கெங்கோ பறந்து கொண்டிருந்ததால், அரண்மனையில் இரண்டு மூன்று நாட்களாவது தங்க வேண்டும் என்று பேரமைச்சர் விடுத்த அழைப்பைக்கூட ஏற்க மறுத்தார். அரசன் சென்றதும், அவன் தன்னிடமளித்த ஓலையைத் திறந்து படித்த அவர் முகத்தில் பெரும் கலவரை சூழ்ந்தது. பிறகு பேரமைச்சரை நோக்கித் திரும்பிய துறவியார், ''பேரமைச்சரே! இப்பொழுது நிரஞ்சனாதேவி எங்கிருக்கிறாள்'' என்று வினவினார்.

''கரத்தில்'' என்று பதில் கூறினார் பேரமைச்சர். துறவியின் முகத்தில் ஈவி படர்ந்தது. ''என்ன? கரத்திலா?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றார் பேரமைச்சர்.

''அங்கு இன்னும் யாரிருக்கிறார்கள்?''

''லத்தியத் தேவர் இருக்கிறார்.''

''லத்தியத் தேவரும் அங்குதானிருக்கிறாரா? வெகு தழுது!''

''ஏன் துறவியாரே, இதிலென்ன தவறு நடந்தது? கரத்து மாளிகை ஒன்றுதான் காலியாக இருந்தது. வேங்கி நாட்டு மன்னன் மகளை அங்கு அனுப்பிவிட்டோம்.''

துறவியின் கண்களில் கோபம் பலமாக வீசியது. ''அனுப்பிவிட்டீரா! பேஷ்! கரத்தில் நிரஞ்சனாதேவியும் லத்தியத் தேவரும், ஆதே ணனில்...'' என்று ஏதோ சொல்லப் போனவர், மேலே பேச்சை ஒட்டாமல், ''சரி சரி, இன்று பகல் இங்கேயே தங்குகிறேன். இன்றிரவு பாருக்கும் தெரியாமல் நான் கரம் போக வேண்டும்'' என்றார்.

''இரவில்! ஏன்?''

''பகலில் செல்லக்கூடிய வேலையல்ல இது.''

பேரமைச்சர் துறவியார்மீது சந்தேகம் தறும்பிய ண்களை ஓட்டினார். துறவியார் பெரிதாக நகைத்தார்.

''ஏன் நகைக்கிறீர்?'' என்று கேட்டார் பேரமைச்சர்.

''என் தலையெழுத்தை நினைத்து, துறவியாக வாழ வேண்டியவன் உலகச் சிக்கலில் இளைத்திருப்பதை நினைத்து.''

ஏதோ பெரும் அரசியல் ரகசியம், இராஜேந்திரன் கறிந்தக் தகாத ரகசியம், துறவியாரின் இதயத்திலே பூட்டிக் கிடக்கிறதென்பதை உணர்ந்துகொண்டாலும் அதைப்பற்றி ஏதும் கேட்கவில்லை பேரமைச்சர். தறிக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து

கொடுத்தார். அன்றிரவோடு இரவாகப் பயணம் செய்து பிரும்மானந்தர், கூரத்துக்கு நள்ளிரவில் வந்து, கூரத்தின் எல்லையிலேயே பல்லக்கை நிறுத்தி இறக்கிக்கொண்டு, திரும்பிச் செல்ல ஆள்களுக்கு உத்தரவு கொடுத்தார். பல்லக்கு கண்ணுக்கு மறைந்ததும் விடுவிடு என்று நடந்து, சில தெருக்களைக் கடந்து கடையொன்றை அணுகினார். தள்ளியிருந்த ஒரு தோப்புக்குள் காட்சியளித்த ஒரு மனிதனை அணுகி இருமுறை மெல்லக் கதவைத் தட்டினார். உள்ளிருந்து விளக்குடன் வந்து கதவைத் திறந்த வேலைக்காரனிடம், பிரும்மானந்தர், தமது முஷ்டியைப் பிடித்துக் காட்டி ஏதோ சைகை செய்தார். வேலையான் பதிலேதும் சொல்லாமல் அவரை உள்ளே அழைத்துச் சென்றான். அந்த மாளிகையின் நடுக் கூடத்திலே இருந்த நடுத்தர வயதுள்ள ஒரு மாது துறவியாரைக் கண்டதும் எழுந்திருந்து, "வாருங்கள் வாருங்கள் ஏது இந்த நள்ளிரவில்?" என்று முகமன் கூறிக் கொண்டே, துறவியார் உட்காருவதற்கு ஓர் ஆசனத்தையும் சுட்டிக் காட்டினாள். ஆசனத்தில் அமர்ந்த துறவியும் வந்த சமாசாரத்தை விளக்க முற்பட்டு "ஆபத்து நெருங்கிறது மகளே!" என்று சோகம் ததும்பிய குரலில் கூறினார்.

"உண்மையாகவா? என் மகனுக்கு..." என்று பதைப்புடன் கேட்டாள் அவள்.

"அவனுக்கொன்றும் ஆபத்தில்லை மகளே! சோழ சாம்ராஜ்யத்தைத்தான் ஆபத்து நெருங்கி வருகிறது. அந்த ஆபத்தைத் தவிர்க்க நீ இந்த அஞ்ஞாத வாசத்தை ஏற்றுக் கொண்டாயோ, அந்த ஆபத்து மிகத் துரிதமாக நெருங்குகிறது" என்று தொடங்கிய துறவியார், நெருங்கும் ஆபத்தைப்பற்றி விளக்க விளக்கப் பெரும் பீதி படர்ந்தது அந்த மாதரசின் முகத்திலே. "இதற்காகவா நாங்கள் எங்கள் வாணாளையெல்லாம் வீணாக்கினோம் துறவியாரே! இதற்கொரு வழியில்லையா?" என்று கதறினாள் அவள்.

62. மணிமேகலை

அரசியல் தொல்லைகளிலிருந்து அல்லப்பொழுது விடுபட்டுச் சிறிது நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டு உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காகப் பல்லவ மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட மாளிகைகளையே பெரும்பாலும் உடைய, கூரம் நகரத்தை அடுத்த அந்த தடர்த்தியான தோப்பிலே தன்னந்தனியே நின்ற அந்த மாளிகையிலே, துறவிகளைவிட ஒரு படி அதிகமாகவே உலக பந்தங்களிலிருந்து விடுபட்டுத் தனி வாழ்க்கை நடத்தி வந்த அந்த மாதரசி, துறவியார் தந்த தகவலைக் கேட்டதும் துன்பச் சூழலில் பூராவாகச் சிக்கிக் கொண்டதால், அவள் கண்களிலிருந்து அருவிகளைப்போல் நீர் சரந்து பிரவாகித்தது. கைகளிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு அவள் விக்கி விக்கி வெகுநேரம் அழுவதைக் கண்ட பிரும்மானந்தர் மனமும் பாகாக உருகியதால், அவளைச் சாந்தப்படுத்த முயன்று, "அழவேண்டிய அவசியமில்லை மகளே! நீ எந்த வம்சத்தைச் சேர்ந்தவள் என்பதை எண்ணிப்பார். அந்த வம்சத்தில் மனம் மகிழ்ச்சிக்கு இடங் கொடுத்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்பதை யோசித்துப்பார்" என்று தைரியமூட்டினார்.

துறவியாரின் சொற்கள் அவளுக்கு ஓரளவு ஆறுதலை அளித்ததால், மெள்ள மெள்ள அவள் தன் துக்கத்தை ஓரளவு கட்டுக்குள் கொண்டுவந்தாள். முகத்திலிருந்த கைகளை நீக்கிக் கடைசியாகப் புடைவைத் தலைப்பால் கண்ணத்தில் வழிந்தோடிய கண்ணீரையும் துடைத்துக் கொண்டு, அந்த மாதரசி துறவியார்மீது மீண்டும் தன் அழகிய விழிகளை நாட்டினாள். அவள் பார்வையில் தோய்ந்து கிடந்த சோகத்தின் ஆழத்தைக் கலவித்த பிரும்மானந்தரும், துன்பம் கலந்த பெருமூச்சொன்றை

விட்டு. "மகனே! நீயர் துன்பப்படுவதற்கென்றே பிற
றார்கள். அதுவும் நியாகளுக்குத் தண்டி வழங்கு
தவிர வேறு வழியில்லை. இது வாழ்க்கையின் பெரி
இதற்கு நாம் என்ன செய்யலாம்?" என்று ஆலனை
தேற்ற முயன்றார்.

"என் துன்பத்தைப்பற்றி நான் கவலைப்படவில்லை
துறவியாரே! மக்களுக்கு எதிரிகளால் ஏற்படக்கூடிய
துன்பத்தைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன். காப்பை
யின் உணர்ச்சிகளையெல்லாம் உள்ளடக்கி இதயத்தில்
தான் பூட்டி வைத்திருக்கும் இந்த இரகசியம் என்னுடை
மாண்டுவிடும்; பிறகு சோழ சாம்ராஜ்யம் சகலவிதப்
பட்டுவிடும் என்று நம்பியிருந்தேனே! அந்த நம்பிக்கையும்
யெல்லாம் மண் விழுந்துவிட்டதே. கரிகாலன் பிறப்பின்
ரகசியத்தை உணர்ந்து கொண்டுவிட்டதாகச் சொல்
கிறீரே!" என்றாள் அவள். ஆசனத்தில் பதுமைபோல்
உட்கார்ந்தபடியே.

"ஆம் மகனே! உன் மகன், தான் யார் என்பதை
உணர்ந்து கொண்டுவிட்டான் உணர்ந்து ஆறு மாதங்கள
ஆகின்றன" என்றார் துறவியார்.

"ஆறு மாதங்களா! அறிந்துமா என்னை விட்டு விலகி
நிற்கிறான் என் மகன்!" ஆச்சரியம் பெரிதும் துளிர் விட்ட
குரலில் கேட்டாள் அவள்.

"ஆறு மாதங்கள் ஆகின்றன மகனே! ஆனால், உன்
இருப்பிடம் அவனுக்குத் தெரியாது. பிறப்பு மர்மத்தை
நாகர்கள் தலைவன் உடைத்து விட்டான் சக்கர
கோட்டத்திலே. ஆனால், உன் இருப்பிடத்தைக் கூற
முன்பு அவன் உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிட்டது"
என்று துறவியார் விளக்கினார்.

"பிரதாபருத்திரனா ரகசியத்தைச் சொன்னான்?"

"ஆம் மகனே!"

"அவன் என் கணவருக்குச் செய்து கொடுத்த
பிரமாணம்?"

"உடைத்து விட்டான். பிரமாணத்தை உடைத்து
விட்டான். ரகசியத்தை உடைத்து விட்டான். ஏன்? சோழ
சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தையே உடைத்து
விட்டான். உயிரோடு சாதிக்க முடியாததை இறப்பில்
சாதித்து விட்டான் பிரதாபருத்திரன்."

மஞ்சத்திலே உட்கார்ந்திருந்த மாதரசி நீண்ட நேரம்
மௌனமாயிருந்தாள். பிறகு கேட்டாள், "பிறப்பின்
ரகசியத்தை அறிந்த என் மகன் என்ன செய்தான்?" என்று.

துறவியார் முகத்திலே பெருமை படர்ந்தது. "உன்
மண் வயிற்றில் பிறந்தவன் என்ன செய்ய வேண்டுமோ
அதைச் செய்தான். தகப்பனுக்கு அசல் பிள்ளையம்மா
அவன்! சாம்ராஜ்யத்தைக் கேட்கவில்லை; பதவிகளைக்
கேட்கவில்லை" என்று பேசிப் பாதியில் நிறுத்திய துறவி
யாரை நோக்கிய அந்த மாதரசி, "பின் எதைக் கேட்டான்
துறவியாரே?" என்று ஆசையுடன் கேட்டாள்.

துறவியார் ஏதோ பெரும் குற்றம் செய்தவரைப்
போல் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, மெல்லிய
குரலில் சொன்னார், "உன்னைப் பார்க்க வேண்டுமென்று
கேட்டான் மகனே!" என்று.

அந்த மாதரசியின் கமல விழிகளில் தாய்மை தாண்டிய
இரண்டு நீர்த்துளிகள் மீண்டும் தோன்றின. "என்னைப்
பார்க்கவேண்டுமென்று கேட்டானா குழந்தை?" என்றாள்
நாத் தழுதழுக்க.

துறவியாருக்கும் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்ததால்
பதில் சொல்லாமல், 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத்
தலையை மட்டும் ஆட்டினார்.

பெருமையும் துக்கமும் கலந்த குரலில் அவள் மீண்டும்
கேட்டாள்: "அரையன் ராஜராஜன் என்ன பதில்
சொன்னார்?"

"உன் அனுமதி பெற்று, உன்னிடம் அழைத்து
வருவதாகச் சொன்னான்."

"அதற்கு என்ன பதில் சொன்னான் குழந்தை?"

"உன் உதிரத்தில் பிறந்தவன் கொல்ல வேண்டிய பதினைச் சொன்னான்."

"அதாவது?"

"காத்திருக்கச் சம்மதித்தான். நீ அழுது கொடுக்கும் உன்னைப் பார்ப்பதாகச் சொன்னான். கங்கைப் போர் முடித்ததும், உன்னைத் தேடி வருவானென்று நினைத் தேன்..." என்று எதையோ சொல்ல முடியாமல் நிறுத்தினார் துறவியார்.

துறவியாரை அவள் உற்று நோக்கினாள். "நினைத் தேன் என்றால்?..." என்று ஒரு கேள்வியையும் வீசினாள். பதிலுக்குப் பெரும் வெடியை எதிர்பார்த்து விசிய துறவியார் "அதுவரை அவன் அங்கிருக்கப் போவதில்லை மகளே! அவன் இன்னும் இரண்டு நாளைக்குள் காஞ்சி மாநகருக் குள் வருகிறான்" என்றார்.

அதுவரை எத்தனையோ உணர்ச்சிகளை வசப் படுத்திக் கொண்டு பெரிய ராணிபோல் ஆசனத்தில் வீற்றிருந்த அவள், திடீரென ஆசனத்திலிருந்து எழுந்து "என்ன! கரிகாலன் காஞ்சிக்கு வருகிறானா? எதற்குத் துறவியாரே, எதற்கு?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"சோழ மன்னனைச் சந்திப்பதற்கு" என்றார் துறவியும் குரலில் ஓரளவு கலவரம் பாய.

"என்ன! கரிகாலன் இராஜேந்திரனைச் சந்திப்பதா? இது நடவாத காரியம்" என்றாள் அவள், ஏதோ ஆக்ரோ இடுபவள் போல்.

"நடவாத காரியமாவது! இது கண்டிப்பாக நடக்கப் போகிற காரியம். இதை நீயும் தடுக்க முடியாது. நானும் தடுக்க முடியாது" என்றார் துறவி.

"ஏன் தடுக்க முடியாது?" என்று கேட்டாள்.

"இதோ பார்" என்று மடியிலிருந்த ஓலைச் சுருளை எடுத்து அவளிடம் நீட்டினார் பிரும்மாண்டர்.

நடுங்கும் கைகளுடன் ஓலையை வாங்கிக்கொண்ட அவள் அறையின் ஒரு கோடிக்குச் சென்று அங்கிருந்த தீபத்தின் வெளிச்சத்தில் அதை வரிவரியாகப் படித்தாள். பிறகு ஓலையைத் திருப்பி, அதில் பொறிக்கப்பட்டிருந்த முத்திரைகளைக் கவனித்தாள். அவள் கண்களிலே துக்கமும் ஆனந்தமும் கலையையும் கலந்து தாண்டவ மாடின. துறவியார் ஏற்கனவே உடைத்திருந்தாலும், பிரித்திருந்த முத்திரைச் சின்னங்களைக் கண்டதும், "இந்த முத்திரைகள்...?" என்று கேட்டாள்.

"உங்கள் ராஜலட்ச முத்திரைகள்" என்றார் துறவியார்.

"இந்தக் கையெழுத்து?"

"உன் மகனுடையது."

"மணி மணியாக எழுதுகிறான் துறவியாரே!"

"அவனுக்குப் பயிற்சி கூடாயணி விஜயாரத்தில் என்பது நினைவிருக்கட்டும்."

"வாளைப் பிடிக்கும் கைகளுக்கு..."

"கையெழுத்து தனையெழுத்தாகத்தானிருக்கும். ஆனால் உன் மகன் சான்றோன் படித்தவன் மகனே! கூடா மணி விஜயாரத் தலைவர், ஒரு போருக்கு வேண்டிய சகல வித்தைகளையும் கற்பித்திருக்கிறார். அவன் வாள் பிடிக்கும் முறையை நீ பார்த்ததில்லையே?"

விளக்கின் அருகில் ஓலையைக் கையில் பிடித்துப் படித்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்த அந்த மாதரசி, தன்னை அடியோடு ஆகர்ஷித்து நின்ற அந்த ஓலையி விருந்து கண்களை அகற்றி, முகத்தைத் தூக்கித் துறவியாரை நோக்கி "அந்தச் செல்லக் கைகளை ஐந்து

வயதுக்குப் பிறகு எங்கு பார்த்தேன் பிரும்மானந்தரே!'' என்றாள். அவள் குரல் உணர்ச்சி மிகுதியால் ஆடியது.

உன்னத்தை அப்படியே நெகிழ்த்தும் அந்தக் குரலைக் கேட்ட பிரும்மானந்தரும் சோகானந்தராக மாறி, ''மகளே! அந்தச் செல்லக் கைகள் இன்று இந்தச் சாம்ராஜ்யத்தை வடக்கே பெரிதும் விஸ்தரித்திருக்கிறது. உன் கணவனின் கரங்கள் சோழப் பேரரசைச் சிங்களத்தில் விஸ்தரித்தன. உன் மகன் கைகள் கங்கைக்கும் பாதை போட்டன. நீ கொடுத்து வைத்தவள். வீரன் மனைவியாகி, வீரனின் தாயுமாகித் தியாகத்தின் சிகரமாகவும் வினங்கும் தமிழ்த் தாய்மார்கள் எத்தனை பேர் இந்த நாட்டிலிருக்கிறார்கள்? உன்னால் இந்நாடு பயனுற்றது. பெருமையும் பெற்றது'' என்று உணர்ச்சி வெள்ளமாகப் பிரவாகித்த குரலில் சொன்னார்.

பெருமையுடன் தலையை அசைத்த அந்த மாதரசியை நோக்கிய துறவியார், ''மணிமேகலை...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அந்தப் பெயரை கேட்ட அவள், திடீரென அவரை நோக்கி இரண்டு அடிகள் எடுத்து, ''பிரும்மானந்தரே!'' என்று எச்சரிக்கும் குரலில் அவர் பெயரையும் சொன்னாள்.

''ஏனம்மா?'' என்று கேட்டார் அவர்.

''அந்தப் பெயரை மறுமுறை சொல்ல வேண்டாம்.''

''ஏன்?''

''அது மறைந்து ஆண்டுகள் இருபத்திரண்டு ஆகி விட்டன.''

''பெயர் மறையுமா மகளே?''

''அழிப்பவர் அழித்தால் அழியும்.''

''அழித்தது யார்?''

''அழிக்க யாருக்கு உரிமையுண்டோ அவர்கள் அழித்தார்கள்.''

அவள் இதயம் வெடிக்கத்தான் பேசினாள். அதை உணர்ந்துகொண்ட துறவியாரும், துன்பம் கலந்த பன்முறுவலொன்றை அவள்மீது வீசினார். ''புரிந்து கொண்டேன் மகளே! கரிகாலன் கர்ப்பத்திலிருக்கையிலேயே உன் பெயரை மாற்றிவிட்டானா? எப்பேர்ப்பட்ட தியாகி அவன். அனுபவிக்க ஒரு குடும்பம்; அழிந்துபோக ஒரு குடும்பம்!'' என்று பெருமூச்சு விட்டார் துறவியார்.

''அழிவும் ஆக்கமும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டது என்று அவர் சொல்லுவார்?''

''சொல்லுவார் சொல்லுவார்! நன்றாகத்தான் சொன்னார் போ'' என்று அலுத்துக்கொண்டார் துறவியார்.

அவள் முகத்தில் அலுப்பேதுமில்லை. ''அவர் எதுவும் காரணமில்லாமல் சொல்லமாட்டார் துறவியாரே. எங்கள் குடும்பம் மறைந்து, ராஜேந்திரன் குடும்பம் வாழ வேண்டுமென்பது அவர் பிரார்த்தனை'' என்றாள் ஏனலை மகிழ்ச்சியும் குரலில் பொங்க.

''தெய்வப் பிறவிகள் என்று சொல்கிறார்களே, அப்படிப்பட்ட பிறவிகள் உண்டோ என்று சந்தேகப் பட்டேன். கண்டிப்பாக இருக்கிறார்கள்'' என்று தமக்குள் னவே சொல்லிக்கொண்ட துறவியார், ''அது கிடக்கட்டும் மகளே! இன்னும் இரண்டு நாட்களில் ராஜேந்திரனைக் கரிகாலன் சந்திக்கப் போகிறானே, இந்தச் சங்கடத்திற்கென்ன செய்வது?'' என்று கேட்டான்.

''சந்தித்தால் உண்மை வெளியாகிவிடுமே?'' என்று அவளும் துன்பப் பெருமூச்சு விட்டாள்.

''அது வெளியாகாது மகளே!''

''கண்டிப்பாய் வெளியாகும்.''

''எப்படி?''

''அவன் கண்கள்.''

"யார் கண்கள்? கரிகாலன் கண்களா?"

"ஆம் பிரும்மாணந்தரே! அவன் கண்கள் உண்மையை கதையைச் சொல்லுமே. ஐந்து லயநிலையே அவர் முகத்தை உரித்து வைத்திருந்ததே அவனுக்கு; இந்த லயநில் எப்படி மாறும்?"

துறவியார் தீர்க்காலோசனையில் ஆழ்ந்தார். அவனைப் பிடித்திருந்த அந்தப் பயம் அவரையும் வாட்டியது. கடைசியாக அவர் பேச முற்பட்டபோது, ஆழ்ந்த கவலையும் அவர் குரலில் தெரிந்தது. "ஆம் ஆம்! கும்பகோண மடாலயத்தில் அவனைச் சந்தித்தபோதே அந்தப் பார்வையிருந்தது. எதற்காகச் சிருஷ்டிகர்த்தா அத்தனை அச்சாக அவனைச் சிருஷ்டிக்க வேண்டும்?" என்று சிருஷ்டிகர்த்தாவையே கடிந்துகொண்ட துறவியார், "இந்த அரையன் ராஜராஜனுக்குப் புத்தி எங்கே போயிற்று? எதற்காகக் கரிகாலனை இங்கே அனுப்புகிறான்?" என்று அவன் மீதும் எரிந்து விழுந்தார். மீண்டும் சற்று நேரம் யோசித்து விட்டு, "மகனே கவனமாய்க் கேள். சில நாட்களுக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த மாளிகையை விட்டுக் கிளம்பாதே. நான் காஞ்சியிலே தங்கி, ஆபத்தை எத்தனை தூரம் தவிர்க்க முடியுமோ அத்தனை தூரம் தவிர்க்கிறேன். பிறகு புத்தர்பிரான் விட்டவழி" என்று கூறினார்.

துறவியாரின் வார்த்தைகளில் ஒரு பகுதியை அவன் புரிந்து கொண்டான். ஆனால் மாளிகையைவிட்டு வெளியே கிளம்ப வேண்டாமென்ற அவர் உத்தரவுக்கு மட்டும் காரணத்தை அறியாததால் கேட்டான், "ஏன் நான் வெளிக் கிளம்பக் கூடாது?" என்று.

"நிரஞ்சனாதேவியும் வந்தியத் தேவரும் இந்த ஊரில் தான் இருக்கிறார்கள்" என்றார் துறவியார்.

"வேங்கி நாட்டு மன்னன் மகளா? என் மகன் ஆசை கொண்டான் என்று எழுதியிருந்தீர்களே அவளா" என்று விசாரித்தான் மணிமேகலை.

"ஆம்."

"அப்படியானால் அவளைப் பார்க்க..."

"கரிகாலன் நிச்சயம் கூரத்துக்கு வருவான்."

மணிமேகலையின் கண்கள் ஆனந்த பாஷ்பம் சொரிந்தன. "அப்பொழுது நானும் அவனை ஒருமுறை பார்க்கலாமா பிரும்மாணந்தரே?" என்று கேட்டான்.

பிரமிப்பினால் மலர்ந்த விழிகளை அவன்மீது நாட்டினார் பிரும்மாணந்தர். சோழ சாம்ராஜ்யத்துக்கு ஆபத்து மெள்ள மெள்ள அணுகுவதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டார். அந்த ஆபத்து எத்தனை பெரிய இடியோல் இறங்கக்கூடியது என்பதையும் உணர்ந்து கொண்டார். ஆனால், இத்தனை சீக்கிரம் அந்த இடி இறங்கும் என்று அவர் சொப்பனத்திலும் நினைக்கவில்லையாகையால், அன்றிலிருந்து இரண்டாவது நாள் சோழப் பேரரசுக்குப் பெரும் கண்டம் என்பதை தெரிந்து கொண்டு கவலைக் கடலில் அழுந்தினார்.

இராஜேந்திரனும் கரிகாலனும் சந்திப்பது இடிகளை உதிர்க்கவல்ல பெரிய மேகங்களின் சந்திப்புக்குச் சமமானதென்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டதால், என்ன செய்வதென்று அறியாமல் தவித்த தஞ்சைத் துறவியாருக்கு அடுத்த நாளே பெரும் அபாயம் காத்திருந்தது காஞ்சி மாநகரத்திலே.

63. மன்னன் வினக்கமும் துறவியின் கலக்கமும்

இராஜேந்திர சோழதேவனும் கரிகாலனும் சந்தித் தால் ஏற்படக்கூடிய அபாயத்தைப்பற்றி அடிக்கடி எண்ணியதன் விளைவாகக் கலவையால் பெரிதும் பீடிக்கப் பட்ட மனத்துடன் காஞ்சி மாநகரை மறுநாளே அடைந்த தஞ்சைத் துறவியார் பிரும்மானந்தர், அங்கு நடந்து கொண்டிருந்த ஏற்பாடுகளைக் கண்டு சொல்லொண்ணா வியப்பும் கலவரமும் அடைந்து பேரமைச்சர் மாளிகையை நோக்கி வெகு வேகமாக நடந்தார். நகரத்தின் தெருக் களில் தாம் கண்ட கோலாகலத்திற்கும் துரிதத்திற்கும் சிறிதும் குறையாத சுறுசுறுப்பை பேரமைச்சர் மாளிகை யிலும் கண்ட பிரும்மானந்தர், விஷயம் விபரீத திசைக்குச் செல்லுகிறதென்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டா ரானாலும் அதற்கு வித்து எந்த இடத்தில் என்பதை உணர்ந்து கொள்ளப் பேரமைச்சரின் அந்தரங்க அறையை நாடிச் சென்றார். பிரும்மானந்தர் உள்ளே நுழைந்த சமயத்தில் தீவிர யோசனையுடன் ஓலையில் ஏதோ எழுத்தாணியால் துரிதமாக எழுதிக் கொண்டிருந்த பேரமைச்சர் ஓலையிலிருந்து கண்களை அகற்றாமலும், வந்தவர் யாரென்று பார்க்கத் தலையைச் சிறிதுகூடத் தூக்காமலும் கருமமே கண்ணாயிருந்தார். அவர் எதிரே அவர் கட்டளைக்காகக் காத்து நின்ற வீரர் இருவர்கூட தலைவற்ற அலரையே பார்த்துக் கொண்டு நின்றதைக் கண்ட பிரும்மானந்தர், முக்கியமான ஏதோ கட்டளை னைப் பேரமைச்சர் பிறப்பித்துக் கொண்டிருக்கிறார் என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டாலும் அந்தக் கட்டளைகள் யாதாயிருக்குமென்பதைப் பூரணமாக நியாதாலும், அறிந்து கொள்ளவேண்டுமென்ற ஆவ லைப் பொங்கி எழுந்ததாலும், தம் வருகையைப்

பேரமைச்சருக்கு உணர்த்த இஷ்டப்பட்டு ஒருமுறை தொண்டையைப் பலமாகக் கனைத்தார். அந்தக் னைப்பினால் நித்தனை கலைத்த பேரமைச்சர் ழுதுவதைச் சற்றே நிறுத்திக் கண்களை உயரத் தூக்கி, ந்திருப்பவர் யாரென்று கவனித்ததும், "அடடா! துறவியாரா! கவனிக்கவில்லை; மன்னிக்க வேண்டும். இப்படி அமருங்கள்" என்று பரபரப்புடன் ஓர் ஆசனத்தை யும் சுட்டிக் காட்டினார்.

ஆசனத்தில் அமர்ந்து கொண்ட பிரும்மானந்தர் பேரமைச்சர் கையிலிருந்த எழுத்தாணிமீதும் அவர் மடியி ருந்த பலகை மீது இடந்த ஓலை மீதும் கண்ணை ஓட்டி, "அமைச்சத் தொழில் விடியற்காலையிலேயே தொடங்கி விட்டது போலிருக்கிறதே!" என்று வினவினார்.

துறவியாரின் கண்கள் சென்றவிடங்களைப் பேரமைச் சரின் கண்களும் கவனிக்கத்தான் செய்தன. இருந்த போதிலும் அதைக் கவனிக்காதது போலவே பேசத் தொடங்கிய பேரமைச்சர், "அமைச்சத் தொழிலுக்கு காலையது, மாலையது, இரவுதானேது? அரசன் கட்டளையிட்டால் நிறைவேற்ற வேண்டியது அமைச்சன் பொறுப்பு" என்றார்.

"உண்மைதான் பேரமைச்சரே! பேரரசன் இடும் கட்டளை; அதுவும் ஒரு மன்னன் விஜயத்தையொட்டி இடும் கட்டளை. அதை நிறைவேற்றும் பொறுப்பு இருக்கும்போது காலையென்றும் மாலையென்றும் பார்த் தால் முடியாதுதான்" என்று ஒப்புக்கொண்டதுபோல் தலையாட்டிய துறவியாரை, ஆச்சரியம் ததும்பும் கண் களுடன் நோக்கிய பேரமைச்சர், "மன்னர் விஜயமா? எந்த மன்னர் விஜயம் செய்யப் போகிறார்?" என்று வினவினார்.

துறவியார் ஏளன நகையொன்றை உதிர்த்துவிட்டுச் சொன்னார்: "பேரமைச்சரே! நான் துறவியாயிருந்தா லும் அரசியல் விஷயங்களை அறியாதவனல்ல."

"அறியாதவர் என்று யார் சொன்னது" என்ற பேரமைச்சர் பணிவு நிரம்பிய குரலில்.

"அப்படிக் குறிப்பாகச் சொல்லவில்லை. உமது பேச்சின் உள்ளர்த்தம் அதுதான்."

"நீர் சொல்வது விளங்கவில்லை அறவியாரே!"

"மன்னர் விஜயமா? என்று ஆச்சரியத்துடன் கேட்டது நீர்தானே?"

"ஆமாம்."

"மன்னர் விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வது யார்? கோட்டை வாசல்களில் பெரும் புலிக்கொடிகளைப் பறக்க விட்டது யார்? தெருக்களில் மகர தோரணங்களைக் கான கால்கள் ஏன் நடப்படுகின்றன? தெருக்களில் செல்லும் குதிரை வீரர்களையும் யார்த்தேன். குதிரைகளின் நெற்றிகளில் வெற்றிப் பட்டயங்களைக் கட்டுவானேன்? இதெல்லாம் யார் ஏற்பாடு? மன்னர் விஜயம் செய்யும் காலத்தில் மட்டுமே இந்த ஏற்பாடுகள் உண்டு என்பது எனக்குத் தெரியாதா பேரமைச்சரே!" என்றார் துறவியார், விடுவிடுவென்று உணர்ச்சி பூர்வமாகக் குரலில் பொங்க.

பேரமைச்சர் உடனே பதில் ஏதும் சொல்லாமல், தலையை நீண்ட நேரம் தொங்கப் போட்டுக் கொண்டார். பேச்சு ஏதாவது தொடங்குவதானாலும் அது பேரமைச்சரிடமிருந்தே தொடங்கட்டும் என்று துறவியாரும் காத்திருந்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு பெருமூச்சொன்றை விட்டுத் தலையைத் தூக்கிய பேரமைச்சர், துறவியாரை நோக்கி, "துறவியாரே! இது எனக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது. மன்னர் யாரும் விஜயம் செய்யவில்லையென்பது உண்மை. ஆனால் ஒரு படைத்தலைவனுக்கு, அதுவும் உயர் பேர் தெரியாத ஒரு சிறுவனுக்கு இத்தனை ஏற்பாடுகளைச்

செய்யும்படி சக்கரவர்த்தி ஏன் கட்டளையிட்டார் என்பது எனக்கே புரியவில்லை!" என்றார்.

துறவியாரின் முகத்தில் மெள்ள மெள்ளக் கலவைக்குறி படரலாயிற்று. அந்தக் கலவை குரலிலும் நன்றாகப் பிரதி பலிக்கத் கேட்டார் துறவியார், "என்ன பேரமைச்சரே, சக்கரவர்த்தி உத்தரவா?" என்று.

"ஆமாம்" என்று சொல்லித் தலையையும் அசைத்தார் பேரமைச்சர்.

"கலிங்கனை ஒரு மன்னனுக்குச் சமானமாக எதிர்த்துச் சொல்ல உத்தரவிட்டானா இரணஜித்தன்?"

"இல்லை துறவியாரே! மன்னனுக்குச் சமானமாக நம்மை தாமே இந்த மாகரத்துக்கு வந்தால் எத்தனைய சேனையை அனுப்பி சம்பிரதாயமோ அத்தனை சம்பிர தாயத்தையும் கடைப்பிடிக்கும்படி சக்கரவர்த்தி உத்தர விட்டிருக்கிறார்."

துறவியார் மறுபடியும் ஆலோசனையில் இறங்கினார். அவர் உள்ளத்தே அவர் ஆயுளில் அதுவரை அநுபவிக்காத பீதி எழுந்து நின்றது. 'இரணஜித்தன் உள்ளத்திலே ஏதும் சந்தேகம் எழுந்துவிட்டது. கலிங்கன் யார் என்பது ஒருவேளை அவனுக்குத் தெரிந்துவிட்டதோ?' என்று தமக்குள்ளேயே சொல்லிக் கொண்டு துறவியார் பேரமைச்சரை நோக்கி, "சம்பிரதாயத்துக்கு விரோத மான வரவேற்புக்கு நீங்களும் ஒப்புக்கொண்டீர்களா?" என்று கேட்டார்.

"ஒப்புக்கொள்ளவில்லை துறவியாரே!" திட்டமாக அறிவித்தார் பேரமைச்சர்.

"நீர் எதிர்த்துமா இரணஜித்தன் கட்டாயப்படுத்தினான்?" என்று கேட்டார் துறவியார்.

"ஆமாம் துறவியாரே! சக்கரவர்த்தி திட்டமாகக் கட்டளையிட்டு விட்டார். மன்னர்களுக்குண்டான

மரியாதைகளைப் படைத்தலைவர்களுக்கு அளிப்பது வழக்கமில்லையென்றோன்'' என்று பேரமைச்சர் தயங்கினார்.

''அதற்கு மன்னன் என்ன சொன்னான்?''

''படைத்தலைவர்களால்தான் மன்னர்கள் பெருமை யடைகிறார்கள். ஆகவே, மன்னர்களுக்குண்டான மரியாதைகளை அவர்களும் பெறத் தகுந்தவர்கள் என்று சொன்னார்.''

''பிறகு?''

''பெரும் கொடிகளைக் கோட்டைத் கவர்களுக் நாட்டும் ஒரு வழக்கத்தையாவது கையிடவேண்டுமென்று கூறினேன்.''

''உம்.''

''சக்கரவர்த்தி ஒப்புக்கொள்ளவில்லை. 'எதையும் கையிடவேண்டாம். நானே பட்டணம் பிரவேசம் செய்வதாக நினைத்துக் கொள்ளும்,' என்று சற்றுக் கோபத் துடனே சொன்னார் துறவியாரே! சக்கரவர்த்திக்கு இத்தனை கோபம் வந்து நான் பார்த்ததேயில்லை. தாங்கள் அன்று அந்த ஓலையைப் பெற்றுச் சென்றதி லிருந்து ஒரு நிலையில் இல்லை சக்கரவர்த்தி. அந்த இன்னொரு ஓலையைப் படிக்காமல் ஆசனத்தில் விட்டெறிந்து சென்றாரே நினைப்பிருக்கிறதா?'' என்று பேரமைச்சர் கேட்டார்.

''ஆகா! நினைப்பிருக்கிறது'' என்று பதில் சொன்னார் துறவியார், பிறகு என்ன நடந்தது என்பதை அறியும் ஆவலுடன்.

''அந்த ஓலையை எடுத்துச் சென்று அவரைப் படிக்கத் தூண்டினேன்.''

''படித்தாரா?''

''படித்தார். படித்ததும் அவர் முகத்திலே பெரும் எரிமலை எரிப்பட்டதைக் கவனித்தேன்.''

''பாறையோ என்றால்?''

''பெரும் குழப்பம்.''

''உம்.''

''அந்தக் குழப்பத்திற்குப் பின் தெளிவு. அரசர் மனம் திடீரென எதையோ அறிந்து விட்டதைபோல் பிரகாசித்தது. பிறகுதான் இப்படி உத்தரவிட்டார். தூதும், துறவியாரே யார் இந்தக் கரிகாலன்?'' என்று சிரிக்கத் தொடங்கினார் பேரமைச்சர்.

அந்தக் கேலிக்குத் துறவியார் பதிலேதும் சொல்லவில்லை. ஏறெயடியாக ஆசனத்தில் சாய்ந்து கொண்டு விட்டார். ''முதலில் குழப்பம் பிறகு தெளிவு. அரசர் கண்கள் பிரகாசித்தன'' என்று மீண்டும் மீண்டும் ஏதோ மந்திரத்தை உச்சரிப்பதுபோல் அவர் உதடுகள் அந்தச் சொல்லை உச்சரித்தன. மன்னன் முகத்தில் முதல் முறை பேரமைச்சர் குழப்பத்தைக் கண்டாரோ இல்லையோ, அன்றைய இளம் பிரும்மாண்டத்தின் முகத்தில் பெரும் குழப்பத்தைக் கண்ட பேரமைச்சர் அதற்குக் காரணத்தை அறிந்துகொள்ள விரும்பி, ''யார் இந்தக் கரிகாலன் துறவியாரே?'' என்று மீண்டும் பணிவு கலந்த கேள்வியைக் கேட்டார்.

''என்னை மடையன் சிஷ்யன், குடாமணி விஸ்வாமித்திரனிடம் கல்வி பயின்றவன்'' என்றார் துறவியார். ஏதோ பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக.

''அதுவும் தெரியும். அவன் அரையன் ராஜராஜன் வம்சம் மகோன்னதமும் தெரியும். அதெல்லாம் பழங்கதை. புதுக் கதை ஏதாவது சொல்லத் தங்களால் முடியுமா?'' என்று கேட்டார்.

''நான் இங்கு கதை சொல்ல வரவில்லை பேரமைச்சரே!'' என்று எரிந்து விழுந்த பிரும்மாண்டத்தர்,

"அரசருக்கு அன்று வந்த ஓலை தங்களிடம் இருக்கிறதா?" என்று வினவினார்.

"இல்லை. அரசரிடமே இருக்கிறது" என்றார் பேரமைச்சர்.

துறவியார் சட்டென ஆசனத்திலிருந்து எழுந்து, "அப்படியானால் நான் அரசரைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுப் பேரமைச்சரின் அனுமதியை விட்டுக் கொண்டு வெளிவந்து அரசர் மாளிகையை நோக்கி நடந்தார். சக்கரவர்த்தியால் பெரிதும் மதிக்கப்பட்ட துறவியார், எந்த இடைஞ்சலுமில்லாமல் மன்னர் மாளிகையை அடைந்து, மன்னன் இருக்குமிடத்தைப்பற்றி விசாரித்தார். சக்கரவர்த்தி அன்று தான் முத்தாணி மண்டபத்திலேயே இருப்பதை அறிந்து, அங்கு விரைந்த துறவியார், முதல் தளைப்போலவே அரசு அரியணையில் அமர்ந்திருப்பதையும் ஆழ்ந்த யோசனையிலிருப்பதையும் கண்டார்.

தாரத்தேயிருந்த முத்தாணி மண்டப வாயிற்கதவில் காவல் புரிந்த வீரர்களுடன் கலந்து ஒட்டிப் பயபக்தியுடன் நின்றிருந்ததால், அவர்கள் இருப்பதும் துறவியின் கண்களுக்குப் புலப்படவில்லை. 'ஹோ' வென்று விரிந்து கிடந்த அந்தப் பெரும் மண்டபத்தின் நடுவே, தலையை மார்புக்காகத் தாழ்த்தி உட்கார்ந்திருந்த மன்னனைக் கண்ட துறவியார் நிஷ்டையைக் குலைக்க இஷ்டப்படாது, "இராஜேந்திரா! ஏன் தனித்து உட்கார்ந்திருக்கிறாய்" என்று குழையும் குரலில் வினவினார்.

சிந்தனையிலிருந்த இராஜேந்திரன் விரக்தித் தாக்கில் துறவியாரை நோக்கினான். "ஓ! துறவியாரா! அமருங்கள்" என்று சொல்லிப் பக்கத்திலேயிருந்த ஆசனத்தையும் காட்டினான். அரசன் குரல் வரண்டு கிடந்ததைத் துறவியார் கவனித்தார். அதன் காரணத்தை அவர் அறிந்து கொண்டும் இருந்தாராதலால்,

"மன்னவா! கலை வாய்ப்பட்டிருக்கிறாய் போலிருக்கிறது" என்று மெல்லக் கேட்டார்.

"தாகசுருக்கமை: அதைத் தாங்க வேண்டியவனுக்குக் கலை இயற்கை" என்றான் இராஜேந்திரன்.

"இந்தப் பெரும் கலை இன்று நேற்று ஏற்பட்ட தல்லவே இராஜேந்திரா! இத்தனை நாளாக உன் முகத்தில் இந்த கலையைக் கண்டதில்லையே!" என்று துறவியார் மீண்டும் தூண்டிக் கூறினார்.

"உண்மைதான் துறவியாரே! இத்தனை நாள் கலையை நான் வளர்க்கவில்லை. எனக்காக உண்மைப் போற்ற பெரியோர்கள் வளர்த்தார்கள். "ஆகவே, கலை என் தோள்களில் பாரத்துடன் இறங்கவில்லை" என்று மன்ன துறவியாரை உற்று நோக்கினான்.

துறவியார் சங்கடத்தால் ஆசனத்தில் அசைந்தார். "புரியவில்லை மன்னவா?" என்று கூறினார்.

"இதில் புரியாததற்கு என்ன இருக்கிறது துறவியாரே. புத்த மடாலயங்கள், சைவ, வைணவ மடாலயங்கள் எல்லாமே சோழ மண்டலத்தில் உண்டு. பலதரப்பட்ட மதங்களின் சின்னங்களான இந்த மடாலயங்கள் மன்னர் ன நம்பிக்கைக்கும், மன்னர்கள் மடாலயங்களின் நம்பிக்கைக்கும் பாத்திரமாக இருந்தார்கள். அந்தப் பரந்த நம்பிக்கையாலும் மக்கள் வித்தாலும் வளர்ந்தது சோழநாடு" என்று விளக்கினான் இராஜேந்திரன்.

"நம்பிக்கை இப்பொழுது எங்கே போய்விட்டது மன்னவா?" என்று வினவினார் துறவியார்.

"எங்கே போய்விட்டது என்பது தெரியாது துறவியாரே! போய்விட்டது என்பது எனக்குத் தெரியும்" என்றான் மன்னன்.

"எப்படித் தெரியும்?"

''அரசகுல ரகசியங்கள் மறைக்கப்படுகின்றன. சொந்தப் படைத்தலைவர்களால் மட்டுமல்ல, நம்பிக்கையைப் பூரணமாகப் பெற்ற மடாலயத் தலைவர்களாலும்கூட!''

இனி மறைத்துப் பேசுவதால் பயனில்லை என்பதை உணர்ந்துகொண்ட துறவியார், பதிலுக்கு பதில் துக்கு லத்து ''கரிகாலனைப்பற்றித்தானே பேசுகிறாய் இராஜேந்திரா?'' என்றார்.

''ஆமாம் துறவியாரே.''

''அதை அறிவது உனக்கு நன்மை பயக்காது.''

''என் நன்மையைப்பற்றி எனக்குக் கவலையில்லை.''

''வேறு எதைப்பற்றிக் கவலை?''

''உண்மையைப்பற்றி.''

''எது உண்மை?''

''கரிகாலன் சோழ லட்சத்தைச் சேர்ந்தவன் என்பது'' என்று சொன்ன இராஜேந்திரன், இடறென்று ஆசனத்தை விட்டு எழுந்து, துறவிக்கு வெகு அருகில் வந்து, அவரை உற்று நோக்கினான். கூர்மையான அந்தக் கண்களைச் சந்திக்க முடியாத துறவியாரின் கண்கள் நிலத்தில் பாய்ந்தன. மன்னன் சொற்கள் அவர் தலையில் வெடிக்கத் தொடங்கின. ''கரிகாலன் சோழ ராஜ லட்சத்தைச் சேர்ந்தவன் என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. என்ன காரணத்தைக் கொண்டோ அவன் பிறப்பை நீங்கள் மறைக்கப் பார்க்கிறீர்கள். ஆனால் அவன் உண்மை ஸ்தானத்தை நான் மறைக்க விரும்பவில்லை. சக்கரவர்த்திகளுக்குரிய மரியாதைகளுடன் அவன் வரவேற்கப்படுவான். நானை மறுதான் இந்தக் காஞ்சி மாநகரிலேயே அவன் பட்டணப்பிரவேசம் நடக்கும். அவன் இந்த மாளிகையில் என்னுடன் தங்குவான். தனிமையில் அவனுடன் பேசவேன். உண்மையை

அறிவேன்'' என்று பேசிக் கொண்டு போன இராஜேந்திரன் சட்டென்று குரலைத் தாழ்த்தி, ''அதற்குள் மல்ல துறவியாரே?'' என்றான்.

துறவியார் பேச நாவெழாமல் மௌனத் தலையைத் தூக்கி அவனைப் பார்த்தார். இராஜேந்திரன் விபரீத எண்ணம் தோன்றுக் கூரம் சென்றபோது, என் ஒற்றர்கள் உன்னைத் தொடர்ந்தார்கள். கூரத்தின் மாளிகையிலிருந்தும் அந்த மணிமேகலைக்கும் கரிகாலன் பட்டணப் பிரவேசத்தைப் பார்க்க அழைப்பு இன்று போயிற்று. அனைத்தும் இந்த அரண்மனைக்கு வருவான். கரிகாலன் பிறப்பு ரகசியம் இன்னும் இரண்டே நாட்களில் இந்த அரண்மனையில் உடைபட்டுவிடும்...''

இராஜேந்திரன் பேச்சை சற்றே நிறுத்தினான். துறவியார் முகத்தில் பெரும் இவி தாண்டவமாடியது. ''வேண்டாம் இராஜேந்திரா! இந்த முயற்சியைக் கை விட்டுவிடு'' என்று கெஞ்சினார்.

ஒரு விநாடி துறவியை உற்றுப் பார்த்த இராஜேந்திரன் ''இந்த ஓலையில் கண்ட விஷயத்தைப் படியும்'' என்று மடியிலிருந்த ஓர் ஓலையை நீட்டினான் துறவியாரிடம்.

அதைப் படித்த துறவியாரின் கோபம் எல்லை கடந்து போகவே, ''அட முட்டாள்! பாவி, குடியைக் கெடுத்தாயே!'' என்று தம்மையும் மறந்து கூவினார்.

64. பட்டணப் பிரவேசம்

சுபதினை, சுழ்நிலை இரண்டையும் அறவே மறந்து துறவியார் கூவிவிட்டதைக் கண்டதும் சோழப் பேரரசனான இராஜேந்திரன் முகத்தில் ஒரு விநாடி புன்முறுவலொன்று தோன்றி மறைந்தது. பறவித்தாடி அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்த வார்த்தைகளும் மதுர மாகவே இருந்தாலும், மன்னன் தம்மை ஆழும் பார்க்கிறா னென்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிந்து கொண்டார் துறவியார்—யாரையும் மயக்குவிப் பார்க்க வல்ல கூரிய புத்தியுடைய இராஜேந்திரனிடம், எக்கச் சக்கமாக எதையாவது பேசிவிட்டால் கரிகாலன் பிறப்பு மர்மம் அடியோடு உடைபட்டுப் போகுமென்பதைத் துறவியார் உணர்ந்து கொண்டாராதலால், கொந்தளித்த தமது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, மிகுந்த எச்சரிக்கையுடன் மன்னன் கேள்விகளுக்குப் பதிலளிக்க லானார்.

''துறவியாரே! யார் முட்டாள், யார் பாவி?'' என்று கேட்டான் இராஜேந்திரன், ஏதும் அறியாதவன் போல்.

''உன்னுடைய படைத்தலைவனைதான் இராஜேந்திரா!'' என்றார் துறவியார், பதட்டத்தை வெளியில் காட்டாமலே.

''யார், அரையன் ராஜராஜனுக்கா இந்த வரை டல்?'' என்று மன்னன் மீண்டும் கேள்வியைத் தொடுப்பினான்.

''ஆம்.''

''சோழர்களின் பிரதான படைத்தலைவனுக்கு உரித னை அடையொழிகள் அல்லவே அவை?''

''விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் ஓலை எழுதும் தற்கும் தகுந்த அடையொழிகளைதானே அவை.

இத்தகைய ஓலையை எழுதுபவன் சோழர்களின் படைத் தலைவனாகிருந்தாலும், அவனுக்கும் பொருந்தும் இந்த தண்டனைதானே?''

இதைக் கேட்ட இராஜேந்திரன் முகத்தில் புன்முறுவல் மீண்டும் சோகமாகப் படர்ந்தது. துறவியார் தனிடம் மீள முடியாமல் திகைத்துவிட்டார் என்பதைத் தீர்மானித்துக் கொண்ட மன்னன், ''துறவியாரே! அரையன் ராஜராஜன் எந்த விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லை? யார் குடியைக் கெடுத்தான்? எனை குற்றத்தான் அவன் செய்துவிட்டான்?'' என்று வினவினான்.

அரசன் முகத்தில் தோன்றிய புன்முறுவலையோ, அவன் வார்த்தைகளில் கண்ட குழைவையோ கவனிக்கத் தவறாத துறவியார், 'இராஜேந்திரா! இந்தத் துறவியைப் பற்றி உன்னுடைய மதிப்பீடு இவ்வளவுதானா?' என்று உன்னை நகைத்துக் கொண்டாலும், அதை வெளியில் காட்டாதவராய் பயத்தம் தொய்ந்த குரலில் சொன்னார். ''இராஜேந்திரா! உனக்கு மிகுந்தபட்சம் கூறிவிட்டேன். ஆனால் குற்றம் யார் செய்தாலும் தண்டிப்பதே நீதி'' என்றார்.

''உண்மைதான் துறவியாரே! அரையன் ராஜராஜன் என்ன குற்றம் செய்தானென்றுதான் கேட்கிறேன்'' என்று மன்னன் சற்று அழுத்தமாகவே கேட்டான்.

''இந்த ஓலையை அவன் எழுதியதே குற்றம். அதுவும் ஒரு சாதாரண விரோதிக்கு அரச மரியாதைகளை அளிக்கும் படி எழுதியது பெருங்குற்றம். இதோ இந்த வரிகளைப் பார். 'மன்னர் பிரானே! இந்த ஓலையுடன் கோள் தங்களுக்கு விடுப்பை அளிக்கலாம். ஆனால், கரிகாலனை மன்னருக் குரிய மரியாதைகளுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.' இப்படி அவன் சக்கரவர்த்தியாகிய உனக்கு எழுதலாமா? சாதாரணப் படைத்தலைவனை மன்னர் மரியாதை

கூடன் வரவேற்பது வழக்கத்துக்கு விரோதமல்லவா?' என்று கூறி, ஓலையிலிருந்த வரிகளையும் கையால் காட்டினார் துறவியார்.

பதிலுக்கு இராஜேந்திரன் சிரித்தான். "அதனால் என்ன துறவியாரே! கரிகாலன் மன்னர் குலத்தைச் சேர்ந்தவன். அதற்குரிய மரியாதைகளை அளிப்பதில் தவறென்ன?"

"இராஜேந்திரா! உன் மனத்தினால் அவன் மன்னர் மரபைச் சேர்ந்தவனாயிருக்கலாம். ஆனால், அதற்குச் சரியான அத்தாட்சிகள் இன்னும் கிடைக்கவில்லை. மக்களுக்கு அவனைப் பற்றி எதுவும் தெரியாது."

"தெரியாவிட்டாலென்ன?"

"மக்கள் பேசுவார்கள்."

"பேசினாலென்ன?"

"பேச்சு மாற்றார் காதில் விழும்."

"விழுந்தாலென்ன?"

கடைசிக் கேள்வியைக் கேட்டதும், மேற்கொண்டு என்ன பதிலைச் சொல்வதென்று அறியாமல் திகைத்த துறவியார் பெருமூச்சு விட்டார். துறவியார் ஏதோ கம்பீரமான ரகசியத்தை மறைக்கிறாரென்பதையும், என்ன வற்புறுத்தினாலும் மர்மம் அவரிடமிருந்து பெயரா தென்பதையும், அறிந்து கொண்ட இராஜேந்திரனும், அதற்குமேல் அவரை வற்புறுத்தாமல் பேச்சை வேறு திசைகளில் திருப்பினான்.

"கரிகாலன் மன்னனுக்குரிய மரியாதைகளுடன் இராஜேந்திரனால் வரவேற்கப்பட்டான் என்றால் கரிகாலன் எந்த மன்னர் மரபைச் சேர்ந்தவன் என்ற கேள்வி எழும். அவன் சோழமரபு என்றால் யார் மகன் என்ற கேள்வியும் எழும். கேள்வி எழுந்தால்?" முடிவைத் தானே நினைக்கவும் அஞ்சினார் துறவியார். ஆகவே,

அதைப்பற்றி உள்ளூரப் பலவாறாகச் சிந்தித்தாலும், வேறு அரசாங்க விஷயங்களைப் பற்றி மன்னனுடன் விவாதித்துவிட்டு, வெளியே சென்ற துறவியார் அடுத்த இரண்டு நாட்களில் அந்த வரிவிருந்து பேரில் புத்த மடாலயத்துக்கும், அரண்மனைக்குமாக அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்.

கரிகாலன்—இராஜேந்திரன் சந்திப்பைப்பற்றித் இன்னும் பேசிக்கொண்டிருந்த தஞ்சைத் துறவியார், மடாலயத்தில் சில நாழிகைகளும், அரண்மனையில் சில நாழிகைகளும் மாகக் காலம் கழித்துக் கொண்டிருந்தாலும், அவர் மனம் மட்டும் சிங்களத்துக்கும், லங்கத்துக்கும், தஞ்சைக்குமாகப் பறந்து கொண்டு, பழைய விஷயங்களையும் புதுப் பிரச்னைகளையும் இணைத்து இணைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. துறவியாரின் இந்தத் திண்டாட்டத்தைக் கண்டு நகைப்பது போலக் காஞ்சி மாநகரம் பெரும் கொண்டாட்டத்துக்கும் குதூகலத்துக்கும் திருவிடமாகிக் கொண்டிருந்தது. சோழப் பேரமைச்சர் முற்பிறப்பில் மயனாக இருந்திருக்க வேண்டும். காஞ்சி மாநகரத்தை ஏதோ மந்திரக்கோலால் மாற்றிவிட்டவர் போல, அதற்கு ஒரு புதுக்கோலத்தையே போட்டுக் கொண்டிருந்தார். நாற்புறக் கோட்டை வாசல்களிலும் பெரும் புலிக் கொடிகள் பறந்தன. அந்த மாநகரத்தின் பெரும் மூலைகளில் நின்று கொண்டிருந்த பிரும்மாண்டமான கோயில் ரதங்கள், பற்பல விதமான வண்ணச் சித்திரங்களைத் தாங்கி நின்ற சிலைகளை அணிந்தன. தெருக்களெங்கும் நடப்பட்ட பெரும் பந்தங்கள் முதல் நாளிரவன்றே காஞ்சி மாநகரை ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்கச் செய்து கொண்டிருந்தன. நாற்புறக்கான அரண்மனை யானைகளுக்கு அம்பாரிகள் அணிவித்து முகப் பட்டயங்களைக் கட்டி அழகு செய்யப் பட்டிருந்தாலும், பெருவிழாக்களின் போது இருபுறங்களிலும் இலட்சுக்குத் தொங்கவிடப்படும் பெருமணிகளும்

னைவரையுமாகச் சேர்த்து மணியோசை எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது.

அரசகுல மக்கள் ஏறிச் செல்லும் புரவிகளுக்குப் பொன் சேணங்கள் அணிவிக்கப்பட்டன. சோழப் பேரரசனின் மெய்க்காவல் வீரர்கள் கலந்து கொள்வதற்காக முத்துச் சின்னமும், ரத்தினச் சின்னமும் குத்தப் செய்யப்பட்டன. கரிகாலனுக்கு அணிவிக்க வேண்டிய ரத்தினமாலைகள் எவையெவையென்பதைப் பேரமைச்சர் தீர்மானித்ததன்றி, அது சம்பந்தமாக அரசரையும் கலந்து கொண்டார். கோலிக்கவி வெள்ளாளர் அபிஷேக ஆராதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயிரம் வீரர்கள் புடைசூழ நகரப் பிரதானி பட்டுமே கரிகாலனை எதிர் கொண்டால் போதுமென்று பேரமைச்சர் அபிப்பிராயப்பட்டார். ஆனால் மன்னன் அதற்கு ஒப்புக் கொள்ளாமல், 'கரிகாலனை நானே எதிர்கொள்ள வேண்டும்' என்று தீர்மானமாக அறிவித்து விட்டான். இந்த விவரத்தைப் பேரமைச்சர் மற்றும் துறவியாரிடம் கூறினார்.

முதல் நாளும் மறுநாளும் பல ஆலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்த துறவியார், அல்லப்பியாழ்வார் பேரமைச்சரைச் சந்தித்து, யார் யாருக்கு அழைப்பு போயிற்று, யார் யார் வருவதாகத் தங்களுக்குத் தகவல் தெரிவித்தார்கள் என்ற தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருந்தார். அப்படி வந்த ஒரு சமயத்தில், பேரமைச்சர் பெரும் குழப்பத்தில் இருந்ததைக் கண்ட துறவியார் பேரமைச்சரின் இந்த விசித்திரமான நடவடிக்கைகளுக்கான காரணம் ஏதோ நடக்கின்றதென்பதை அறிந்துகொண்டாலும் அதை வெளியில் காட்டாமல், "பேரமைச்சர் பெரும் குழப்பத்தில் இருக்கிறார் போலிருக்கிறது. இருக்காதா? இத்தனை ஏற்பாடுகளுக்கும் தாங்கள் ஒருவர்தானே பொறுப்பாளி" என்று பாதி விளையாட்டாகவும், பாதி ஆதங்கப்படுவது போலவும் பேசினார்.

"வேலையில் அதிகத்தினால் குழப்பமில்லை துறவியாரே! சம்பிரதாய விசாரங்கள் ஏற்படும்போது சற்றே குழப்பமடைகிறேன்" என்று பேரமைச்சர் பதில் கூறினார். அதிலும் தொய்ந்த குரலில்.

"என்ன சம்பிரதாய விசாரம்" என்று துறவியார் துடனே வினவினார்.

"மன்னரை எதிர்கொள்வதானாலும் நகரப்பிரதானி தான் எதிர்கொள்வது வழக்கம்."

"ஆமாம். சந்தேகமென்ன?"

"சந்தேகமில்லையா? இப்போது சக்கரவர்த்தி தானே கரிகாலனை எதிர்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிறார்."

துறவியார் ஏதோ கணம் இலக்குக் கொண்டாராவார் அதைச் சமாளித்துக் கொண்டு, "அப்படியா? அதை நான் எதிர்க்கவில்லையா?" என்று வினவினார்.

"எதிர்த்தேன். கேட்கவில்லை" என்று துக்கத்தால் பேசுச்சு விட்டார் பேரமைச்சர்.

"நான் மன்னனிடம் சொல்லட்டுமா?" என்று தமக்கு மன்னனிடம் இருக்கும் பெரும் செல்வாக்கைக் காட்டிக் கேட்டார் துறவியார்.

"பயனில்லை துறவியாரே! இந்த விஷயத்தில் சக்கரவர்த்தி பிடிவாதமாயிருக்கிறார். இதில் மட்டுமல்ல, மாலைக்கு அவர் அணிவிக்க உத்தேசித்திருக்கும் ரத்தினம் எது தெரியுமா?"

"எது?"

"செங்கதிர் மாலை."

"என்ன, செங்கதிர் மாலையா! பெரும் போரிட்டு மன்னனிடமிருந்து கைப்பற்றிய அந்த ரத்தின மாலையா? அந்த சக்கரவர்த்தியின் சொந்தப் பொக்கிஷத்தைச்

சேர்த்ததாயிற்றே. தனிர, அதைக் கண்டுபிடித்து அனுப்பியவனும் கரிகாலன் என்று வந்தியத் தேவரே அறிவித்திருக்கிறாரே.''

பேரமைச்சர் பதிலேதும் சொல்லாமல் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

''துறவியாரே! நான் இராஜராஜ சோழன் காலத்திலிருந்து அமைச்சனாயிருக்கிறேன்'' என்று சற்றுக் கடுமையான வார்த்தைகளைச் சொன்னார்.

''யார் இல்லையென்று சொன்னது?'' என்று துறவியார் பணிவாகக் கேட்டார்.

''இல்லையென்று யாரும் சொல்லவில்லை, துறவியாரே! ஆனால் ஒன்றுமறியாத குழந்தையென்று நினைத்து நீர் என்னிடம் பேச வேண்டாம். இந்த ஏற்பாடுகள் எல்லாமே ஏதோ காரணத்துடன் நடக்கிறது. அந்தக் காரணம் உமக்குத் தெரியும். எனக்குத் திட்டமாகத் தெரியாவிட்டாலும், என்னாலும் ஓரளவு ஊகிக்க முடிகிறது. ஆகையால்தான் அதிக எதிர்ப்பை இதில் நான் காட்ட முடியவில்லை. ஆனால் என்னையும் இங்கே வைக்கும் உத்தரவுகளைச் சக்கரவர்த்தி பிறப்பிக்கிறார். என்ன செய்வதென்று எனக்கே புரியவில்லை'' என்றார் பேரமைச்சர் குரலில் கவலை பாய.

''என்ன உத்தரவுகள் அவை?'' என்று துறவியார் வினவினார்.

''வரவேற்பு, அரண்மனையின் பொது மண்டபத்தில் இல்லை.''

''பின்பு?''

''அரசரின் சொந்த முத்தாணி மண்டபத்தில்.''

''அப்படியா!''

''ஆமாம். அதுவும் அங்கு அரசர் நடு பீடத்தில் அமருவார். அவருக்குச் சமமாக உட்கார தான்கு ஆசனங்கள் போடப்படும்.''

''தான்கு பேர்கள் யார்?''

''மலேசிகள் இருவர்.''

''அது சரி.''

''கரத்திலிருந்தும் வரும் மணிமேகலை அம்மையார்.''

''என்ன?''

''ஆமாம்! அவருக்குகூகே சகிகாலன் ''

அல்லவாதான்; துறவியார் மனோ பலமெல்லாம் எதிர்பே பறந்தது. ஏதோ பெயருக்கு பெரும் பலசாலி போல ஆசனத்தில் அமர்ந்திருந்தாரே தவிர, தம் சக்தி வெள்ளவற்றையும் யாரோ அபகரித்துக் கொண்டு செல்லும் பிரமை எற்பட்டது அவருக்கு. அவர் மூளையில் ஏதேதோ நிகழ்ச்சிகள் தோன்றித் தோன்றி மறைந்தன. பேரமைச்சர் முகத்தில் தெரிந்த குழப்பத்தைவிடப் பெரும் குழப்பம் அவர் முகத்திலும் பரவியது. ''இந்த வரவேற்புக்கு நிரஞ்சனாதேவியும் வருகிறாளோ?'' என்று கேட்டார்.

''வேங்கி நாட்டு இளவரசிக்கு மட்டுமல்ல, வந்தியத் தேவருக்கு அழைப்புப் போயிருக்கிறது'' என்று அறிவித்தார் பேரமைச்சர்.

''அவர்களுக்கு ஆசனங்கள்?''

''ஒரு படி கீழே போடச் சொல்லி உத்தரவு.''

மன்னனுடைய உத்தேசத்தைப்பற்றி அதுவரை ஏதாவது சந்தேகமிருந்தால், அதைப் பேரமைச்சரின் கடைசிச் சொற்கள் அடியோடு உடைத்தெறிந்துவிட்டன. தூலை அடுத்த நான் அனுகிவரும் அபாயத்தைத் தவிர்க்கப் பெரும் முயற்சியில் இறங்கினார். துறவியார் தான் பெரும் பாகத்தைப் பெரிய புத்த மடாலயத் தலைவே கழித்தார் புத்த பிட்சுக்களை அல்லப்பொழுது ஏதேதோ அலுவலாக எங்கெங்கோ அனுப்பிக் கொண்டிருந்தார். சற்று நேரத்திற்கொருதரம் மடாலயத்

தலைவரைச் சந்தித்து. நீண்ட நேரம் சம்பாஷணையில் இறங்கிக் கொண்டிருந்தார்.

துறவியாரின் இந்தச் சுற்றுப்பயணம் அடியோடு உணராத காஞ்சி மாநகர், பெரும் விழாக்கோலம் பூண்டு நின்றது. காலையிலும் மாலையிலும் மக்கள் பெரும் கூட்டமாக வீதிகளில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். பௌர்ணமி தினத்தன்று காலையில் கலிங்கத்தையும் ஒட்டர நாட்டையும், மாகணி தேசத்தையும் வென்றி கொண்டு கங்கைக்குப் பாதை போடும் படைத்தலைவன் கரிகாலன் மன்னரால் வடக்கு வாசலில் எதிர்கொள்ளப் படுவான் என்று அடிக்கடி பறை சாற்றப்பட்டதால், அன்று விடியற்காலை முதலே ஜன சமுத்திரம் வடக்கு வாசலிலும், வடக்கு ராஜ வீதியிலும் திரண்டு நின்றது. மற்ற ராஜ வீதிகளிலும் படைத்தலைவன் வலம் வருவதாக இருந்தபடியால், அந்த இடங்களிலும் மக்கள் அலை அலையாகக் காலை முதலே மோதத் தொடங்கினார்கள். நகரெங்கும் தோரணங்கள் காற்றிலாடின. மாளிகைகளெல்லாம் இரண்டு நாட்களாக மங்கையர் தீட்டிய செம்மண்ணும் மஞ்சளும் காஞ்சி மங்கையின் சௌபாக்கியத்தை வலியுறுத்தின. அத்தச் சௌபாக்கியத்திற்கு இன்னுமதிக மெருகு கொடுக்க வருபவன் போல் எழுந்த கதிரவனும் அந்தக் காஞ்சிமாநகர் மீது தன் பொன்னிய கிரணங்களை வினான். அவன் எழுந்ததைக் குறிக்கவே ஊதப்பட்ட தந்துபி வாத்தியங்களின் சப்தம் மேனோடு இணைபவன் போல இராஜேந்திர சோழ மன்னனும் அரண்மனைக்கெதிரே நின்ற தன் புரவியில் ஏறினார்.

இரண்டு நாட்களும் அடிக்கடி தூதர்கள் வந்து கொண்டிருந்ததன் விளைவாகக் கரிகாலன் காஞ்சி நகரின் வடக்கு வாயிலை அடையும் - நேரத்தை அரண்மனைக் கணிதர் மிகச்சரியாகக் குறித்திருந்தால், முதல் புலிக்கொடி முன்பொரு குதிரையில் செல்ல,

பின்பு மெல்ல நடந்தது இராஜேந்திரன் புரவி. அதனை அடுத்து நகர்ந்தது மற்றும் பிரதானிகளுடைய பெரும் அணிவகுப்பு. இந்த மாபெரும் ஊர்வலம் கதிரவன் மெல்ல மெல்ல இரண்டாவது நாழிகை முடிந்ததும், காஞ்சி மாநகரத்தின் வடக்கு வாயிலில் நின்றது. அதே விநாடியில் எதிரே வரும் படையின் சத்தமும் வீரர்கள் காதில் விழுந்ததால் பிரதமச்சர் செய்த சைகையையொட்டி துந்துபிகள் மீண்டும் முழங்கின.

பெரும் கறுப்புப் புரவியொன்றில் பூரண போர்க் கோலத்துடன் காஞ்சியின் வடக்கு வாயிலில் கரிகாலனைக் கண்டதும் திடீரென மேளங்கள் முழங்கின. பேரிகைகள் சப்தித்தன. கூட்டம் கூட்டமாக அணிவகுத்து வந்த மங்கையர் அந்த வெற்றி வீரனுக்கு மங்கள ஆரத்தி எடுத்து பாடி ஆரத்திச் சுற்றினார்கள். கோவில் மணிகள் திடீரெனப் பீரிட்டெழுந்து, விடாமல் 'கண கண'வென்று ஒலித்தன. அதிர்வேட்டுகள் ஆங்காங்கு போடப்பட்ட தால் காஞ்சி மாநகரே அல்லரவேற்பில் அதிர்ந்தது.

இத்தகைய வரவேற்பை எதிர்பார்க்காத கரிகாலன் ஒரு விநாடி திகைத்தானானாலும், மறு விநாடி சமாளித்துக் கொண்டு, குதிரையிலிருந்து கீழே குதித்து ராஜநடை நடந்து மன்னன் புரவிக்கருகில் வந்து அவனை வணங்கினான். இராஜேந்திரன் ஒரு கணம் கரிகாலன் கண்களைக் கூர்ந்து கவனித்துவிட்டு, வலது கரத்தை அசைக்கவே, பிரதமச்சர் பெரும் குரலில் அவனை வரவேற்று முகமன் கூறினார். பிறகு மீண்டும் மன்னர் சைகைப்படி கரிகாலன் புரவியில் அமர்ந்து கொள்ள, ஊர்வலம் திரும்பி ராஜ வீதிகளில் நுழைந்தது.

ராஜவீதிகளின் மாளிகையின் உப்பரிகைகளிலிருந்து மங்கையர் அந்த மாவீரன்மீது மலர்களைத் தூவினார்கள். அதுவரையில் அவனைப்பற்றிக் கதைகதையாகக் கேட்டிருந்த பாவலர்கள் அவன்மீது வெற்றிப் பாக்களைப் புனைந்து பாடினார்கள். வழிநெடுகப் பிரதமச்சர்

ஒப்புக் கொண்ட இடங்களில் மட்டும் அனுமதிக்கப்பட்டன. இந்த போதும், காலையில் புறப்பட்ட கார்வலம் மந்த காலநிலையிருந்த பல்லவ அரண்மனையை அடைய நடுப்பகலாகிவிட்டது. அரண்மனை வாயிலில் சக்கரவர்த்தி குலசேகரன், அவனோடு கரிகாலனையும் பக்கத்தில் நிற்க வைத்து மற்ற தோழர்கள் எதிர்கொள்ளப்பட்டது. மகிழ்ச்சியோடும் கரிகாலனோடும் முக்கிய மந்திரிப் பிரதானிகளோடும் உள்ளே அழைத்த இராஜேந்திர சோழத்தலன், நேரே முத்தாணி மண்டபத்துக்குள் நுழைந்தான்.

சாளுக்கிய சைன்யத்தின் நிலைகளையும், கரிய யானை புடைசூழ நிற்கும் யானைப்படை வலிமையும் ஏதேனும் போரும் நடைபெறும் நடக்கப்போகிறது என்பதைத் தெளிவாக, அவன் சக்கரவர்த்தியிடம் மந்திர எச்சரிக்கையுடன் நடந்து கொண்டான். எதையும் முடிவு வரை சக்கரவர்த்தி எல்லாவற்றையும் மனமார்ந்து ஏற்றுக்கொண்டார். அந்தப் பெரிய முத்தாணி மண்டபத்தில் அனைத்தையும் கண்ட மனிதர்களும் தூணிலும் துரும்பிலும் இருப்பதாக நம்பும் தெய்வங்களும் ஒருசேர ஆச்சரியத்துக்குள்ளானார்கள் என்பது உண்மையானாலும், மனிதனை அறிந்து கொண்ட நிறைவு அவனுக்குள் பெரிதும் நிலைத்து நின்றது. 'இங்கிருக்கின்ற மனிதர்களை துணைக்கு வைத்துக்கொண்டு இல்லையென்றால் மனிதர்களை உருவாக்கும் தொழிலை' என்று உள்ளூர மகிழ்ந்து கொண்டார் முதலியார்.

சற்றுமுன்னர் உட்கார்ந்திருந்தான் மனிதர்களை. மந்திரிப் பிரதானிகளை முத்தாணி மண்டபத்திலிருந்து வெளியேறிய பின்பும், நிரந்தரமாகவே வந்தியத் தேவரும் வளைக்கங்கள் கூறி விடை பெற்றுக்கொண்ட பின்பும், மற்ற மனிதர்கள் சென்ற பின்பும் கூட மனிதர்களையும் கரிகாலனையும் முத்தாணி மண்டபத்திலேயே நீற்க வைத்தான் இராஜேந்திரன்.

தம்பிரதாயமாக ஏதேதோ பேசிய இராஜேந்திரன், மடியாக மனிதர்களையும் நோக்கி, "அம்மணி! இந்த சோழ நாட்டின் மாவீரரில் ஒருவன். இவனை உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்டான்.

மனிதர்களின் கண்கள் கரிகாலனை ஏறெடுத்துப் பார்த்தன. பின்பு இராஜேந்திரனுக்காகத் திரும்பின. "தெரியவில்லை மன்னவா!" என்றாள், எந்த உணர்ச்சியும் தொனிக்காத குரலில்.

"இதற்கு முன்பு பார்த்ததே இல்லையோ?" என்று இராஜேந்திரன் மீண்டும் கேட்டான்.

"இல்லை" என்றாள் அவள்.

இராஜேந்திரன் முகத்தில் கோபத்தின் சாயை மெல்ல மெல்லப் படர்ந்தது. நன்றாக எரிய போடப்பட்ட சந்தனக்கட்டைகளை, ஒரே நிராக எழுந்த குளிர் உதிர்த்தானை. அந்த வார்த்தைகள், அவற்றைப் பிரமாதமாக எதிரொலி செய்த அந்த முத்தாணி மண்டபத்தின் சுவர்கள் எல்லாமே பெரும் பயங்கரமான குழப்பத்தைச் சுழற்றியடித்தால், திக்குமுக்காடிப் போன துறவியரைப் போல் ஓடிவிடும் போலிருந்தது. இரண்டு தலைமுறைகளாக மறைக்கப்பட்டு வரும் ஒரு ரகசியம் அப்படியாகும் நாழி தெருக்களிட்டதை உணர்ந்த பிரும்மராயர், தொண்டையை செருமிக் கொண்டார். உலகமே சுழல்வது போலிருந்தது அவருக்கு.

65. அவன் கண்கள்

"அதோ, அவன் கண்களைப் பாருங்கள்!" என்று உணர்ச்சிகள் பெரும் அலைகளாக எழுந்து கொந்தளிக்காதும், அவற்றைச் சிறிதும் வெளியில் காட்டாத வறட்டுக் குரலில் சிறிது இரைந்தே இந்த வார்த்தைகளை உதிர்த்தான் இராஜேந்திர சோழதேவன். அந்த முத்தாணி மண்டபம் கூட இராஜேந்திரனுக்குத் துணை புரிவதைப் போல நாலா பக்கங்களிலிருந்தும் 'அதோ அவன் கண்களைப் பாருங்கள்' என்று எதிரொலி செய்தது! கரிகாலன் பிறப்பைச் சந்தேகத்துக்கு இடமின்றிக் காட்டிக் கொடுக்கும் அந்தக் கண்களின் அத்தாட்சியிலிருந்து, அந்த வம்சத்தார் யாருமே தப்ப முடியாதென்பதை அறிந்து கொண்ட அறவியார் நிச்சிரமையடைந்ததன்றி, அந்தச் சமயத்தில் உண்மை யாகவே உலகத்தைப் பெரிதும் வெறுத்து உண்மைத் துறவியாகி ஆசனத்தில் சாய்ந்து விட்டார். அந்த வார்த்தைகளை அர்த்த புஷ்டியுடன் உதிர்த்த இராஜேந்திரன் குரல் சிறிதும் உணர்ச்சியைக் காட்டா விட்டாலும், முகத்தில் படர்ந்த கோபச் சாயை கொஞ்சம் அதிகப்பட, அவனும் ஆசனத்தில் ஒரு முறை அசைந்தான்.

இந்த நிலையிலே அசையாதிருந்தவர்கள் இரண்டு பேர்கள். ஒருத்தி மணிமேகலை; மற்றொருவன், எத்தகைய சந்தர்ப்பத்திலும் உணர்ச்சிகளை வெளியில் காட்டாமல் மறைத்துப் பொய்யை மெய்யைப் போல் சொல்லும் ஆற்றலைப் படைத்த கரிகாலன். மன்னன் தன்னையும் தடுத்தாட்கொள்ள அந்த மாதையும் மட்டும் முத்தாணி மண்டபத்தில் நிறுத்திக் கொண்டு, மற்றவர் களுக்கு விடையளித்து விட்டதையும், பிறகு நிதானமாகச் சம்பாஷணை தொடங்கியதையும், இரண்டு மூன்று கேள்வி பதில்கள் முடியுமுன்பாகவே கோபச் சாயை

மன்னன் முகத்தில் படர்ந்ததையும் கண்ட கரிகாலன் நிலைப்பற்றிய பேருண்மையைக் கண்டுபிடிக்க இராஜேந்திரன் முயலுகின்றான் என்பதையும் தொழில் மறித்து விட்டவனாக, முகத்தில் எந்தவித உணர்ச்சிகளையும் காட்டாமல் லேசாகப் புன்முறுவல் செய்தான். கும்பகோணம் மடாலயத்தில் தஞ்சைத் துறவியார் பச்சைக்கல் மோதிரத்தைத் துடைத்து ஆராய்ந்த சமயத்தில், சாளரத்தின் வழியாக அந்த மோதிரத்தையும் கரிகாலன் கண்களையும் கண்ட மாத்திரத்தில், 'அவன் மகனா இவன்!' என்று சைவத் துறவியார் வியந்து பார்த்த அதே முகம்! அதே கண்கள்! இரண்டிலும் இந்தப் பழைய விஷமப் பார்வையே படர்ந்து கிடந்தது! அந்த மாதரசிக்கும் தனக்கும் தெரிந்திய உறவு இருக்கிறதென்பதையும், அந்த உறவைப் பட்டவர்த்தனமாக்கவே மன்னன் முயலுகிறானென்பதை யும், அதற்கெல்லாம் சிறிதும் மசியாமல் அம்மாதரசி மண்டலாதிபதியான சோழ சக்கரவர்த்தினியைத் திரண மாக மதித்து உட்கார்ந்திருப்பதையும் கண்ட கரிகாலன், அவளுக்கு ஏற்பட்டுள்ள சங்கடத்திலிருந்து அவளை எப்படியும் விடுவிப்பதென்று கங்கணம் கட்டிக் கொண்டவனாய், மன்னன் கேள்வியைக் குறுக்கே மறித்து "மன்னர் மன்னவா! என் கண்களில் அவர்கள் பார்ப் பதற்கு என்ன இருக்கிறது? உன் பேர் தெரியாத ஒருவன் கண்கள் இவை. நாகையிலிருந்த எனது குருநாதர் உபதேசித்தபடி உயரிய துறவறத்தைப் பூணாமல், புத்த விஹாரத்திலிருந்து புறப்பட்டு போர்களில் கலந்து உயிர் வதைக்கு உடந்தையாயிருக்க உட்பட்ட ஒரு பாவியின் கண்கள் இவை. இந்தக் கண்களைப் பார்க்கும்படி அந்தப் புண்ணியவதியை ஏன் வற்புறுத்துகிறீர்கள்?" என்று கேட்டான், பணிவும் விஷமமும் நிரம்பிய குரலில்.

இராஜேந்திர சோழன் கரிகாலனை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, அவனுக்குப் பதிலேதும் சொல்லாமல் மணிமேகலையின் பக்கமே திரும்பி,

"அம்மணி, நன்றாகப் பாருங்கள்! அதோ அந்தக் கண்கள்! அவை யாரையும் உங்களுக்கு நினைப்பூட்டவில்லையா?" என்று வினவினான்.

மணிமேகலை மீண்டும் தன் கண்களை உயர்த்திக் கரிகாலன் கண்களை நோக்கினாள். சந்தித்த நான்கு கண்களும் சிறிது நேரம் உறவாடின. ஆனால் அந்தக் கண்கள் பதித்து நின்ற முகங்களில் மட்டும், எந்தவிதச் சலனமும் இல்லை. திரும்பி மன்னனைப் பார்த்த மணிமேகலையின் முகத்தில் சாந்தியே நிலவி நின்றது. "அழகான கண்கள் மன்னவா! ஆனால் அவற்றை எந்த உத்தேசத்துடன் பார்க்கச் சொல்கிறீர்கள்? எனக்கு விளங்கவில்லையே!" என்றாள்.

"இந்தக் கண்கள் உங்களுக்கு யாரையும் நினைப் பூட்டவில்லையா? நன்றாக யோசித்துச் சொல்லுங்கள் அம்மணி" என்று இராஜேந்திரன் மீண்டும் கேட்டான். இம்முறை அவன் சொற்களில் சிறிது கண்டிப்பும் இருந்தது.

"இல்லை, யாரையும் நினைப்பூட்டவில்லை" என்று திடமாகப் பதில் சொன்னாள் மணிமேகலை.

"என் மூத்த மகனைப் பார்த்திருக்கிறீர்களா?"

"இல்லை. அந்தப் பாக்கியம் எனக்கில்லை. நான் கூரத்தில் ஒரு காட்டில் தன்னந்தனியே வசிக்கிறேன். உலகத்துடன் உறவை விட்டு நீண்ட நாளாகிறது."

"உறவை விடக் காரணம்?"

"அது சொந்தக் காரணம் மன்னவா!"

"காரணத்தைச் சொல்ல முடியுமா?"

"முடியாது."

"ஏன்?"

"சொல்ல வேண்டாமென்று என் கணவர் உத்தரவு. அதை மீற எனக்குச் சோழ நாட்டுச் சக்கரவர்த்தியால் கூட வற்புறுத்தவும் முடியாது."

உறுதியுடனும் தன்னைப் பார்த்து மிகுந்த அசட்டை யுடனும் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்ட சோழப் பேரரசின் அழகிய வதனத்திலே கோபத்திற்கும் பதில் தர்மசங்கடமான ரேகையே தன்றாகப் படர்ந்தது. எப்போர்ப்பட்ட எதிரிகளைத் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்த்ததால் பெருமிதத்தோடு உலகையும் கொண்ட இராஜேந்திரனின் வாயிலிருந்து அடுத்து வந்த வார்த்தைகளில் கருணையும் அன்பும் பொங்கி எழுந்தன.

"அம்மணி! உங்களைப் போன்ற தவச் செல்விகளால் இந்தத் தமிழ்நாடு சிறப்படைகிறது. அதைக் கண்டு மன்னனான நானும் பெருமையடைகிறேன். உண்மை யறிந்து மன்னன் வாழ வேண்டும் என்ற தமிழ்ப்பண்பாட் டின் முறைப்படிதான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். தவறாக நினைக்க வேண்டாம். எந்த மன்னாதி மன்னனுக் கும் வணங்காத என் தலை தங்களைப் போன்ற கற்புக் கரசிகளின் கால்களில் தாழ்வதைப் பெருமையாகக் கொள்ளும் நீங்கள் எனக்கு வயதில் சிறியவர்கள் போல் தோன்றுகிறது. இருந்தாலும் உறுதியில் உங்களுக்கு நானும் இணையில்லை. இந்த மண்டபத்தில் யாருமே இல்லையில்லை. ஆகவே, தாயே பணிவுடன் கேட்கிறேன். சொல்லுங்கள்...என் தந்தையையாவது பார்த்திருக்கிறீர் களா?" என்று மெல்லக் கேட்டான் இராஜேந்திரன்.

மணிமேகலை துயரம் தோய்ந்த இராஜேந்திரன் அழகிய வதனத்தை நோக்கினாள். அதுவரை உணர்ச்சி எதையுமே காட்டாத அவள் கண்களிலும் இரண்டு துளி நீர் எழுந்து நின்றது. "மன்னர் பெருமானே! நீயேடு இந்தச் சோழ மண்டலத்தை ஆளத்தகுந்தவன். துளிகூடச் சந்தேக மில்லை. உன் பண்பும் உன் பணிவும் உன் வீரத்துக்குச்

சிறிதும் சினத்தலையல்ல. ஆகையால் நீ உயர்த்தல. இப்படி நீ என்று அழைக்கிறேனே என்று நினைக்காதே. உன்னைவிட நான் வயதில் சற்றுப் பெரியவன். உன்னை ஏகவசனத்தில் அழைக்கும் உரிமையும் எனக்கு உண்டு. அது என்ன உரிமை என்று மட்டும் கேட்காதே. கற்புக்கரசி என்று நீ என்னை அழைத்தாய். அது உண்மையெனில் நீ நம்பினால் என்னை உன் அன்னையாக மதித்து நட. நான் சொல்லும் வார்த்தைகளுக்குத் தடை சொல்லாதே மேற் கொண்டு எந்தக் கேள்வியும் கேட்காதே" என்றான் உணர்ச்சியால் குழைந்து போன குரலில்.

அடுத்த விநாடி அந்த மண்டபத்தில் மௌனம் சிறிது நேரம் நிலவியது. அந்த மௌனத்தைக் கரிகாலனே கலைத்தான். "மன்னவா! இந்த அம்மணியின் சொல்லைத் தாங்கள் எப்படி மீற முடியும்? மண்டலத் தையே ஆள்பவராயினும், கற்புடைய மாதருக்குக் கீழ்ப் படிவதுதானே மானிலத்தின் வழக்கு? என்னுடைய கன் னைப்பற்றி இப்பொழுது என்ன கவலை? சோழ மண்டலத்தில் எத்தனையோ அநாதைகள் இருக்கிறார் கள். அவர்கள் கண்களையெல்லாம் ஆராய்ந்து கொண் டிருந்தால் மன்னருக்கு ஒரு ஜென்மம் போதாது; பல ஜன்மங்கள் வேண்டியிருக்கும்" என்றான் கரிகாலன்.

மன்னன் முகத்தில் கவலையும் துக்கமும் சிறிது தொலைக் குறியுங்கூடத் துலங்கின. ஆகவே கரிகாலனைப் பார்த்துச் சொன்னான், "கரிகாலா! உன் கண்கள் அநாதையின் கண்கள் அல்ல" என்று.

"வேறு யார் கண்கள் மன்னவா?"

கரிகாலன் தன்னைப் பார்த்து நகைக்கிறானென்பதை ராஜேந்திரன் உணர்ந்து கொண்டானும், அதைச் சிறிதும் வெளியில் காட்டாமலும், தன் நினைவு அறுபடா தும் தொடர்ச்சியாகப் பேசினான். "உன் கண்கள் அநாதையின் கண்களல்ல கரிகாலா! அவை அரசலம்சத்

தின் கண்கள். அதுவும் சோழ ராஜலம்சத்தின் கண்கள்! பார்த்த உடனேயே நான் புரிந்து கொண்டேன். பார்க்கும் யாரும் புரிந்து கொள்ளாமலிருக்க முடியாது. இந்தக் கண்களை உடையவனின் பூர்வீகத்தை இந்தப் பூமண்டலத் தில் யாருமே மறைக்க முடியாது. அரையன் ராஜராஜன தன் தலைகளில் சோழர்குல ராஜ முத்திரையைப் பொறித்து. உன்னைப்பற்றி இந்தத் தஞ்சைத் துறவியாருக் கும் எழுதிய போதே உண்மையை ஓரளவு ஊகித்தேன். உன்னைப் பார்த்ததும் உண்மை ஊர்ஜிதமாகி விட்டது. அதனால் நீதி சபை முன் உறுதி செய்ய அத்தாட்சிகள் தேவை. அந்த அத்தாட்சிகளை இந்த அம்மணியும், துறவியாரும், அரையன் ராஜராஜனும் தரமுடியும். ஏன் தர மறுக்கிறார்கள்?" என்று வினவினான்.

மணிமேகலை சிறிதும் அசையாமல் உறுதியுடன் மன்னனைப் பார்த்தான்.

அவளிடமிருந்து எந்தத் தகவலையும் பெற முடியா தென்பதைத் தீர்மானித்துக்கொண்ட ராஜேந்திர சோழ தேவன் மேலும் கரிகாலனைப் பார்த்துச் சொன்னான்: "கரிகாலா! உன்னைப் பார்க்கும்போதெல்லாம் என் மகன் நினைவே வருகிறது எனக்கு. என் மகன் எப்படி இருப்பான் தெரியுமா? உறையூருக்கு வந்து பார், தெரியும்!"

"கண்டிப்பாய் வருகிறேன் மன்னவா! படைத் தலைவனுக்கு இளவரசன் அன்பு கிடைப்பது பிற்காலத் தில் பலனிக்குமல்லவா?" என்றான் கரிகாலன். ராஜேந்திர சோழதேவனைச் சரியாக அர்த்தம் செய்து கொள்ளாதவன் போல்.

"அதற்குச் சொல்லவில்லை கரிகாலா! உன் கண் களுக்கும் அவன் கண்களுக்கும் வித்தியாசம் சிறிதுமில்லை. சொல்வது புரிகிறதா?"

"புரியாமலென்ன? நானும் அரச லம்சத்தைச் சேர்ந்தவனென்று கூறுகிறீர்கள். அரச லம்சங்களில்

கினைகள் பல இருப்பது சகஜம்தானே மன்னவா? அதில் ஒரு தாக்குக் கினையில் என் தந்தை பிறந்திருக்கலாம். அந்தச் சனலை எனக்கிருக்கலாம். இதில் என்ன விபரீதம் இருக்க முடியும்?'' என்றாள் கதிகலன்.

''தோத்தக் கினையாயிருக்க முடியாது கதிகலா! அருகேயுள்ள கினை. அதுவும் மிக அருகேயுள்ளது! இவை வீடில்! இந்தத் தமிழ் மண்டலத்திலே ஒரு காலத்திலே பலகில அந்தக் கன்னன் உனக்கு இருக்க முடியாது. அந்தக் கன்னன் நாட்டில் இருவருக்குத்தான் உன்னிடமுள்ள நினைத்தல். ஒன்று எனக்கு; இரண்டாவது என் மூத்த மகனுக்கு. மூன்றாவது போலிமுகம் இருக்கிறான் கதிகலா! அது நீ தான். அந்தக் கன்னன்...''

மேகங்கள் கலைந்து விட்டன. இடி இடிக்கப் போகிறது என்ற முடிவுக்கு வந்து விட்டார் துரோணர்.

இச் சொல்லை முடிப்பதும் மகிழ்ச்சியும் துயரமும் கலந்த குரலில் சொன்னாள் இராஜேந்திர சோழதேவன். ''அந்தக் கன்னனைக் கண்டு பலகை வணங்கினர்; மன்னவர் பலர்தான்; அறிவாளிகள் யுத்தனர். கதிகலா! அந்தக் கன்னன் என் தந்தை ராஜராஜ சோழதேவனின் கன்னன்!''

இதைச் சொல்லி இராஜேந்திர சோழதேவன், ண்ட நேரம் கணக்கில் மௌனத்தில் தன் ஆசனத்தில் லையைத் தொங்கப் போட்டுக்கொண்டு கட்டாந்தரைத் ன். பிறகு மெல்லத் தலையை நிமிர்த்தி ணிமேகலையை நோக்கி, ''அம்மணி! என் வம்சத்தில் த்த இவனுக்கு உரிய மரியாதையை அளிக்க வேண்டியது கடமை. அதை நிறைவேற்ற உதவுவாயா? இவன்? எப்படி என் தந்தையின் சாயலைப் றான்? இவன் போர்த் தந்திரங்களும் அவர் முறை ப் போலவே அமைந்திருக்கின்றனவே அம்மணி'' கெஞ்சினான்.

மணிமேகலை சாந்தி நிறைந்த கலையாத குரலில் நான்னன். ''மன்னவா! அவன் இருக்க வேண்டிய தானத்தில் அவன் இருக்கிறான். ஆகையால் கவலைப் படாத. அவன் பராக்கிரமத்தை அறிந்து புகழாக் நல்லக் கூடாது எதுவில்லை. என்னை நம்பு'' என்று.

தன் முயற்சி தோல்வியடைந்து விட்டதைப் பூரண உணர்ந்து சோழதேவன் இராஜேந்திர சோழ நுனின். நகரை மேற்கொண்டு எதுவும் பேசாமல் எழுந்து, மண்டபத்தை விட்டு வெளியேறினான். மணிமேகலையும் கதிகலனை முத்தமிட்டுக் கொண்டே பாக்காமலே அந்தப்புரத்தை நோக்கி நடந்தாள். தாளையையில் உப்பரிகை அறைகளில் வசிக்க நிலவன நடந்தனர்.

சோழர்களின் நடந்தது போலவே அவனை வர்களும் நடந்தனர்கள். ஆனால் கதிகலன் மனம் மட்டும் போக போக்கில்லாமல் வெறுத்து எரிச்சலை அளித்து கொண்டிருந்தது.

இரவு எதிர்பார்த்தபடி அதிருப்தியாக கோலங்களில் கர்த்தரே பூஜையில் மணிகளின் போலவே கேட்டது. அந்த அலையும் நீரு சொர்ணரேகையில் ஒலித்து போலவே என்ன சிலை தூண்டில் கண்களை மூடிய கதிகலனை ஒரு வகை மயக்கம் அளித்து எழுப்பியது.

கண் விழித்த கதிகலனுக்கு எதிரே துரோணர் நின்று கொண்டிருந்தார்.

''என்ன துரோணரே! இந்த நள்ளிரவில்...'' என்று கதிகலனைப் போலவே அதிசயப்படி வரவேற்ற துரோணர் அவனை மௌனமாக கட்டிப்பிடித்து அழைத்துச் சென்று அரண்மனையின் மேல்தளத்தில் அமைந்திருந்த ஒரு கண்ணாடி அறைக்குள் நுழைந்தார். அங்கிருந்த ஒரு கண்ணாடி மேஜையில் பரவிக் கிடந்த படிகளில் தூரமும் இருந்த, கதிகலனையும் இருக்கச் சொன்னார். இருவரும் அந்தச் சுழலிருக்கை

நீண்ட தூரம் நடந்து சென்றார்கள். சுரங்கம் முடிந்த இடத்தில், திடீரென இருள் விலகியது. மெல்லிய தீப மொன்று தூரத்தில் பளிச்சிட்டது. "போ! கரிகாலா! புத்தர் பிரான் அருள் உனக்குக் கிட்டப் போகிறது" என்று மெல்ல அவன் காதுக்கருகில் சொன்னார், தஞ்சைத் துறவியார். அடிமேலடி வைத்து நடந்தான் கரிகாலன். சுரங்க வழி மெல்ல விரிந்தது. மேலே சென்ற படிகள் பெரும் மண்டபத்தில் அவனைக் கொண்டு சேர்த்தன. அந்த மண்டபத்தின் கோடியில் பிரும்மாண்டமாக உட்கார்ந்திருந்த போதி சத்துவர் சிலையின் அருள் விழிகள் அவனை அருகே அழைத்தன. அருகில் சென்ற கரிகாலன் அந்தச் சிலையின் அழகைக் கண்டு பிரமித்து நீண்ட நேரம் நின்றான், மெய்மறந்த நிலையில். அந்தச் சிலைக்குச் சற்று அப்பாலிருந்து ஒரு கதவு திறந்ததையோ, திறந்த அந்தக் கதவின் வழியாக ஓர் உருவம் மெல்ல நடந்து தன் அருகில் வந்ததையோ, அவன் கவனிக்க வில்லை.

66. மகனே நீ மன்னாதிபதி

அரண்மனையிலிருந்து கிளம்பிய அத்தனை குறுகிய சுரங்க வழி அப்படி அந்த இடத்தில் திடீரென முடியுமென்று எதிர்பார்த்ததையோ, முடிந்த இடம் அத்தனை பெரிய புத்த விஹார மாகவிருப்பதையோ, சொப்பனத்திலும் நினைக்காத கரிகாலன், எதிரேயிருந்த புத்தர் பிரான் சிலை மீதே கண்களை நாட்டி எண்ணங்களைப் பல இடங்களில் சுழல விட்டுக் கொண்டிருந்தான். காவியங்களை நிரம்பப் படித்த கரிகாலன் பிற்காலத்தில் இந்த இடங்களை நினைத்துப் பார்த்தபோது, முடிந்தது சுரங்க வழியல்ல வென்றும், தன் வாழ்க்கையின் மர்மமே என்றும், விரிந்தது புத்த விஹாரமல்ல வென்றும், தன் பிறப்பைப் பற்றிய உண்மையே யென்றும், காவிய ரீதியில் உலமைகளை அமைத்து அமைத்து மகிழ்ந்திருக்கிறான். ஆனால் அந்த ஸ்தலில் போதி சத்துவரின் அருள் விழிகளுக்கு முன்பாக அவர் அருகே பளிச்சிட்ட சிறு விளக்கின் ஒளிச் சுடரின் வெளிச்சத்தில் நின்றபோது, காவியங்களோ உலமைகளோ அவன் கருத்துக்குச் சிறிதும் எட்டவில்லை.

போதி சத்துவரின் புண்ணிய விழிகளில் தன் விழிகளை யன்றி அவருடைய மகாசக்தியில் கலந்துவிட்டவனைப் போல் நின்றிருந்த தன் மகனைக் கண்ட மணிமேகலை, அவன் எண்ணங்களைச் சிறிதும் கலைக்காத முறையில் அடிமேலடி வைத்து மெள்ளப் பதுமையென நடந்து, அவனுக்குப் பின்புறத்தே வந்து நின்று குனிந்து, அவனை நீண்ட நேரம் நோக்கினாள். தலையிலே சுருட்டையாய் படிந்த மயிர்கள், அலையமான வளைவுகளுடன் ஆண் மைக்குரிய பலத்துடன் ஓடிய நீண்ட வலுவான முதுகுப் புறம், உறுதியாகக் கீழே நின்ற கால்கள், நிர்மலமான தோள்கள், இவற்றையெல்லாம் ஒன்றாகப் பார்த்த மணிமேகலையின் கண்களில் அன்பு நீர் மெள்ளத்

திரண்டது. நீந்து வலியில் அலறுவதை தன் முழங்கையை வாயிலப் பருவத்தில் பார்த்த அந்தத் தாயின் உடலில் ரத்தத்தின் பாசம் குறைவதைப் பார்த்ததால் உணர்வின் மிருகவால் ஒரு முறை அவளைத் தூக்கி ஆட்டிய எத்தனையோ துன்பங்களை வாழ்க்கையில் தாங்கி நின்ற அவள் இதயம், படபடவென்று அடித்துக் கொண்டது. அவளது கரங்கள் அவள் தோள்களைப் மெள்ள அமர்த்தின.

உலகத்திலேயே இரண்டு கைகளுக்குத்தான் அளவற்ற உண்டு என்பதைக் கரிகாலன் படித்திருந்தான். ஒன்பது மாத காலம் தாங்கிய தாயின் ரத்தமோடும் வலி இன்னொன்று, கட்டி வாழும் மனையாளின் கை. இன்ப மகள் நோயுற்ற காலங்களில் இந்தக் கைகள் பட்ட மாத்திரத்தில் பெரும் சாந்தியுண்டு என்பதை அவன் சின்ன வயதாக அறிந்திருந்தான். ஆனால் அந்தக் கைகளின் அபாரத்துவம் சாந்தி தரும் சக்தியை எத்தனை பெரிது என்பதை, இன்று, அந்தக் கருக்கு முடிவிலே விரிந்த புத்த விஸ்தாரத்தில்தான் அறிந்தான் கரிகாலன். மணிமேகலையின் கைகள் தோள்களில் பட்ட மாத்திரத்திலேயே, அவன் உடல் முழுவதும் ஆளந்த வெள்ளம் பாய்ந்து நின்றது.

மகளுடைய தலையை மெல்லத் தன்னுடைய மார்பில் சாத்திக்கொண்ட மணிமேகலை, குனிந்து அவளை உச்சி மோந்தாள். அவள் கரங்கள் அவள் உடலைச் சுற்றி இந்த வலியதுக் குழந்தையை அணைப்பது போல் அணைத்தன. கண்கள் நீரை அவள் தலையில் உதிர்த்தன.

தலையில் தாய் உதிர்த்த கண்ணீர்த் துளிகள் கடகட வென்று விழுவதாலோ அல்லது புத்தபீடியிலிருந்து இருளை நீக்கி புனித நீருக்கிருந்த சக்தியாலோ தெரியாது, கரிகாலன் மெள்ள வாய்விட்டு, "அம்மா" என்ற மோற்றத்துடன் அழைத்தான்.

"அம்மா!" அந்தச் சொற்களைக் கேட்க எத்தனை வருஷங்களாகத் துடித்துக் கொண்டிருந்தான் மணிமேகலை. மூன்றே எழுத்துக்கள்தான்! ஆனால் அதற்கில் அத்தனை பெரிய அழுத்த வெள்ளமா தேங்கி நிற்க முடியும்! பிரளய சப்தத்திலும் மூன்றே எழுத்துக் கொண்டதான் இருக்கின்றன. 'அ, உ, ம்' என்ற இந்த எழுத்துக்களின் காலத்துக்கும் சிருஷ்டிக்கும் அப்பாற் பட்ட 'ஓம்' என்ற பிரணவம் சப்தமாக மாறியிருக்க வேண்டும். அலைபாயும் கடலின் இரைச்சலில், குரலின் கூச்சலில் பிரணவ சப்தத்தைக் கேட்கிறோம். தாயின் அணைப்பில் சிறந்த மந்திரச் சொல்லாக 'அம்மா!' எனும் மூன்று எழுத்துக்களில் அடக்கும் சக்தியில்தான் எத்தனை இனிமை என்று மணிமேகலை அந்தச் சமயத்தில் நினைத்தான்.

கரிகாலனை அந்த வாலிப வயதுக்குள் எத்தனையோ "மகனே" என்று அழைத்திருக்கிறார்கள். பூதபாண்டி விஜயராஜ தலைவர் அழைத்திருக்கிறார்; தந்தைத் துறவியார் அழைத்திருக்கிறார்; சிற்சில சமயங்களில் அரையன் ராஜராஜனும் அழைத்திருக்கிறான். ஆனால், அந்த அழைப்பு வேறு தாயின் சப்தத்தில் ஒலித்த இனிமையும் அந்த ஆனை குரல் வேறு. அது எத்தனை நிர்மலமாக ஒலிக்க முடியும் என்பதை அன்றுதான் அறிந்தான் கரிகாலன்.

"அம்மா!" என்று கூறிய கரிகாலன், குனிந்து அவள் புனித பாதங்களைத் தன் கரங்களால் தொட்டான். தலைச் சரேலென எழுப்பி மீண்டும் அணைத்துக் கொண்ட மணிமேகலை, "கண்ணே, நான் யாரென்பதை எப்படி அறிந்தாய்? இங்கு வருமுன்பே தந்தைத் தறவியார் கூறிவிட்டாரா?" என்றாள்.

"இல்லையம்மா!" என்றான் கரிகாலன், அவள் அணைப்பை விட்டு அகலமுடியாதபடியால், தலையை உயர்த்தி அவள் மலர்முகத்தைப் பார்த்தபடி.

"நீ எப்படித் தெரிந்து கொண்டாய்?" என்றாள் அவள் வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த குரலில்.

"அம்மா, பிறர் சொல்லித் தெரிய வேண்டிய உண்மை இது? சூரியனுக்கும் காலைக்கும் உள்ள உறவை பிறர் சொல்லித் தெரிகிறார்கள்? சகிராவுக்கும் அவளுக்கும் உள்ள உறவை விளக்க ஆசிரியர் ஏதேனும் தேவைப் பட்டதா? மாட்டுக்கும் கன்றுக்கும் உறவை விளக்க ஏதேனும் ஆசிரியர் அமர்த்தியிருக்கிறார்களா? நீ பிறக்கையிலே இந்த உறவைக் கற்பிக்கிறது. உங்களை முத்தணி மன்னர்களிலே கண்டதில்லை தெரிந்து கொண்டேன்—உங்களுக்குள்ளே இருக்கிற தன்மையாலே" என்றான் சரிகாலன்.

அவன் பேசும் அழகைக் கண்டு வியந்த மணிமேகலை, அவன் தலையை ஆசையுடன் தொலைவிட்டாள். பிறகு மெல்லத் தள்ளி நிறுத்தி நிதானித்துச் சொன்னாள்: "கண்ணனே! இயற்கை கற்பிக்கும் உறவு இது என்றாலும், அந்த இயற்கை மகனுக்கு மட்டுமா கற்பிக்கும்?" என்று.

"அப்படியானால்?"

"உன்னை எனக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? ஜந்து வயதில் என் கண்களால் தேடி அலையும் ராஜாதி ராஜனிடம் உன்னை ஒப்படைத்த நான் முதல் உன் வளர்ச்சி யையும் தேவபோல் தூரத்திலிருந்தே கவனித்துக் கொண்டிருக்கிறேனடா மகனே! நீ வளர்ந்த இடம், முறை யெல்லாவற்றையும் நான் அறிவேன். உன்னைப் பார்க்க வேண்டுமென்று நான் துடித்துப் போனதை எத்தனை முறை அழுதுதீர்த்திருப்பேன்! என் கண்ணீர் முழுதும் கலந்து ஓடுமானால், இந்த நகரின் பெயரையும் மாற்றி, அதற்குரிய பெயர் வாய்க்காலாகத் தெரியுமடா மகனே!" என்று மாறி மாறிக் கூறினாள். அப்பொழுதும் அவள் கண்கள் நீரை உகுத்தன.

அந்த நீரைக் கரிகாலன் தனது மலர்க்கரத்தால் துடைத்துவிட்டு, "அம்மா, தெரிந்தும் மன்னன் முன்பாக

என்னை யாரென்று தெரியாதென்று சொல்லினீர்கள்?" என்று கேட்டான்.

நாக்குழறச் சொன்னாள் அவள்: "ஆமடா மகனே! தெரிந்தால் எந்தத் தாயும் சொல்லக்கூடாத அந்த வார்த்தைகளைச் சொல்லினேன்."

"ஏன் அம்மா? ஏன் அப்படிச் சொல்லினீர்கள்?"

"நீ யாரென்பது இராஜேந்திர சோழதேவனுக்குத் தெரியக்கூடாதடா மகனே!"

"ஏன் தெரியக்கூடாது அம்மா? இராஜேந்திர சோழ தேவன், தாய்க்கும் மகனுக்கும் இடையே நிற்கும் பொல்லா இதயம் வாய்ந்த கொடியவனா?"

"இல்லை மகனே! அவன் கொடியவனல்ல. இராஜேந்திர தேவனைப் போல் அறவழியில் செல்லக் கூடிய மன்னர்கள் சரித்திரத்தில் விரல் விட்டு எண்ணிவிடலாம். அவன் தயாளம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. அவன் கொடியவனாய் இருந்தால் அந்த மாட்டேன். அவன் தர்மமனைக் கண்டதால் அந்த நிறேன்"

"தேர்மனையைக் கண்டு அஞ்சுகிறீர்களா? விந்தையா இருக்கிறதே தாயே?"

"விந்தையும் விசித்திரமும் வாய்ந்த வாழ்வுதானடா உன் வாழ்வும் என் வாழ்வும்."

"விளங்கவில்லையே எனக்கு!"

"விளங்க வைக்கத்தான் உன்னை இங்கு அழைத்து வரச் செய்தேன் மகனே. உன் பிறப்பின் பெரும் ரகசியத்தை, அதுவாக உடையுமுன்பு நானாகவே உனக்குச் சொல்லி விடலாமென நிச்சயித்தேன். உன் தந்தை உயிருடனிருந்தால் தான் இப்பொழுது செய்யும் காரியத்திற்குக் கண்டிப்பாய் இணங்குவார் என்று என் மனம் சொல்லியதாலேயே உன்னை இங்கு சந்திக்கவும்

பேசவும் நிர்மானித்தேன். அத்தத் நிர்மாணத்தில் எதாவது முன்பு சலனமிருந்தாலும், இன்று பகல் முத்தாலை மண்டபத்தில் இராஜேந்திர சோழதேவன் கொண்ட சத்தேகத்துக்குப் பிறகு அந்தச் சலனம் நீர்த்து விட்டது'' என்று சொல்லிப் பெருமூச்செறிந்த மணிமேகலை மன்னக் கரிகாலனை அழைத்துச் சென்று புத்தபிரான் காலடியி லிருந்த ஒரு சிறு பீடத்தில் தான் உட்கார்ந்து கொண்டு, மகளைத் தரையில் உட்கார வைத்தாள்

அப்படி உட்கார வைத்துக் கொண்டு தன் மடித் தானில் பதித்த தலையின் மயிர்களைக் கோதிவிட்டுத் தன்னை ஆவலுடன் நோக்கிய கண்களைப் பார்த்து, ''உண்மைதான் மகனே! அந்தக் கண்களை உடையவன் பிறப்பை யாரும் மறைக்க முடியாது. ஆகவே, இராஜேந்திர சோழ தேவனிடமிருந்து நீ எப்படி மறைக்க முடியும்?'' என்றாள்

கரிகாலன் கண்கள் தாயின் மலர் முகத்தில் பிரதிபலித்த துயரத்தைக் கண்டன.

மணிமேகலை சற்று நேரம் பேசாமலிருந்தாள். பிறகு சொன்னாள்: ''மகனே, உன் கண்களில் தெரிவது சோழ இராஜ்ய வம்சத்தைப்பற்றிய பெரிய ரகசியம்; இன்று தலைமுறைகளின் கதை அந்தக் கதையை அறியச் சோழ மண்டலத்தின் பகைவர்கள் துடிக்கிறார்கள். அதை எங்களில் சிலபேர் இதயத்தில் வைத்துப் பூட்டி விட்டோம்.''

கரிகாலன் தலை நன்றாக ஏறெடுத்துப் பார்த்தான். 'என் பூட்டி வைக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

''சோழ ராஜ்ய நன்மையை உத்தேசித்து; மக்களின் க்ஷேமத்தை முன்னிட்டு'' என்றாள் மணிமேகலை.

''என் பிறப்பு மர்மம் வெளியானால் என்ன நடக்கும்? சோழ சாம்ராஜ்யம் அழிந்துவிடுமா?''

''ஆம் மகனே! சோழ நாடு பிளவுபடும். சாம்ராஜ்யம் தகர்ந்து போகும். உள்நாட்டில் யுத்தமுண்டாகும்.''

''இதே வார்த்தைகளை என்னிடம் சூடாமணி த்தாரத் தலைவரும் சொன்னாரம்மா. என்னை வீரன் வாழ்க்கையிலிருந்து துறவறத்துக்கு வரும்படியாகக் கூட அழைத்தார் என்றான் கரிகாலன்

இதைக் கேட்ட மணிமேகலை, அத்தனை துன்பத் திலும் மெல்ல நகைத்தாள். ''ஏனம்மா சிரிக்கிறாய்?'' என்றான் கரிகாலன் சந்தேகத்துடன்.

''சிரிக்காமல் என்ன செய்வேன் மகனே! உன் தந்தை அறிந்த சூடாமணி விஹாரத் தலைவர், உன்னைத் துறவியாக்க முடியுமென்று நினைத்தாரே, அந்த வித்தகரை நினைத்தால் யார்தான் சிரிக்காமலிருக்க முடியும்? மகேந்திர தேவருடைய மகன் ஒரு துறவியா! வித்தையிலும் வித்தை! துறவியாகும் மனப்பான்மை உன்ன குலத்திலேயே கிடையாதடா என் கண்மணி''

கரிகாலன் இதயம் பலமாக மோதிக்கொண்டிருந்தது. ''மகேந்திர தேவர்! அதுவா என் தந்தையின் பெயர்'' என்று உள்ளே ஏதோ பலமாகச் சொல்லக்கூடாத மந்திரச் சொற்களை உச்சரிப்பவன் போல் சொன்னான்.

''அதுதான் உன் தந்தையின் பெயர்! மகனே! அவரை விடப் பெரிய வள்ளல் இந்தச் சோழ மண்டலத்தில் கிடையாது. அவர்...'' சற்றே தயங்கினாள் மணிமேகலை.

அவள் தயங்கிய அந்த விநாடியில் விஹாரத்தின் மேற்குப் பக்கத்திலிருந்து கதவொன்று திறந்தது. ''தயங்காதே மகனே! உண்மையைச் சொல்லி விடு. உண்மையை அறிவதற்காகவே உலகம் பூராவும் அலைந்து சோதனை செய்த போது சத்துவரின் நிழலில் நீங்கள் நிற்கிறீர்கள். இங்கு சத்தியத்துக்குத்தான் இடம். வாழ்க்கையின் மறைவுகள், நிறைகள் எல்லாம் திறக்கப்பட வேண்டிய இடம் இது. சொல்லிவிடு மணிமேகலை!'' என்று கூறிக் கொண்டு, நாகப்பட்டணத்தின் சூடாமணி விஹார

தலைவர் உள்ளே நுழைந்து அவர்களுக்கருகில் வந்தார். அவரைக் கண்ட கரிகாலன் எழுந்து தலை வணங்கினான்.

அவனுக்கு ஆசி புரியும் முறையில் கைகளை உயர்த்திய சூடாமணி விஹாரத் தலைவர், "கரிகாலா! நீ நாகையை விட்டுப் புறப்பட்டது முதல் இன்று வரை உன் நடவடிக்கைகளை நானறிவேன். தஞ்சைத் துறவியார் அவ்வப்பொழுது விஷயங்களை எனக்கு அறிவித்து வருகிறார். உனக்கு விமோசனம் பிறக்கும் காலம் வந்துவிட்டது. ஏன், உன் உறுதியால் நாட்டுக்கும் விமோசனம் பிறக்கும் காலம் சமீபித்துவிட்டது. ஆகையால்தான் உன் தாயும் நீயும் சந்திக்க நாங்கள் உடன்பட்டோம்" என்றார்.

"தாயும் சேயும் சந்திக்க நீங்கள் உடன்பட வேண்டுமா? தந்தையே! இயற்கைக்கு அணை போடப் புத்தமதம் இடங்கொடுக்கிறதா?" என்று கேட்டான் கரிகாலன் ஆத்திரம் தணிந்த குரலில்.

"ஆம் குழந்தாய்! அஹிம்சையை நிலைநிறுத்துவது புத்த மடாலயங்கள் கடமை. மக்கள் ரத்தம் அலையில் மாசச் சிந்தப்படுவதைத் தடுக்கவேண்டியது எங்கள் கடமை. உன் பிறப்பின் மர்மம் இப்பொழுது வெளியானாலும், நீ யாரென்பதை உலகத்துக்கு அறிவிக்க முடியாது. அறிவிப்பதில்லையெனப் பிரமாணம் செய்! இதோ புத்தர்பிரான் முன்பாகப் பிரமாணம் செய்" என்று ஆணையிட்டார் சூடாமணி விஹாரத் தலைவர்.

"ஏன் அப்படிப் பிரமாணம் செய்ய வேண்டும் தந்தையே" என்று சிறிய கரிகாலன், தன் தாயையும் நோக்கினான்.

"மணிமேகலையின் உதிரத்தில் உதித்த நீ பிரமாணம் செய்ய மறுக்க முடியாது!"

"ஏன்?"

இந்தக் கேள்விகளுக்கு மணிமேகலை பதில் கூறினாள். "அது உன் தந்தையின் கட்டளை மகனே. உலகத்தார்

பிறவி மர்மத்தை அறியக்கூடாதென்று அவர் பிரம்மம் நிறுவாயில் ஆணையிட்டிருக்கிறார். அந்த தனைக்குக் கட்டுப்பட்டுத்தான் பிரமாணம் செய்தேன். அந்தப் பிரமாணம்..."

"அந்தப் பிரமாணம்?"

இப்பொழுது விஹாரத் தலைவர் பதிலிறுத்தார். "வரைக் கட்டுப்படுத்தியிருக்கிறது நான், அரையன் ராஜராஜன், தஞ்சைத் துறவியார், பிரதாபருத்திரன் ாலரும் உன் தந்தையின் மரணப்படுக்கையில், சமுத்துப் ப்பார்ப் பாசறையில் பிரமாணம் செய்து கொடுத்தோம். மகனே! அந்தப் பிரமாணத்தை பிரதாபருத்திரன் உடைத் தான். நீதான் சோழப் பேரரசின் அரியணையில் உண்மை யாக உட்கார வேண்டியவன் என்பதை மரணத்தறுவாயில் என்னிடம் கூறிவிட்டான். அதனால்தான் அதைப்பற்றிப் பேச நாங்களும் முற்பட்டோம். அரையன் ராஜராஜன் தைப் பற்றிப் பல ஓலைகள் எனக்கும் தஞ்சைத் துறவி மாருக்கும் எழுதியிருக்கிறான். இப்பொழுது அவன் ங்கைக் கரையை நாடிச் செல்கிறானென்பது உண்மையே யானாலும் அவன் மனம் இந்த இடத்தைத்தான் நாடி நிற்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. சோழ மண்டலத்தின் கதி உன் கரங்களில் இருக்கிறது மகனே! ஆகவே, போதி சத்துவரின் முன்பாகப் பிரமாணம் செய்" என்று புத்தர் பிரான் சிலையைத் தன் வலக்கரத்தால் சுட்டிக் காட்டினார்.

சிலைக்கருகில் கரிகாலன் சென்று அந்தச் சிலையின் பாதத்திலிருந்த மலரில் ஒன்றை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு, சூடாமணி விஹாரத் தலைவர் கூறியபடி பிரமாண வார்த்தைகளை உச்சரித்தான். பிறகு தாயை நோக்கித் திரும்பி, "தாயே! உன்மீது ஆணை. நான் யாரென்பதை உலகத்துக்கு அறிவிப்பதில்லை. இப்பொழுது சொல்; நான் யார்?" என்று கேட்டான்

அவன் சிலையருகில் சென்றபோது எழுந்திருந்த மணி மேகலை, மீண்டும் பீடத்தில் உட்கார்ந்து கொண்டு, மகளை அருகில் உட்காரும்படி சைகை செய்தாள். தன் விருப்பப்படி உட்கார்ந்த மகளை நோக்கி, "மகளே! இராஜேந்திரன் சந்தேகித்தபடி உனக்கிருப்பது இராஜ ராஜ சோழதேவரின் கண்கள்! இதே கண்களைத்தான் உன் தந்தையும் பெற்றிருந்தார். அவர்தான் இராஜராஜ சோழதேவரின் மூத்த மகன்! இன்று இராஜேந்திர சோழ தேவர் அமர்ந்திருக்கும் பீடத்தில் அமர்ந்து இந்தப் பேரரசை ஆளவேண்டியவர் உன் தந்தை. அவர் இல்லாததால் இப்பொழுது இராஜேந்திர சோழதேவன் பீடத்தில் அமரவேண்டியவன் நீ. இந்த உண்மையைச் சோழநாட்டு விரோதிகள் சிலர் அறிவார்கள். சேரனுக்கு இந்த உண்மை எப்படியோ தெரிந்திருக்கிறது. ஆனால், அதை மக்களிடம் எடுத்துச் சொல்ல சரியான அத்தாட்சி கள் அவர்களிடம் சிக்கவில்லை. இருப்பினும் உன்னைக் காரணமாக வைத்துச் சோழநாட்டை இரண்டு பிளவாக்கிப் போர் நெருப்பைச் சதி செய்து வருகின்றார். உண்மையாகப் பட்டத்துக்கு வர வேண்டிய நீ இருப்பதை மக்கள் அறிந்தால் சோழ மண்டலம் இரண்டுபட்டுவிடும். மகளே! இதைத்தான் உன் தந்தை தவிர்க்க முயன்றார். நீ அறாதையல்லடா மகளே! இராஜராஜ சோழ சக்கரவர்த்தியின் மூத்த பிள்ளையின் மகன். இந்தச் சோழ மண்டலத்தின் உண்மைச் சக்கரவர்த்தி!" என்று மணிமேகலை தடுமாறிய குரலில், நிறுத்திய அந்தக் கதையை மெள்ள மெள்ளச் சொல்லத் தொடங்கினாள்.

மகேந்திர தேவனின் இயக்கத்தின் கதை அது. நாட்டு நன்மைக்காகத் தன் ஜீவியத்தையே மறைத்த ஒரு வீரனின் விசித்திரக் கதை. அதை மெள்ள மெள்ள விரிக்கத் தொடங்கிய தன் தாயை, இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் கரிகாலன். கதையை அவள் தொடர்ந்தாள்.

57. அவள் கதை

"மகளே கேள்! சோழ ராஜகுலவம்சத்தின் இந்த அற்புதக் கதையைக் கேள். விரத்தாலும் நியாகத்தாலும் வளர்ந்த இந்தப் பேரரசின் சில தலைமுறைகளைப் பற்றிய கதையைச் சொல்லுகிறேன். கலைமாகக் கேள். சிறுவாலய சோழதேவரும் ஆதித்தரும் ஸ்தாபித்த சோழ ராஜ்யத்தைப் பாய் வேய்ந்து, சமுத்திரமீது படையெடுத்த மாதேவர் பெரிதும் விஸ்தரித்தார். ஆனால், அவருக்குப் பிற்ந்த ராஜாதித்தனும் அவனுக்குப் பின்னால் வந்தவர் களும் ஆற்றல் படைத்தவர்களாயில்லாமையால் சோழர் ஆ ராஜ்ய எல்லை முப்பத்தாறு ஆண்டுகள் மங்கிக் டந்தது. அதன் நிலையைத் தூண்டிவிட்டப் பிறந்தார் ராஜராஜ சோழதேவர். அவர் மூடி சூடிய பின்பு சோழர் பேரரசு பெரிதும் விரிந்தது. புலிக்கொடி தட்சிண பாரதத்தில் எங்கும் பறந்தது. ஆனால், அவர் மூடிசூடு முன்பாகவே நடந்தது ஒரு கதை. வாலிப வயதிலேயே பிறநாடு செல்ல ஆவல் படைத்த இராஜராஜ சோழ தேவர் பலமுறை சமுத்திர நாட்டுக்குச் சென்றார். அப்படி ஒரு முறை சென்றபோது சமமன்னர் பரம்பரையின் தூரத்தினையொன்றில் பிறந்த மானவிஜயென்ற பேரழகி யைக் கண்டு மையல் கொண்டார். பராந்தகர் காலத்துக் கும் பின்பே சோழர்களுடன் பெரும் பகை கொண்ட சமுத்திர மன்னர் குலத்தார். இந்தத் திருமணத்துக்கு ஒப்புக் கொள்ளாது போகவே, ரகசியமாகவே இருவரும் மணம் புரிந்து கொண்டனர். சில நாள் ரகசியமாக அந்தப் பெண்மணியுடன் சமுத்திரத்திலேயே காலம் கழித்து வந்த இராஜராஜ சோழதேவருக்கு, சோழ நாட்டிலிருந்து அவசர அழைப்பு வரவே, அவர் மானவிஜயை அந்த மரக்கத் தீவில் விட்டுத் திரும்பினார். இங்கோ அவருக்கு காரியங்கள் காத்திருந்தது. மூடிசூடியபின் அராசாங்க அலுவல்கள் காரணமாக அவரை வளைத்துக் கொண்டன.

அவற்றை ஒரு விதமாகத் தீர்த்துக் கட்டிய பின்பு, தமது மனைவியை அழைத்துவர ரகசியமாக ஏழுபேரை இராஜ ராஜர். அவள் தாம் மறைத்து வைத்த இடத்திலிருந்து மறைத்துவிட்டதை அறிந்தார். சில மன்னர் ஒவ்வொரு வீட்டாரங்களிலிருந்து. அவள் இறந்துவிட்டதாகவும் தெரிய வந்தது. மனம் உடைந்து நாடு திரும்பி வந்த இராஜராஜருக்கு, மந்திரிமார்கள் புதியதொரு விவாகத்தையும் செய்து வைத்தார்கள். புது மகிஷிக்கு இராஜேந்திர தேவர் பிறந்தார். இராஜேந்திர தேவருக்கு வாலிப வயதாகி, அவருக்கு இளவரசுப் பட்டம் சூட்ட இராஜ ராஜர் முனைகையில், அவருடைய முதல் மனைவி உயிர்தழுப்பதாகவும் அவளுக்கொரு குழந்தையும் இருப்பதாகவும், பட்டம் அதற்கே உரியதென்றும், சிலர் மன்னன் செவியறுப்பினர். சோழப் பேரரசை இராஜராஜர் சுகங்கினார். சோழ நாட்டைக் கேவலப் படுத்தவும், சமயம் பார்த்துத் தன் வசப்படுத்தவும், காப்பமாயிருந்த மாலவரை முழுவதுமாக மறைத்து வைத்து, தீவரசுப் பட்ட சமயத்தில் தகராறைக் கிளப்பி இராஜேந்திரனை அரசனும் முன் மந்திரியும் உணர்த்து கலக்கினர். இளவரசுப் பட்டம் கட்ட வேண்டிய இராஜேந்திரனை என்ன செய்வதென்றும் திகைத்தார் இராஜராஜர். இப்படித் திகைத்துக் கொண்டிருந்த ஒரு நாளில் இராஜராஜருக்கு ஒரு முத்தான ரகசிய ஓலை யொன்றைக் கொண்டு வந்தான். அதைப் படித்த இராஜ ராஜர் நடந்தை ரகசியமாக யாருக்கும் சொல்லாமல் தனியே மாதகரை நோக்கிச் சென்றார். அங்கே ஒரு சிறு குடிசையில் இராஜராஜருடைய முதற் செல்வனுடன் மாலவர் நின்றிருந்தாள். கிழிந்த உடையில் நிருட்டுத் தனமாக சமுத்துப் படகோட்டிகளின் உதவியால் சோழ நாடு வந்த அந்த அரசகுமாரனை கொலத்தைக் கண்ட இராஜராஜர் கலங்கிப் விட்டார். 'மாலவர்! நீ இறந்து விட்டாயென்றல்லவா நினைத்தேன்' என்று கதறினார். யோகமே உருவான அவளை நெற்றினாள். 'உங்கள்

முன்னே அபகரிக்க சமு ராஜகுலத்தார் செய்த சூழ்ச்சி கர்ப்பமாயிருந்த என்னைத் திறமையிலடைத்து ந்தார்கள். இந்தச் செல்வனை பிறந்து வளர்த்ததும் சோழ நாட்டு அரியணைக்கு உரிமை கொண்டாடினார்கள். தானும் இவனும் மறையிலிருந்த சில நண்பர்கள் உதவியால் தப்பி இங்கு வந்தோம். இதோ உங்கள் செல்வன்' என்று வாலிப வயதுடன் பக்கத்தில் நின்றிருந்த மைந்தனை ராஜராஜர் கையில் பிடித்துக் கொடுத்தாள் மாலவி!'' என்று கதையைச் சொல்லிய பின்பே, ஆயாசத்தால் பெருமூச்செறிந்தாள்.

அந்தக் கதையைக் கேட்கக் கேட்க ஆச்சரியத்தில் ழ்ந்திய காளன், ''பிறகு?'' என்று கதையைச் சொல்லத் தூண்டி மேலும் முடுக்கினான்.

கதையைத் தொடர்ந்தாள் அவள்: ''பிறகுதான் ஏற்ற நிலையில் கதை ஆரம்பமாகிறது. மகனே! எந்தக் காரணத்தைக் கொண்டும் சோழப் பேரரசின் விஷயத்தில் மாத் தலையிடக் கூடாது என்று மாலவர் கூறிவிட்டாள். ராஜ ராஜரும் இறந்துவிட்டதால் புத்த பிக்ஷுக் னைக் கொண்டு நாடெங்கும் வதந்தியையும் இளம் விட்டாள். இராஜேந்திர இளவரசுப் பட்டம் கட்டிக் கொண்டதும் இடையூறு கொள்ளிட்டாள். தான் கவனித்துக் கூறிய மாலவரின் நற்குணங்களை புகழும் சம்மந்தித்தாள். இந்த சந்தர்ப்பம் சோழ ராஜருக்கு இடையூறாக இருந்தது. ஆனால் சோழப் போரின் தலைவ முன்னிட்டு சுகத்து இளவரசர், மாலவி உலகத்தின் கவனத்திலிருந்து மறைந்து வாழ்ந் தான். அவன் செல்வன், அவர் கண் முன் தன்னை வளர்த்த தேவர். சோழர்கள் மேலும் தமது பிரதாபத்தை சேர்த்தார். மதிக்கும் பகை தமது பிரதாபத்தை வாடியும் சொல்லக்கூடாதென்று அவரிடமும் பிரமாணம் வாங்கிக் கொண்டு மாலவரும் சில வருஷங்களில் உலகை விட்டு மறைந்தாள் பிறகுதான் மாலவரின் செல்லனை

நான் மனத்தேன். நான் பரம ஏழை. என்னை எப்படி அவ்வளவு பெரிய வீரர் மணக்க முற்பட்டாரென்று எனக்கே ஆச்சரியமாயிருந்தது. மணந்த நாள்களிலும் இளைப்பினாலும் வாழ்ந்தோம். அந்த இன்ப இளைப்பிலே நீ பிறந்தாய் கரிகாலா. கரிகாலன் என்ற பெயரை அவரே உனக்கு வைத்தார். பிறகு எந்த ஈழத்தி விருந்து வந்தாரோ அந்த ஈழத்துப் போரிலேயே உன் தந்தை மாண்டார்" என்று பெரிய மணிமேகலை உணர்ச்சிப் பெருக்கால், இரண்டு துளிக் கண்ணீரை விட்டுச் சிறிது கதையை நிறுத்தினாள். சற்று நிதானித்து விட்டு மறுபடியும் சொன்னாள்: "ஈழத்துப் போர்ப் பாசறையில் மரணப் படுக்கையிலிருந்த அவர், அப்பொழுது உதவிப் படைத் தலைவனாயிருந்த அரையன் ராஜராஜனையும், போரில் காயமுற்றோர்க்கு உதவப் போயிருந்த இரண்டு புத்த பிக்ஷுக்களையும் தம்மிடம் வரவழைத்தார். வர வழைத்துத் தம் வாழ்க்கை வரலாற்றைக் கூறினார். எந்தக் காரணத்தை முன்னிட்டும் அதை யாருக்கும் தெரிவிக்கக்கூடாதென்று பிரமாணமும் வாங்கிக் கொண்டார். அந்தப் பிரமாணம் வாங்கும் சமயத்தில் படையிலிருந்த பிரதாபருத்திரனும் உள்ளே நுழைந்தான். ஆகவே அவனும் பிரமாணம் செய்ய வேண்டியதாயிற்று. இப்படிப் பிரமாணம் செய்தபின் எப்படியாவது நன் மகனைப் பெரிய வீரனாக வளர்க்கும் படி அரையன் ராஜராஜனிடம் வேண்டிக்கொண்டு, நான் உன்னுடன் சூடாமணி விஹாரத்துக்கு அனுப்பி வைத்தேனே. அந்தப் பச்சைக்கல் மோதிரத்தையும் கொடுத்து விட்டு, இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடை பெற்றுக் கொண்டார். அந்தப் பச்சைக்கல் மோதிரம் இராஜராஜர் மானவநிக்குக் கொடுத்து, மானவதி தேவி உன் தந்தைக்கு அளித்தது. உன் தந்தை அரசகுல அடையாளமாக உனக்கு வைத்துச் சென்ற செல்வம் அது."

மணிமேகலை மீண்டும் கதையை நிறுத்தினாள். துக்கத்தினால் ஏற்பட்ட பெருமூச்சொன்றும் அவளிட

திருந்து வெளிவந்தது. அதுவரை எந்தச் சந்தர்ப்பத்தி லும் கண்ணீரை விடாத கரிகாலன் கண்களிலும் நீர் துளித்தது. அவன் கண்களைத் துடைத்துவிட்டுச் சொன் னாள் அவள்: "மகனே! அவர் மரணத்திற்குச் சில வருஷ முன்புதான் என்னிடம் உண்மையைச் சொன்னார். உனக்குரிய இடத்தில் இராஜேந்திரன் என் ஆண் மகனே! பெரும் நியாயத்தால்தான் போரகன் மண்ணானையால் கேட்டேன். வேண்டும்" என்று தடுக்கப்படுகின்றன. அரசாள்வதைவிடத் நியாயம் வேறு. நான் ஆண்டாலென்ன? என் தம்பி ஆண்டா லென்ன? சோழமண்டல விஸ்தரிப்புத்தான் முக்கியம். இதை மறக்காதே!' என்று பதில் சொன்னார் உன் தந்தை. அவர் பேசும் உறுதியை நீ கண்டதில்லையடா என் கண்ணே! ஒருமுறை அவர் சொல்வதைக் கேட்டால், பாரும் அவரை மறுத்துப் பேச முடியாது. எல்லாம் ஜாதுதோரணைதான். அவர் உறுதியை நானும் கடைப் பிடித்தேன். உன்னை யாரென்று சொல்வதில்லையென்று நீ பிறந்த உடனேயே நான் செய்து கொடுத்த பிரமாணத்தை இன்றளவும் காப்பாற்றிவிட்டேன். நீ என்னிடமிருந்தால் உண்மை வெளிப்பட்டுவிடுமோ என்று பயந்து, ஐந்து வயதில் அரையன் ராஜராஜன் மூலம் உன்னைச் சூடாமணி விஹாரத்துக்கு அனுப்பினேன். ஆனால் வைக்கோலால் மூடி நெருப்பை அணைக்க முடியுமா? நீ இருப்பது மெள்ள எதிரிகளுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. சேரனும் பாண்டியனும் ஏதோ சதிசெய்வதாகச் சூடாமணி விஹாரத் தலைவர் அறிவிக்கிறார் மகனே! வேங்கியில் நீ கையாண்ட தந்திரம், சக்கரக் கோட்டத்திலும் இதர இடங்களிலும் நீ காட்டியிருக்கும் இணையற்ற வீரம், உன் புகழை உச்ச நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. இனி..." என்று மேலே பேசமுடியாத துக்கத்தால் அழுதாள் மணிமேகலை.

அடுத்த சிநாடி அவன் உடலே நடுங்கும்படியான வார்த்தைகளைச் சொன்னார் சூடாமணி விஹாரத்

தலைவர். "இனி இவன் இந்நாட்டிலிருக்கக் கூடாது' என்ற கடும் சொற்களை மிக நிதானமாக உதிர்த்தார்.

கரிகாலன் தன் கோப விழிகளை அவர்மீது நாட்டி, "தந்தையே! என் நாட்டில் நான் இருக்கக் கூடாதா?" என்று உளர்ச்சி மிகுதியால் சிரித்தான்.

சூடாமணி விஹாரத் தலைவரின் பரிதாப விழிகள் அவனையும் மணிமேகலையையும் மாறி மாறிப் பார்த்தன. பிறகு கருணை பொங்கி வழியும் குரலில் அவர் சொன்னார்: "கரிகாலா! உன் பிறப்பு மர்மத்தை இனி அதிக நாள் மறைக்க முடியாது. உண்மை வெளிப் பட்டாலோ உன்நாட்டுச் சண்டை ஏற்படும். பிறகு சோழசாம்ராஜ்யத்தில் நாசம். இவற்றுக்காகவா உன் தந்தை மகேந்திரவர்மன் முடியுரிமை துறந்தான்? இதற்கா உன் தந்தையின் தாய், அந்தத் தியாகி, வாழ்நாளை அஞ்ஞாத வாசத்தில் கழித்தான்? நன்றாகச் சிந்தித்துப் பார். இரு தலைமுறைகளின் தியாகத்தைக் கரிகாலன் கெடுத்துச் சோழப் பேரரசை நாசம் செய்தான் என்ற அபகீர்த்தி உனக்கு வேண்டுமா என்பதை யோசித்துப் பார்."

சூடாமணி விஹாரத் தலைவரின் வார்த்தைகளுக்கு நீண்ட நேரம் பதில் சொல்லாத கரிகாலன், தன் தாயிடம் திரும்பி எழுந்து. நீண்ட நேரம் புத்தர் பிரானை நோக்கித் தியானத்திலேயே நின்றான். பிறகு மணிமேகலையைப் பார்த்து, "அம்மா! உன் எண்ணமும் இதுதானா?" என்று கேட்டான்.

"ஆம் மகனே! வேறு வழியில்லை" என்றாள் அவள், நடுங்கிய குரலில்.

கரிகாலனின் கண்கள் நிதானமாகச் சூடாமணி விஹாரத் தலைவரை ஆராய்ந்தன. கடைசியாக வந்த வார்த்தைகளில் உறுதி நிரம்பி நின்றது. "ஆகட்டும் தந்தையே! உங்கள் விருப்பப்படி பிறந்த மண்ணை

விட்டுப் போகிறேன். ஆனால் இரண்டு நிபந்தனைகள்"

என்றான் கரிகாலன்.

"என்ன நிபந்தனைகள் மகனே?" என்று கேட்டார், சூடாமணி விஹாரத் தலைவர்.

"ஒன்று: என் தாய் என்னுடன் வந்துவிடவேண்டும்."

"சரி."

"இன்னொன்று, நான் நிரஞ்சனாதேவிக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும்."

"என்ன வாக்குறுதி அது கரிகாலா?"

"இரண்டு வாக்குறுதிகள் கொடுத்தேன் வேங்கி நாட்டு மன்ன மகளுக்கு. ஒன்று, அவள் தம்பியை மீட்டுத் தருகிறேன் என்று சொன்னேன். மீட்டேன்! அரையன் ராஜராஜனுடைய மிகச்சிறந்த சேனாதலைவர்களில் இப்பொழுது அவனும் ஒருவன். வேங்கி நாட்டை ராஜராஜ நரேந்திரனிடம் ஒப்படைக்கிறேன் என்று கூறியிருக்கிறேன். அது இன்னமும் நடக்கவில்லை."

"எப்பொழுது நடக்கும்?"

"இன்னும் இரண்டு மாதங்களில். என் திட்டப்படி எல்லாம் நடந்தால், அரையன் ராஜராஜன் இந்த மாதமே கங்கைக் கரையில் புலிக்கொடியை நாட்டுவார்; அடுத்த மாத ஆரம்பத்தில் அவர் கோதாவரி நதி நீரைத் தொட்டு வருவார். அங்கு இராஜேந்திர சோழதேவர் அவரைச் சந்திக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன்."

"எதற்காக இந்த ஏற்பாடு?"

"ஜெயசிம்ம சாளுக்கியனை முறியடிக்க, இராஜேந்திர சோழதேவர் படையின் ஒரு பகுதியுடன் கோதாவரி நதி நீரில் அரையன் ராஜராஜனைச் சந்திப்பார். அவர் புறப்பட்ட சில நாட்களுக்கெல்லாம், நான் இங்கிருந்து படையின் மற்றொரு பிரிவுடன் புறப்பட்டுக் கிருஷ்ணா நதிதீரம் செல்வேன்."

[illegible] சூடாமணி விஹாரத் தலைவரின் கனவில் போதிமரத் தான்டவமாடியது. "பரிந்து கரிகாலா, பரிந்து!" என்று, அம்மரத்தடி வெண்மையும் அதனை மணிமேகலை சொன்ன சொல் கலகலப்பும் மறந்து ஆனந்தத்துடன் கூறினார்.

பீடத்திலிருந்து மணிமேகலை எழுந்து, ஆச்சரியத்துடன் நோக்கி, "எது பரிந்தது விஹாரம்?" என்று வினவினாள்.

"மகளே! நீ போகியும் செய்கையும் மகா விஹாரத்தில் தினைத்தனையளவேனும் மகனைப் பெற்றிருக்கிறாய். அவன் சுத்தம் பரிபவித்தையும் உனக்கு இராஜேந்திர சோழதேவன், கம்மையிலிருந்து திரும்பி வரும் தன் தளபதியைச் சந்திக்கக் கோதாவரிக் கரைக்குச் செல்லார். அவர்களை எதிர்கொண்டு போவதையில் உன் மகன் ரத்ன பாடையுடன் இருக்கிறானாதி கரைக்குச் செல்வான். வேங்கி நாடு கோதாவரிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடையிலிருக்கிறதல்லவா?" என்று குறிப்பிட்டு மணிமேகலையை உற்றுப் பார்த்தார் சூடாமணி விஹாரத் தலைவர்.

மணிமேகலையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது. "பரிந்தது விஹாரம்! இராஜேந்திர சோழதேவ பாடைக்கும் என் மகன் பாடைக்கும் இடையே வேங்கி நாடு சிக்கிக்கொள்ளும். ஆகவே இரு நாட்டுக்கும் சாளுக்கியர் களிடமிருந்து விடுதலை" என்றாள் மணிமேகலை. பெருமையும் ஆனந்தமும் கலந்த பார்வையைத் தன் மகன் மீது நாட்டிக் கொண்டே.

தன்னைப்பற்றித் தாயும் சூடாமணி விஹாரத் தலைவரும் பாடிய புகழ்ச்சிப் பாடல்களை விரும்பாத கரிகாலன், "அது இருக்கட்டும் தந்தையே! இரண்டு தீபத்தினைகளும் தங்களுக்குச் சம்மதந்தானே?" என்று விசாரித்தான்.

சூடாமணி விஹாரத் தலைவர் பெருமையால் ன்றாக விகசித்த தமது கண்களைக் கரிகாலனை நோக்கி

"இரண்டும் சம்மதந்தான் கரிகாலா. நாளை போருக்குப் பிறகே நாட்டைவிட்டுச் செல்ல தன் இராஜேந்திரன் கடல் கடந்து கடாரத்தின் மீதும் [illegible] திட்டமிட்டிருக்கிறான். அந்தப் படை [illegible] தளபதி தலைமை ஏற்றுச் செல்கிறேன். சோழ [illegible] கடல் கடந்தும் விரிவடையும் [illegible] தலைவர் [illegible] உன் தந்தை [illegible] தளபதி [illegible] உன் பிரசாரம் சிறந்தும் [illegible]" என்று சூடாமணி விஹாரத் தலைவர், மணிமேகலையைப் பார்க்கத் திரும்பி, "மணிமேகலை! உன் மனம் வைத்து பாக்கியம் செய்தது. [illegible] இவ்வாறு தியாகத்தைச் செய்யும் [illegible] பெற்றால் அரசர்கள் உலகத்தில் பல [illegible] இயல்பு. சரித்திரத்தில் இடம் பெறுவர். பிரகாசிக்கும் மன்னர்கள் பலருண்டு. நாட்டுக்குச் சேவை செய்து மக்கள் கண்ணில் படாது மறைந்து போகும் மகான்கள் எவர்தாமுண்டு? இராஜேந்திரனைப் போல் உன் மகன் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால் புத்தர் பிரான் அருளுக்கு தன் பாத்திரமாவதில் அந்த உலகத்தில் பூசப் போட்டிகள் எதற்கு?" என்று வாழ்த்தினார்.

மணிமேகலையும் சரிகாலனும் ஒருவரையொருவர் ந்து நேரம் பார்த்துக் கொண்டனர். அவ்விருவரும் ஒருவரையொருவர் விழுங்கி விடுவதைப் போல் பார்த்துக் கொண்டு நிற்பதைச் சூடாமணி விஹாரத் தலைவர் வனித்துவிட்டு, மெல்ல அருகிலுள்ள தோட்டத்தை நோக்கினார். காயும் தயாரும் போல் அருகிலுள்ள அரசு விழுதுகளை நோக்கினார்கள். புத்தர் பிரானை மந்தகாசம் அவர்கள் உள்ளங்களுக்குச் சாந்தியளித்தது. அவர் அருகேயிருந்த நீரும் அவர்கள் இயல்பான வாழ்வுக்கு அமர ஒளியிட்டுச் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

68. இளைப் பொழுதில் மறைந்த இடைக்காலம்

நிலவரைக் கூடத்தின் பேறி சத்துவருக்கு முன்பாக முதன் முதலாகத் தன் காலை இன்னாரென்று அறிந்த தால் உண்டான மகிழ்ச்சி வெள்ளத்தின் காரணமாக, அடுத்த ஒன்றரை மாத காலம் ஓடியதே தெரியவில்லை கரிகாலனுக்கு. கரிகாலன் மனம் எத்தனை மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்ததோ அத்தனை துன்பத்தில் ஆழ்ந்து கிடந்தது, சோழ மண்டலாதிபதியான இராஜேந்திரன் மனம். கரிகாலன் இன்னாரென்று அறியச் சக்கரவர்த்தி செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின. அரண்மனாஜனின் கரிகாலனைப்பற்றி எழுதிய ஓலைகளிலெல்லாம் ராஜ முத்திரையைப் பொறித்ததாலும், தஞ்சைத் துறவியார் மணிமேகலையைத் தனிமையில் கூத்தில் சந்தித்துப் பேசியதாலும், அவனுக்கும் கரிகாலனுக்கும் தொடர்பு இருக்கிறதென்பதை ஊகித்துக்கொண்ட இராஜேந்திரன், அந்த மர்மத்தை உடைக்க மணிமேகலையைக் காஞ்சி மாநகரத்துக்கு வரவழைத்தது பெரும் வியர்த்தமாகப் போய்விட்டது. முத்தரையர் மண்டபத்தில் கரிகாலனைத் தனக்குத் தெரியாதென்று ஒரேயடியாகச் சாதித்துவிட்ட மணிமேகலை, மகளைச் சந்தித்த இரண்டாவது நாளே கூறாமல் போய்விட்டதால் அவளை உபயோகித்து எந்தவித ரகசியத்தையும் தெரிந்து கொள்ள ஏதுமில்லாமல் போய்விட்டது சோழப் பேரரசனுக்கு.

அடுத்தபடியாகத் தஞ்சைத் துறவியாரிடமிருந்து உண்மையைக் கறக்கலாமென்று இராஜேந்திரன் செய்த முயற்சியும் வீணாகவே, உண்மை அடியோடு தெரியாமல் அவன் பெரும் குழப்பத்துக்கு உள்ளானான். சோழ ராஜ்யத்தின் ஏதோ ஒரு இளைக்குத் தன்னால், பெரும் அதி

முக்கியமானதென்பதை இராஜேந்திரன் உணர்ந்து கொண்டானேயொழிய, அது என்ன அதி முக்கியம், அந்த அதியை இழைத்தவர் யார் என்ற விவரங்கள் அறியாமல் அதில் ஆழ்ந்தான் இராஜேந்திரன். உண்மை அறியத் தன்னுடைய கரிகாலனிடமிருந்து அறிய, அவனைத் தன்னுடனே வைத்துக்கொண்டு, பல கோணங்களில் அவன் வாழ்வை ஆராய்ந்து எண்ணற்ற கேள்விகளையும் கேட்டான் சோழ பேரரசன். கரிகாலனுடைய பேச்சுத் திறமையை மட்டுமே முடிந்ததே தவிர, அவன் வாழ்வு ரகசியத்தை அறிய முடியவில்லை.

இராஜேந்திரன் எதைக் கேட்டாலும் ஆச்சரியமாகவே படர்ந்து நின்றது, கரிகாலன் முகத்தில். மன்னர் தம் தனியறையில் அவனைத் தன்னந்தனியே வரவழைத்து, "கரிகாலா! நீ சோழ ராஜ வம்சத்தைச் சேர்ந்தவனா? என்பதை நீ அறிந்திருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. உனது பிறப்பைப் பற்றி உனக்கு எதுவுமே தெரியாதா?" என்று வினவியபோது, "மகாராஜா! ஆனால் பெரிய ராஜ வம்சங்களில் இளைகள் பல உண்டு. அவற்றுக்கு உபினைசஞ்சி உண்டு. அதில் எந்தக் கினையோ நான்? எந்தக் கினைவாதாவென்று? மன்னரான தங்கள் மக்களுக்குச் செய்யும் சேவையில், சோழப் பேரரசை விஸ்தரிக்கும் பணியில் நானும் ஈடுபட்டிருக்கிறேன். இதுவே எனக்குச் சாந்தியளிக்கக் கூடியதல்லவா? மற்றதைப் பற்றி நாம் கவலைப்படுவானேன்? ஆனால், ஒரு கவலை மட்டும் எனக்குண்டு" என்றான்.

"எதைப் பற்றிக் கவலை?"

"வேங்கியைப் பற்றி"

"வேங்கியைப்பற்றி என்ன கரிகாலா?" என்று வினவினான் இராஜேந்திரன்.

"வேங்கி நாட்டில் நான்கிருக்கையில் நிரஞ்சனா தேவிக்கு ஒரு வாக்குறுதி அளித்தேன். அதுவும் சோழ

நாட்டின் நன்மையை முன்னிட்டு...'' என்று கரிகாலன் பேச்சைத்து வக்கினான்.

''என்ன வாக்குறுதி?'' என்று சோழ மன்னனிடம் விசாரித்தான்.

''தாங்கள் சகோதரி குந்தவையின் மகன் ராஜராஜ நரேந்திரனை வீரனாக்குவதாக வாக்களித்தேன். ஜெயசிம்ம சாளுக்கியன் ராஜராஜ நரேந்திரனைப் பலியாக்கி, வேங்கியைத் தன் கைவசப்படுத்தி, தன் மருமகன் விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனை மன்னனாக்கத் திட்டமிட்டான். அதற்கு நானே இடம் கொடுத்தேன். வேங்கியிலிருந்து விமலாதித்தன் மகனையும் ராஜராஜ நரேந்திரனையும் அப்புறப்படுத்தினேன்; எதற்கென்று மன்னருக்குத் தெரிந்திருக்கும்.''

''தெரியாது, சொல்.''

''தங்கள் கொடி புலிக்கொடி அல்லவா?''

''ஆம்.''

''புலி பதுங்கித்தானே பாயும்?''

''ஆம்.''

''பதுங்கட்டும் என்றுதான் நிராஜனாதேவியைத் தங்களிடமும், ராஜராஜ நரேந்திரனை அரையன் ராஜராஜனிடமும் ஒப்படைத்தேன். இப்பொழுது ராஜராஜ நரேந்திரன் பயங்கொள்ளியல்ல! பல போர்களைக் கண்ட மாவீரன். அவன் கைகள் வஜ்ரமிழுத்த கைகளல்ல, வஜ்ரங்கள் கரங்கள். தங்கள் மகன் அம்மங்கா தேவிக்குப் பொருத்தமான கணவன்.''

இதைக் கேட்ட இராஜேந்திர சோழதேவன் திர்க்க யோசனையில் இறங்கினான். ஆனால், தொடர்ந்த பெரிய கரிகாலன் ''யோசிப்பதற்கு எதுவும் இல்லை மன்னவா! யோசிக்க வேண்டியதையெல்லாம் நானே யோசித்து விட்டேன். முடிவு செய்யவேண்டியதை

நானும் நானே முடிவு செய்துவிட்டேன். என் நிட்டங் குத்தத் தங்கள் ஆதரவு இருக்கும் என்ற நம்பிக்கையில் பதுங்கியாகி விட்டது. இனிப் பாயும் நாள் வந்து விட்டது. தங்களுக்கு இன்னும் இரண்டொரு நாளைக்குள் அரையன் ராஜராஜனிடமிருந்து ஓலை வரும். தாங்கள் சோதனிக் கரையில் அவரைச் சந்திக்க நேரிடும். நான், தங்கள் மனம்பிய இரண்டாம் நாள் புறப்பட்டுக் துங்கா நதியை ஒரு வாரத்தில் அடைவேன். தாங்கள் சோதனியிலிருந்து தங்கள் மருமகனுடன் திரும்புவதற் குள் வேங்கி நாட்டு அரியணையைக் காலியாக்கி வைத் திருப்பேன். தங்கள் கையாலேயே தங்கள் மருமகனுக்கு முடிசூட்டலாம்'' என்று விளக்கினான்.

சோழப் பேரரசனின் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந் தன. இத்தனை முன் யோசனையும் போர்த்திட்டம் வகுத்தும் இந்நாறிவும், தன் தந்தைக்கும் தனக்கும் மட்டுமே உண்டென்று அதுவரை நினைத்துக் கொண் டிருந்த இராஜேந்திரனுக்கு, உயர் பேர் தெரியாத அந்த வாலிபன் பேச்சும் போக்கும் பெரும் விசித்திரமா யிருந்தது. 'இவன் என் தந்தையின் நெருங்கிய உறவினன்! சந்தேகமில்லை' என்று பலமுறை தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். ஆனால் என்ன உறவு என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் தவித்தான்.

இந்தச் சம்பாஷணை நடந்த தினத்துக்கு அடுத்த சில நாட்கள். இராஜேந்திர தேவன் இது சம்பந்தமாக வந்தியத் தேவரைக் கலந்து பேசினான். கரிகாலனுக்குப் பெரிய விருந்துகள் வைத்தான். பட்டணப் பிரவேசத் தினத்தன்று போடத் திட்டமிட்டு, கரிகாலன் கண்களைக் கண்ட குழப்பத்தில் போடாமல் விட்டுப்போன செங்கதிர் மாலையை, மந்திரிப் பிரதானிகள் அறிய அவன் கழுத்தில் போட்டான். எந்த மாலையைப் பெறுவதற்காக இராஜேந்திரன் சோழ நாட்டின் பெரும் போரை நடத்தினானோ, அதே செங்கதிர் மாலையை மன்னன்

கரிகாலனுக்குப் பரிசாக அளிப்பதைப் பேரமைச்சர்கூட வியப்புக்கு உள்ளாகி, 'இவனுக்கும் அரசகுலத்துக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது' என்று நிர்மானித்தாரேயொழிய, அது என்ன சம்பந்தம் என்பதை அறிய இயலாதவராயினர்.

இந்தச் சம்பவங்கள் கரிகாலனுடன் ஒரே அரண்மனையில் இருந்த நிருஞ்சனாதேவிக்கும் பெரும் ஆச்சரியத்தை விளைவித்தாலும், அவள் கரிகாலனைச் சந்தித்த சமயங்களில் கூட அவனை ஏறெடுத்துப் பார்க்காமலேயே போய்க் கொண்டிருந்தான். தன் சகோதரனையும் தன்னையும் சோழப் பேரரசின் நன்மைக்காகக் கரிகாலன் நாட்டை விட்டுக் கடத்திவிட்டான் என்ற நினைப்பில், அவனுடன் நேர விரோதம் கொண்டிருந்த வேங்கிநாட்டு மன்னன் மகளுக்கு, அவனைப்பற்றி காஞ்சி மாநகரில் நடந்த கொண்டாட்டமெதுவும் பெரும் எரிச்சலையே தந்தது. முதன் முதலாக வேங்கித் தலைவரின் வசந்த மண்டபத்தில் சந்தித்த நாளன்று, அவன்மீது கொழுந்து விட்டெரிந்த காதல், அப்பொழுதும் எரிந்துகொண்டிருந்தாலும், அதைப் பொறாமையென்றும் சந்தேகத்தை விட்டு மூடி வைத்தான் அவள். ஆனால் சந்தேகம் பற்றித்தான் செய்தன. எரியும் விட்டில் அலைபாயும் விட்டில் பூச்சியைப் போல அவளுக்குள்ளே இயற்கையான முரண்பாடுகளால் தன் உடல் பல்கிரமானைக்கூடக் கவனியாமல், கோபாவேசத்தில் மூழ்கியிருந்தாள் நிருஞ்சனாதேவி.

அவள் மெல்ல மெல்ல வாடுவதைக் கண்ட வந்தியத் தேவர் மட்டும், காரணத்தை நன்றாக அறிந்திருந்தாலும், ஒன்றும் செய்ய சக்தியற்றவராயினர். எதையும் தொடும் முழுதில் அறிந்துகொள்ளக்கூடிய வந்தியத் தேவர், கரிகாலன்மீது அவளுக்கிருந்த அபாரமான காதலை அறிந்தே இருந்தார். கங்கைப் படையெடுப்புக்குச் சென்றிருந்த சோழர் எல்லையிலிருந்து படைகள் புறப்பட்டதாகவும், அவள் கரிகாலனுக்குத் திலகமிடத் தயங்கியதை அறிந்து ஒருவனிடம் காதல் பிறந்துவிட்டால், அவர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்று தமக்குத் தாமே சொல்லி வியந்து கொண்டிருந்தார். எனினும் வியந்தும் கரிகாலனுக்கும் நிருஞ்சனாதேவிக்குமிடையிலிருந்த பெரும் கலவரை இடிக்க முயன்றும், பலன் சிறிதும் ஏற்படாது போயிற்று! ஆனால் அந்தச் சுவர் ஒருநாள் கண்டிப்பாய் இடிவதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டிருந்த வந்தியத் தேவர், அந்த இடைக்கால மனவலை வேடிக்கையுடன் கவனித்துக் கொண்டிருந்தார். அந்த மனவலைத் தணிக்க வந்தவன் போல், அரையன் ராஜராஜனிடமிருந்து ஒரு தூதுவன் ஓலையுடன் வந்தான்.

ஓலையில் இரண்டே வரிகள் எழுதியிருந்தான் அரையன் ராஜராஜன். "மதுரபாலன் முறியடிக்கப்பட்டான். கங்கைக் கரையில் புலிக்கொடி நாட்டப்பட்டது. கங்கையின் புனித நீரை ஆயிரம் குடங்களில் எடுத்து வருகிறேன். மன்னர் பிரானை, கங்கை கொண்ட சோழ வேந்தனை, புனலிய நதியான கோதாவரி தீரத்தில் சந்திக்கிறேன்." இவ்வளவுதானிருந்தன ஓலையில்.

முத்தாணி மண்டபத்திலே, சித்திரசேனரும் மந்திரிகளும் நிறைந்திருந்த மாபெரும் சபையிலே, ஓலையைப் பேரமைச்சர் படித்தார். செய்தியின் மகிழ்ச்சி தந்த அதிர்ச்சியால் சற்று நேரம் சபையில் மௌனமே நிலவியது. பெரும் சாதனையைத் தந்த ஆண்டவனை நோக்குவதுபோல் உயரக் கண்களைத் தூக்கினான் சோழச் சக்கரவர்த்தி. அவன் வெற்றிக்கு ஆசி கூறுவது போல் ஆலய மணிகள் ஒலித்தன. சற்று நேரத்திற்கெல்லாம் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, காஞ்சி மாநகரத்திலே பேரிகைகள் பிரமாதமாகச் சப்தித்தன.

அடுத்த இரண்டு நாட்களில் படைகள் அணிவகுக்கவும், போர்முகங்களை முழங்கவும், வாத்தியங்கள் கொழிக்கவும் தன் படைத்தலைவனைச் சந்திக்கக் கோதாவரி தீரத்துக்கும் படையோடன் திராஜேந்திர சோழதேவன். அதற்கடுத்த இரண்டு நாட்களில், மற்றொரு படைப் பிரிவுடன் வேங்கியை நோக்கிச் சென்ற கரிகாலன், தன்னுடன் திரிஞ்சனாதேவியையும் அழைத்துச் சென்றான். முன்னர் திரிஞ்சனாதேவி புறப்பட மறுத்தாள். ஆனால், அந்தப் புரத்தில் அரச ஆணைப்படி அவளைச் சந்தித்த கரிகாலன், "தேவி! புறப்படுவது தங்களிஷ்டமில்லை; ஆனால், தோழப் பெரிதா? ஆனை, நாட்டின் மிகப் பரிதியிற்ற சித்திரக்கட்டத்தில் நாம் நிற்கிறோம். புறப்படுங்கள்" என்று கட்டளையிட்டான்.

வேங்கி வெற்றிகரமாகப் புறப்பட்ட திரிஞ்சனாதேவிக்கு நான்காம் நாள், படைகள் சென்றும் நகரைக் கலைக்க கலைக்க, கரிகாலன் எண்ணம் எனவே என்பது மெல்ல மெல்ல வெளிக்கத் தொடங்கியது. அவனுக்கு மட்டுமல்ல, ஒற்றர்களை சாளுக்கியருக்கும், செய்தறிவித்தல் விஜயாதித்தருக்கும் கூட நன்றாக வளகெட்டவே, கரிகாலன் எதிர்பார்த்தபடி வேங்கி முழுமையாக நடைபெறவில்லை.

"சோழர் படைகளைக் கண்டதும், விஷ்ணுவர்த்தன ஜயாதித்தன் ஓடிவிட்டான்" என்று சரித்திரமே சொல்லுகிறது. பெரும் போர்களைக் கண்டவனும் மிகச் சிறந்த சேனையமைப்பு ஒழுங்கும் சாளுக்கிய விராஜேந்திரன் படைகளுக்கும், கரிகாலன் படைகளுக்கு இடையே தன் படைகளைக் காவு கொடுக்க இஷ்டமில்லாமல், கரிகாலன் வாதாபிப் படையின் பெரும் பகுதியை மேலைச் சாளுக்கிய எல்லைக்கு அழைத்துச் சென்றுவிட்டதால் வேங்கி கோட்டையின் கதவுகள் திறந்த இடந்தன!

தொலைந்த காலத்துக்கு முன்பு, யாருமற்ற அநாதை சாளுக்கிய விரர்களால் நிருடனாக மரித்துப் போய்ப்பட்ட அதே நகரத்தில், சொழர்களின் மாபெரும் படைத்தலைவனாக தன் வாலை உத்தேசித்துப் பேரிகை முழங்கப் படைகளுடனும் திரிஞ்சனாதேவியுடனும் நுழைந்தான் கரிகாலன். அடுத்த சில தினங்களில், திராஜேந்திரனது படையும் வேங்கிக்கு வரவே, நகரத்தில் மூழ்கிக் கிடந்து வேங்கியின் தலை

69. மன்னர் கட்டளை

அஞ்சாமல் எவரையும் ஏறெடுத்து நோக்கும் திற
வாய்ந்த நிருஞ்சனாதேவியின் அஞ்சன விழிகள், அன்று
அச்சத்தால் சற்றே சலித்தன. அச்சத்துடன் ஆதரம்
கலந்து கொள்ளவே, பயமும் நாணமும் கலந்த பார்வை
யொன்றை அவன்மீது படரவிட்டான் மன்னன் மகன்.
அப்படிப் படர விட்டதால் உன்னத்தே எழுந்த பலதரப்
பட்ட எண்ணங்கள் அந்தப் பாலையின் இதயத்தில்
எத்தனை எத்தனையோ உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்ட
தால், அவள் மூவுடல் பஞ்சணையில் ஒரு முறை லேசாக
அசைந்தது. கரிகாலன் அதே வசந்த மண்டபத்தில்
தன்னைச் சந்தித்த ஒவ்வொரு சமயத்திலும் அவனுடைய
சொருபம் எந்தந்த விதமாக மாறுபட்டு எந்த நிலையில்
அன்று அவன் தன்முன் நிற்கிறானென்பதைச் சிந்தித்துப்
பார்த்தாள் அவள். முதலில் சாளுக்கிய வீரர்களுக்குப்
பயந்து தஞ்சமென்று ஓடி வந்த கரிகாலன்; பிறகு
'வஞ்சகன் நீ' என்று தன்னாலேயே வெறுக்கப்பட்டு
விரட்டப்பட்ட கரிகாலன்; கடைசியாக சோழநாட்டுக்
காக வடநாட்டிலே வெஞ்சமர் புரிந்து பெரும் புகழ்
படைத்த இராஜேந்திர தேவனிடம் அரசமரியாதைகளைப்
பெற்று, சக்கரவர்த்திக்குச் சமானமாக மக்களால் மதிக்கப்
படும் மாவீரனான கரிகாலன்— ஆகிய இந்த மூன்றுவிதக்
கரிகாலன்களைப்பற்றி எண்ணிப் பார்த்த அந்த
நித்திமை, முயற்சியுள்ள ஒரு மனிதன் ஒரு வருஷ காலத்
துக்குள் எத்தப் பதவியிலிருந்து எந்தப் பதவி வரை எட்ட
லாம் என்று உள்ளுக்குள்ளேயே பெரிதும் வியந்து
கொண்டான். சில சமயங்களில் தனக்கு உற்ற காதலனாக
வும், பல சமயங்களில் ஜெயசிம்ம சாளுக்கியனின்
தூதனாகவும் காட்சியளித்தாலும், உண்மையில் தனக்கும்
தன் தம்பிக்கும் வாழ்வளிப்பது ஒன்றையே வாழ்க்கையின்

லட்சியமாகக் கொண்டிருந்தானென்பதையும், அதைத்
தான் புரிந்து கொள்ள முடியாமல் சந்தேகப் பேய்க்கு
அடிமையான தன் பேதைமையையும் நினைத்துப் பார்த்த
நிருஞ்சனாதேவி, உள்ளே எழுந்த வருத்தத்துக்கு
அடையாளமாகப் பெருமூச்சொன்றும் விட்டாள்.

உன்ன நிலையைக் கொண்டே எதையும் எடைக்கும்
கரிய அறிவு படைத்த கரிகாலன், அவள் கண்களில்
முதலிலே தெரிந்த சலனத்துக்கும், பின்னர் அவன் அழகிய
உடல் பஞ்சணையில் நெளிந்ததற்கும், கடைசியாக எழுந்த
பெருமூச்சுக்கும் காரணத்தை அரைக் கணத்தில் உணர்ந்து
கொண்டானாதலால் அவள் எண்ணங்களுக்கும் இதய
வேதனைகளுக்கும் விடுதலையளிக்கும் நோக்கத்துடன்,
"அரசகுமாரி!" என்று மீண்டும் ஒரு முறை அழைத்தான்.

பதில் சொல்ல நா எழாததால், அரசகுமாரி ஒரு
'ஹும்' மாத்திரம் கொட்டிவிட்டுத் தலையையும்
தொங்கப் போட்டுக்கொண்டாள்.

"சில நாள்களாகவே அரசகுமாரி மௌன நிலையை
அடைந்திருப்பதைப்போல் தோன்றுகிறது?" என்று கூறிக்
கொண்டே, வாயிற்படியிலிருந்து கட்டிலை நோக்கி
வந்தான் கரிகாலன்.

தாழ்ந்த நிலத்தை நோக்கிக் கிடந்த வேங்கி நாட்டு
மன்னன் மகளின் மணிவிழிகள் தரையில் உறுதியுடன்
பாவி வந்த அந்த வீரனின் கால்களைக் கலவரித்தன.
அப்படி அவன் எடுத்து வைத்த நான்கு அடிகளில்
உண்டான சப்தங்கூட அவள் உடலிலிருந்த உணர்ச்சி
யெல்லாத்தில் கலந்து, இதயத்திலே சென்று 'பட்பட்'
என்று தாக்குவது போன்ற பிரமை உண்டாகவே, உடல்
ஒரு முறை லேசாக நடுங்கவும் செய்தது. அந்த நடுக்கத்
தைக் கவனித்த கரிகாலன் இதழ்களில் லேசாகப்
புன்முறுவல் படர்ந்தது. "நடுக்கத்திற்கு இனி அவசிய

மில்லை அரசகுமாரி! தங்கள் எதிரிகள் அழிந்தார்கள். வேங்கி விடுதலை பெற்றது. தங்கள் தம்பியும் வேங்கி நாட்டு அரியணையில் நானைக்கு அமரப் போகிறார்" என்று ஆறுதல் சொல்லும் முறையில் பேசினான் அவன்.

இந்தப் பேச்சு அவனை நிமிர்த்து உட்கார வைத்தது. தலையைக் குனிந்துகொண்டே சொன்னாள் அவள், "நடுக்கத்திற்குப் பயம் மட்டும் காரணமல்ல படைத் தலைவரே! நன்றியும் சில வேளைகளில் காரணமாயிருக்கும்" என்று.

கரிகாலன் முகத்தில் புன்முறுவல் மறைந்து, வருத்தம் தின் சாயை சற்றே படர்ந்தது. "நன்றி எதற்கு அரசகுமாரி?" என்று வினவினான்.

"ஒரு கொழையை வீரனாக்கியதற்கு; இந்த நாட்டை மாற்றானிடமிருந்து மீட்டதற்கு" என்றாள் மன்னன் மகள்.

"வேங்கி நாட்டு மன்னன் என்றும் கோழையாயிருந்த தில்லை" என்று அழுத்தமாகப் பதில் சொன்னான் கரிகாலன்.

மயிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினாள் மன்னன் மகள். ன் தம்பியைப்பற்றிக் கரிகாலன் சொன்ன சொற்களைக் கட்டதால். இருந்தாலும் அதைப்பற்றி விவரமாகத் கரிந்து கொள்ள மனம் ஆசைப்பட்டதால், யோஜனைத் திசையைத் தாண்டிய அவள், "யாரைப் றிச் சொல்லுகிறீர்கள்? ஜெயசிம்ம சாளுக்கியனைப் றியா?" என்று கேட்டாள்.

"இல்லை. ராஜராஜ நரேந்திரனைப்பற்றி."

"ஒரு வருஷத்திற்கு முன் அவன் வானைப் பிடிக்கவும் தினான்."

"அப்பொழுது அவரைச் சுற்றி வஞ்சியர் கூட்ட த்தது. வஞ்சகர் கூட்டமிருந்தது. ஆனால், வெஞ்சமர்

தினைத்தும் வீரர்கள் கூட்டமில்லை. எந்த உறுதியும் தந்திரமும் குலையும் அரசகுமாரி! ஏன்? நல்லவன் என்று முதலில் என்னைப்பற்றி உறுதி கொண்ட நீங்களே, பின்னால் என்னை மாற்றானின் கையாள் என்று சந்தேகிக்கவில்லையா?"

தன்னையே கரிகாலன் மடக்கி விட்டதைக் கண்ட அரசகுமாரி, பஞ்சணையிலிருந்து மெல்ல எழுந்து பதிலேதும் சொல்லாமல் சாளரத்தை நோக்கிச் சென்றாள். பின்னால் அவனைத் தொடரவில்லை. நின்ற இடத்தி லிருந்து, பஞ்சணைக்கருகிலிருந்தே பேசினான்: "அரச குமாரி! தங்களை வருத்த வேண்டுமென்று நான் பேச வில்லை. உதாரணத்துக்காகச் சொன்னேன். தங்கள் தம்பி ன்று பல போர்களைக் கண்ட மகாவீரர். அவரிடம் நீங்கள் அந்தச் சலனமுள்ள கண்களை இனி என்றுமே பார்க்க முடியாது ஒரு வருஷத்திற்கு முன் அவர் வானைப் பிடிக்கவும் அஞ்சியிருக்கலாம் ஆனால் இன்று அந்தக் காம்வானைப் பிடித்து இந்த வேங்கி நாட்டை மாற்றா டமிருந்து காக்கும் பெரும் மகிமை பெற்றிருக்கிறது. இதெல்லாம் எங்கிருந்து வந்தது?" என்று பேசிக் கொண்டே போனவனை, "தங்களிடமிருந்து..." என்ற அரசகுமாரியின் சொல் சட்டென்று இடைமறித்தது.

"என்னிடமிருந்து மன்னர் வாட்பயிற்சி பெற்றிருக்க லாம், போர்ப்பயிற்சி கற்றிருக்கலாம். ஆனால் அவை அவருக்குப் படித்தது என்னால் மட்டுமல்ல அரசகுமாரி."

"பின் யாரால்?"

"எதனால் என்று கேளுங்கள்?"

"ஹும்... எதனால்?"

"அவருடைய உடலிலே ஓடும் பரம்பரை ரத்தத்தால். வீரனான மன்னன் விமலாதித்தனுக்குப் பிறந்தவன் கோழையாயிருக்க முடியாது. இயற்கையில் ராஜரா

நரேந்திரர் பெருவீரர். செயற்கை அவருக்குக் கொஞ்சம் சாம்பலைப் பூசியது. அதை அகற்ற என்னை உதவியது. அவ்வளவுதான் அரசகுமாரி! இயற்கையில் இல்லாத வீரத்தை யாருக்கும் ஊட்ட முடியாது. வானை இரும்பி விருந்துதான் உற்பத்தி செய்ய முடியும். மேகம்தான் நீரைக் கொடுக்க முடியும். இயற்கையின் கர்ப்பத்திலிருக்கும் அச்சங்களைத்தான் மனித முயற்சி திரட்டி வளர்க்க முடியும்'' என்றான் கரிகாலன்.

நிரஞ்சனாதேவி சாளரத்தின் பக்கத்திலிருந்து நீண்ட நேரம் திரும்பவுமில்லை; பேசவுமில்லை. சற்றுநேரம் அவனையே கவனித்துக் கொண்டிருந்த கரிகாலன், ''அரசகுமாரி'' என்று மீண்டும் அழைத்தான்.

''ஹரம்''

''நான் வந்த காரியம்...''

''சொல்லுங்கள். எதையும் கேட்கச் சித்தமாயிருக்கிறேன் வேங்கி அரச குடும்பம் நன்றி கெட்ட குடும்பமல்ல.''

''எதைச் சொன்னாலும் கேட்பீர்களா?''

அவள் இதயம் பட்பட்டென அடித்துக் கொண்டது. அவன் எதைக் கேட்கப் போகிறான் என்பதை நினைத்தால் உண்டான நாணத்தால் அவள் உடல் சிலிர்த்தது. ''சொல்லுங்கள்'' என்று இனிய குரலில் ஏதோ வீணையை மீட்டுவது போல் பேசினாள் அவள்.

''அரசகுமாரி!''

''ஏன்?''

''ஒரு வரம் வேண்டும்.''

''கேளுங்கள்.''

''என் வான உங்களுக்கு அடிமையென்று ஒரு சமயத்தில் ஆணை வைத்தேன்.''

''ஆம்.''

''அந்த ஆணையிலிருந்து விடுதலை வேண்டும்.''

நிரஞ்சனாதேவி திடீரென்று கல்லைத் தாக்கிப்போட்டால் மாதிரி திடுக்கிட்டாள். அவளுடைய இதயத்தில் எற்படும் கலக்கத்திற்குச் சமமான கலக்கத்தை அவளுடைய கரிகாலனின் கோரிக்கையால் அடைந்த அரசகுமாரி, சாளரத்தி லிருந்து திடீரென அவனை நோக்கித் திரும்பினாள். அவள் மொழிகளை அவளிடமிருந்து எதிர்பார்த்த மாதிரி சுக்குநூறாக உடைத்ததன் காரணமாக, இதய மன்னால் அழுகிய இதயப் பிரதேசம் எழுந்து தாழப் பாய்ந்து விழுங்கிவிட்டது. ''எதற்கு அந்த விடுதலை?'' என்று கேட்டாள், உணர்ச்சிகள் நிலைகுலைந்தே உதிர்ந்தன.

''ஆணையிட்ட வேலை முடித்து விட்டது. தவிர...'' என்று தயங்கினான் கரிகாலன்.

''தவிர?''

''ஆணையை எப்பொழுதும் நிறைவேற்ற இயலாது.''

''ஏன்?''

''இந்த நாட்டிலிருந்து நான் வெளியேறப் போகிறேன்.''

அவள் ஏதும் புரியாமல் விழித்தாள். பிறகு தலையை அசைத்தும் செய்து கொண்டு பேசினாள். ''ஆம்! ஆம்! வேங்கி நாட்டில் தங்களுக்கு என்ன வேலை? சோழ நாட்டின் மாபெரும் படைத்தலைவருக்கு இந்தச் சிற்றரசு ஏற்றதில்லைதான்'' என்று உள்ளத்தே எழுந்த குமுறலால் சற்ற இடத்தில் சிறிது அசையவும் செய்தாள்.

கரிகாலன் அந்த அசைவைக் கவனித்தான். அவன் சொற்களில் கண்ட தவற்றையும் கவனித்தான். அதைத் தெளிந்த உறுதியுடன் கூறினான். ''வேங்கி நாட்டிலிருந்து மட்டுமல்ல அரசகுமாரி, சோழநாட்டிலிருந்தும் போகிறேன்! நான் பிறந்த மண்ணை விட்டே போகிறேன். பாரத நாட்டு எல்லையை விட்டே போகிறேன்'' என்று.

அவன் அவளை நெருங்கி வந்தான். அவன் வாயிற் படிக்காகத் திரும்பி அவளுக்குத் தன் முதுகைக் காட்டிக் கொண்டே இரண்டடி எடுத்து வைத்தான்.

"நில்லுங்கள்!" என்று அவன் இட்ட உத்தரவு பட்டென்று அவன் கால்களைப் பிடித்திழுத்து நிறுத்தியது. இரண்டு விநாடிகள் சென்றன. கொழுகொம்பு மீது பூங்கொடி யொன்று தழுவிச் செல்வது போல் தன் தோள்மீது அவள் கரம் தெனிவதைக் கண்ட கரிகாலன் சற்றுமையென நின்றான். அவன் கன்னத்தோடு இழைந்தது ஒரு கன்னம். அந்தப் பக்கத்திலிருந்து மெல்ல எழுந்தன இசைச் சொற்கள்.

"நீங்கள் எங்கும் போகக் கூடாது."

"அது என் இஷ்டமல்ல."

"என் இஷ்டம்."

"நம் இருவர் இஷ்டமல்ல; விதியின் இஷ்டம்."

"அதை நாம் வினைமையால் வெல்வோம்."

"வெல்ல நான் வேறு நாடு செல்லவேண்டும்."

"எங்கு?"

"கடாரத்திற்கு."

"என்ன! கடல் கடந்தா?"

"ஆம்."

"ஏன்?"

"பிறந்த மண்ணிலிருக்க முடியாத துர்ப்பாக்கியன் நான்."

இதைச் சொன்னபோது, கரிகாலன் உடல் சிறிதே ஆடியதை உணர்ந்தான். பின்னால் நின்ற வேங்கி நாட்டுப் பைங்கிளி, அவன் இதயத்திலே மாபெரும் சுமை விழுந்ததை அறிந்த மன்னன் மகள், அவனைத் தன் இரு கரங்களாலும் ஆதரவாகத் தழுவினாள். "அப்படியானால்

நானும் வருவேன்" என்று இதம் போலப் பின்னால், அவள் காதுக்கருகே.

"பிறந்த மண்ணை விட்டா?" என்றான் கரிகாலன் அப்போதே.

"ஆம், பிறந்த மண்ணை விட்டுப் புகுந்த மண்ணுக்குச் சென்றது பெண்கள் கடமை அல்லவா?" என்று அவன் பின்னாள்.

அதிர்ந்த விநாடி, அவள் கைகளைத் தன் உடலிலிருந்து அகற்றி, விலகி நின்ற கரிகாலன், "அரசகுமாரி! கனவுல ஏதும் பிதற்றினீர்களா?" என்று கோபத்துடன் பேசினான்.

கோபத்திலும் அவன் முகம் அழகாயிருந்ததை எண்ணி, பூங்கொடி கவனித்துப் புன்முறுவலுடன் கூறினாள், "நனவை விடக் கனவுலகில் இன்பம் இருக்குமானால், அதாடுவது தான் முறை" என்று.

"இன்பத்துக்காக உன்ன நிலையைப் பலி கொடுப்பது நியல்ல அரசகுமாரி" என்று கரிகாலன் விளக்கினான்.

"எது உன்ன நிலை?"

"நீங்கள் வேங்கி நாட்டு மன்னன் மகள், நானோ..."

"மன்னர்களைச் சிருஷ்டிக்கும் மாபெரும் வீரர்."

"நான்னர் பேர் தெரியாத அநாதை."

"அநாதை நீங்களல்ல. உங்களைப் போன்ற வீரர்களைப் பெறாத நாடுகளுக்குத்தான் அந்த வார்த்தை பொருந்தும்." அவன் பிடிவாதத்தைக் கண்ட கரிகாலன், மீண்டு அவளை அணுகி, அவள் கைகளைப் பிடித்துப் பலமாக அழுத்திக் கொண்டே சொன்னான், "அரசகுமாரி! நீங்களிருக்கும் உயர்ந்த பீடத்திலிருந்து, என் பொருட்டுக்காக உங்களை ஒரு நாளும் கீழே இறக்க மாட்டேன்" என்று.

"இதக்க வேண்டாம்; உயர்த்தி விடுங்கள்" என்றாள் திரஞ்சனாதேவி.

"எங்கு?"

"உங்கள் மணப் பீடத்தில்."

"வேண்டாம் இந்தப் பிடிவாதம். அரசகுமாரி, என் மணப்பீடத்தில் எப்போதுமே நீங்களிருக்கிறீர்கள். எந்த விநாடி உங்களைச் சந்தித்தேனோ, அந்த விநாடியிலிருந்து அந்த இடத்தைவிட்டு நீங்கள் அகலவில்லை. இனி என்றுமே அகலமாட்டீர்கள். ஆனால் மன்னன் மகளான உங்களை, வந்த மண்டபத்தில், இதோ இந்தப் பஞ்சணையில் புனிட உங்களை கண்காணாத நாட்டிற்கு, இரத்த வெள்ளம் பாயப் போகும் கோப் போர் எழுகடிய தாய் பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்ல நான் இஷ்டப்படவில்லை" என்று, உணர்ச்சி கதும்பப் பேசினான் கரிகாலன்.

அவன் உள்ளம் நெகிழ்ந்தது. உறுதி குலைந்தது. மகத் தாமரைகளால் முகத் தாமரையை மூடினாள். குதுங்கிக் குதுங்கி அழுதாள். குதுங்கி அழுது குறைந்திட்ட அவளுடைய மனவேதனை சற்றுமட்டில் தான் பிடித்துக்கொண்ட கரிகாலன், "நிற்சனா! அழாதே. என்னால் தாங்க முடியவில்லை. உன்னைப் பிரிவதால் உண்டாகும் வேதனையை அதிகப்படுத்தாதே!" என்றான்.

அவன் பதில் சொல்லாமல் தேம்பினாள். அவன் மார்பை அவள் அழகிய உடலை வளைத்துச் சென்றன. அவன் முகம் விசாலமான அவன் மார்பில் புதைந்தது. அப்பொழுது அவள் தேம்பியது. அவன் இதயத்துக்கே உள்ள ஆசாகளைச் சொல்லாகத் தொகுத்து அறுப் பது போலிருந்தது. நீண்ட நேரம் அந்த நிலையில் நின்ற வர்களை வாயிற்புறமிருந்து கவனித்தபடி ஒரு தலைப் பணியாளன் நின்றான். பொறுமையை இழந்தான். வாசற்புறமை

அவர்கள் பார்த்ததும் தலைப்பைச் சற்று நிறுத்தி உள்ளே நுழைந்த ராஜராஜ நரேந்திரன், "இது சக்கரக் கோட்டையல்ல படைத்தலைவரே!" என்று சொல்லி மீண்டும் ஒரு சிரிப்பை உதிர்த்தான்.

கரிகாலன் பதில் கூறவில்லை. கேள்விக்கு அதிகரி மாகக் கண்களை உயர்த்தினான்.

"இது சக்கரக் கோட்டையல்ல கரிகாலரே! உமது தந்திரத்தால் இதை வென்றி கொள்ள முடியாது. அக்கா லின் உள்ளம் பெருங்கோட்டை. அதன் கவர்கள் இரும்பு. அதை உடைக்க நீர்ல, உம்மையிடப் பெரிய வீரரி வீரர்கள் வந்தாலும் முடியாது. நீங்கள் கடாரத் தீவுக்கல்ல, உலகத்தின் எல்லைக்கே சென்றாலும் அந்தக் கோட்டை உங்களைத் தொடரும்" என்றான் ராஜராஜ நரேந்திரன்.

"என்ன சொல்கிறீர்கள் மன்னவா?" என்றான் கரிகாலன்.

"இன்று நான் மன்னனில்லை. நாளைக்குத்தான் முடிசூடும்விழா."

"சரி."

"இன்று நான் உமது மாமனன்."

"அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறீர்கள்?"

"எனக்கு வாட்பயிற்சி அளித்தீர்கள்; போர்ப்பயிற்சி அளித்தீர்கள்..."

"அதற்காக?"

"குருவுக்குக் காணிக்கை செலுத்த வேண்டும். இதோ என் காணிக்கை" என்று சொல்லிக்கொண்டே, அவர்கள் அருகில் வந்த ராஜராஜ நரேந்திரன், தன் சகோதரியின் கையை எடுத்துக் கரிகாலன் கையில் இணைத்தான். எதிர் பாராத விதமாகத் தன் கையுடன் அரசகுமாரியின் கை இணைக்கப்பட்டதால் நிலைகுலைந்து போன கரிகாலன்,

கையை இழுத்துக்கொள்ள முயன்றதைக் கண்ட ராஜாஜ நரேந்திரன், ''விடாதே அக்கா, கெட்டியாய்ப் பிடித்துக் கொள்'' என்று சொல்லி, மீண்டும் நகைத்துவிட்டு வெளியே செல்ல முயன்றான். அவனை ''அரசே!'' என்ற கரிகாலன் குரல் தடுத்து நிறுத்தியது.

திரும்பி நோக்கினான் ராஜாஜ நரேந்திரன். ''இது முறையல்ல...'' என்று ஏதோ சொல்லப்போன கரிகாலனை, அதிகாரத் தோரணையில் பார்த்த ராஜாஜ நரேந்திரன் ''கரிகாலரே! என் சகோதரியின் கற்பும் எனக்குத் தெரியும். ஆகையால் நீர் இத்தக் காணிக்கையை ஏற்கத்தான் வேண்டும். இன்ற, இது எனது வேண்டுகோள். நாளைக்கு இதுவே கட்டளை. என்ன தெரியுமா? நாளைக்கு நான் மன்னன்!'' என்று கூறிவிட்டு, வெளியே நடந்தான்.

தனிமையில் விடப்பட்ட கரிகாலன் சங்கடத்தால் நெ முயன்றான். மன்னன் மகளின் கை அவனை இறுகப் பிடித்தது. அவனைப் பார்த்த விழிகளில் ஆசை பொங்கி வழிந்தது. ''என்ன செய்வேன் சுவாமி! மன்னன் கட்டளை!'' என்று தலைகுனிந்து, வெட்கத்துடன் சொற்களைத் தொட்டு, ஆசை, வெட்கம், இன்பம் எல்லாம் கலந்த நிறைவையும் உதிர்த்தான், விமலாதித்தன் மகளான நிரஞ்சனாதேவி.

70. கூடல் காற்று

கூடலிலிருந்து எழுந்து வந்த வசந்த காலத்தின் இன்பமான காலைக்காற்று, சூடாமணி விஹாரத்தின் நடு மண்டபத்திலிருந்து புத்தர் பிரான் சிலையின் கழுத்தை அலங்கரித்து நின்ற மலர் மாலையை மெள்ள அசைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உதிர்ந்த ஓரிரு புஷ்பங்கள் போதி சத்துவரின் காலடியிலே வணங்கிக் கிடந்த மஹாவீரனின் தலைமீது உதிர்ந்தன. புத்தர் பிரானின் திருமுகத்திலுமிருந்த தூங்கா விளக்குகளின் ஒளிகூட அந்த வீரனின் கன்னங்களிலே பாய்ந்து அவற்றுக்கு மெருகூட்டியதன்றி, நெற்றிப் பிரதேசத்திலும் விழுந்து சித்தையிலே அவனுக்கிருந்த சலனத்தை அறுக்க, போதி சத்துவர் அளித்த ஞான ஒளியெனப் படர்ந்து நின்றது. நின்ட நேரம் தலை வணங்கிக் கிடந்த அந்த வீரனின் உதடுகள், ''புத்தம் சரணம் கச்சாமி'' என்ற மந்திரங் களைச் சற்று உரக்கவே உச்சரித்ததால், அந்த மண்டபத் தின் பெரும் சுவர்களும், உயரத்தே வளைந்து கிடந்த கூரையின் ஓட்டுக் கற்களும் அந்த மந்திரங்களைத் திரும்பத் திரும்ப எதிரொலி செய்து, அந்தச் சூடாமணி விஹாரத்தில் எங்கும் சாந்தியை நிலவச் செய்ய முயன்று கொண்டிருந்தன.

ஆனால், தலைவணங்கிக் கிடந்த அந்த வாலிபன் மட்டும், மனத்திலே, சிறிதும் சாந்தி பெறாததால், மீண்டும் மீண்டும் அந்த மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு மௌனத் தியானத்திலேயே கிடந்தான். அப்படிப் புத்தரின் கருணையை நாடி அவர் திருவடிகளில் சரணடைந்து கிடந்த அந்த வீரனை, அலுங்குமல் குலுங்காமல் நின்று அருட்கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்த சூடாமணி விஹாரத்தின் [illegible]மலைமைப் பிக்

மென்னத் தமது வலக்கரத்தால் தொட்டு, "கரிகாலா! எழுந்திரு! போதி சத்துவரின் அருள் உனக்குக் கிடைத்து விட்டது" என்று சற்றே அசைத்து எழுப்பினார்.

நித்திரையிலிருந்து விழித்தவன்போல் திடுக்கிட்டு விழித்த கரிகாலன், மென்னத் தன் தலையைத் திருப்பி சூடாமணி விஹாரத் தலைவரை நோக்கி, "அருள் கிடைத்தது உண்மைதானா தந்தையே?" என்று வினவினான்.

சூடாமணி விஹாரத் தலைவர் சாந்தம் நிலவும் தமது விழிகளைச் சற்று அமைதியாகவே விரித்து, இதயத்தில் எழுந்த ஆச்சரியத்தை முகத்திலும் காட்டி, "என்ன சந்தேகம் கரிகாலா? என் வார்த்தையிலும் உனக்குச் சந்தேகமா?" என்று வினவினார்.

"இல்லை தந்தையே!" என்றான் கரிகாலன், புத்தர் பிரான் திருவடிகளை விட்டு எழுந்திருந்து, இரண்டடி பின்னுக்கு நகர்ந்து, தனது குருநாதரை ஏறிட்டு நோக்கிக் கொண்டே.

சூடாமணி விஹாரத் தலைவர் அருகில் வந்த கரிகாலன் தலையிலே தமது திருக்கரத்தை வைத்துத் தடவி, அதில் இடந்த ஒரு புஷ்பத்தை எடுத்துக் கரிகாலனிடம் காட்டி, "கரிகாலா! நீ போதி சத்துவரின் திருவடிகளில் இடந்தபோது, இது அவர் மலர் மாலையிருந்து உன் தலையில் உதிர்ந்தது. இன்னொரு புஷ்பம் உன் உதிர்ந்ததைப் பார்த்தேன். அவர் தூவிய மலர்கள் உன்னைப் பாவனமாக்கியிருக்கின்றன கரிகாலா!" என்று சொன்னார்.

"தந்தையே! தங்கள் வார்த்தைகளில் எனக்குச் சந்தேகமிருக்கவில்லை. ஆனால் அருள் கிடைத்தவன் அதில் சாந்தியிருக்க வேண்டுமே அதில்லையே! என் மனம் எதிரேயுள்ள கடலைகளைப்போல் கொந்தளிக்கின்றதே!" என்றான் கரிகாலன்.

"குழந்தாய்! கொந்தளிப்பதை அடக்குவது உன் கடமை. மனக்குதிரையை அடக்குபவனே உண்மையான சாதி என மஹாபாரதமே கூறுகிறது. மனித வாழ்வாகிற கடலிலே ஆசையே ஜலம்; அதைப் பெரும் அலைகளாக எழுப்புபவை சந்தர்ப்பங்கள். அந்தச் சந்தர்ப்பங்களை வெற்றி கொண்டு மரக்கலத்தைச் செலுத்துபவனே மாலுமி. அத்தகைய மாலுமியாக நீ திகழ வேண்டும் கரிகாலா!" என்று வார்த்தைகளை மிக அழுத்தமாக உச்சரித்துச் சாந்தமாகப் பேசினார், சூடாமணி விஹாரத் தலைவர்.

"தந்தையே! சந்தர்ப்பங்களை எப்படி வெற்றி கொள்வேன்? இங்கிருந்து இளம்பிய நாட்களாக என் வாழ்வில் எத்தனை திருப்பங்கள்! எத்தனை போர்முனைகள் வந்து என் பாதையில் குறுக்கிட்டிருக்கிறார்கள். அநாதை எனற புறப்பட்டவன், சோழ அரசகுல வம்சத்து மகனாக நேன். சதியில் சிக்கினேன். இரு மாதர்களின் காதலில் கட்டுண்டேன். ஒருத்தியை மணந்தேன். மற்றொருத்தியைக் கைவிட்டேன். தாயைப் பார்த்தேன். அவளைத் தாயென்று வெளிப்படையாகச் சொல்லும் உரிமை பிழந்தேன். இப்பொழுது பிறந்த நாட்டை விட்டு லைக் கடத்திச் செல்ல எதிரே கடலில் மரக்கலங்கள் சித்தமாக நிற்கின்றன; இதென்ன வாழ்க்கை தந்தையே!" என்ற மனம் நெகிழ்ந்ததால், குரலும் தழுதழுக்கக் கேட்டான் கரிகாலன்.

"வாழ்க்கையை நிர்ணயிப்பது நமது கடமையல்ல குழந்தாய். அதை நிர்ணயிப்பது நமக்கு மீறிய சக்தி. அந்தச் சக்தி விரும்பும் பாதையில் வாழ்வது நமது கடமை. இரு மாதர் உன்னைக் காதலித்தது உன் தவறல்ல; ஒருத்தி மீதும் நாட்டம் கொண்டதும் உன் தவறல்ல; விதிப்

புலியில் மனிதர்கள் பலபடி எடுத்து விசப்படுகிறார்கள். வார் யார் என்று மோதிக் கொள்கிறார்களோ யார் கண்டது? இயற்கையின் விசித்திரத்தை நாம் அறிய முடியுமா? செங்கமலச் செல்வியைப்பற்றிக் கலைவுப் படாதே கரிகாலா! அவள் அரையன் ராஜராஜனைப் போல் மிகுந்த உறுதியுடையவள். உன் உள்ளத்தை உணர்ந்தவள். ஆதலால் அவள் உன் பிரிவிலே சாந்து பெறுவாள். காலம் எதையும் ஆற்றிவிடும். உன் அன்னையைப் பற்றி என்ன கவலை? அவள் ஏற்கனவே நீ செல்லப் போகும் மரக்கலத்தில் இருக்கிறாள்."

கரிகாலன் விழிகள் நன்றியறிதலுடன் சூடாமணி விஹாரத் தலைவரை நோக்கின. "என்ன? என் அன்னை வந்து விட்டாளா? கூத்திலிருந்தா? எப்பொழுது?" என்று மிதமிஞ்சிய ஆசையால் விடுவிடுவென்று வினவினான்.

சாந்தம் நிறைந்த புன்முறுவலொன்று சூடாமணி விஹாரத் தலைவர் உதடுகளில் தவழ்ந்தது. "ஆமாம், கரிகாலா! உன் அன்னையை யாருமறியாமல் வரவழைத்து, புத்த சன்யாசிகள் உடையில் உன் மரக்கலத்துக்கு அனுப்பி விட்டேன். அவளுடன் நிருத்சனாதேவியும் உனக்காக அதோ கடலில் ஆடி நிற்கும் மரக்கலத்தில் காத்திருக்கிறாள். உன் அன்னையை உன்னுடன் வெளிநாடு அனுப்புவதாகக் காஞ்சியின் நிலவறைக் கூடத்தில் சொன்னேனே, அந்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன். உனக்காக வெளியே கடலில் நாகப்பட்டினத்துக்குப் போட்டியாக இன்னொரு நகரமே உதயமாகி விட்டது போல் நூறு மரக்கலங்கள் நிற்கின்றன. கடற்கரையில், அரையன் ராஜராஜன் முதலிய படைத் தலைவர்கள் உன்னைக் கடாரத் தீவுக்கு வழியனுப்பக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். போ கரிகாலா! போ! தமிழகத்துக்குப் புறம்போயும் உன் புகழ் பரவப் போகிறது. அரச வம்சத்தில் பிறந்த உன் பெயர் அரச மரபுக்

குறிப்புகளில் மறையலாம். சரித்திரத்திலும் மறையலாம். ஆனால் மக்கள் மனத்திலிருந்து மறையாது. உன்னுடன் சரித்த புத்த பிக்ஷுக்கள் உன்னை மறக்க மாட்டார்கள். மலைக் வாழத் தன் வாழ்வைத் துறந்த புத்தர் பிரானின் சொல்லைனைக் கடாரத் திலும் பரப்பப் போய் வா!" என்று. அவள் கடமையின் நிலையைச் சுட்டிக் காட்டி வார் சூடாமணி விஹாரத் தலைவர். அவர் கூறியதை ஆமோதிப்பன போல், வெளியில் துந்துபி வாத்தியங்களும் பேரிகைகளும் முழங்கின.

கரிகாலன் தந்தையின் காலடிகளில் விழுந்து வணங்கி விட்டு, அவருடன் விஹாரத்துக்கு வெளியே வந்தான். சோழ நாட்டின் மாபெரும் படைத்தலைவனைக் கண்ட தும், மீண்டும் அந்துபிகள் முழங்கின. எதிரே கடலில் நின்ற மரக்கலங்களில் இருந்த புலிக்கொடிகள், கரிகாலனை 'வா! வா!' என்று அழைப்பன போல் அசைந்தன. 'பிறந்த மண்ணின் மீதுள்ள ஆசையை விடு கரிகாலா! இதோ நான் உனக்கு இடம் தருகிறேன்' என்று சொல்லைபோல், கடல் அலைகள் பெரிதாகக் கர்ஜித்தன.

அமைதியுடனும் சாந்தியுடனும் சைன்னியங்களின் கட்டத்திடையே நடந்து சென்று அரையன் ராஜராஜன் நின்றிருந்த இடத்துக்கு வந்து, அவன் கால்களில் வணங்கினான். தன் வளர்ப்புப் பின்னையைப் பயணக்கோலத் தில்கண்ட அரையன் ராஜராஜன் கண்களில் நீர் சுரந்தது. வாய் பேச மறுத்தது. ஆகவே கரிகாலனை இரு கைகளாலும் தடவிக் கொடுத்தான். அரையன் ராஜராஜனுக்கு அருகே நின்றிருந்த செங்கமலச் செல்வி அன்று பூரணப் போர் உடை அணிந்து கம்பீரமாகக் காட்சியளித்தாள். கம்பைப் போலிலே அவள் கன்னத்திலே ஏற்பட்ட சிறு காயத்தின் தழும்புகூட அன்று அவள் அழகை அதிகப் படுத்திக் காட்டியதே தவிரச் சிறிதும் குறைக்கவில்லை. கரிகாலன், அவள் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "செல்வி!" என்றான்.

ஏதும் பேச வராகவில்லாததால், அவன் அழகாகப் புன்முறுவல் செய்து, ''கடல் கடந்தும் சொற்நாட்டுப் புனைமுப் பரப்புகள் படைத்தவளே, வென்று வாருங்கள்'' என்று ஊக்கியவாகவே பேசினான்.

பதில் சொல்ல முடியாமல் தயங்கினாள் கரிகாலன். அவன் புன்முறுவல் வெறுமென்பதையும், அவன் கண்கள் வெடித்துக் கொண்டிருக்கிறதென்பதையும் கவனித்த கரிகாலன், மீண்டும் ஏதோ சொல்ல வாயெடுத்தவனை அவளே தடுத்து, ''பேசும் சமயம் போய் விட்டது தலைவரே! சென்று வாருங்கள், எனக்கு என் வாள்தான் இனி வாழ்வுக்குத் துணை. என் தந்தை இன்னும் சாகாதிருப்பார்களுடன் போரிடுவார். அவருக்கு மகனில்லை, நான் மகனாக இருப்பேன். அவர் பக்கத்தில் நின்று போராடுவேன். எனக்காக கவலைப்படாதீர்கள். நிம்மதியாகச் சென்று வாருங்கள்'' என்று கூறிக் கடலை நோக்கிக் கையையும் காட்டினாள்.

கடைசியாக அந்தப் பேரழகை ஒரு பார்வை பார்த்து விட்டுத் தலைகுனிந்த வண்ணம், அவனுக்கு மற்ற படைகளின் நடுவே சென்ற கரிகாலன், சற்று தூரத்தில் நின்றிருந்த சைவத் துறவியாரிடம் சென்று, ''ஐயனே! நீ குறித்தே வந்திருப்பாய், வாழ்வில் உன்னையன்னை நான் அறிந்திருக்க மாட்டேன். இந்தப் பதவியுங்கூட எனக்கு விருப்பமில்லாதிருக்கும். ஆனால் இந்தப் போரில் எனக்கு வேறு வழியில்லை. அதற்கு நீதான் பரிசு'' என்று கூறி, தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த தோல்பையில் போடப்பட்டிருந்த மாலையை எடுத்து அவரிடம் கொடுத்து, ''சோழ நாட்டிடம் இதைக் கொடு. எனது முன்னோர்களின் துறவும் வீரமும் போட்டியோ அந்தப் பணி இத்துடன் முற்றிலும் சக்கரக் கோட்டத்தில் நீ உன்னையே கொண்டு, உன் படைகளுக்கு இரு வெற்றி அளித்ததற்காக இதை

உன்னிடமிருந்தே'' என்று சொல்லிவிட்டு கடற்கரை நோக்கி நகர்ந்தான்.

அவனைத் தொடர்ந்து போர் உடைகளை அணிந்த வீரர்கள் சென்றார்கள். அவர்களும் இன்னும் பல வீரர்களை ஏற்றிச் செல்ல, அலங்காரம் செய்யப்பட்ட படகுகள் கரையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. படகுகளுக்கு நடுவே தடுப்பட்டிருந்த புனிதக் கொடிக்குக் கீழே கரிகாலன் நின்று கொண்டான். மீனரசத்துடன் மாறுபட்ட படைகளைத் தன்னிடமாக்கிய நாற்படைகள் நகர்ந்தன. கரையில் நின்றிருந்த பல வீரர்கள் செய்த வாழ்த்துக் கோஷம் வானைப் பிளந்தது.

கையில் இரண்டு தாழிகளில் மரக்கலங்கள் புறப்படுவதைப் பார்க்க விரும்பினவன் போல் அதையும் கீழ்த் கையில் எழுந்தான். அவன் விரல் பொறிக்கப்பட்டிருந்த மின்னி ஆடிக்கொண்டு நாற்று மரக்கலங்கள் புறப்பட்டு நகர்ந்தன.

அந்த மரக்கலங்களையே பார்த்துக்கொண்டு கலங்கி நின்றான் செங்கமலச் செல்வி. அவளுடைய முகத்தில் நின்ற அவள் உள்ளத்தின் கனத்தை உடைத்து வெளிப்படுத்தி பாய்ந்த உணர்ச்சிகள் கண்ணீராக வெளிவந்தன. அவள் குலுங்கிக் குலுங்கிக் குழந்தைபோல் அழுதாள். அவளை ராஜராஜன் தன் குழந்தையை ஆதரவாக அணைத்துக் கொண்டு சொன்னான், ''குழந்தாய், வருந்தாதே. இயற்கையின் தத்துவத்தால்தான் பெரிய சாம்ராஜ்யங்கள் விரிவடைகின்றன. அதோ, அந்த மரக்கலங்களில் சென்றிருக்கும் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த மனிதர்களுக்காக நியோகம் செய்த பெரிய குடும்பம். அதோ போயிருக்கும் சோழ நலனுக்காக நாட்டையே துறந்த, மனிதருடைய

யும் போரையும் உதறிவிட்ட மகாபுருஷன். அந்தத் தியாக அக்கினியில் நீயும் குளித்துவிடு மகனே. உன் மனத்திற்குச் சாந்தி ஏற்படும்'' என்று.

மெல்ல மெல்ல அழுகையை நிறுத்தி, அவள் கரிகாலன் செல்லும் மரக்கலத்தை நோக்கினாள். அத்துடன் நின்றதைப் பார்த்துக்கொண்டே, ''அவர் போரை மட்டுமா தியாகம் செய்தார். என்னையும் தியாகம் செய்தாரே அப்பா! ஆனால் நான் எப்படி அவரைத் தியாகம் செய்வேன்?'' என்று சொன்னாள் செங்கமலச் செல்வி.

''தியாகத்திற்கு எல்லை எதுவுமே கிடையாது, மகனே! பெற்ற மகளான உன் வாழ்வையே நான் தியாகம் செய்து, கரிகாலனைக் கடல் கடத்து அனுப்பவில்லையா? நான் இஷ்டப்பட்டிருந்தால், வேங்கிப்போரைத் தடுத்திருக்க முடியாதா? தடுத்திருந்தால் ராஜராஜ நரேந்திரன்தான் முடிசூடியிருப்பானா? அல்லது திரஞ்சனாதேவிதான் காரிகாலனை வதுவை செய்து கொண்டிருப்பானா? வா மகனே, சோழ நாடு நம்மை அழைக்கிறது. இன்னும் ஜெயசிம்மன் உயிரோடிருக்கிறான். வா, சாளுக்கியர் எல்லைக்குச் செல்வோம். நமக்குப் பாசறையிருக்கிறது'' என்று கூறிவிட்டுப் பக்கத்திலிருந்த புரவிமீது ஏறினாள். தந்தையின் வார்த்தைகளால் ஓரளவு சாந்தியே ஏற்பட்டது அந்த வீர மகளின் உள்ளத்துக்கு. தன் வாளை ஆசையுடன் ஒரு முறை தடவிக் கொடுத்துக் கொண்டாள்.

வங்கக் கடலில், வசந்தத்தின் காற்றில், வெள்ளி நிலவு பாய்ச்சிய இன்ப ஒளியில் பாய் விரித்து ஓடிய மரக்கலத் தின் உள்ளறைப் பஞ்சணையில் திரஞ்சனாதேவி ஆபரணமற்ற அலங்காரத்துடன் தேவகன்னிகைபோல் படுத்துக் கிடந்தாள். அந்தப் பஞ்சணை முகப்பிலே

அமர்ந்த வண்ணமே உட்கார்ந்திருந்தான் அவள் அருகிலிருந்த அழகுக்கு அழகான அந்த மரக்கலத்தின் பக்கவாட்டுகளில் தான் 'எனக்' 'எனக்' என்று எனும் செல்லமே

ஆனால் அவள் அசையவில்லை. யோசனையிலேயே ஆழ்ந்திருந்தாள். திரஞ்சனாதேவி வெட்கம் தழுவும் தன் விழிகளைக் கரிகாலனின் குழந்தை முகத்தின்மீது ஆசை ஓடத் தாட்டிக் கொண்டு, பஞ்சணையில் சிறிது ஒதுக்கித்து உடலோடு உடல் உராய, அவன் கையைத் தன் மார்புக் காம்பால் பற்றி ''என்ன ஆழ்ந்த யோசனை?'' என்று வினவினாள்.

''பிறந்த மண்ணைவிட்டுப் போகிறோம் திரஞ்சனா!'' என்றான் கரிகாலன் பெருமூச்சு விட்டுக்கொண்டே.

''புத்த விஹாரத்தில் துறவிகளோடு துறவியாய் வாழ்ந்த உங்களுக்கு இன்னும் மண்ணாசை விட வில்லையா?'' என்று அவள் மெல்லச் சிரித்தான்.

அவன் அவளை நோக்கித் திரும்பினான். யோகாகாரமாகக் கிடந்த அவள் உருவத்தின் அழகுப் பிம்பங்கள் அவனை வாவாவென்று அழைத்தன. பல நாட்களுக்கு முன்பு வசந்த மண்டபத்தின் பஞ்சணையில் படுத்துக்கிடந்த நிலையில் அன்று அவள் இல்லை. முன்போ, அவள் மூடிக்கிடந்த புஷ்பம், இதழ்களை விரிக்காத மொட்டு, ஒடுங்கி ஒருக்களித்து மாரன் விளையாட் போல் வளைத்து இடந்தான். இன்றோ அவள் விகசித்த செந்தாமரை; மாரன் விளையாட்டுக்கான மலர்க் சோலை, நன்றாக, அலட்சியமாக, பக்கத்திலிருப்பவ ஒருத்தான் சொந்தம் என்ற நினைப்பில், எழில்கள

நன்றாகப் புலப்படும்படியாகக் கிடந்தான். ஆசை அவன் நாணத்தை அறுத்திருந்தது. அவன் பார்வை அவள் சித்தனையை அடியோடு களைத்து விட்டது.

சொந்த மாளிகையில் கண்ட அந்தக் காமன் கும்பு விலின் கனிரசங்கள் இனி தனக்குச் சொந்தம் என்ற நினைப்பு, மன்னாசையை வெட்டிப் பெண்ணாசைக்கு இழுத்தது அந்த வீரனை. அந்த ஆசை ஒலிக்கு அவள் சிரித்துச் சருகி கூட்டினான். அவன் கையைப் பிடித்த அவள் காதுக்குத்தான் என்ன துணிச்சல்! ஆசை வெட்க மறியாது என்பது உண்மைதானா? இதை நினைத்து உணர்ச்சிகளால் நெகிழ்ந்த நிரஞ்சனாதேவி அவனைப் பார்க்கவும் வெட்கினாள்.

அந்த வெட்கம் அவளுக்கு இன்னும் அதிக அழகைக் கொடுத்தது. அவள் அசைவுகளால், அவள் மதுர உடல் அவன் உடலில் உராய்ந்து இன்ப அலைகளை அவன் உடலில் மட்டுமன்றி உள்ளத்திலும் பாய்ச்சியது.

அலைகள் பேரரவம் செய்தன. நிலைகுலைந்த கரிகாலனுக்கு, நிரஞ்சனாதேவியின் தலையிலிருந்த ஜாதி மல்லிகைப் புஷ்பங்களின் வாசனையை எடுத்து வந்து கொடுத்ததுமன்றி 'இதென்ன புஷ்பம்! அதோ அவள் உடலிலே எத்தனை புஷ்பங்கள் கரிகாலா!' என்று கடற் காற்று அவன் காதிலே ணயும் சென்றது.

அவன் அவளை நெருங்கினான். அவள் மோகனப் புன்முறுவல் செய்தான். அடுத்த விநாடி அவள் வலியக் கரங்களிலே அவன் சிறைப்பட்டுக் கிடந்தான். 'முகந்தான் குழந்தை முகம் இவருக்கு. மற்றபடி...?' என்று நினைத்த அவள் மேலே நினைக்கவும் முடியாமல் வெட்கி நின்றாள். அவள் மட்டுமா வெட்கினாள்! வானத்தில்

ஒடிய மதியும் வெட்கி தன் முகத்தை ஒரு முறை கட்டத் தின் புறத்துக் கொண்டது.

தமிழ் நாட்டின் கரை, தூரத்தே மறைந்துகொண்டே நின்றது. மரக்கலத்தின் உள்ளே இருந்த அறையிலும் எத்தனை உணர்ச்சிக் கரைகள் உடைந்தன! வரையறைகள் அறுந்தன!

கரையும் வரையறையும் இயற்கையின் சிருஷ்டிகள். ஆனால், அவற்றைக் கடப்பதும் உடைப்பதும் மனிதனின் முயற்சி; இது மனிதன் உதயமான நாளாய் இருந்து வரும் இயற்கையின் நியதி.

முற்றும்

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.